


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் வந்தாய்?

சிறுகதைத் தொகுப்பு

ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்.....


- ஏன் வந்தாய்?
- அவளும் அவனும்
- செவ்வந்திமாலைப் பொழுது
- மாமனிதர்கள்.
- பொறுமைக்கும் ஒரு எல்லை
- கரோலின்
- சலனமற்ற வாழ்க்கை
- தவம் கலைகிறது.
- சௌந்தரம்மா.
- மணல்திட்டு
- வேட்டை
- அம்மா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | ஏன் வந்தாய் |
| நூலின் வகை | : | சிறுகதைகள் |
| ஆசிரியர் | : | ச.அருளானந்தம் (கேணிப்பித்தன்) |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| முதற்பதிப்பு | : | 02 - 04 - 2009 |
| அட்டைப்படம் | : | ச.அ.அருள்பாஸ்கரன் |
| வெளியீடு | : | அருள் வெளியீடு<br>37/7, மத்திய வீதி, உவர்மலை,<br>திருகோணமலை. |
| தொ. பே. இல | : | 026-2221507 |
| ISBN | : | 978-955-51451-4-5 |
| பதிப்பகம் | : | நிஷான் பிரின்டர்ஸ் |
| கிடைக்குமிடம் | : | லங்கா புத்தகசாலை<br>F.L-1, 14, டயஸ் பிளேஸ்<br>குணசிங்கபுர, கொழும்பு 12. |
| விலை | : | ரூபாய் 200 /= |

## சமர்ப்பணம்

சேர சோழ பாண்டியர்கள் சேர்ந்தொன்றாய் வாழாத செந்தமிழ்ச் சாதியினர் செத்துச் செத்து மடிவதனைப் பார்த்து மனங்கொதித்து தீக்குளித்து உயிர்மாய்த்த வீரத்தியாகிகளுக்கு இந்நூல் சமர்ப்பணம்.

ஆ - ர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

எனது சிறுகதைகளைப் படித்த ஒரு அன்பர் "நீங்கள் ஒரு மரபுக்கவிஞர். ஏன் சிறுகதைகளை எழுதி வீணாக்குகிறீர்கள்." என்று எழுதினார். அவர் என்மேல் கொண்ட கரிசனையில் எழுதினாரா? அல்லது எழுதவேண்டாம் என்று எழுதினாரா? எனக்கு விளங்கவில்லை. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ச் சங்கம் நடத்திய சிறுகதைப் போட்டியில் எனது "ஏன் அழுதார்" எனும் சிறுகதை முதலிடம் பெற்றது. "ஏன் அழுதார்" என்ற எனது சிறுகதையைப் படித்த பிரபல சிறுகதை எழுத்தாளர் திரு.அ.ஜேசுராஜா அவர்கள் நான் கண்டியில் இருந்தபோது எனது விலாசத்தைத் தேடிப்பிடித்து வந்து என்னைப் பாராட்டி எழுதும்படி கூறினார்.

"ஏன் அழுதார்" என்ற எனது சிறுகதையைச் சிந்தாமணி ஆசிரியர் அமரர் எஸ். டி. சிவநாயகம் அவர்கள் சிந்தாமணியில் பிரசுரித்து எனக்கு இலக்கிய ரீதியான ஒரு இருப்பைத் தந்தார். எனக்குக் "கேணிப்பித்தன்" என்ற புனைபெயரை அங்கீகரித்தவரும் அவரே. திரு.அ.ஜேசுராஜா போன்றோர் இருக்கிறார்கள் என்ற மனோதிடத்தில் சிறுகதைகளை எழுதுகிறேன். பல சிறுகதைகள் பரிசுகளையும் பெற்றுள்ளன. பரிசுகள் பெறுபவை யாவும் நல்ல தரமான கதைகள் என்று நான் சொல்ல வரவில்லை. சிறுகதையோ அல்லது கவிதையோ தீக்குச்சியைப் போன்றவை. தீக்குச்சியைச் சரியாக உரசினால் "தீ" பற்றிக் கொள்ளும். தீக்குச்சியை உரசும் நபரைப் பொறுத்து அது பற்றும். அதுபோல்தான் சிறுகதையும். "எந்த உணர்ச்சியை அல்லது கருத்தை ஒரு சிறுகதை தன்னகத்தே கொண்டுள்ளதோ, அந்த உணர்ச்சியை, அல்லது கதையைப் படிப்பவரின் உள்ளத்தில் ஒரு மின்வெட்டைப்போல் ஒரு ஊற்றுப்பெருக்கை அல்லது பிரவாகத்தை எற்படத்தினால் அது சிறந்த கதை எனலாம்." எனச்சிறுகதை பற்றி ஆய்வாளர்கள் கூறுவார்கள். எல்லாச் சிறுகதைகளும் அனைவரையும் திருப்திப்படுத்தாமல் இருக்கலாம். ஆனால் படிப்பவர் சிலரின் உள்ளங்களையாவது அது தொடும். அந்த வகையில் எனது சிறுகதைகளும் அமைந்துள்ளன. இதுவரை மூன்று சிறுகதைத் தொகுப்புக்களை வெளியிட்டுள்ளேன். இது எனது நான்காவது தொகுப்பாகும்.

இன்றைய நிலையில் கவிதையைப் படிப்பவர்கள் குறைந்து கொண்டு வருகிறார்கள். கவிதைப்போக்குகளில் மாற்றங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. மரபுக்கவிதை, புதுக்கவிதை, வசனகவிதை. ஹைக்கூ கவிதை எனப்பலவாறு எழுதியும். பேசியும் வருகிறார்கள். மரபுக்கவிதை எழுதுபவர்களது எண்ணிக்கையும் குறைந்து கொண்டு வருவதை அவதானிக்கலாம். சிறுகதைகள் இன்றைய வாழ்நிலையை எடுத்துக் காட்டச் சிறந்த ஊடகமாக விளங்குவதை யாரும் மறுப்பதற்கில்லை. எனது சிறுகதைகளை ஊன்றி வாசிப்பவர்கள் அவற்றுள் புதைந்து கிடக்கும் இன்றைய அவலங்களைப் புரிந்து கொள்வார்கள். நமது சமுதாயத்தினுள் புரையோடிக் கிடக்கும் துவேசங்கள், கட்டுமானச் சாபக்கேடுகள். அவலங்கள் ஆகியவற்றால் மக்கள் படும் துயரங்கள் எட்டிப்பார்க்கும். இன்றைய வரலாற்றின் போக்கையும் விளங்கிக் கொள்ளலாம். இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி எனக்கொண்டால் எனது சிறுகதைகளும் நான் வாழ்ந்த காலத்தினைச் சித்தரிக்கும் வரலாறாகும். நாமெல்லோரும் நடிப்புச்சுதேசிகள்தானே? நம்மவரைத் தூக்கிவிடத் துணிவில்லாதவர்கள். வெள்ளைத்தோலர் சொன்னால் தூக்கிப்பிடித்துக் கொண்டாடும் நாங்கள், நம்மவரின் ஆற்றலை அல்லது அவர்களது முயற்சிகளை மனந்திறந்து பாராட்டுகிறோமா? இல்லையே. அது போகட்டும்.

இலங்கைத் தமிழருக்கென்று ஒரு இலக்கிய வரலாறு இருக்கிறதா? நாம் இதுவரை காலமும் இந்திய இலக்கிய வரலாற்றையே இலங்கைத் தமிழரின் வரலாறு என்று போற்றி வந்த மாயையை அண்மைக்கால இந்திய அரசின் அரசியல் நிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைத்தெறிந்து விட்டது. இனியும் இந்திய இலக்கிய வரலாற்றை இலங்கைத் தமிழரின் இலக்கிய வரலாறாகக் கொள்ளும் மாயையை விடுத்து இலங்கைத் தமிழருக்கும் ஒரு பாரம்பரிய இலக்கிய வரலாறு இருக்கிறது என்பதை உறுதியாக்க விழித்தெழவேண்டும். பல்கலைக்கழகங்கள் இதனை ஒரு விரதமாகக் கொண்டுழைக்க வேண்டும். இலங்கைத் தமிழர்களுக்கெனத் தனியான இலக்கிய வரலாற்றை உருவாக்க வேண்டும். பாடத்திட்டங்களில் மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும். இலங்கையிலேயே இந்தியத் தமிழர்கள் என்று நாம் வேற்றுமை காட்டும்போது, இந்தியாவில் நம்மை இலங்கை அகதிகள் என்று அவர்கள் வேறுபடுத்தி வைப்பதில் தவறில்லை. நாங்கள் இலங்கைத் தமிழர்கள்தான்.

உலகம் தோன்றிய காலத்தில் ஒரேதிணிவாக இருந்த நிலப்பரப்பு காலகதியில் இன்று உள்ளநிலையில் இருப்பதற்கான புதிரை கண்டநகர்வுக் கொள்கையும், ஆய்வுகளும் விளக்குகின்றன. உண்மையில் இலங்கையில் இருந்தே இந்தியாவுக்கும் ஏனைய நிலப்பரப்புக்களுக்கும் மக்கள் புலம் பெயர்ந்தார்கள். அதுதான் உண்மை. இன்றைய இந்தியாவிலும், அதற்கப்பாலும் வாழ்கின்ற மக்கள் நமது இலங்கையிலிருந்து அதாவது குமரிக்கண்டத்தில் இருந்து பிரிந்து சென்றவர்கள்தான். நாம் இந்தியாவில் இருந்து வந்தவர்களல்ல. இலங்கையில் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் சந்ததியினர். இதனை ஆய்வாளர்கள் நடுநிலையிருந்து ஆய்ந்தறிய வேண்டும்.

இலங்கையில் இன்று வாழும் மக்களனைவரும் இந்நாட்டு மக்களே. இந்த நிலை என்றுவரும்? அன்றுதான் நம்மெல்லோருக்கும் சுதந்திரநாள். 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்பதன் பொருளை உணர்ந்து கொள்ள வேண்டும். பாளி மொழியிலும், சமஸ்கிருத, லத்தீன் மொழிகளிலும் பல இலக்கிய வடிவங்கள் இருந்தன. அம்மொழிகள் வழக்கொழிந்து விட்டன. ஆனால் அந்த மொழிகள் சிறந்து விளங்கியமையினால்தான் அவற்றின் கருவூலங்களை இன்றைய அனைத்து மொழிகளும் உள்வாங்கி வளம்பெற்றுள்ளன. ஒவ்வொருவரும் தமது மொழிதான் சிறந்தது எனக் கூக்குரல் எழுப்புகின்றார்கள். எவராவது தமது தாயை வெறுத்து ஒதுக்குவார்களா? தமது தாய்க்குச் சிறந்த இடம் ஒதுக்குவார்கள். அதேபோல்தான் ஒவ்வொருவருக்கும் அவரவர் தாய்மொழி சிறப்பானது. இதனை நாம் மனதில் கொள்ளவேண்டும். ஈழத்தமிழர்கள் தனித்துவமுடையவர்கள். அவர்களுக்கான "இலக்கிய வரலாறு" அவசியம் தேவை. ஏனெனில் ஈழத்தமிழர் நிரந்தரமானவர்கள். துணிவுடன் போராடவல்லவர்கள். இவ்வளவு காலமும் தாம் படித்தவற்றை மற்றவர்களுக்கு ஒப்புவித்த முறைமையை மாற்றிச் சுயதேடலில் நமது இலக்கிய வரலாற்றைப் படைத்து நமது மக்களுக்குச் சேவை செய்ய முனையவேண்டும். இதுதான் இன்றைய தேவையாகும். அதனைச் சில அறிஞர்கள் செய்கின்றார்கள். ஆனால் பல்கலைக் கழகங்கள் இக்கைங்கரியங்களில் ஈடுபட்டுப் பாடத்திட்டங்களில் மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும். அதனைச் செய்தவர்கள் ஈழத்தமிழர்களுக்குப் பெருந்தொண்டாற்றியவர்கள் ஆவார்கள்.

இந்நூலில் உள்ள கதைகள் அனைத்தும் பத்திரிகைகளில் வெளிவந்தவையாகும். பலகதைகள் பரிசுபெற்ற கதைகளாகும். வீரகேசரி. தினக்குரல், ஞானம். செங்கதிர், பூபாளராகங்கள், நதி போன்றவற்றில் வெளிவந்தவையாகும். அவற்றின் ஆசிரிய பீடத்தாருக்கும், அட்டைப்படத்தினை வடிவமைத்த எனது மகன் ச.அ.அருள்பாஸ்கரன், பின்னட்டையில் என்னைப்பற்றி எழுதியுள்ள பிரபல எழுத்தாளர் வி.என்.சந்திரகாந்தி, எனது நூல்களைச்சந்தைப்படுத்தும் லங்கா புத்தகசாலையினர், அழகாக அச்சிட்டுத்தந்த நிசான் பிறின்ரேர்ஸ், எனது நூல்களை வாங்கிப்படிக்கும் வாசகர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

கேணிப்பித்தன் - ச.அருளானந்தம்.
ஆலங்கேணி, கிண்ணியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் வந்தாய்?

மார்கழி மாதத்தின் பின்நிலவு வானில் பவனிவந்து கொண்டிருந்தது. கருமுகிற் கூட்டம் நிலவுக்குப் பட்டுச்சாத்திப் பார்க்க முனைகிறது. விரைந்து வரும் காற்றலை முகிற்கூட்டத்தை விரட்டிக் கொண்டிருந்தது. நிலவுப் பெண் முகத்தைக் காட்டுவதும் மறைப்பதுமாய் பூச்சாண்டி காட்டி விளையாடியது. கருநீல வானில் பால்நிலவின் விசிறல். அற்புதமாய் பிரகாசித்தது. மழைத்தூறலின் பின் இடைவிட்ட பனிகலந்த கடுவலின் தாக்கம் உடலைத் தொட்டுச் சிலிர்க்கச் செய்து கொண்டிருந்தது. ஆலங்கேணிக் கிராமத்தின் மேற்கெல்லையாக ஊடறுத்து ஓடும் பாசியாற்றின் அழகு மனதைக் குடைந்து கொண்டிருந்தது. ஆற்றின் கரையெங்கும் வெண்கண்ணாவின் ஆட்சி. கண்டல் வகையின் ஊடுருவல் இடையிடையே குத்திட்டுக் குவிந்து கூத்திடுகின்றன.

உப்புநீரில் வாழும் உயிரினங்களின் ஊசலால் தோன்றும் சிறிய அலைகள் கண்ணாக்களில் மோதி உடைந்து கலகலத்துக் கொண்டிருந்தன. கண்ணாவின் மூச்சுவேர்கள் சேற்றைப் பிளந்து 'இச் இச்' என்ற ஒலியோடு வெளிக்கிளம்பும் கிசுகிசுப்பு. சிள்வண்டின் கீர்த்தனைகள். உப்புநீரும், நன்னீரும் கலந்த வெள்ளம் ஆற்றில் ஓடிக்கொண்டிருந்தது. மீன்களின் துள்ளல். இறால்களின் பாய்ச்சல். கானாங்கோழிகளின் கெக்கலிப்பு. ஆக்காண்டியின் இனிய எச்சரிக்கை. கிராமத்தின் சூழல் இனிமையானதுதான் என்பதை பறைசாற்றிக் கொண்டிருந்தன. நாட்டுப் பிரச்சினைகள் இல்லாதபோது கிராமத்தின் மக்கள் அனுபவித்த சுகம் அனந்தமானது. இந்தச் சமாதான நடவடிக்கைகள் நிரந்தரமானதாக அமையவேண்டும் என்று ஏங்காத மனங்கள் இல்லை. இந்நிலை நீடிக்க வேண்டும் என்று பிரார்த்திக்காத மக்களும் இல்லை.

சோமசுந்தரனின் கால்களை பனியும் மழைத்துளியும் கலந்த நீரில் குளித்த வயல் வரம்புப் புல் தொட்டுத் தடவிக் கொண்டிருந்தன. அந்த நெருடல் பட்ட கால்கள் சில்லிட்டன. அவன் வயற்பரப்பில் நடந்து கொண்டிருந்தான். மாதங்களில் மார்கழிதான் அற்புதமானதாம். மழைத்தூறலும் பனிகலந்த காற்றும் இயற்கையின் இங்கிதம். அதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். அதிகாலை ஐந்து மணி. கருமைக் கடலாகக் காற்றில் அசைந்து பனிநீரைச் சுமந்து தலைகுனிந்து நிற்கும் வேளாண்மையை உற்றுப் பார்த்தான். குடலைப் பருவத்து வேளாண்மையிலிருந்து வீசும் வாசனை அவனைக் கிறங்கடித்தது. தனது கைகளால் தடவி விட்டபடி நடந்தான். வரம்புகளின் ஓரத்தில் நட்டிருந்த சோளம் அவனைக் கண்ட உற்சாகத்தில் சுழன்று அசைந்தன. அவற்றைப் பார்த்தபடி வயலைச் சுற்றிப் வந்தான். அந்த வயற்பரப்பின் மேற்கே வெண்கண்ணாதான் வேலி. மேற்கு வானில் நிலவின் பவனி. எல்லை வரம்பில் நின்று கிழக்காகத் திரும்பிப் பார்த்தான். அந்த ஒளியில் அவனது உருவ நிழல் வரம்பில் படுத்திருந்தது. நிமிர்ந்த கண்களில் அவனது வீடு பளிச்சிட்டது. வீட்டுப் பக்கம் கோழிகளின் கூவல். வீதியால் போகும் மாட்டு வண்டிகளின் மணியோசையும், தூரத்து வயல்வெளிகளுக்குச் செல்லும் இளைஞர்களின் கதையும் பாட்டுமாகக் கும்மாளம்.

உயர்ந்து வளர்ந்த இரண்டு மூன்று பனைகள் கருமை நிழலாக அசைந்து கொண்டிருந்தன. அவற்றின் ஊடாக வெள்ளை வெளேரென்று வீடு தெரிந்தது. சோமசுந்தரனின் நெற்றிப் பொட்டில் மின்னல் பாய்ந்த உணர்வு. அந்த வீடு அந்த இடத்தில் அமைவது பொருத்தமானது என்று கூறிச் சென்றவர் தனது அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தவனத்தார்தான் என்பதை நினைத்தான். " வீடு என்பது நாம் வாழ்வதற்காக மட்டுமல்ல. நல்லறம் புரிந்து தெய்வத்துள் நம்மை வைத்து ஒப்பிட வேண்டிய வழியைத் தேடித்தரும் இடமாகவும் உள்ளது. மனை உதவுவதுபோல் மக்கள் உதவுவதில்லை. இதனைப் பலர் புரிந்து கொள்வதில்லை.

படிப்பது நமது அறிவை அகண்டமாக்குவதற்காகத்தான். அதனை அனுபவமாக்கி வாழ்க்கையைச் செவ்வனே நடத்தினால்தான் மனித குலத்துக்கு மேன்மையாகும். அதற்கு முதற்படி வீடுதான். நாம் எங்கிருந்து வந்தோமோ அங்கு போவதற்கு ஆயத்தம் செய்யுமிடமுமாகும். வீட்டுக்கு வீடு வாசற்படி என்பார்கள். அதாவது வாழ்க்கையில் நல்லன செய்வதால் மோட்சமும், அல்லன செய்தால் நரகமும் வாய்க்கும், என்பது ஆன்றோர் வாக்கு. வீடு பொருத்தமானதாக அமையவேண்டும்." அவரே எதிரே நின்று உரையாடுவது போன்ற பிரமை. அவர் எவ்வளவு தத்துவக் கருத்துக்களை அள்ளித் தந்தார். மானசீகமாக அதிபருக்கு நன்றி கூறினான். சுமார் ஒரு ஏக்கர் வயல்நிலம் வீட்டுக் காணியோடு இருந்தது. கிராமத்தின் வீதிகளுக்கு அந்தக்காலத்தில் பெயர்கள் இல்லை. ஆனால் ஆலங்கேணிக் கிராமத்தின் வீதிகளுக்குப் பெயரிட்டு விட்டார்கள்.

அந்தப் பெருமை இந்தக் கிராமத்தில் பிறந்து வெளியிடங்களுக்குச் சென்று கல்வி கற்று இந்த ஊரின் எழுச்சிக்காகச் சேவை செய்த இரண்டு அதிபர்களுக்கே உரியது. அவர்களை நினைந்து நெக்குருகினான். மணல் பரந்த பிரதான வீதிக்குப் பாட்டுக்கொரு புலவன் பாரதியின் பெயர் வைக்கப்பட்டது. பாரதி வீதியில் அவனது பரம்பரைக் காணி இருந்தது. நமது மூதாதையர் தேடித்தந்த செல்வங்களை அழிப்பது தவறு என்ற கொள்கையில் நம்பிக்கையுடையவன். வீட்டையண்டி வயல்நிலம் கொண்டதாக அந்த நிலப்பரப்பு விரிந்து கிடந்தது. பிரச்சனையின் பின் காடாகக் கிடந்த காணியைத் திருத்தி வீட்டை அமைத்துக் குடியேறியிருந்தான். பச்சைப் பசேலென பயிர்கள் சிலிர்த்து அவனது உள்ளத்தை மகிழச் செய்தன.

கைகளால் வேளாண்மையைத் தடவிக் கொண்டும் அவற்றோடு உரையாடிக் கொண்டும் வரம்புகளில் உலா வந்தான். தாவரங்கள் கதைக்குமா? அவற்றுக்கு நாம் சொல்வது விளங்குமா? அவனது சிந்தனை விரிந்தது. சிறுவயதில் பள்ளிக்கூடத்தில் கற்பது பின்னர் வாழ்க்கையில் உதவுவதை ஒப்புக் கொண்டான். "சுந்தரா.. நமது இரண்டு பக்கங்களில் தட்டச்சு செய்து, அசிங்கமான படமும் வரைந்து, அதனை றோனியோ செய்திருப்பதையும் கண்டுகொண்டான். படித்தான். அவனால் படிக்க முடியாதிருந்தது. இதனைச் செய்தவர்கள் மனநோயாளிகள்தான். அவனுக்குச் சித்தப். பிரமை பிடித்து விட்டதுபோல் தோன்றியது. எங்களை வாழவைத்த தெய்வங்களுக்கா இந்தக் கதி? அவர்களது வயதுக்கு மதிப்பளித்தார்களா?. அவனது உடல் துடித்தது.

"செல்வா.. இது யாருடைய வேலையாக இருக்கும்." சோமசுந்தரன் கேட்டான்.
"யாரென்று சொல்லமுடியும்.? ஆனால் நமது அதிபர்களது வரவை விரும்பாதவர்கள் தான் செய்திருக்க வேண்டும்." செல்வன் கரகரத்த குரலில் கூறினான்.
"நானறிந்தவரை அப்படி யாருமில்லையே. இது யாருடைய வேலையாக இருக்கலாம்." சோமசுந்தரன் மூளையைப் போட்டுக் குழப்பிக் கொண்டான். விடைகாண முடியாது தவித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இப்ப என்ன செய்வது.? ஊரவர்களுக்குத் தெரிந்திருக்க ஞாயமில்லை. பலர் படிக்காத பாமர மக்கள். அவர்களுக்குத் தங்கள் முயற்சிதான் பெரிதாக இருக்கும். இவற்றைப் பற்றிச் சிந்திக்க நேரமும் இல்லை. அதிபர்கள் இருவரும் இங்கில்லை. இன்று காலை ஒன்பது மணிபோல் வருவதாகச் சொன்னவர்கள். எப்படி அவர்களுக்குத் தெரிவிப்பது.?” அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. வேலைகள் அனைத்தும் போட்டது போட்டபடியே கிடந்தன. சிலையாக இருந்து விட்டார்கள். எவ்வளவு நேரம் அப்படி இருந்தார்கள் என்று அவர்களுக்கே தெரியாது. சோமசுந்தரன் நேரத்தைப் பார்த்தான்.

“செல்வா. ஒன்று செய்வோம். இப்ப எட்டரை மணி. இப்பவே கிண்ணியாத் துறையடிக்குப் போவோம். அதிபர்கள் வருவார்கள். கதையோடு கதையாகச் சொல்லி விடுவோம். என்ன.?”

சோமசுந்தரன் அமைதியைக் கலைத்து ஆலோசனை சொன்னான். அந்தத் தாளை மடித்துத் தனது சட்டைப் பையினுள் வைத்தான். முகத்தைக் குளிர்ந்த தண்ணீரில் கழுவினான். காற்சட்டைக்குள் தன்னைத் திணித்துக் கொண்டான். தனது சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வெளியில் வந்தான். செல்வன் ஆயத்தமாகவே வந்திருந்தான். இரண்டு சைக்கிள்களும் துறையடியை நோக்கிப் பறந்தன. மழை பெய்வதற்கான அறிகுறி இல்லை. இரவு பெய்த மழையால் நிலம் குளிர்ந்து மழைநீரால் போர்த்தி இருந்தது.

கிண்ணியாத் துறையில் இரண்டு படகுப் பாதைகள் சேவையில் ஈடுபட்டிருந்தன. அண்மையில்தான் புதியதொரு சொகுசான பெரிய படகுப்பாதை சேவையில் ஈடுபடுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்டது. கொஞ்ச நாட்களில் பழுதாகிவிட்டதாகக் கரையொதுக்கி விடப்பட்டுள்ளது. விண்வெளியைக் கடந்து சந்திரனில் கால் பதித்து உலகமயம் என்றெல்லாம் பேசப்படும் இலங்கையில், ஒரு பாலத்தை அமைத்து மக்களின் துயர்துடைக்க யாரும் முயலவில்லை. அனைத்தும் பத்திரிகைகளிலும், வானொலி, தொலைக்காட்சிகளில் செய்தியாக வருகின்றன. நம்நாடு சுதந்திரம் பெற்று விட்டதா? என்ற வினாவோடுதான் இந்தப் பிரதேச மக்கள் வாழுகிறார்கள். சோமசுந்தரன் மனம் மக்கள் துயர்கண்டு கனத்தது.

ஒரு படகுப்பாதை இக்கரையில் இருந்து புறப்படும். அதேநேரம் அக்கரையிலிருந்து மற்றப் படகுப்பாதை இக்கரையை நோக்கி வரும். இரண்டும் நடு ஆற்றில் சந்திக்கும். அக்கரையில் இருந்து படகுப்பாதை வந்து கொண்டிருந்தது. சோமசுந்தரனின் கண்கள் படகுப் பாதையைத் துளாவின. “அதோ அதிபர்.” செல்வன் சுட்டிக்காட்டினான். கந்தவனத்தாரின் உருவம் தெரிந்தது. சோமசுந்தரன் கண்டு கொண்டான். அவர்களது இதயம் அடித்துக் கொண்டது. எப்படி அவரிடம் கூறுவது. சங்கடமான நிலையில் தவித்தனர். படகுப் பாதை 'டாங்' என்ற ஒலியோடு கரையில் மோதி நின்றது. எவ்வளவு காலமாக இந்தப் படகுப் பாதையில் பணிபுரிகிறார்கள். சரியாகக் கரையில் சேர்ப்பதில்லை. மக்கள் முட்டி மோதிக் கொண்டுதான் ஏறியிறங்க வேண்டும். அதிபர் கந்தவனத்தார் மட்டும்தான் வந்திருந்தார்.

அவரை சோமசுந்தரன் உற்றுப்பார்த்தான். இவருக்கு அறுபத்தெட்டு வயதா? அவனது கண்ணே பட்டுவிடும் போலிருந்தது. தலையில் வழுக்கை முழுநிலாவாகப் பிரகாசித்தது. சாடையான வழுக்கை எங்கும் வியாபித்திருந்தது. உள்ள தலைமுடியும் வெண்மையாக மாறத் துடித்து நின்றன. துடிப்புள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞனைப் போல் அட்டகாசமான சிரிப்போடு இறங்கி நடந்து வந்தார். அவரைப் பலருக்குத் தெரியும். அவருக்கு மதிப்பும் மரியாதையும் இருந்தது. ஒருகையில் அன்றையத் தினசரியும் சிறியதொரு பையும் இருந்தன. மறுகையில் குடை இருந்தது. அவரது கண்கள் பேருந்தைத் தேடின. அவரைத் தேடி சோமசுந்தரன் கால்கள் நடந்தன. செல்வன் பின் தொடர்ந்தான். அவர்களை அவர் கவனிக்க வில்லை. ஊருக்குப் போகும் பேருந்து அங்கு இல்லை. அதனைத் தேடினார். அவரது கண்கள் பேருந்தைத் தேடும் படலத்தில் இறங்கின.
"ஐயா.. " குரல் கேட்டுத் திரும்பினார். அங்கே சோமசுந்தரனும் செல்வனும் காட்சி கொடுத்தார்கள். அவர்களைப் பார்த்ததும் அந்த வசீகரமான புன்னகையை வீசினார். பதிலுக்கு அவர்களது முகத்தில் சிரிப்பு வர மறுத்தது.

"என்ன சுந்தரா.. சுகமா? செல்வா எப்படி சுகம்? எங்க போறியள்?" ஒன்றும் அறியாதவர்போல் கலகலப்போடு உரையாடினார். "சும்மா துறையடிக்கு வந்தோம். வீட்டுக்குத்தான் போகிறோம். உங்களைக் கண்டதும் சந்தோசப் பட்டோம். வாருங்கள் சைக்கிளில் போவோம்." அன்போடு அழைத்தார்கள். "சைக்கிள் சவாரி சுகமானதுதான். நீங்கள் இருவரும் ஒரு சைக்கிளில் வாருங்கள். நான் மற்றச் சைக்கிளில் வாறன்." அந்த வசீகரச் சிரிப்போடு கூறினார். அவரது பொருட்களைப் பெற்றுக் கொண்டனர். கந்தவனத்தார் உற்சாகத்தோடு சைக்கிளில் ஏறினார்.

பொத்தற் சேலைபோல் குன்றும் குழியுமாகப் பழய மட்டக்களப்பு திருகோணமலை வீதி படுத்திருந்தது. கந்தவனத்தாரின் சைக்கிள் குதிரையோட்டம் காட்டியது. பள்ளத்தில் விழும்போதும் எழும்போதும் சைக்கிள் ஒரு துள்ளுத் துள்ளும். அந்தத் துள்ளலில் அவரையும் துள்ளச் செய்யும். அவரது உடல் குலுங்கி அடங்கும். சோமசுந்தரனுக்குச் சிரிப்பு வந்தது. செல்வன் சிரிப்பையே மறந்து விட்டான். கந்தவனத்தாரும், கந்தையரும் ஆசிரியர்களாக இருக்கும் போதும், அதிபர்களாக இருக்கும் போதும், நகைச்சுவையோடுதான் கற்பிப்பார்கள். 'இடுக்கண் வருங்கால் நகுக' என்பார்கள். அதனால் மாணவர்கள் அவர்களது கற்பித்தலைப் பாராட்டினார்கள். அவர்கள் காலத்தில் கட்டொழுங்கு இருந்தது. சமய எழுச்சி இருந்தது எந்தப் பிள்ளைகளையும் ரியூசனுக்கு விடமாட்டார்கள். இலகுவான முறைகளைக் கையாண்டு கற்பிப்பார்கள். அவர்களது சேவைத் திறனால் கிராமப்புற மாணவர்கள் பலர் பல்கலைக் கழகம் சென்று பட்டதாரியானார்கள். இவர்களை எங்கள் தலைமுறையினர் தூற்றுவதா? செல்வனின் உள்ளம் கொதித்தது.

எப்படி அவரிடம் எடுத்துரைப்பது.? யோசனையோடு சைக்கிள் ஓட்டினார்கள். சற்று நேரம் மயான அமைதி நிலவியது. "என்ன சத்தமில்லாமல் வாறியள்? என்ன புதினம். சொல்லுங்கோ?" புன்னகையோடு கேட்டார். அவரது சைக்கிள் ஒரு பள்ளத்தில் ஏறிக் குதித்து நின்றது. விழாமலிருக்கத் தன் இடது காலை நிலத்தில் ஊன்றிக் கொண்டார். சோமசுந்தரனும் சைக்கிளை நிறுத்திக் கொண்டான். சைக்கிளை விட்டு இறங்கினார்கள். வீதி கரடு முரடாகப் படுத்திருந்தது.

மெதுவாகச் சைக்கிளை உருட்டி நடந்தார்கள். "ஐயா நமது ஊர் இப்ப கெட்டுப்போச்சுது. மனிதர்களை மதிக்கத் தெரியாத சமூகம் உருவாகி விட்டதுபோல் தெரிகிறது." செல்வன் விடயத்தை உடைக்க ஆயத்தமாகி விட்டான். "ஏன் அப்படி நினைக்கிறீர்கள்?" அவர்களைப் பார்த்துக் கேட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவித்தார்கள். மனந்துணிந்து கேட்டார்கள். "ஐயா.. நமது ஊரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்.?" "நினைப்பது என்ன? 'எந்த ஊர் என்றாலும் அது நம்ம ஊர் போலாகுமா'?" பாட்டாகவே பதிலளித்தார். அவரது வெள்ளை உள்ளத்தைக் கண்டு மனம் பூரித்தாலும் அதற்காக அவர்கள் வருந்தினார்கள்.

"தம்பி உங்களது ஏக்கம் எனக்குப் புரிகிறது? இதுதானே உங்களுக்கு வேணும்?" கேள்வியோடு சட்டைப் பையிலிருந்த தாளை எடுத்து விரித்தார். "இதைச் சொல்லத்தானே தயக்கம்". சிரித்தவாறே காட்டினார். அசிங்கமான படங்களோடு 'ஏன் வந்தாய்? என்ற வினா தெரிந்தது. அவர்கள் சிலையானார்கள். இவருக்கு எப்படி இது கிடைத்தது?. "ஐயா.. உங்களுக்கு.. இந்த விசயம் .. தெரியுமா?" ஆச்சரியத்துடன் வினாவினார்கள்.

"தெரியுமாவா? என்னைத் தெரிந்த அத்தனைபேரிடமும் இந்தத் தாள் உலா வந்துள்ளது. தம்பி நான் உலகத்தைப் புரிந்தவன். பலரது உள்ளங்களையும் அறிந்தவன். ஏன் வந்தாய்? என்று கேட்பவர்களுக்கு நாங்கள் ஊருக்கு வந்ததன் நோக்கம் நல்லாகவே தெரியும். ஏதோ பயத்தினால் சேற்றை அள்ளித் தங்கள் முகத்திலேயே பூசியுள்ளார்கள். பாவம். அவர்களை மன்னிப்போம். இதைப் போட்டு அலட்டிக் கொள்ள வேண்டாம்." அலட்சியப் படாமல் சொல்லிக் கொண்டு நடந்தார். "எப்படி ஐயா பொறுத்துக் கொள்ளலாம். இதற்குப் பொறுப்பானவர்களும் உங்கள் இருவரிடமும் கற்றவர்கள்தானே?" நடந்தவாறே கேட்டார்கள்.

"கற்றவர்கள்தான். எல்லோரும் நல்லவர்கள்தான். ஆனாலும் மாணவர்கள் பலவிதம். நீங்கள் நன்னூலைப் படித்தவர்கள்தானே?. மாணவர்களை நன்னூலார் மூவகைப் படுத்துவார். அல்லவா? அவர்களை அன்னத்துக்கும், கிளிப்பிள்ளைக்கும், ஓட்டைக்குடத்துக்கும், பசுவுக்கும், பன்னாடைக்கும் இன்னும் பலவற்றுக்கும் ஒப்பிடுவார். பன்னாடை போன்றவர்கள் நல்லனவற்றை விட்டு விடுவார்கள். அல்லனவற்றை எடுத்துக் கொள்வார்கள். பன்னாடை போன்றவர்கள் நமது ஊரில் மட்டுமல்ல எங்கும் இருக்கத்தான் செய்வார்கள். அவர்களை நினைக்கும்போது கவலை கொள்கிறேன். அவர்களது மனம் அவர்களைச் சுட்டெரிக்கும்.

இப்போது அவர்கள் சிந்திக்காது எதனைச் செய்கிறார்களோ அதனை அவர்களுக்கு மற்றவர்கள் நிட்சயம் செய்வார்கள். பன்னாடை போன்றவர்களுக்குப் பாடம் புகட்டவே வந்துள்ளோம். ஊரையும் ஊர்மக்களையும் குறைகூறாதீர்கள். ஏறுங்கள் போவோம்." கூறிக் கொண்டு சைக்கிளை மிதித்தார். அது ஊர்க்குருவி போல் பறந்தது. கந்தவனத்தாரின் ஒவ்வொரு சொல்லும் செயலும் உறுதியாக இருந்ததை உணர்ந்து கொண்டார்கள். அவர்கள் மனதிலும் ஒரு அமைதி நிலைகொண்டது. ஆலங்கேணிக் கிராமத்தின் கிழக்கே கொட்டியாரக் குடாக்கடல் மட்டும் இரைந்து கொண்டிருந்தது. திரும்பிப் பார்த்தார்கள். கடல் பொங்கி எழுந்து துரத்துவதுபோல் தெரிந்தது. வழக்கத்துக்கு மாறாக அலைகள் ஆர்ப்பரித்து வந்தன. ஆழிப்பேரலைகள் ஊர்களை வாரி விழுங்கவேண்டும் என்று பாய்ந்தெழுந்து சீறிக்கொண்டு கிழம்பி வந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவளும் அவனும்

அவளது முகம் என்றும் இல்லாதவாறு வாடியிருந்தது. மனம் சோர்ந்து பற்றில்லாது தவித்தது. இன்று யார் முகத்தில் விழித்தாளோ தெரியவில்லை. அலுவலகத்தில் சுறுசுறுப்பாக இயந்திர கதியில் செயற்பட்டாள். கொம்பியூட்டரில் தரவுகள் யாவற்றையும் திணிக்க முயன்றாள். அறிக்கையில் வரைபுகளை வரையத் தரவுகளைக் கொடுத்தாள். வரைபுகள் சரியாக அமையவில்லை. முயன்று முயன்று தவறி.. தவறிக் கொண்டே போயின. அழுகை அழுகையாக வந்தது. நேரம் போய்க் கொண்டிருந்தது. அவளுக்குக் கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. கைகளால் நெற்றியை அழுத்தித் தேய்த்தாள். தலையை இருகைகளாலும் தாங்கிவாறு குனிந்து இருந்தாள். அவளது செயலை மனேஜிங் டிரெக்டர் அவதானித்து இருக்கவேண்டும். அவர் அவள் பக்கம் வந்தார்.

“என்ன லதா இண்டைக்கு வழமைக்கு மாறாக இருக்கிறியள். ஏதும் பிரச்சினையா”? அக்கறையோடு மனேஜிங் டிரெக்ரர் கேட்டார். அவருக்கு விரைவில் தனது வேலைகள் முடியவேண்டும் என்ற கரிசனை. “அப்படி ஒன்றுமில்லை சேர்.” பொய்யான புன்முறுவலை வரவழைத்தவாறே பதிலளித்தாள். ஆனால் அவளது முகம் காட்டிக்கொடுத்து விட்டது. அகத்தின் அழகு முகத்தில் தெரிந்தது. “லதா பொய் சொல்லாதீங்க. பொய் சொல்வதென்றாலும் பொருந்தச் சொல்லவேணும். உங்கட முகம் 'அது பொய்' என்று சொல்லுது. என்ன பிரச்சினை என்று என்னட்டச் சொல்லுங்க. உங்கட அப்பா அந்தஸ்ததில் இருந்து கேட்கிறன். என்னால் முடிந்த உதவியைச் செய்யுறன். மனது ஆறுதல் அடையும்.”

“அப்படி ஒன்றும் பெரிசா இல்லை சேர்.”

“பெரிசாக இல்லையெண்டால் ஏதோ ஒண்டு இருக்குது என்று அர்த்தம். அதுதான் என்ன?. சொல்லுங்க.” அவர் விடுவதாக இல்லை. அவளுக்குச் சங்கடமாக இருந்தது. யோசித்தாள். “அது வந்து... மனம் சரியில்லை சேர்... மகள் சிந்துவுக்குச் சுகமில்லை. நாளைக்கு நமது கருத்திட்ட அறிக்கையைச் சமர்ப்பிக்க வேணும். அது இன்னும் முடியல்ல. அதுதான் கவலையாக இருக்கிறது.” இழுத்து இழுத்து ஒருவாறு சொல்லிமுடித்தாள்.

அவள் கண்கள் கலங்கிக் கண்ணீர்த் துளிகள் முட்டின. வழமையாகச் சுறுசுறுப்பாக இயங்கும் அவள் இன்று நண்பகல் வரை பதட்டமாக இருந்தாள். லதா மிகவும் கெட்டிக்காரி. கருத்திட்டம் தயாரிப்பதில் வல்லவர். அவளால் தயாரிக்கப்பட்ட பல கருத்திட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு நிறுவனத்துக்கு நல்ல பெயரைக் கொடுத்திருந்தது. அவளால் நிறுவனத்துக்குப் பல நன்மைகள் கிடைத்துள்ளன. லதாவுக்கு மதிப்பும் மரியாதையும் நிறுவனத்தில் கிடைத்தது. மனேஜிங் டிரெக்ரர் அவளது மனநிலையைப் புரிந்து விட்டார். அவள்மேல் இரக்கம் உண்டாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அதுதானே பார்த்தன். ஏதோ ஒன்று இருந்தபடியால்தான் நீங்க இண்டைக்கு டல்லா இருக்கிறீங்க. வழமையான சுறுசுறுப்பும் இல்ல. லதா நானும் மனுசன்தான். எனக்கும் மனசு இருக்கு. மனநிலை சரியில்லாதபோது எந்த வேலையும் ஓடாது. தவிரவும் வேலை செய்யும் போது தவறுகள் ஏற்படச் சந்தர்பங்கள் நிறையவே உண்டு. இப்படியே இதெல்லாம் கிடக்கட்டும். அறிக்கை முக்கியமில்லை. பிள்ளையின் உடல்நிலைதான் முக்கியம். அறிக்கையை அடுத்த கிழமையும் அனுப்பலாம். அதற்கு அவகாசம் இருக்கிறது. முதல்ல போய் பிள்ளையைப் பாருங்கோ. போங்கோ.” கூறிவிட்டு அவர் போய்க் கொண்டிருந்தார். அவளது மனதில் சற்று நிம்மதி வந்து குந்திய உணர்வு ஏற்பட்டது. லதாவுக்குப் பெரியதொரு பாரம் இறங்கியதுபோல் இருந்தது. மனேஜர் மீது இருந்த மதிப்பும் மரியாதையும் அதிகரித்தது. வயதுக்கேற்ற அனுபவமும் அவரிடம் இருந்தது. அப்படி இல்லாவிடில் இப்படிப்பட்ட பெரிய நிறுவனத்தை வெற்றிகரமாக நடத்த முடியுமா?.

“இந்த மனேஜர் என்னைப் புரிந்த அளவிற்கு என்ர மனிசன் என்னைப் புரியல்ல. இந்த ஆண்வர்க்கமே அப்படித்தான். சரியான சுயநலவாதிகள்..” அவளது மனம் கணவனை எண்ணிக் கோபப்பட்டது. ஒருபக்கம் வேதனையாகவும் இருந்தது. கண்கள் குளமாகிக் கரைமுட்டி உடைந்து வடிந்தது. இந்தப் பெண்களுக்கு எங்கிருந்து இவ்வளவு கண்ணீர் வருகிறதோ தெரியாது. கண்ணீராலேயே சாதித்து விடும் ஆளுமை பெண்களிடம் மட்டுமே உள்ளது. பிரச்சினைகள் என வரும்போது அதற்கு முகம்கொடுத்துச் சமாளிக்க முடியாதபோது கண்ணீரைக் கொட்டி அழுது தீர்ப்பது பெண்களுக்கே உரிய செயலாகும். அதுவும் ஒரு வகையில் நல்லதுதான். துயரம் வரும்போது அதனை அடக்கி வையாது இப்படி வெளியில் கண்ணீரைக் கொட்டிவிடுவதால் அவர்களது மனம் அமைதியடைகிறது. மன அழுத்தம் குறைகிறது. அடிக்கடி துடைத்துக் கொண்டாள்.

மேசைமேல் கிடந்த கோவைகளை மூடி அலுமாரியில் திணித்தாள். கொம்பியூட்டரை உறையினுள் அடக்கி மூடினாள். சொல்வதற்காக மனேஜரின் அறைப்பக்கம் போனாள். அவளைக் கண்டதும் “லதா இன்னும் நீங்க போகல்லையா? போய் பிள்ளையைப் பாருங்க”. அவரிடமிருந்து பதில் வந்தது. மீண்டும் தனது இருக்கைக்கு வந்து தனது 'ஹான்பாக்கை' எடுத்தாள். அவசர அவசரமாகக் கிளம்பினாள். அலுவலகத்தை விட்டு வீதிக்கு வந்தாள். வாகனங்கள் விரைந்து கொண்டிருந்தன. கொழும்பில் காலி வீதி சனங்களால் நெருக்குவாரப் பட்டது. வாகனங்களின் இரைச்சல் காதையடைத்தது. வாகனங்களின் புகையும், தூசியும், இரைச்சலும் புலன்களைச் சித்திரைவதை செய்தன. எவ்வளவு சனங்கள். வாகனங்கள். இந்த வாகனங்களும். சனங்களும் எங்கிருந்து புறப்பட்டு வருகின்றனர்? அவள் மனம் கேள்விகளால் நிறைந்திருந்தது. ஆனால் பதில்தான் இல்லை. மனம் வீட்டைச்சுற்றி வலம் வந்தது. கண்கள் அவள் வீடு செல்வதற்கான வஸ் வண்டியைத் தேடின. கால்கள் நடந்தன. அவள் வழமையாக வஸ்வண்டியில் ஏறும் தரிப்பிடத்தை அடைந்தாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் மனதில் ஒருவித பயம் இருக்கத்தான் செய்தது. தமிழர்கள் மட்டுந்தான் பொட்டு வைப்பார்கள். அந்தப் பொட்டு எவ்வளவு அழகானது. புனிதமானது. முகத்துக்குப் பொலிவூட்டுவது. இனவிரிசல் தொடங்கிய காலத்திலிருந்து இந்த நாட்டில் அப்படியொரு அனர்த்தம். பொட்டு வைத்தவர்கள் தாக்கப் பட்டார்கள். ஓட ஓட விரட்டியடிக்கப்பட்டுக் குதறப் பட்டார்கள். கொலைசெய்யப் பட்டார்கள். அதை நினைக்கவே பயமாக இருந்தது. இப்போதும் தமிழர்களுக்குப் பூரண பாதுகாப்பு என்று சொல்ல முடியாது. கடத்தல்களும், வழிப்பறிப்புகளும், கொலைகளும் அடிக்கடி நடந்து கொண்டுதான் இருக்கின்றன. அவளால் கற்பனை செய்து பார்க்கவும் முடியவில்லை. கையைப்புரட்டிப் பார்த்தாள். நேரம் போய்க் கொண்டிருந்தது. தன்னைப் போல் ஆடை அணிந்தவர்களைக் கண்டால் மட்டும் ஒரு புன்னகையை உதடுகளில் வரவழைத்துத் தவழவிட்டிருந்தாள். மனமெல்லாம் சிந்துவைச் சுற்றியே வந்தது.

இன்று காலை வேலைக்குப் புறப்படும்போது சிந்துவின் பிஞ்சு விரல்கள் சுடிதாரைப் பிடித்து இழுத்ததை நினைந்து கொண்டாள். இரவு முழுவதும் சிந்துவுக்குக் காய்ச்சல். உடல் நெருப்பாய் எரிந்தது. இன்று அவளுக்கு வேலைக்குப் போவதற்கு மனமே இல்லை. ஆனால் கருத்திட்ட வேலையை முடித்துக் கொடுக்க வேண்டிய இறுதிநாள் இன்றாகத்தான் குறிப்பிடப்பட்டிருந்தது. போய் கருத்திட்டத்தை முடித்துக் கொடுத்தே ஆகவேண்டும். புறப்பட்டு வந்து விட்டாள். சிந்து காய்ச்சலில் எப்படிக் கஸ்டப்படுதோ தெரியாது. அந்த இரண்டு வயதுப் பிஞ்சு இப்போது தேடும் என்றதை நினைந்ததும் அவளது கண்கள் பனித்தன. போனதும் மருந்து எடுக்கப் போகவேணும். பாழாய்ப் போன வஸ் இன்னும் வரவில்லை. நேரம் மந்த கதியில் நகர்ந்து கொண்டிருந்தது. மெதுவாக அவள் போகவேண்டிய அந்த இலக்க வஸ் வந்து நின்றது. முண்டியடித்து முயன்றும் முடியவில்லை. அவ்வளவு சனம். அனைவருக்கும் அவசரம். அடுத்து வரும் வஸ்ஸைப் பார்த்தாள். அடிக்கடி வஸ் வரும் திசையை நோக்கித் தவமிருந்தாள். வீதியைப் பார்த்து பெருமூச்செறிந்தாள். என்ன செய்வது? ஒரே 'ரென்சனாய்' இருந்தது.

அவள் மனம் பதறிக் கொண்டிருந்தது. தனது கணவன் தரன் மேல் ஆத்திரமாக வந்தது. காலையில் நடந்ததை நினைந்து கொண்டாள். ஓவென்று அழவேண்டும்போலிருந்தது. 'பெண்ணென்றால் இவங்களுக்கு இளக்காரமாய்ப் போய்விட்டது'. மனதுக்குள் நொந்து கொண்டாள். முகம் அடிக்கடி கடுமையாகிக் கொண்டிருந்தது. கலியாணம் முடிக்கும்வரை தேனொழுகப் பேசுவார்கள். காலைக் கையைப் பிடிப்பார்கள். எல்லாம் முடிஞ்சபின் பெரிய லெவல் இவங்களுக்கு. இண்டைக்கு இரண்டில் ஒன்று பார்க்க வேணும். இன்று காலையில் நடந்த நிகழ்ச்சி மனத்திரையில் வந்து விழுந்து படமாக ஓடியது. மறக்க முயன்றும் முடியவில்லை.

காலையில் அலுவலகம் போவதற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள். அவளுக்கு ஒன்றும் ஓடவில்லை. "இஞ்சாருங்கோ அப்பா... சிந்துவுக்குச் சுகமில்லை. மருந்து எடுக்க வேணும். இண்டைக்கு நீங்க லீவு எடுத்துச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்துவோட வீட்டில் நில்லுங்க. நான் நாளைக்கு லீவ் எடுக்கிறன்.” லதா சுடிதாரைச் சரிசெய்தவாறே கூறினாள். தரனுக்கு அது பிடிக்கவில்லை. தரன் இரவு முழுவதும் கொம்பியூட்ரில் வேலை செய்து கொண்டிருந்தான். மறுநாள் நடைபெறும் ரெண்டர் மீற்றிங் பற்றிக் கூறியுமிருந்தான். “என்ன விசர்கதை கதைக்கிறாய்”. இண்டைக்குத்தான் ரெண்டர் கொடுக்கிறதுக்குக் கடைசிநாள் என்று உனக்குத் தெரியும்தானே.? தவறினால் நமது கம்பனிக்கு நட்டமப்பா. எவ்வளவு நம்பிக்கையோடு கம்பனியை ஒப்படைத்து இருக்கிறார்கள். எத்தனை தரம் சொல்லியிருக்கிறன். உனக்கு விளங்கல்லையா?” அவன் புறப்பட்டுக் கொண்டே கூறினான்.

தரன் அந்த நிறுவனத்தில் பயிலுநராகவே சேர்ந்தவன். சுறுசுறுப்போடு சுழன்று உழைத்தவன். அவனது கடின உழைப்பு நல்ல பெயரைத் தேடிக் கொடுத்தது. அவனது திறமையைப் பார்த்து நிறுவனத்தின் பங்காளிகள் தரனை கம்பனியின் மனேஜராக அண்மையில் பதவியில் அமர்த்தினர். இப்போது அவன் திறமைவாய்ந்த பொறுப்புள்ள மனேஜராகக் கடமையாற்றுகிறான். ஓய்வு ஒழிவில்லாது உழைப்பவன். அவனுக்குப் பொறுப்புக்கள் அதிகம். லதாவும் இதனை உணர்ந்திருந்தாள். அவனது கஸ்டத்தைப் பார்த்துப் புரிந்து அனுதாப்பட்டும் இருக்கிறாள். இன்று லதாவின் நிலையும் சங்கடமானதாக இருந்தது. யார் யாருக்காக அனுதாபப்படுவது. லதாவுக்கு பொறுமை இன்று எல்லைமீறிவிட்டது. அவளை அறியாமலேயே ஆட்டிலறி ஷெல் விழுந்து வெடித்துச் சிதறுவது போல் சொற்கள் பறந்தன.

“உங்களுக்கு மட்டுந்தானா அவசர வேலை.? நானும் இண்டைக்குக் கருத்திட்ட அறிக்கையை முடித்துக் கொடுக்க வேணும். உங்களைப் போலதானே நானும் வேலை செய்யிறன். எனக்கும் பொறுப்புக்கள் இருக்கு. நான் அதுகள முடித்துக் கொடுக்க வேணும்தானே.? வீட்டிலும் வேலை. கந்தோரிலும் வேலை. எல்லாத்திலயும் மாட்டிக் கொண்டு தவிக்கிறன்”. கண்ணீருடன் கொட்டி வைத்தாள். தரனுக்குப் பொறுமை போய்விட்டது. லதாவை எரித்து விடுவது போன்று பார்த்தான்.

“லதா .. நல்லா யோசித்துப் பார். நமது கஸ்டத்தைப் போக்கத்தானே நான் ஓய்வில்லாது இப்படி பாடுபட்டு உழைக்கிறன். ஏன் இதை எண்ணிப் பார்க்கல்ல. எல்லாத்திலயும் மாட்டிக் கொண்டு தவிக்கச் சொன்னேனா? தவிரவும் உன்னை யார் வேலைக்குப் போகச் சொன்னது? இனிமேல் கஸ்டப்படத் தேவையில்லை. வேலையை விட்டுப் போட்டு இருக்கச் சொல்லி எத்தனை தடவைகள் சொல்லியிருக்கிறன்.” தரன் கடுகடுப்போடு கொட்டி வைத்தான். “வேலைக்குப் போறதுதான் இப்ப உங்கட கண்ணில குத்துதாக்கும். நான் வேலைக்குப் போகாட்டித் தெரியும் கடுப்பு. நான் வேலைக்குப் போறதால என்ன குடிமுழுகிப் போச்சு. பெண்கள் வேலை செய்யக் கூடாதென்ற சட்டமா?” மூச்சு விடாது சொற்களை அள்ளி வீசினாள்.

“இரண்டு பேரும் வேலைக்குப் போறதால நமது பிள்ளை பாதிக்கப்படுது. இது உனக்கு விளங்கல்ல. குடும்பத்தில ஒரு ஆள் வேலைசெய்தால் போதும்.”


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரன் பதிலுக்குக் கூறிவைத்தான். லதாவுக்குப் பொத்துக் கொண்டு ஆத்திரம் வந்தது. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு. அவளும் பொரிந்து தள்ளினாள். "பிள்ள ஏன் பாதிக்கப்படுது? நான் வேலைக்குப் போறது உங்களுக்குப் பொறாமை எண்டு சொல்லுங்க."

"நீ வேலைக்குப் போறதால எனக்கு ஏன் பொறாமை? உனக்கு விசர். பெண்கள் வேலை செய்வதில் தப்பில்லை. ஆனால் திருமணத்துக்குப் பிறகு யோசிக்க வேணும். ஆளையாள் புரிந்து கொள்ள வேணும். பிள்ளைகளை நல்லபடியாக வளர்த்தெடுக்க வேணும்.. அதுக்குக் கணவனும் மனைவியும் விட்டுக் கொடுத்து வாழவேணும். வேலைக்குப் போறதும், உழைக்கிறதும் வாழ்க்கை யில்லை. சந்தோசம் குடும்பத்தில் நிலவவேணும். இப்ப நான் எடுக்கிற சம்பளம் நமது குடும்பத்தை நடத்தப் போதுமானது. நீ வேலைக்குப் போய்த்தான் உழைக்க வேணும் என்ற கட்டாயம் இல்லை." தனது அலுவலக ஆவணங்களை அடுக்கிக் கொண்டே பதிலளித்தான்.

"நான் வேலைக்குப் போவதுதான் உங்கட கண்ணில குத்துது" அவள் யோசிக்கமாமல் பொரிந்து தள்ளினாள். தரன் ஒன்றும் பேசாது புறப்பட ஆயத்தமானான். லதாவின் அம்மா தேநீர் கொண்டு வந்தார். மேசையில் காலை உணவு அப்படியே இருந்தது. வீட்டு வேலைகளோடு சிந்துவையும் லதாவின் அம்மாதான் கவனிப்பவர். அவர் இருப்பதால் அவர்களுக்குப் பெரிதும் ஆறுதலாக இருந்தது.

"மாமி சிந்துவைப் பார்த்துக் கொள்ளுங்க." கண்ணாடியைப் பார்த்துக் கழுத்துப் பட்டியைச் சரிசெய்தவாறே கூறினான். வெளியில் வந்து தனது மோட்டார் சைக்கிளை இயக்கினான்.

"தம்பி சாப்பிடல்லயா?"

"வேண்டாம் மாமி. நான் பிறகு வாறன்." மோட்டார் சைக்கிள் இரைந்தது. புறப்படத் தயாரானான். லதா பாய்ந்து வெளியில் வந்தாள். ஆத்திரம் பொத்திக் கொண்டு வந்தது.

"ஆர் சிந்துவை மருந்தெடுக்கக் கூட்டிப் போவது"? வெளியில் வந்து உரத்துச் சத்தமிட்டாள். பதில் சொன்னால் வாய்த்தர்க்கம் வளர்ந்து விடும். பெரிய குழப்பமாகிவிடும் மௌனமானான். பதில் கூறாமல் சென்றுவிட்டான். லதா குலுங்கிக் குலுங்கி அழுதாள். அவள் ஏன் அழுதாள் என்பது அவளுக்கே தெரியாது. திருமணம் முடித்த நாளிலிருந்து நேற்று வரை தரன் வேலைக்குப் போகும்போது வாசல் வரை வந்து புன்னகையோடு வழியனுப்பி வைத்தவள். இன்று அப்படிச் செய்யவில்லை. அதற்கு அவகாசமும் இருக்கவில்லை. அவளுக்குப் பெரிய தர்மசங்கடமாகி விட்டது. தங்களுக்குள் ஒரு இடைவெளி உருவாகி வருவதை உணர்ந்தாள். சிந்துவை நினைந்து உருகினாள். பெண்ணாகப் பிறந்ததே பெரிய பாவமா? பலதையிட்டும் வருந்தினாள்.

" பிள்ளை உனக்கு வரவர வாய் கூடிப்போச்சு. பேசாம உன்ர வேலையை நீ பார். நான் இருக்கிறன்தானே? சிந்துவை நான்தானே பார்க்கிறன். வேலைகளை முடிச்சுப் போட்டு மருந்தெடுக்கக் கூட்டிப்போவன். இதுக்குப் போய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரோட ஏன் சண்டை பிடிக்கிறாய். பாவம் தம்பி. அது சாப்பிடாமப் போகுது. அவர் ஆம்பிள. ஆயிரம் வேலைகள் இருக்கும். அவர் சொன்னதும் சரிதானே"? அம்மா ஒரு ஆறுதலுக்காகத்தான் கூறினார். லதாவுக்கு அது பிடிக்கவில்லை.

"நானா சண்டை பிடிக்கிறன். அவர் ஆம்பிள என்டால் அடங்கிப் போகணுமா? ஆணுக்கொரு நீதி. பெண்ணுக்கொரு நீதியா? நல்ல நியாயம். ஒரு நாள் லீவு போட்டுட்டு சிந்துவோட நிக்கச் சொன்னனான். அது சண்டையா? உங்களுக்கும் ஒண்டும் விளங்கேல்ல. நீங்களும் அவர்ர பக்கம்தான்". அவளுக்கு எரிச்சலாக வந்தது. கண்ணும் மூக்கும் கசிந்தன. முகத்தைத் துடைத்துக் கொண்டாள். தான் தனிமரமாக நிற்பதாக உணர்ந்தாள். "இந்த அம்மாவும் அவருக்குத்தான் சப்போட் பண்ணுறா. சே ..என்னை யாரும் புரியல்ல". அலுத்துக் கொண்டாள்.

"பிள்ள.. அவருக்கு அவசரமான வேலையெண்டபடியால்தான் போறார். எப்பயாவது இப்படி நடந்திருக்கிறாரா? நீ இதை விளங்கிக் கொள். குடும்பம் என்றால் ஆயிரம் இருக்கும். இப்ப கோபிப்பியள். பிறகு சந்தோசமாக இருப்பியள். இது சகஜம். இதெல்லாம் நிரந்தரமான சண்டை இல்ல. குடும்பத்தில சண்டையும் சச்சரவும் வரத்தான் வேணும். அது ஒரு நேரத்தில சுகத்தையும் தரும். எல்லாத்தையும் விட்டுப் போட்டு,நீயும் வேலைக்குப் போய் வா. புறப்படு". கூறிவிட்டு அவ்விடத்தில் நில்லாமல் வேலைகளைக் கவனிக்கப் போய்விட்டாள். லதா தேநீரை மட்டும் குடித்தாள். உடையைச் சரிசெய்தாள். சிந்துவிடம் சென்றாள்.

"சிந்து அம்மா வேலைக்குப் போய்வாறன். அம்மம்மாவோட இருங்க. அம்மா கெதியாக வந்திருவன். சரியா?." கூறிக்கொண்டு அவளது தலையைத் தடவிவிட்டாள். சிந்துவுக்கு இதமாக இருந்தது. வாஞ்சையோடு தாயின் சுடிதாரைப் பிடித்துக் கொண்டாள். மெதுவாக அவளது பிஞ்சு விரல்களை விலக்கிவிட்டு அந்த விரல்களில் ஒரு பொம்மையைத் திணித்து விட்டாள். சிந்து பொம்மையோடு மெல்ல எழுந்து நின்றாள். கைகளால் 'டாட்டா' காட்டினாள். லதா புறப்பட்டுப் போய் விட்டாள்.

"என்ன லதா இன்டைக்கு நேரத்துக்கே வீட்டுக்குப் புறப்பட்டாச்சு"? குரல்கேட்டு லதா திரும்பினாள். மாலதி புன்னகையோடு நின்று கொண்டிருந்தாள். தன்னைச் சுதாகரித்துக் கொண்டாள். தெரியாத உலகத்தில் தெரிந்த முகத்தைக் கண்டதும் ஒரு நிம்மதியை உணர்ந்தாள். "என்ன கடும் யோசினை"? தொடர்ந்து மாலதி கேட்டாள். "ஒண்டுமில்லை. சிந்துவுக்குச் சுகமில்லை. மருந்தெடுக்கவும் இல்லை. அதுதான் நேரத்துக்குப் போகலாம் என்று வந்தன். ஆனால் இந்த வஸ் வந்தபாடில்லை". லதா பதிலளித்தாள். கண்கள் வஸ் வரும் வீதியைத் துளாவின.

தூரத்தே அந்த வஸ் வந்து கொண்டிருந்தது. தனது சிந்தனையில் இருந்து விடுபட்டாள். மாலதியோடு சேர்ந்து பாய்ந்து ஏறிக்கொண்டாள். இருப்பதற்கு இருக்கை கிடைக்கவில்லை. ஐந்து கிலோமீற்றர் வரை நின்றே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணித்தாள். அவளது உடல் வஸ்சில் இருந்ததேதவிர உள்ளம் சிந்துவைச் சுற்றியே வந்தது. தரன்மேல் கோபமாக இருந்தாலும், அவன் இன்று சாப்பிடாமல் வேலைக்குச் சென்றது அவளது உள்ளத்தில் காயத்தை ஏற்படுத்திக் கொண்டே இருந்தது. வஸ் தரிப்புக்களில் நிற்கும் போதும், புறப்படும் போதும் மனித உடல்கள் முட்டி மோதி உரைஞ்சி வெயர்வையோடு மனித வெப்பத்தையும், அதனால் ஏற்படும் வெயர்வை மணத்தையும் வஸ்ஸுக்குள் பரவி விட்டிருந்தது. மனித வெக்கை பொல்லாதது. வெப்பமான உடல்கள் முட்டும்போது என்ன மாதிரி அவிச்சல் ஏற்படுகிறது. மூச்சுத்திணறலோடு பயணித்துத் தனது பயணத்தை முடித்துக் கொண்டாள். மாலதிக்குக் கையசைத்து விட்டு இறங்கினாள். நடந்து வீட்டுக் கேற்றைத் திறந்ததும், பாய்ந்து வீட்டினுள்ளே வந்தாள்.

"அம்மா! சிந்துவுக்கு இப்ப எப்படி இருக்கு? மருந்து எடுத்தீங்களா? காய்ச்சல் இப்பவும் இருக்கா"? கேள்வி மேல் கேள்வி கேட்ட மகளுக்கு அம்மா பதில் ஏதும் சொல்லவில்லை. அவளைப் பார்த்துச் சிரித்தாள். அவளது போக்கு வித்தியாசமாக இருந்தது. எவ்வளவுதான் படித்திருந்தாலும் அவளும் சாதாரண பெண்தானே? "நான் கேள்வி கேட்கிறன். பதில் சொல்லாமல் சிரிக்கிறீங்க". லதா சடசடவெனப் பொழிந்து தள்ளினாள்.

'காய்ச்சல் இருக்கா இல்லையா என்று போய்ப் பார்க்கிறதுதானே." அம்மா பதில் சொல்லிவிட்டுத் தன் கடமையில் ஆழ்ந்து விட்டார். கையிலிருந்த பொருட்களை மேசைமேல் வீசி விட்டுச் சிந்து படுத்திருந்த அறையினுள் ஓடினாள். மெதுவாகக் கதவைத் திறந்து பார்த்தாள். அவள் ஆடிப்போனாள். அப்படியே அசைவற்று நின்றாள். அவளது கண்களை அவளால் நம்பமுடியவில்லை. சிந்து தரனின் அணைப்பில் உறக்கத்தில் இருந்தாள். மெல்லச் சிந்துவைத் தொட்டுப் பார்த்தாள். காய்ச்சல் இல்லை. வந்தது போலவே வெளியில் ஓடினாள். அம்மாவிடம் கேட்டாள். தரன் வேலைக்குப் போனதையும், உடன் திரும்பி வந்து தாங்கள் மருந்தெடுத்து வந்ததையும் அம்மா கூறினார். அவள் தன்னை மறந்த நிலையில் நடந்தாள். அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டாள். அப்படியே கட்டிலில் சிலைபோல் இருந்து விட்டாள். அவளது கைகள் தரனின் கால்களைப் பற்றியிருந்தன. விழிகள் கண்ணீரில் மிதந்தன. சூடான கண்ணீர்த் துளிகள் தரனின் கால்களில் விழுந்து நனைத்தன. விழித்துக் கொண்ட தரன் லதாவை அன்போடு பார்த்தான். அவள் தேம்பி அழுதாள். தனது தவறுகளைக் கண்ணீரால் கழுவிக் கொண்டாள். "லதா.. சின்னப் பிள்ளைபோல்... சீ..என்ன இது?" அவனே அவளது முகத்தை ஏந்தித் துடைத்துவிட்டான்.

"நமது நிறைவான செல்வம் சிந்துதான். அதை நான் மறப்பேனா? காலையில் நடந்ததை கனவாக நினைத்துக் கொள்". ஆறுதல் கூறினான். அவனது மார்பில் முகம் புதைத்து விக்கி விக்கி அழுதாள். அவளை அப்படியே அணைத்துக் கொண்டான். லதாவின் உள்ளத்தில் தரன் விஸ்வரூபம் எடுத்திருந்தான். ஆண்கள் பொல்லாதவர்கள் இல்லை. ஆணும் பெண்ணும் சமமெனக் கொண்டதுதான் வாழ்க்கை என்பதை லதா புரிந்து கொண்டாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வந்திமாலைப் பொழுது.

அவர்தான் சோமசுந்தரம்பிள்ளை. அவர் ஒரு ஆசிரியர் மட்டுமல்ல பெரும் புலவருமாவார். 'எல்.பி திறி' என அழைக்கப்படும் லிங்கபுரம் பாடசாலையில் கடந்த இரு வருடங்களாகக் கடமையாற்றி வருகிறார். அது கிளிவெட்டிப் பிரதேசத்தில் உள்ள ஒரு குடியேற்றப் பிரதேசம். போக்கு வரத்து வசதிகளற்ற மிகக்கஸ்டமான பகுதி. வெள்ளிக்கிழமை நாட்களில் சமாளித்துக் காலை பத்துமணி பேருந்தைப் பிடித்தால் மாலை ஐந்து மணிக்கு மட்டக்களப்பில் உள்ள களுவாஞ்சிக்குடியை அடையலாம். அங்கிருந்து எருவில், குறுமண்வெளி ஊடாக பொடிநடை போட்டால் மண்டூர் துறையை அடையலாம். மட்டக்களப்பு வாவி நிலத்திணிவை இருகூறுகளாக்கி நீண்டு படுத்திருக்கும். அந்த வாவியில் தோணிகட்டிப் படகுச்சவாரி போவது உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அனுபவம் கிடைக்கும். வாவிக் கரைகள் தோறும் கிராமங்கள் மெருகூட்டும். ஆவினமும் மேதிகளும் தலையாட்டும். வாவியின் இருகரைகளையும் இணைத்துக் குறுக்காகத் தோணிகள் பயணம் போகும்.

சோமசுந்தரம்பிள்ளை இந்த வாரம் வியாழக்கிழமையே புறப்பட்டு விட்டார். புதன்கிழமை கிடைத்த செய்தி அவரை உலுக்கி விட்டிருந்தது. அவரது இல்லத்தரசி பவளம்தான் அந்தச் செய்தியை அனுப்பியிருந்தார். புலவருக்கு யோசனை தலைக்கேறி விட்டது. ஒரு தாளை எடுத்துத் தனது நிலைமையை விளக்கிச் சொந்த ஊருக்கு இடமாற்றம் தரும்படி கல்வித் திணைக்களத்துக்கு மனுவினை எழுதித் தபாலில் சேர்த்தும் விட்டார். ஊர்மனை உறங்கிக் கொண்டிருந்தது. பழைய மாணவனின் துணையோடு சைக்கிளில் கிளிவெட்டித் துறையை அடைந்தார். கூட்டிவந்தவரை உபசரித்து அனுப்பிவிட்டு பயணத்துக்கு ஆயத்தமானார். ஆனால் வஸ்வண்டியைத்தான் காணவில்லை. கிளிவெட்டி, வெருகல், பனிச்சங்கேணி, குறுமண்வெளி துறைகளைத் தாண்டி மண்டூர் செல்லவேண்டும்.

அதிகாலையில் புறப்பட்ட பயணம் இது. வஸ் வந்ததும் ஏறிக்கொண்டார். வஸ் ஓடுவதற்கேற்ப அவரது கற்பனைத் தேரும் ஓடியது. கண்களை மூடியபடியே அந்த உலகத்தில் உலா வந்தார். இடையிடையே கற்பனை கலையும். விழித்துக் கொள்வார். சிலநேரங்களில் பவளத்தின் கடிதச் செய்தி பூதாகரமாக உருவெடுக்கும். சற்று நேரத்தில் இதெல்லாம் பெரிய பிரச்சினையா? என்று மங்கித்தூசாகும். கண்களை மூடி மண்டூர் முருகனை மனதிருத்தினார். "மண்டூர் முருகா! ஒருக்காக் கண்திறந்து பாரையா. எனக்கு யாரிருக்கார். உன்னைத்தானே நம்பியிருக்கிறன். நாசமறுவான் இப்படி இடமாற்றத்தத் தந்து கஸ்டப்பட வச்சுப் போட்டான். அவள் அங்க எவ்வளவு பாடுபடுவாளோ தெரியாது." வழிநெடுகிலும் மண்டூர் முருகனையே நினைந்து நெக்குருகி வேண்டுதல் செய்து கொண்டுதான் வந்தார். தனது கஸ்டத்திலும் பிறரைத் திட்டித் தீர்க்கும்போது பயன்படுத்தும் சொற்களையும் எண்ணிப்பார்த்தார்.

'நாசமறுவான்' என்பது நாசம் + அறு + ஆன் = அழிவு இல்லாதவன் அல்லது நாசத்தை இல்லாதாக்குபவன் என்றல்லவா பொருள். நான் அவனைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டினேனா அல்லது வாழ்த்தினேனா"? தனக்குள் சிரித்துக் கொண்டார். பிறர் நமக்குத் தீங்கு செய்தாலும் நாம் அவருக்குத் திருப்பி அதனைச் செய்யக் கூடாது. மனதினில் போராட்டம். ஒருவாறு மண்டூர் துறையடிக்கு வந்து சேர்ந்து விட்டார். துறையைக் கடக்க கோவிந்தனின் உதவி கிடைத்தது. அவன் புலவரை தனது தோணியில் ஏற்றிக் கரைசேர்த்துவிட்டான். துறையடி மாரியம்மனை ஒருக்காத் திரும்பிப் பார்த்து விட்டு "நீயெல்லாம் ஒரு இடத்தில் இருக்க நான் மட்டும் அங்க இங்க என்று இழுபடுறன். நீ நல்லா இரு." மனதில் முணுமுணுத்தபடி தோளிலும், கைகளிலும் சாமான் சட்டுக்களைத் தூக்கிப் போட்டுக்கொண்டார் மெதுவாக நடக்கத் தொடங்கினார். மனிதமனம் பொல்லாதது. துன்பம் சூழும்போது தனிமையில் தனக்கு வாயில் வந்தவாறு புலம்பும். இறைவனை முன்நிறுத்தி குற்றவாளிக் கூண்டில் ஏற்றி நீதி கேட்கும். விசித்திரமான மனம்.

பிரயாண அலுப்பு சுமையை அதிகமாக்கியது. மனிதன் தனிமையில் இருக்கும்போதுதான் உள்மனிதன் விழித்துக் கொள்கிறான். அந்த உள்மனிதன் உண்மைகளை அறிந்தவன். நிறைகுறைகளைச் சுட்டிக் காட்டுபவன். புலவரைச் சிந்திக்க வைத்துவிட்டான். "நானும் பொறுமையாக இருந்திருக்க வேணும். அந்த அரசியல்வாதியிடம் மோதியிருக்கக் கூடாது. அரசியல்வாதி சொன்னதுபோல் ஒத்துப் போயிருந்தால் இந்நிலை வந்திராது, எப்படி ஒத்துப் போவது? அனியாயம் செய்யும் அரசில்வாதிக்குப் பக்கபலமாக இருப்பதைவிட விலகியிருப்பது நல்லது. அவருக்கு இப்போது அது நினைவில் தட்டியது. அந்த அரசியல்வாதியின் திட்டத்தை சின்னத்துரை சொன்னவிதம் அவருக்குப் பிடிக்கவில்லை. "புலவரையா! நம்மட தலைவர், உங்கள தன்ர பக்கம் வேலைசெய்யட்டாம். அவருக்காக எடுக்கிற விழாவில பாட்டும் எழுதித் பாடட்டாம். மேடையில் தன்னை ஆதரித்துப் பேசட்டாம். என்னை அதுக்காகத்தான் அனுப்பினவர்." புட்டு வைத்தான்.

"சின்னத்துரை ஒரு தலைவனைப் புகழ்வதில் தப்பில்லை. ஆனால் போலிகளை இந்தப் புலவன் புகழமாட்டான். சொல்லிப் போட்டன். நீ போ." புலவர் கடுகடுத்தார். "நான் நல்லதுக்குத்தான் சொன்னனான். பிறகு வரும் வில்லங்கத்துக்கு என்னைப் பிழைகூறக்கூடாது." கூறியவாறே சின்னத்துரை மெதுவாக நழுவ முற்பட்டான். புலவர் ஆத்திரத்தில் "தன்னைப் புகழச் சொல்பவன் தலைவனா? மக்களின் கஸ்டநஸ்டம் தெரியுமா அவருக்கு?. தொண்டு செய்பவன்தான் தலைவன். என்னால் முடியாது. போய்ச் சொல். செய்யிறதைச் செய்யட்டும்" புலவர் கடுகடுத்தார். அதன் பலனை இன்று அனுபவிக்கிறார்.

"நாடு கெட்டுப்போய்க் கிடக்கிறது. மனிதர்கள் ஆளையாள் கொன்றொழிக்கிறார்கள். இவர்களுக்கு என்ன நேர்ந்து விட்டது? ஏன் இந்த நிலை வந்தது? இதற்கு யார் பொறுப்பு."? மனதினிலே எண்ணியவாறு நடந்தார். "பிள்ளைகளை வலுக்கட்டாயமாக இழுத்துப் போறார்களாம். யார் இழுத்துப் போகிறார்கள்? எதற்காக இப்படிச் செய்கிறார்கள்? ஒன்றும் விளங்காத நிலையில் தடுமாறிப் போனார். எல்லாம் இந்தச் சுயநல அரசியல்வாதிகளின் சதிவேலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வந்தி மாலைபொழுது அழகைச் சொரிந்து கொண்டிருந்தது. அந்த செவ்வந்தி மாலைப் பொழுதை அவரால் இரசிக்க முடியவில்லை. "அழகை இரசிப்பதற்கும் மனதில் நிம்மதி வேண்டும். நிம்மதி என்பது அவரவர் மனதைப் பொறுத்ததுதானா? எனக்கு அழகாகத் தெரியும் பொருட்கள், காட்சிகள் மற்றவர்களுக்கு அழகாகத் தென்படுவதில்லை ஏன்?. ஒருவர் இரசிக்கும் காட்சியை வேறொருவர் இரசிக்கமாட்டார். என்ன வேடிக்கையான மனம்." சோமசுந்தரம் மனதோடு உரையாடிக் கொண்டிருந்தார். கால்கள் நடந்து கொண்டிருந்தன. அவர் சிந்தனையில் ஆழ்ந்தாரென்றால் அவரையே அவர் மறந்து நடந்து கொண்டிருப்பார்.

கால்கள் போகவேண்டிய இடத்தை நோக்கி நடந்து கொண்டிருக்கும். பக்கத்தில் என்ன நடக்கிறது என்று அவருக்குத் தெரிவதில்லை. சிலநேரங்களில் இவரது நிலையைக் கண்டவர்கள் விசரன் என்று விலகிப் போவதுமுண்டு. புலவர் கற்பனையில் இறங்கினால் தன்னை மறந்து விடுவார். அவரது கண்கள் புருவ நெற்றிக்கூடாக நேர்பார்வையில் இருக்கும். எண்ணமெல்லாம் இழையோடிக் கொண்டிருக்கும். சொற்கூட்டம் சேர்ந்து கொள்ளும். பாவடிவில் பயணிக்கும். மெட்டெடுத்து வாய் முணுமுணுக்கும். அவர் ஒரு அற்புதப்பிறவி.

அப்பொழுதுதான் மண்டூர் கவிஞர் சோமசுந்தரம்பிள்ளை களைத்து வந்து சேர்ந்ததைக் கந்தவனத்தார் கண்டுகெண்டார். அவரது உடலை மூடியிருந்த வாலாமணி நனைந்திருந்தது. அவரை இப்பொழுதெல்லாம் அடிக்கடி மண்டூரில் காணமுடிவதில்லை. "நல்ல மனிசன். ஏன் அவருக்கு இடமாற்றம் வந்தது?" கந்தவனத்தாரிடம் பலர் இப்படிக் கேட்டார்கள். "நல்லதைக் கேட்டால், சொன்னால் அவன் பொல்லாதவன். கவிஞர் பொதுநலவாதி. பொதுமக்களுக்காகக் குரல் எழுப்பினார். நமது அரசியல்வாதிகளுக்கு பிடிக்கல்ல. அதுதான் அவருக்கு வந்த வினை". கந்தவனத்தார் பெருமூச்சுடன் சொன்னார். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்றுதான் புறப்பட்டார். ஆனால் பொருளாதாரக் கஸ்டம் அவருக்குச் சுமையாகியது. வீடும் பாடசாலையும் என்று வாழ்ந்தவருக்கு இடமாற்றம் வேதனையை அளித்தது. சம்பளத்தை எடுப்பார். மனைவி பவளத்தின் கையில் கொடுப்பார். அவ்வளவுதான். வீட்டில் நடப்பது அவருக்குத் தெரியாது. கந்தவனத்தாருக்குப் புலவரின் குணாதிசயங்கள் அத்துப்படி. புலவர் முன்னால் போய்க் கொண்டிருந்தார். பின்னால் கந்தவனத்தார் விரைந்து நடந்தார். "என்ன புலவரையா கடும் யோசனை?" குரல் கேட்டுத் தன்னைச் சுதாகரித்துக் கொண்ட மண்டூர்ப் புலவர் சோமசுந்தரம் குரல் வந்த பக்கம் திரும்பிப் பார்த்தார். அவர் பக்கத்தில் கந்தவனத்தார் புன்னகையோடு நின்றார்.

"வாங்க ..கந்தவனம்.. இப்பதான் வாறன்" ஒரு புன்னகையை வீசியெறிந்து பேசினார். அவரது முகத்தில் சோர்வு தெரியவில்லை. சொந்தக்காரரைக் காண்பதில் ஒரு சுகம் இருக்கத்தான் செய்தது. தனது சொந்த ஊரில் கால்பட்டதும் சுகம் கூடிக்கொண்டது. ஒருவித பெருமிதத்தோடு நடந்தார். கந்தவனத்தார் புலவரின் பொருட்களின் சுமையைப் பகிர்ந்து கொண்டார். ஊர்விசயங்கள் புரண்டு துள்ளின. பார்க்கும் இடமெல்லாம் இப்போது அற்புதமாகத் தெரிந்தது. ஆனாலும் புலவரது மனதினிலே இனந்தெரியாத வேதனை முள் தைப்பதைப்போல் குத்திக் கொண்டிருந்தது. அந்த வலியினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்ட உளைச்சல் எரிச்சலையும் கூட்டியது. நிம்மதியாக வாழ்ந்த மக்களது மனங்கள் துயரக்கடலில் மூழ்கியுள்ளதை நினைந்து வெந்து கொண்டார்.

"புலவரையா எப்படி இப்ப வேலைபார்க்கிற இடம்?. நம்மட ஊரைப்போல இருக்குமா?" "கந்தவனம் ..அந்த ஊர் நல்லதுதான். நல்ல சனங்கள். ஆனாலும் நம்மட ஊர் நமக்குச் சொர்க்கம்தான். சொந்த ஊரைப்போல ஒன்றும் சுகம்தராது. அங்க உல்லாசமாக இருந்தாலும், ஒரு தனிமை வாட்டும். நம்மட ஊர்ல காலைநீட்டிக் கொண்டிருந்தாலே போதும். சுகம் சுண்டும். அந்தச் சுகம் எங்கும் கிடைக்காது. ஆனால் அது இப்ப தொலைஞ்சு போச்சுது போலக்கிடக்குது". புலவர் அடுக்கிக் கொண்டு போனார். கந்தவனத்தார் மட்டக்களப்பைத் தவிர வேறு ஊர்களுக்குப் போனது கிடையாது. அரசாங்க உத்தியோகம் பார்க்கிறவர்கள் இடமாற்றம் பெற்றுப் பல ஊர்களில் வாழக்கூடிய சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொள்வார்கள். நல்ல அனுபவங்களைப் பெற்றும் கொள்வார்கள். கந்தவனத்தார் போன்றவர்கள் சொந்த ஊரிலேயே கிடப்பவர்கள். கிணற்றுத் தவளைகளைப் போல் ஊருக்குள்ளேயே கிடப்பதைத் தவிர வேறு அனுபவம் கிடக்கச் சந்தர்ப்பம் இல்லை. அவருக்குப் பல ஊர்களைப்பற்றி அறிய ஆசைதான். எப்படிப் போய்ப்பார்ப்பது. பொருளாதாரம் இடம் கொடுக்காது. அது சாத்தியப் பட்டும்வராது.

"என்டாலும் புலவரையா நீங்க கொடுத்து வைத்தவர்தான். நாலு இடங்களையும் மனிசரையும் பார்த்துப் பழகச் சந்தர்ப்பம் கிடைச்சிருக்கல்லவா?" நடந்து கொண்டே கந்தவனத்தார் தன் உள்ளக் கிடக்கையை வெளிக்காட்டினார். புலவரின் உள்ளம் அவரிடம் இல்லை. அது பறந்தோடியது. அந்த ஒரு வினாடிப் பொழுதில் அந்தக் கணத்தைக் கண்டார். பழையதை அசைபோடுவதில் ஒரு புதுமை இருக்கும். சுகமும் இருக்கும். புலவருக்கு தான் கடமையாற்றும் பிரதேசத்தில் நல்ல மதிப்பும் மரியாதையும் இருப்பதை நன்றியோடு நினைவு கூர்ந்தார். நவராத்திரி தொடங்கினால் மூதூர் பிரதேசம் குதூகலிக்கும். பாடசலைகளும் கோவில்களும் விழாக்கோலம் பூணும். மாலைதொடக்கம் நள்ளிரவு வரை கலைநிகழ்ச்சிகள் நடைபெறும். கவிதை அரங்குகளுக்கு முக்கிய இடம் கொடுக்கப்படும்.

மல்லிகைத் தீவு அற்புதமான மருதநிலக் கிராமம். செந்நெல் வயல்சூழ்ந்து விளைந்து கிடக்கும். தென்னஞ்சோலை பாளைவெடித்துச் சிரிக்கும். மாலையானால் மைனாக்களின் குதூகலிப்பு. கட்டிப்புரண்டு கதைபேசி மகிழும் காட்சி மனதை ஈர்க்கும். பார்க்கும் பக்கமெல்லாம் பசுமை போர்த்திருக்கும். மல்லிகைத்தீவு மகாவித்தியாலயம் தன்னை அலங்கரித்து மக்களை ஈர்த்துக் கொண்டிருந்தது. மண்டபம் நிறைந்து மக்கள் வழிந்து கொண்டிருந்தனர். "கவிதை அரங்கு எப்போது? கவிஞர்கள் வந்து விட்டார்களா"? கேள்விமேல் கேள்வி கேட்டுக் கவிஞர்களின் வருகைக்காக மக்கள் காத்துக்கொண்டிருந்தனர். வரிசையாகக் கவிஞர்கள் சைக்கிள் சவாரி செய்தவண்ணம் வந்து சேர்ந்தார்கள். மண்டூர்கவிஞரும் எடுப்பாக நின்றார். இது அவர்களுக்கு எத்தனையாவது சுற்று.? கிராமங்கள் தோறும் வாணிவிழா கவிதை அரங்குகள் களைகட்டும். பலகிராமங்களில் கவிதையரங்குகளில் பங்கு கொண்டுவிட்டுக் களைத்து வந்திருந்தார்கள். தாமரைத்தீவானின் தலைமையில் கவிதையரங்கு. ஆலையூரன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈச்சையூர்தவா,தமிழ்பித்தன், பின்னால் புலவர் இசையோடு பாடினார்.

தோப்பூரில் வேலை செய்யும்
சோமசுந்தரம் பிள்ளை - உனக்கு
சொந்தக்காரர் இல்லை - இங்கு
துன்பம் கோடி தொல்லை
ஆப்பு வைத்தான் ஒருவன்
அதில் அகப்பட்டவன் நாளை
ஆப்பு உடைத்து வருவான் - அவன்
அகந்தை உடைத்து வெல்வான்.

கைதட்டலும் சிரிப்பும் வானைப் பிளந்தது. புலவர் இறுதியாக இசையோடு பாடினார். தொடர்ந்து பாடிய கேணிப்பித்தன்

தோப்பூரில் வேலை செய்யும்
சோமசுந்தரம் பிள்ளை - உனக்கு
சொந்தக்காரர் கொள்ளை,
துன்பம் உனக்கு இல்லை
காப்பவிழ்ந்த பூவாய் - நீ
காலமெல்லாம் வாழ்வாய்
காலம் பதில் சொல்லும்
கவலை உனக்கு இல்லை.

இப்படிப் பாடினார். மக்கள் ஆரவாரித்து மகிழ்ந்ததை புலவர் மனநிறைவோடு எண்ணிக் கொண்டார். மனிதமனம் அலைபாயும் தன்மையுடையது. நிறம் மாறும் ஓணாண்போல் நிமிடத்திற்கு நிமிடம் மனம் மாறும். புலவரும் அப்படித்தான். சட்டென்று விசயத்துக்கு வந்துவிட்டார். "இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சைதான் கந்தவனம்." புலவர் தனது மன உளைச்சலை பெருமூச்சோடு வெளித்தள்ளினார். நடந்து கொண்டே தான் பிறந்து வளர்ந்த ஊரின் அழகையும் பெருமையையும் வியந்து மெய்மறந்து நெக்குருகினார்.

அழகான அந்த வாகைமரம் காற்றினை ஏந்தி அரவணைத்துச் சலசலத்துத் தாளம்போட்டுக் கொண்டிருந்தது. வாகை மரங்கள் ஊடாக மட்டக்களப்பு வாவியின் பரந்த அழகு எட்டிப்பார்க்கிறது. அந்த வாவியில்தான் சித்திரை முழுநிலவின் ஒளியில் நீரரமகளிர் இன்னிசை பாடிவருவதாக ஐதீகம். விபுலானந்த அடிகள் அந்த இசையைக் கேட்டு யாழ்நூலை எழுதினார். அந்த வாவி மட்டக்களப்பை இருகூறுகளாக்கிப் பரந்து நீண்டு கிடக்கிறது. எழுவான்கரையில் எம்பிய காற்று, படுவான்கரையை நோக்கி வீசுகின்றது. யாழ்நூலில் வித்தகன் விபுலானந்தரின் கற்பனை அற்புதம். பாடும் மீன்களான நீரரமகளிர் மாலையில், நீலவானில் நிலவு பவனிவரும் வேளையில், மலைவு கொண்டு பாடி ஆடி மட்டக்களப்பு வாவியில் உலா வரும் காட்சியை அற்புதமாகக் காட்டியுள்ளார். பாடலுக்கேற்ற இசையை அள்ளிய காற்று வாவியின் மெலிதான அலைகள் ஊடாகப் பரப்புகிறது. மயங்கிய மாலைப் பொழுதில் மனங்கள் துள்ளி ஆடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீல வானிலே நிலவு வீசவே
மாலை வேளையே மலைவு கொள்ளுவோம்
சால நாடியே சலதி நீருளே
பாலை பாடியே பலரொடாடுவோம்.

சுவாமி விபுலானந்தரின் இந்தப்பாடலை மண்டூர்ப் புலவர் சோமசுந்தரம் வாய்விட்டுப்பாடி மகிழ்வார். பாடி மற்றவர்களையும் மகிழ்விப்பார். மண்டூர் புலவர் சோமசுந்தரம்பிள்ளை ஒரு வித்தியாசமான மனிதர். அவரது கொடுப்புள் ஒரு புன்னகை ஒளிந்து கொண்டிருக்கும். புருவங்களைச் சுருக்கி இனிமையாகப் பேசுவார். வெள்ளை வேட்டி சட்டையுடன் கழுத்தில் மாலையாக சால்வை அலங்கரிக்கும். அகம்பாவமற்ற உயர்ந்த தோற்றத்தோடு நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையுமாக காட்சி தருவார். அவரது கற்பித்தல் முறையும் வித்தியாசமானது. அவரே பாடப் புத்தகம்தான். வகுப்பறையில் அவர் பாடம் தொடங்கினால் பக்கத்து வகுப்பறை மாணவர்களது மனங்களும் கண்களும் அவர் பக்கம் இருக்கும். செயல்மூலம் கற்பிக்கும் திறங்கொண்டவர். மாணவர்களது அபிமானம் பெற்ற நல்லதொரு ஆசிரியர். அலைகள் ஒன்றன்பின் ஒன்றாக மண்டூர்க் கரையில் மோதி உடைகின்றன. மண்டூர், வாவியின் அலைகளை அணைத்து முத்தமிட்டவாறு நீண்டு விரிந்து படுத்திருக்கிறது. வெயிலின் வெப்பத்தினால் ஆவியாக்கம் நடைபெற்று வளி குளிரைத்தடவிக் குதூகலிக்கிறது. வாவி நீரில் குளித்த காற்று புதுமையைக் கலந்து மரக்கொப்புகளை உலுப்புகிறது. அந்த உலுப்புதலில் அசைவாக்கம் பிறக்கிறது. அந்த அசைவில் ஒரு நளினம் சுழன்றாடியது.

காற்று, அசைவினூடாக இன்னிசையைப் பரப்பி இங்கிதத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. பெரியதொரு யானை அசைந்தாடுவதுபோல் வாகைமரம் காட்சியாகியது. அதன் அடிமரம் சரிந்து வளைந்து, இடையில் கிளைவிட்டு வளைந்து சடைத்துச் சாய்ந்திருந்தது. அதன் வேர்கள் நிலத்தின் மேல் பெரிதாய் விரிந்து புடைத்து இருக்கைகளாக மேடையமைத்திருந்தன. அப்படியான வாகைமரங்கள் மூன்று நான்கு நின்று நிழல்வடித்துக் கொண்டிருந்தன. வருவோர் போவோருக்கு இளைப்பாற்றும் பணியை ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். இந்த மரங்களுக்கு இப்படியான கட்டளையை இட்டது யார்?. இடையிடையே வம்மி மரங்களின் பிரசன்னம். வம்மிப்பூக்களில் இருந்து பரவும் நறுமணம் சொர்க்கத்தை நினைவூட்டும். இந்தப் பூக்களில் இருந்து எப்படி இந்த வாசனை வருகிறது? கந்தவனத்தார் ஒரு வம்மிப்பூவைக் கையில் ஏந்தி அதனைத் தன் கைகளுள் திணித்து அதன் மென்மையை உணரத்தொடங்கினார். கந்தவனத்தாரின் நண்பகல் அந்த வாகைமரத்தடியில்தான் கழியும். சீனித்தம்பியும் அங்குதான் வருவார். அவரோடு பலர் குழுமுவார்கள். கூட்டங்கூட்டமாகப் பரந்து இருப்பார்கள். களைப்பாற மட்டும் வருவதில்லை. வேலோடு விளையாடும் முருகனின் திருவிளையாடல்களைப் பேசி மகிழ்வதற்குமாகவும் ஒன்று கூடுவார்கள். சூரனை வதம்செய்ய கந்தன் ஏவிய வேலினது அகோரம் தணியவில்லையாம். அது பலகிளைகளாகப் பிரிந்து பல இடங்களில் தங்கியதாக மக்கள் கூறுகின்றனர். ஒரு வேல் மண்டூரின் வாவியோரமாக இருந்த தில்லைமர வேரில் தங்கியதாக இன்றும் மக்கள் நம்புகின்றார்கள். அந்த வேலினைக் கண்ட மக்கள் அப்படியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலமைத்து வணங்கி வருவதாக வரலாறு. முருகனின் புகழ்பாடும் மண்டூர் பெருமைமிக்கது.

அதர்மத்தை விலக்கித் தர்மத்தை நிலைநாட்ட அவ்வப்போது அவதாரங்கள் தோன்றும். சூரனின் பிடியில் சிக்கித் தவித்த ஆன்மாக்களுக்கு விடுதலையழித்து விண்ணரசைத் தோற்றுவித்ததாக இதிகாசங்களும், புராணங்களும் கூறுகின்றன. அவற்றையெல்லாம் அசைபோட்டவாறு ஒரு கூட்டம் கூடிக்குதூகலிக்கும். மதியம் பன்னிரெண்டு மணி. மண்டூர் முருகனின் கோயில்மணி ஒலிக்கிறது. கருவறைக் கதவின் திரையில் ஆறுமுகமும், பன்னிரு கைகளும். பக்கத்தில் வள்ளி தெய்வயானை சமேதரராய் முருகனின் அழகுக் காட்சி. அற்புதமாக அழகு வண்ணத்தில் ஓவியமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. வண்ணக்கர் குணசுந்தரனார் பூசகருக்கும் மற்றும் தொண்டர்களுக்கு வேண்டிய ஆணைகளைப் பிறப்பித்தவாறு விசாலமாகத் தோன்றுகிறார்.

சாதாரண மனிதனுக்கு அது அற்புதமான காட்சியாகத் தெரியும். ஆனால் தத்துவ ஞானிகளுக்கு பரப்பிரமத்தின் அற்புதப்பொருள் தென்படும். பாரினில் ஐந்தாய் பரந்த நாயகன். நீரினில் நான்காய்த் திகழ்ந்த தத்துவன். தீயினில் மூன்றாய் மூழ்கிய நுண்ணியன். வளியினில் இரண்டாய் வலம்வரும் புண்ணியன். வெளியிடை ஒன்றாய் வியாபித்த சோதிவானவனின் திருவிளையாடல் அனுபவமாகும். தீபாராதனையுடன் பூசை தொடங்குகிறது. கற்புகனார் கந்தையா பயபக்தியில் மூழ்கி முருகனில் ஆழ்ந்திருக்கிறார். குழுமியிருந்த ஆண்களின் தோளில் கிடந்த சால்வைகள் இடுப்பில் தஞ்சமாகின்றன. கைகள் தலைமேல் வைத்துக் கண்ணீர் அரும்பித் ததும்ப, மனங்களை முருகனின் சந்நிதானத்தில் படைத்து சாஸ்டாங்கமாக விழுந்து "முருகா.. மண்டூர் கந்தா..குகனே..கதிர்வேலவனே.. பட்ட துன்பங்கள் போதும். இந்த நாட்டில் சமாதானத்தையும் சாந்தியையும் காட்டு. யுத்தம் இல்லாத சூழலை ஏற்படுத்து. மக்களுக்கு நிம்மதியான வாழ்க்கையைக் காட்டு." கந்தவனத்தாரின் கைகள் அகல விரிந்து தலைமேல் குவிந்து இரக்கின்றன. தாய்மார்கள் தமது பிள்ளைகளை "யுத்தச் சுனாமியில் இருந்து காப்பாற்று." இரந்து நிற்கிறார்கள். தனக்காக வேண்டுதலை அங்கு காணவில்லை. உலக மக்களின் துயரங்களைப் போக்க ஆராதனை நடக்கின்றது.

காட்டுத்தர்பார் நடக்கும் நாட்டில் பிணமுண்ணும் பேய்களைத்தான் காணமுடியும். தவித்த முயலடிக்கும் சந்தர்ப்ப வாதிகளைத்தான் சந்திக்க முடியும். சாய்ந்தால் சாய்கிற பக்கம் சாயும் மானிடர்களைத்தான் பார்க்கக் கூடும். இறைவன் இருக்கின்றானா? இறைவன் கல்லா? வெறும் கற்பனையா? இது புரியாத புதிர்தான். கணீர் குரல் ஒன்று ஓங்கி ஒலிக்கிறது. அருணகிரியாரின் அற்புதப் பாடல் பரவுகிறது. கண்களில் கண்ணீர் மல்க மண்டூர் கவிஞர் சோமசுந்தரம்பிள்ளை உடல்சிலிர்க்கப் பாடுகிறார். அவரது குரல்வளம் அற்புதாக ஒலிக்கிறது. பாடலின் ஒவ்வொரு சொல்லும் மிகத்தெளிவாக, அர்த்தபுஷ்டியாக இதயங்களில் படிகின்றன. பாடலோடு ஒன்றித்து அனுபவித்து ஒலிநயத்தோடு பாடல் செவிகளில் புகுந்து மெய்சிலிர்க்க வைக்கிறது. கேட்டுக் கிறங்கிக் கல்லாக மக்கள் திரண்டு நிற்கிறார்கள். அவர்களது மனங்கள் நீராய் உருகி ஓடுகிறது. ஒருபுறம் பெண்கள் கூப்பிய கைகளோடு விழிகள் மூடி, மனங்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தன் தாளில் படியவைத்து மெய்மறந்து நிற்கிறார்கள். ஆண்கள் தலைமேல் கைகள் மொட்டிக்க "கந்தா" என நா வறள அரற்றி நிற்கிறார்கள். பாடல் முடிய அவர் தோப்பூரில் கவிதை அரங்குகளில் அவ்வப்போது நகைச்சுவைக்காகப் பாடும் அந்தப் பாடலைச் சற்று மாற்றி முணுமுணுக்கத் தவறவில்லை.

தோப்பூரில் வேலை செய்யும்
சோமசுந்தரம் பிள்ளை உனக்கு
ஆப்பு வெச்ச தாரு அதனை
அகற்றி வைப்பவர் யாரு.

அவரது வேண்டுகோள் முடிந்தது. பக்தர்கள் பரவசமாகி நிற்கிறார்கள். எங்கிருந்தோ அந்தத் தோகை மயில் பறந்து வருகிறது. இரண்டு வரிசையாக நிற்கும் மக்கள் மத்தியில் புகுந்து வளைந்து நடக்கிறது. மேளவாத்தியம் முழங்குகிறது. அதற்கேற்ப மயிலின் அசைவுகள் பார்ப்போரைக் கிறங்கடிக்கின்றன. அற்புதமான காட்சியாகத் தெரிகிறது. இந்த மயில் கோயிலுக்கு வெளியேதான் திரியும். கோயிலைச் சுற்றி வலம் வரும். கோயில் கோபுரத்தில் நின்று அகவும். பறந்து மரக்கிளையில் தாவும். பக்தர்கள் கொடுக்கும் உணவுகளைக் கொத்தி உண்ணும். ஆனால் இன்று வித்தியாசமாக கோயில் உள்ளே பூசை நேரத்தில் புகுந்துள்ளது. ஒருநடனமாது போன்று அசைந்து நடந்து புலவர்முன் நின்றது. அங்கிருந்து நேரே பறந்து வெளியில் குதித்தது. அது பறந்த விசையில் காற்று எம்பி உதைத்தது. ஆச்சரியத்தோடு பக்தர்கள் "முருகா" என்று அரற்றினார்கள். பூசை முடிந்து வெளியில் வந்தார்கள். "புலவரையா..ஏதோ நன்மை நடக்கப்போகிறது. அது உங்களுக்குத்தான். இருந்து பாருங்கள். அடுத்த கிழமை நீங்கள் மண்டூருக்கு மாற்றமலாகி வந்து விடுவீர்கள்" கந்தவனத்தார் கம்பீரமாகச் சொன்னார். "நீங்க சொன்னது பலிக்கட்டும்". வழமையான புன்சிரிப்போடுச் சொல்லி வீட்டுக்கு நடைபோட்டார்.

"இரண்டுநாள் லீவு போட்டு நில்லுங்க. இந்தச்சச்சரவுகள முடிச்சுப் போட்டுப்போனால் நல்லதுதானே". பவளம் சொல்வதிலும் ஞாயத்தைக் கண்டார்.'சரி' நான் சொல்லிப்போட்டுத்தான் வந்தனான். புதன்கிழமை போவம். அதுக்குள்ள காரியங்கள பார்த்து முடிச்சிப்போடுவம்.' புலவரின் பதிலைக் கேட்டதும் பவளத்துக்குச் சந்தோசம். லீவைப் பற்றிக் கதையெடுத்தாலே பொத்திக்கொண்டு கோபம்வரும். இன்று புலவரின் நடத்தையில் பவளம் மாற்றத்தைக் கண்டு கொண்டார். ஊரின் நிலவரங்களை அறியவேணும். வீணான வம்புகளில் மாட்டுப்படக்கூடாது. சைக்கிளை எடுத்துக் கொண்டு உலா வந்தார். பவளம் கடிதத்தில் குறிப்பிட்டது போல் அவ்வளவு பிரச்சினைகள் இருந்ததாக அவருக்குத் தெரியவில்லை. ஏதோ அங்கொண்டு இங்கொண்டு நடந்திருக்கு. அவை தவிர்க்கமுடியாதவை எனத் தெரிந்து கொண்டார். எனினும் பவளத்தின் உடல்நிலையில் மாற்றத்தைக் கண்டார். "பவளம் ஒருக்கால் கல்முனைக்கு அல்லது மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்குப் போய் காட்டுவோமா'? ஆதரவோடு கேட்டார்.

"இதுக்கெல்லாம் ஆஸ்பத்திரிக்குப் போவனேன்.? நம்மட ஊர் ஆஸ்பத்திரில் காட்டி மருந்தெடுப்போம். சாதாரண காய்ச்சல்தானே? அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிடும்." பவளம் மறுத்துவிட்டாள். அவளுக்கு நாட்டு நிலவரத்தை எண்ணியே கவலையாயிருந்தது. இளம்பிள்ளைகளை வீடுகளில் வைத்துப் பார்ப்பது பெரிய வேலை. இப்போதுள்ள பெற்றாருக்குப் பெரும் கவலையைக் கொடுத்தது. அவளைப் பார்க்கப் பாவமாக இருந்தது. "நீங்க இருந்தா கொஞ்சம் தைரியமாயிருக்கும். நான் தனிய எப்படிச் சமாளிப்தென்றுதான் யோசினை". அவளது கண்கள் குளமாயிற்று. அவள் கண் கலங்குவதையிட்டு வேதனை கொண்டார். "பவளம் கவலையை விடு. நடப்பது நடக்கட்டும். எல்லாம் இறைவன் செயல். நாம ஆருக்கும் கெடுதல் செய்யல்ல. சொல்லியவாறு தனது கண்ணீரை அவளுக்குத் தெரியாதவாறு துடைத்துக் கொண்டார். படலையில் சைக்கிள் மணி ஒலித்தது.

'ஆரது' என்று பவளம் எட்டிப்பார்த்தார். "அட தம்பி சுந்தரம் வா. அதிசயமாயிருக்கு. எப்படி இந்த நேரத்தில் கடிதம் வரும். கடிதம் மண்டூருக்கு வர எப்பிடியும் ஒரு மணியாகுமே'? கூறியவாறே படலையடிக்குச் சென்றாள். "அம்மா ஐயா இருக்கிறாரா'? கேள்வியோடு சுந்தரம் உள்ளே வந்தான். "ஓமோம்.. வா. சுந்தரம்." புலவர் எழும்பி வந்தார். "ஐயா..உங்களுக்குத் தந்தி வந்திருக்கு. அதுதான் தர வந்தனான்". தபால்காரச் சுந்தரம் கையிலிருந்த தந்தியைக் கொடுத்தான். "தந்தியா... எனக்கு யாரிருக்கா அனுப்ப? கொண்டா பாப்பம்" வாங்கிப் பிரித்துப் படித்தார். சிறகில்லாது வானில் பறக்கும் உணர்வினைப் பெற்றார். அவருக்கு ஆச்சரியம். அத்துடன் அதிர்ச்சியாகவும் இருந்தது. "இஞ்சார் பவளம். எனக்கு மண்டூருக்கு மாற்றம் போட்டிருக்கு. கந்தவனத்தார் சொன்னது சரியாய்ப் போச்சு. முதலில் அந்த மனிசனுக்குத்தான் இதைச் சொல்லனும்." கூறிக்கொண்டு தந்தியை சட்டைப் பொக்கற்றில் மடித்து வைத்தார். "கடவுள் சோதிக்கிறது மனிதர்களைப் புடம்போடத்தான். கஸ்டம் வந்தால்தானே கடவுளை நினைக்கிறம்." பவளம் மனதில் இனந்தெரியாத பக்தியுணர்வு பீறிட்டுப் பாய்ந்தது. புலவர் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு கந்தவனத்தாரைத் தேடிப் போனார். ஏனோ அவரது மனம் கனத்தது.

"அருமையான பிள்ளைகள். அன்புடைய சனங்கள். எப்படி அந்தச் சனங்களை விட்டு வருவது.? சீ" இந்த மனம் பொல்லாதது. இங்கிருந்தால் அங்கு இருப்பது நல்லதாகத் தோன்றுகிறது. அங்கிருந்தால் இங்கிருப்பது நல்லதாகப் படுகிறது. இல்லாததையெல்லாம் எண்ணி ஏங்குகின்றது. கந்தவனத்தார் தூரத்தில் வந்து கொண்டிருந்தார். சைக்கிளை விட்டு இறங்கி நின்றார். கந்தவனத்தாரிடம் செய்தியைச் சொன்னார். தனது சங்கடத்தையும் சொன்னார். அவர் ஒரு சிரிப்புச் சிரித்தார். புலவருக்கு அதன் பொருள் விளங்காமலில்லை. புலவரே நீங்கதானே

"தோப்பூரில் வேலை செய்யும்
சோமசுந்தரம் பிள்ளை உனக்கு
ஆப்பு வெச்ச தாரு அதனை
அகற்றி வைப்பவர் யாரு. - என்று பாடிநீங்க. ஆப்பு அகற்றப்பட்டுவிட்டது. சந்தோசமாக உலாவருவோம். நம்மட ஊருக்கு நல்லதச் செய்வம். வாங்க ஒருக்கா முருகனிட்டப் போய்வருவம்." கோயிலுக்குச் சென்று மனதார வணங்கினார். விடைபெற்று வீட்டுக்குத் திரும்பினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமனிதர்கள்.

ஆனந்தர் விசுக்கென்று சைக்கிளை விட்டிறங்கினார். விறுவிறென்று "கலைக்கூடம்" அச்சகத்தினுள் நுழைந்தார். அவரைக் கண்டதும் உரிமையாளர் சங்கரர் எழுந்து வரவேற்றார். "அட்டைப்படம் எப்படி இருக்குது பாருங்கள்.? தலைப்புக்கு ஏற்றவாறு பொருத்தமாக வந்திருக்கு. இல்லையா"? அட்டைப் படத்தையும், புத்தகத்தையும் சேர்த்துக் காட்டியவாறு நீட்டினார் சங்கரர். ஆனந்தர் அட்டைப் படத்தையும் புத்தகத்தையும் திருப்பிப் புரட்டி உற்றுப்பார்த்தார். அவரது கண்கள் சுழன்று துளாவின. புருவங்கள் நெற்றியைச் சுருக்கி உயர்ந்து பதிந்தன. தலையை ஆட்டிக்கொண்டார். சம்மதம் பரிமாறப்பட்டது. "இனி ஆகவேண்டியதைக் கவனியுங்கள். புத்தகங்கள் இன்னும் எண்ணி நான்கு நாட்களில் தந்து விடுவேன். ஞாயிற்றுக் கிழமைதானே வெளியீடு? புத்தக வெளியீட்டுக்கு அடுக்குப் பண்ணவேண்டியதுதான். விளம்பரத்தை நாளைக்கே தந்து விடுங்கள்." அச்சக உரிமையாளர் சங்கரர் கூறிவிட்டார். சங்கரரின் அச்சகத்தில்தான் ஆனந்தர் தனது புத்தகங்களை அச்சிடக் கொடுப்பார். சங்கரருக்கும் ஆனந்தரின் குணாதிசயங்கள் தெரியும். சங்கரர் தனது பெயரைச் சங்கர் என்று குறுக்கிக் கொண்டார். ஆனந்தர் சிரித்தவாறே ஒன்று சொன்னார்.

"தம்பி சங்கரா நான் சொல்லுவதைக் கவனித்து யோசித்து முடிவை எடு. உன் அப்பா ஆசையாக உனக்கு வைத்த பெயர் சங்கரர். அதை நீ மாற்றலாமா?. யோசித்துப்பார். நாளைக்கு உன் மகன் இதைத்தானே செய்வான். இல்லையா? அப்பாவுக்குக் கொடுக்கும் மரியாதையைக் கொடு." ஆனந்தர் சொல்லிவிட்டுப் போய்விட்டார். ஞானம் பெற்ற புத்தராகச் சங்கரர் மாறிவிட்டார். தப்பித் தவறி "சங்கர்" என்று யாராவது சொன்னால் போதும். பொல்லாத கோபம் பொத்துக் கொண்டு வரும். அன்றிலிருந்து ஆனந்தரின் மேல் மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டுவிட்டது. அவரைக் காணும்போதெல்லாம் பயபக்தியாக மரியாதை செலுத்துவார். புத்தகத்தின் அமைப்புப் பிடித்திருக்கிறதா? இல்லையா? என்பதை அவரது புருவங்களும், முகபாவங்களும் தெள்ளெனக் காட்டிவிடும். புத்தகத்தின் வடிவமைப்புப் பிடித்துக் கொண்டது. கொடுப்புக்குள் ஒரு சிரிப்பு. அவரது மனதுக்குள்ளே ஒரு துள்ளல். பார்த்து விட்டுப் புத்தகத்தைத் திருப்பிக் கொடுத்தார். சங்கரர் புரிந்து கொண்டார்.

"அப்ப..நான் வாறன்". விடைபெற்றுச் சைக்கிளைத் தள்ளித் தாவி ஏறினார். சைக்கிள் "காற்று வேண்டும். காற்றை நிரப்பு அல்லது 'றிம்'மை கல்லுடைக்கும்" என்று அடம்பிடித்தது. வழியில் நண்பர் சிவாவின் கடையைக் கவனித்தார். சிவா ஆனந்தரின் அபிமான பால்ய நண்பன். வாசகப்பிரியன். பத்திரிகைகளைக் காசு கொடுத்து வாங்கிப் படிக்கும் அற்புதப்பிறவி. எந்தப் புத்தக வெளியீட்டிலும் சிவாவைச் சந்திக்கலாம். ஒரு சிறிய சைக்கிள் திருத்தும் கடையை நடத்துபவர். சிவாவின் கடையில் சைக்கிளை நிறுத்தினார். ஆனந்தர் பெரியபதவியில் இருந்தபோதும் அவர்களது நட்புத் தொடர்ந்திருந்தது. "சிவா சைக்கிளுக்குக் காற்றுக் காணாது. காற்றடித்து விடு." சைக்கிளை நிறுத்திவிட்டு நின்றார். 'அதுக்குத்தானே நானிருக்கிறன்.' சிவா காற்றை ஏற்றியவாறே "என்னடாப்பா கனநாளாக ஆளையே காணல்ல. பென்சன்ல போனால் பேசாமல் வீட்டில இருக்கிறதா? ஓடியாடி வேலை செய்ய வேணும். இல்லாட்டி மகாகவி "பஞ்சலிங்கம் பென்சனிலே போனார், கொஞ்சநாளில், பஞ்சியாலே செத்துமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனார்". என்று பாடியமாதிரித்தான் வரும்." சிரித்தவாறே பகிடியாய்ச் சொன்னார். சிவாவுக்கு ஆனந்தரின் செயற்பாடுகள் நல்லாத் தெரியும். "அது சரி.. ஏதும் விஷேசம் இல்லையோ"? பொறுப்புடன் வினாவினார்.

ஆனந்தர் ஒரு புன்னகையை வீசியவாறு "வழக்கம்போலத்தான். எனது பொழுது போக்குத் தெரியும்தானே? ஒரு புத்தகம் வெளியிடப்போறன். அதுவிசயமாகத்தான் அலையிறன்." ஆனந்தர் கூறினார். "அதுதானே பாத்தன் நல்ல விசயம்தான். நடக்கட்டும். புத்தக வெளியீட்டைக் கலாதியாக நடத்து. எனக்கும் அறிவித்துவிடு. நீ அறிவித்தாலும் அறிவியாவிட்டாலும் நான் கட்டாயம் வருவன்." சிவா கூறிக்கொண்டே கடமையை முடித்தார். "இந்தா சிவா.. இதை வச்சுக்கொள்." ஒரு பத்து ரூபாவை நீட்டினார். "எப்பவாவது நான் உன்னட்ட காசு வாங்கி இருக்கிறனா? நீ எத்தன புத்தகங்களைத் தந்திருக்கிறாய். உன்ர காசை நீயே வச்சுக்கொள். என்ர கோபத்தக் கிளறாத". பொய்க் கோபத்தோடு சைக்கிளை ஆனந்தரிடம் தள்ளினார். நன்றிகூறி தனது பஞ்சகல்யாணியில் தாவி ஏறினார். ஆனந்தரது சைக்கிளைக் கண்டால் 'பஞ்சகல்யாணி வருகுது'. என்று சொல்லி ஓடி மறைபவர்களும் இருந்தார்கள். எப்போதும் ஆனந்தரின் தோளில் ஒரு பை தொங்கும். அதனுள் சில புத்தகங்கள் உறங்கும். தெரிந்தவர்களிடம் நீட்டுவார். காசு கொடுத்தால் வாங்குவார். அல்லது தனது குறிப்புப்புத்தகத்தில் குறித்துக் கொள்ளுவார். காசு வந்தால் கண்டு கொள்வார். இல்லையேல் பெயர்களைப் பார்த்து ஒரு அசட்டுச்சிரிப்பை உதிர்த்து விடுவார். சிவா எவ்வளவு விசுவாசம் உள்ளவன். அவனுக்கு எவ்வளவு பெரிய மனம். ஆனந்தருக்கு வழிநெடுகிலும் சிந்தனைதான். இம்முறை கலாதியாகப் புத்தக வெளியீடு செய்ய வேண்டும் என்று சிவாவும் சொல்லிப் போட்டான். பெரிய திட்டத்தை மனம் தயாரிக்கத் தொடங்கியது.

ஆனந்தருக்கு நிறையவே நண்பர்கள் இருந்தார்கள். தெரிந்தவர்கள் பலர் இருந்தார்கள். அவருக்குத் தெரியாத இலக்கிய நண்பர்கள் இல்லை என்றே சொல்லலாம். அவரையும் தெரிந்தவர்கள் நிறையவே இருந்தார்கள். அவர் உயர்பதவியில் இருந்தபோது மதிப்பும் மரியாதையும் காட்டியவர்களை நினைந்து கொண்டார். அவர்களை நினைந்து நெக்குருகி நின்றார். நினையும்போதெல்லாம் நெஞ்சுருகி நினைவு கொண்டார். அவர்கள் சேவையில் இருந்தபோது நடந்து கொண்ட முறைகள், காட்டிய புரிந்துணர்வுகள் அவரை ஆட்கொண்டன. எனினும் மனிதர்களது மனங்கள் பொல்லாதவை. அடிக்கடி மாறுபவை. பதவியில் இருந்தபோது காட்டிய கரிசனை இப்போது இருக்காது என்பதையும் உணர்ந்தவர். பேசுவது ஒன்று. செய்வது ஒன்றாக இருக்கும் இந்த உலகத்தில் மனிதர்களது மனங்களும் வேறுபடும் என்பதை உணர்ந்திருந்தார். எனினும் அவர்களை மதித்தார். கண்டால் காணதமாதிரி ஓடி மறையும் இந்தக் காலத்தில் முதல் இருந்த மதிப்பும் மரியாதையும் தொடர்ந்து இருக்குமா? அல்லது கிடைக்குமா? அவர்களோடு தொடர்பு கொண்டு அவர்களது மனங்களை அறிய ஆவலானார்.

ஆனந்தர் ஒரு எழுத்தாளன். பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவருக்குப் பேராசை. அரச உயர் அதிகாரிகளையும், அரசசார்பற்ற அலுவலர்களையும், கல்வியியலாளர்களையும், அரசியலில் செல்வாக்குடையவர்களையும், தனவந்தர்களையும் ஒரே மேடையில் பார்க்க வேண்டும் என்ற பேராசை. அவருக்கு இந்த விபரீத எண்ணம் எப்படித் தோன்றியது. எதனையும் பரீட்சித்துப் பார்க்கும் அவசரம் அவரிடம் இருந்தது. இம் மனிதமனங்களைப் படித்துப் பார்ப்பதில் அவருக்கு இருந்த ஆர்வம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலாதியானது. தனது இருபத்தைந்தாவது நூல் வெளியீட்டினை வித்தியாசமாக நடத்திப்பார்க்க எண்ணினார். கோலாகலமாக நடத்தி முடிக்காவிட்டாலும் இவர்களை ஒருசேரப் பார்த்தால் என்ன என்ற விசப்பரீட்சை எண்ணம் விசுவரூபம் எடுத்திருந்தது. அதனைச் செயற்படுத்தும் முயற்சியில் இறங்கிவிட்டார்.

வீடு சென்றதும் தொலைத் தொடர்பு இலக்கக்கோவையைத் தேடினார். அத்னை எடுத்துத் தட்டினார். தூசி மண்டலம் பரந்தது. துண்டை எடுத்து முகத்தை மறைத்துக் கட்டிக் கொண்டார். வீடு அதிரும்படி தும்மினார். சும்மாவா சொன்னார்கள். "வீட்டைத் தூசி தட்டு வருத்தம் தானாகவே வரும்" என்று. மனதுக்குள் எண்ணிக் கொண்டார். இந்தத் தூசு எங்கிருந்து வருகிறதோ தெரியாது. வீட்டின் மூலைமுடுக்கெல்லாம் புகுந்து விளையாடுகிறது. தொடர்ந்து தும்மல் வாட்டி எடுத்தது. பக்கங்களைப் புரட்டி இலக்கங்களைத் தேடி விரல்கள் விளையாடின. தொலைபேசியை தனதருகே நகர்த்தி எடுத்து ஒவ்வொரு இலக்கமாகச் சுழற்றினார். தொலைபேசியின் மறுமுனையிலிருந்து 'ஹலோ' பெண்ணின் குரல் ஒலித்தது. 'ஹலோ' நான் ஆனந்தர்.. மிஸ்டர் கீர்த்தி பிளீஸ் .." பதிலுக்காகக் காத்திருந்தார். தொலைபேசியை ஒரு கை தாங்கிக் கொண்டிருந்தது. மறுகை பேனாவைத் தூக்கிக் கிறுக்கிக் கொண்டிருந்தது. மனம் படபடத்தது.

சற்று அமைதியின் பின் தொலைபேசி ஒலித்தது. "அவர் குளித்துக் கொண்டிருக்கிறார். தாமதித்து எடுங்கள்". தொலைபேசி வைக்கும் சத்தம் கேட்டது. அவரது முகம் சுளித்திருக்க வேண்டும். ஆனால் சுளிக்கவில்லை. வேறு இலக்கத்தைச் சுழற்றினார். 'ஹலோ..' குரல் ஒலித்தது. உரையாடினார். தனது உள்ளக் கிடக்கையைச் சொன்னார். எதிர்முனையில் இருந்து "கண்டிப்பாக வருவேன். உங்களுக்கு இல்லாமலா? எப்போது நூல் வெளியீடு".? கனிவோடும் கரிசனையோடும் வினா வந்தது. "எதிர்வரும் ஞாயிறு மூன்று மணிக்கு" நாளையும் இடத்தையும் கூறினார். "நல்லது. கட்டாயம் வருவேன்." பதில் வந்தது. .சந்தோசத்துடன் குறித்துக் கொண்டார். அவரது கைகள் பல இலக்கங்களைச் சுழற்றின. தொலைபேசி ஒலித்துக் கொண்டிருந்தது. தெரிந்தவர்களது முகங்கள் மனதில் நிழலாடி வந்து போயின. அவர்களது இலக்கங்களைச் சுழற்றினார். தொலைபேசியில் தொடர்பு கொண்டு பட்டியலைத் தயாரித்தார். "பணி தொடரட்டும்" என்று அனைவரும் வாழ்த்தினார்கள். வருவதாக வாக்களித்தார்கள். ஒரு அரைமணி நேரம் செலவழித்தார். மனதினிலே ஒரு தென்பு பிறந்தது.

ஒரு நூல் வெளியீடு என்பது சிறியதொரு விடயமல்ல. ஒரு திருமணம் நடத்துவதை விடவும் சிரமங்கள் அதிகம். நூல் வெளியிடும் சந்தர்ப்பமும் முக்கியம். நூல் வெளியிடும் எழுத்தாளரது அந்தஸ்தைப் பொறுத்தும் நிகழ்வின் வெற்றி நிட்சயிக்கப்படும். சாதாரண எழுத்தாளரின் வெளியீடு என்றால் பெரும்பாலும் விரல்விட்டு எண்ணக்கூடிய கூட்டமே கூடும். அந்த நூல்வெளியீட்டு நிகழ்வுக்கு இருபத்தைந்து பேர்வரை வந்தார்களாயின் அது பெரியகதைதான். ஆனால் பெரும் பதவியில் இருப்பவரின் நூல்வெளியீடு என்றால் கூட்டம் பொங்கி வழியும். ஏதோ ஒரு சலுகையைப் பெற்றுவிடும் நப்பாசைதான் காரணம். ஆனந்தர் பதவியில் இருந்தபோது கூடிய கூட்டம் அவர் பதவியிலிருந்து ஓய்வுபெற்றதும் ஒதுங்கிக் கொண்டதையும் உணர்ந்தவர். நூலை அச்சிட்டபின் கடைகளுக்கும் தெரிந்தவர்களுக்கும் கொடுத்து விடுவார். வெளியீடே வைப்பதில்லை. எனினும் எழுதுவதை அவர் நிறுத்திவிடவில்லை. எழுதிக் கொண்டுதான் இருந்தார். அவரது மனதுக்குச் சிலர் தெம்பாக இருந்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை அசைபோட்டார். வாசிப்பதில் கரிசனை காட்டுபவர்கள் இருந்தார்கள். எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் ஆர்வமுடையவர்கள் இருந்தார்கள்.

எப்படி முகத்தை முறிப்பது? போய் முகத்தைக் காட்டிவிட்டு வரும் அன்பர்களும் இருந்தார்கள். 'இவர்களுக்கு வேறுவேலை இல்லையா'? என்பவர்களும் இருக்கத்தான் செய்தார்கள். தலைமை தாங்குவதாக வாக்குக் கொடுத்து விட்டுத் தலைமறவாகி விடுபவர்களும், நூல் நயவுரை கூறுவதற்குப் பதிலாக தம்மைப்பற்றித் தம்பட்டம் அடித்து நூலாசிரியரை மட்டந்தட்டி விட்டுச் செல்லவேண்டும் என்ற எண்ணத்தோடு வருபவர்களும் இருக்கத்ததன் செய்தார்கள். ஆனந்தர் இவற்றையெல்லாம் அனுபவமூடாகக் கண்டவர்தான். எந்த நூல்வெளியீடு என்றாலும் ஆனந்தர் பங்குபற்றத் தவறுவதில்லை. இவற்றையெல்லாம் தனக்குள்ளேயே எண்ணிச் சிரித்துக் கொண்டார். எனினும் இந்த நூல்வெளியீட்டை ஒரு சவாலாக ஏற்று இறங்கிவிட்டார்.

இப்போது ஆனந்தருக்குச் சிக்கல் வந்து விட்டது. தான் தொடர்பு கொண்டவர்கள், நேரில் கண்டு சொன்னவர்கள் அனைவரும், பெரும் புள்ளிகள். யாரைப் பிரதம அதிதியாகப் போடுவது? இவர்களுக்கு எவ்வாறு விளம்பரத்தில் இடம் ஒதுக்குவது.? பெரும் சவாலை எதிர்கொண்டார். அவருக்கு உறக்கம் வரவில்லை. கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. உறக்கம் உடல் உழைப்பையும், களைப்பையும் போக்கி உயிரினத்துக்கு ஓய்வைக் கொடுப்பது. ஆனால் உறக்கம் இப்போது அவரைத் தனிமைப்படுத்தியது. பசி அவர்பக்கம் தலைகாட்ட மறுத்தது. பசிக்கவும் இல்லை. திக்குத் தெரியாத கடலில் நிலத்திணிவைத் தேடிப் பயணம் மேற்கொண்ட கொலம்பஸைப் போல் சிக்கலில் மாட்டிக்கொண்டார். அவர் மனம் பதைபதைத்தது. இருப்பதும், எழுந்து நடப்பதும், யோசிப்பதுமாக நேரம் கழிந்தது. இருண்ட மூளையில் ஒரு மின்னல் கீற்றின் உதயம் பளீச்சிட்டது.

"குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுத்தால் என்ன"? வினாவும் விடையுமாக மனம் போராடிக் கொண்டிருந்தது. நிலத்தைக் கண்ட கொலம்பஸ் போல் சந்தோசித்தார். 'வருவது வரட்டும்.' ஒரு குழந்தையைப் போல் துள்ளலான உற்சாகம் பிறந்தது. மனிதர்களை எடைபோட்டுப் பார்க்கும் விசப்பரீட்சை அல்லவா இது? அந்தப் படலம் தொடங்கியது. உசாராகிக் கொண்டார். விரைந்து எழுந்தார். விறுவிறு என்று மேசையின் பக்கம் சென்றார். வெற்றுத்தாளையும் கத்தரிக் கோலையும் தேடியெடுத்தார். தாளை எடுத்துச் சிறுதுண்டுகளாக நறுக்கினார். பலதுண்டுகளில் பெயர்களை எழுதினார். அவற்றை ஒரு வெற்றுப் பிளாஸ்ரிக் பாத்திரத்தில் போட்டு மூடி வைத்தார். பலவற்றில் பிரதமஅதிதி, சிறப்பு அதிதி, கௌரவ அதிதி, முதற்பிரதி பெறுபவர்கள் என எழுதினார். அவற்றையும் வேறு ஒரு வெற்றுப் பிளாஸ்ரிக் பாத்திரத்தில் போட்டு அடைத்து மேசைமேல் வைத்தார். நிம்மதிப் பெருமூச்சை விட்டு நிம்மதியாக உலாவந்தார்.

தொட்டில் பழக்கம் சுடுகாடுவரை தொடரும் என்பார்கள். ஆனந்தர் எத்தனை மணிக்கு உறங்கச் சென்றாலும் அதிகாலை நான்கு மணிக்கு விழித்தெழுந்து விடுவார். வெந்நீர் வைத்துக் குளித்துவிட்டு தியானத்தில் ஆழ்ந்து விடுவார். தனது வேலைகளைத் தானே செய்யக் கற்றுக் கொண்டார். ஆனால் சமையல் பக்கம் போவதே இல்லை. ஒரு தேநீர் போடத்தெரியாத மேதை. மேதைகள் அப்படித்தானே? ஆராய்ச்சியில் ஈடுபட்ட ஒரு தத்துவ ஞானி ஒரு சுவரில் இரண்டு துளைகளைப் போட்டார். ஒருதுளை பெரியது. மற்றையது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறியது. அந்த மேதையைத் தேடி நண்பர் ஒருவர் வந்தார். வந்தவர் மேதையிடம் 'ஒரு சுவரில் இரு துளைகளும் எதற்கு'? என்று கேட்டார். அவர் சொன்ன பதில் வந்தவரை ஆச்சரியத்துள் ஆழ்த்தியது. "எனது பெரிய பூனை செல்வதற்குப் பெரிய துளையும், அதன் குட்டி செல்வதற்குச் சிறிய துளையும் வைத்துள்ளேன்" என்றார்.

அதற்கு நண்பர் "இரண்டு பூனைகளும் ஒரு துளையூடாகச் செல்லலாம் அல்லவா"? என்றாராம். தனக்குள்ளேயே இந்தக் கருத்துக்களைச் சொல்லி ஆனந்தர் சிரித்துக் கொள்வார். கடமைகளை முடித்து வந்ததும் பேணிகளை எடுத்தார். தாளும் பேனாவும் தயாராக இருந்தன. தனது பேரக்குழந்தையை அழைத்தார். ஒரு பேணியில் கையை விட்டுத் துண்டு ஒன்றை எடுக்கச் சொன்னார். அந்தக்குழந்தை புன்னகையோடு எடுத்துக் கொடுத்தது. பெயரை எழுதிக்கொண்டார். அடுத்த பேணியில் உள்ள துண்டை எடுக்கும்படி கூறினார். குழந்தை சந்தோசத்துடன் எடுத்தது. பெயருக்கு எதிரே அதிதி வரிசைக்கிரமத்தை எழுதினார். குழந்தை விளையாடுவதை விரும்பியது. விளையாட்டு என்பது ஒரு கற்றல் செயற்பாடுதானே. துண்டுகளை எடுப்பதும் கொடுப்பதுமாக இருந்தது. எல்லாத் துண்டுகளும் முடிந்து விட்டன. ஆனந்தரின் பணி நிறைவேறியது. அதனால் நடைபெறும் விபரீதங்களையும் கற்பனை செய்து பார்க்கத் தவறவில்லை. வேறு வழியும் அவருக்குத் தெரியவில்லை.

விளம்பரத்தைத் தயாரித்தார் ஒரு பிரதியைத் தான் வைத்துக்கொண்டார். மறுபிரதியை அச்சகத்தில் ஒப்படைத்தார். அச்சக உரிமையாளர் சங்கரர் விளம்பரத்தைப் பார்வையிட்டார். தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டார். அந்தச் சிரிப்பில் அர்த்தம் இருந்தது. சங்கரரும் மனிதமனங்களை எடைபோடும் வல்லமை உடையவர். "ஐயா பெரிய புள்ளிகளைப் பிடித்துள்ளீர்கள். மாலையில் நோட்டீஸ் தயாராக இருக்கும். வந்தெடுத்துப் போங்க" என்றார். ஆனந்தர் அப்படியே புத்தகங்களையும் பார்வையிட்டார். திருப்தியானார். இரண்டு பிரதிகளையும் கையோடு ஒரு கட்டு மேலுறைகளையும் பெற்றுக் கொண்டு விரைந்தார். வீச்சாகச் சென்று முகவரிகளை எழுதத் தொடங்கினார்.

உறைகளை எழுதியதும் இலகுவாக விநியோகிப்பதற்கு ஏற்றவாறு தரம்பிரித்துக் கட்டினார். மாலை அச்சகம் சென்று விளம்பரங்களை எடுத்து வந்தார். விளம்பரங்களை மடித்து உறைகளில் திணித்தார். தான் நேரில் கொண்டு சென்று கொடுக்க வேண்டியவர்களது கட்டுக்களை வேறுபடுத்தினார். அவற்றை ஒருபுறம் எடுத்து வைத்தார். நண்பர் கங்கா ஒரு வித்தியாசமான பிறவி. ஒத்தாசை செய்ய முன்வந்தார். அவரிடம் விளம்பரங்களில் பலவற்றைக் கொடுத்து விட்டார். கங்கா சுயநலம் பாராது பொது வேலைகளில் ஈடுபட்டுழைப்பவர். பொதுநலவாதி. அவர் ஏழைகளுக்கும், அடிமட்டத்தில் உழலும் மக்களுக்கும் உழைப்பவர். 'இறைவனைக் காண்பதற்குக் கோயில்களுக்குச் செல்ல வேண்டியதில்லை. ஏழைகளுக்கு உதவுவதன் மூலம் இறைவனைக் காணலாம்.' என்று உழைப்பவர். அவர் சுறுசுறுப்பாக இயங்கினார். சேரவேண்டிய இடங்களுக்கு நோட்டீஸ் அனைத்தும் சேர்ந்து விட்டன. அதனை உடனுக்குடன் தெரியப் படுத்தினார்.

ஆனந்தர் முக்கியமான புள்ளிகளுக்குத் தானே நேரில் சென்று விநியோகம் செய்ய நினைத்தார். விளம்பரக் கட்டை எடுத்துப் பையினுள் நுழைத்தார். முதன்முதல் தொலைபேசியில் தொடர்பு கொண்ட நண்பரிடம் விளம்பரத்தைக் கொடுக்க வேண்டும் என்ற ஆவலை மனம் தூண்டியது. தனது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சகல்யாணியில் தாவிப் பறந்தார். தூரத்தே அந்தப் பெரிய கட்டிடம் எடுப்பாய் நிமிர்ந்திருந்தது. அவரது கண்கள் நாலைந்து பேர்நின்று கதைத்துக் கொண்டிருப்பதைக் கண்டுகொண்டன. அவரது நண்பரும் அதில் நின்றிருந்ததை அவதானித்து விட்டார். அவரது சைக்கிளைக் கண்டதும் அவர்கள் உள்ளே சென்றுவிட்டார்கள். பஞ்சகல்யாணியை மரநிழலில் நிறுத்தினார். ஒன்றும் அறியாதவர்போல் உள்ளே செல்லக் கதவைத் திறந்தார். சிற்றூழியர் சுகந்தன் நந்தியைப் போலிருந்தார். அவர்தான் வரவேற்பாளர். யாவுமாகி நிற்கின்ற பரம்பொருளின் வலிமையோடு காட்சி தந்தார். ஆனந்தர் அவரின் பக்கம் சென்றார்.

"தம்பி! ஐயாவைப் பார்க்கவேணும். ஒரு உதவிசெய்ய முடியுமா?" வெகுபக்குவமாய்த் தெரிவித்தார். "ஐயாவை இப்ப பார்க்கேலாது. இரண்டு மணிக்குத்தான் பார்க்கலாம்." யாவுமாகி நின்றவன் பதிலைக்கேட்டு ஆனந்தர் பதறிப்போனார்.
"தம்பி ஆனந்தர் சந்திக்க வந்திருக்கிறார் என்ற செய்தியை மட்டும் கூறிவிடுங்கள். அது போதும்" அமைதியாகக் கூறினார். அவன் ஆனந்தரை ஏற இறங்கப் பார்த்தான். என்ன நினைத்தானோ தெரியாது.

"சரி அப்படி இரும். பார்த்து வாறன்." வேண்டா வெறுப்பாக எழுந்து சென்றான். தான் வகித்த உயர்பதவியில் தனது சிற்றூழியர்களைத் தான் நடத்திய முறைகளை நினைந்து கொண்டார். சிற்றூழியர்களாக அவர்களை நினைக்கவில்லை. தன்னோடு சேவைசெய்யும் ஒருவராகவே கருதியவர். அந்தச் சிற்றூழியர்களது பண்பை நினைந்து கொண்டார். அதேவேளை யாவுமாகி நின்ற இந்தச் சிற்றூழியரது மனப்பாங்கையும் ஒப்பிட்டுப் பார்த்தார். தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டார். "மாற்றமாம் வையகத்தில்" மாணிக்கவாசகரின் வரிகள் மனதைத் தொட்டன. போனவனை இன்னும் காணவில்லை. அவருக்கு இருப்புக் கொள்ளவில்லை. குறுக்கும் நெடுக்குமாக நடந்தார்.

அந்தச் சிற்றூழியர் தாமதித்துத்தான் வந்தார். "ஐயா "பிசியாக" இருக்கிறார். கொஞ்ச நேரத்தில கூப்பிடுவார்." என்றான். தனது இருக்கையில் அமர்ந்து கிறுக்கிக் கொண்டிருந்தான். அவன் தனது வேலையில் ஆழ்ந்துவிட்டதாக நினைத்துக் கொண்டார். அந்த அதிகாரி ஒருமுறை ஆனந்தரிடம் வந்து உதவி பெற்றதை நினைந்து கொண்டார். அவர் வந்ததும் தாமதியாது வரவேற்று வந்த விடயத்தை முடித்து அனுப்பியதையும் மனங்கொண்டார். எல்லாம் காலத்தின் கோலம்.

சற்று நேரத்தில் மணியொலித்தது. சிற்றூழியர் எழுந்து போய் கதவைத் திறந்தான். உள்ளே போன கையுடன் வெளிவந்தான். "ஐயா கூப்பிடுறார். போங்க" என்றான். ஆனந்தர் விளம்பர நோட்டீஸ் இருந்த உறையைக் கையிலெடுத்தார். எழுந்து நடந்தார். மெதுவாகக் கதவைத் திறந்து உள்ளே சென்றார். அந்த நண்பரான அதிகாரி ஒரு முறுவலோடு 'வாங்க' வரவேற்றார். வணக்கம் சொல்லி கையிலிருந்த கடித உறையை நீட்டினார். அதனைப் பெற்றுத் திறந்தவாறே "புத்தகம் கொண்டு வரல்லையா"? என்றார். "வெளியீடு ஞாயிற்றுக்கிழமை. அன்றுதானே புத்தகம் பெறலாம். முதற்பிரதியை நீங்கள்தான் பெறவேண்டும்." அமைதியாகச் சொன்னார். அந்த அதிகாரியின் கண்கள் நோட்டீஸில் நிலைகுத்தித் தனது பெயரைத் தேடியதை ஆனந்தர் கண்டுகொண்டார். அவர் எதிர்பார்த்தது கிடைக்கவில்லை. அந்த அதிகாரியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதடுகளில் அசட்டுச்சிரிப்பு நெளிந்ததை ஆனந்தர் அவதானித்தார். தனக்கு முக்கிய இடம் கிடைக்கவில்லை என்பதை அந்த அசட்டுச்சிரிப்பு கட்டியம்கூறிக் கொண்டது. நோட்டீசை மேலோட்டமாகப் பார்த்து மடித்து தனது டயறிக்குள் வைத்தார். "ஞாயிறு நாலுமணிக்கு.... என்ன...? சரியான வேலை இருக்கு.... வரப்பார்க்கிறன்." இழுத்தார்.

"என்ன வரப்பார்க்கிறன்" கட்டாயம் வரவேண்டும். உங்களக் குழப்ப விரும்பவில்ல. உங்களுக்கு நிறைய வேலை இருக்கும். அப்ப நான் வாறன்." எழுந்து வெளியில் வந்தார். அவர் போவதையே வைத்தவிழி வாங்காது பார்த்தார் அந்த அதிகாரி. அவரது உதடுகளில் ஒரு நமட்டுச் சிரிப்பு வழிந்தோடியது. "என்ர பதவியென்ன? நான் போய் சிறப்புப் பிரதி பெறுவதா? சரியான அசட்டு முட்டாள்தனம். இவருக்கு ஒரு புத்தக வெளியீடு." மனதுக்குள் முணுமுணுத்தார். மேசையில் ஓங்கிக் குத்தினார். முன்னால் இருந்த மணியை அழுத்தினார். அது ஒலித்தது. சிற்றூழியர் உள்ளே ஓடினான். "போய் கன்ரீன்ல ரீ வாங்கிவா" அவன் வெளியே போனான்.

ஆனந்தருக்கு மெல்லக் கேட்டது. இவர் வரப்போவதில்லை என்பது அவருக்குப் புரிந்துவிட்டது. சைக்கிளைத் தள்ளினார். கால்கள் பெடலை மிதிக்கவும் சில்லுகள் உருண்டன. பல அலுவலகங்களையும் அனுபவங்களையும் கண்டுகளித்து அனுபவித்தார். "பிரச்சினைகளை சகித்துக் கொள்ளாமல், எதிர்கொண்டு சமாளியுங்கள்" என்று பெஞ்சமின் பிறாங்கிளின் சொன்னதை நினைவுபடுத்திக் கொண்டார். இலக்கியகாரர் . இழிச்சவாயர்கள் என்ற எண்ணம் இவர்களுக்கு. பதவி இன்றுவரும். நாளை போகும். நான் வகிக்காத பதவியா? வாறவர் வரட்டும். இவர்கள் வராவிட்டால் புத்தக வெளியீடு நடக்காதா? விறுவிறுவென்று வீட்டுக்குப் போனார். ஆயத்தங்களில் மும்முரமாக ஈடுபட்டார். அவருக்கென்றொரு கூட்டம் இருந்தது.

கங்காவும் நவமும் சுழன்றார்கள். அவர்கள் வேண்டிய உதவிகளைச் செய்தார்கள். ஆயத்தங்கள் நடைபெற்று முடிந்தன. பொழுது புலர்ந்தது. ஞாயிறு காலை ஆனந்தரின் தொலைபேசி ஒலித்தது. எடுத்தார். அவர் பேசமுன்னமேயே குரல் ஒலித்தது. "எனக்கு மிக அவசரமான வேலையிருக்கு. வரேலாது. குறைநினைக்க வேண்டாம். வைக்கிறன்." அடுத்து மணி ஒலித்தது. ஒரு குரல் ஒலித்தது. "இப்பதான் கொழும்பில இருந்து "கோல்" வந்தது. அவசர மீற்றிங் இருக்காம். இப்ப வெளிக்கிடுறன். குறை இல்லையே"? தொலைபேசி வைக்கும் சத்தம் கேட்டது. இந்த நவீன அரிச்சந்திரப் போலிகளை நினைத்தார்.

ஆனந்தர் வாய்விட்டுச் சிரித்தார். சரியாக நாலு மணி. வெளியீட்டு விழா தொடங்கியது. ஆனந்தர் எழுந்து நின்று மண்டபத்தைப் பார்த்தார். மண்டபம் நிறைந்திருந்தது. முதன்மை அதிதி, விஷேட அதிதிகள் மலர் மாலைகளோடு இருக்கைகளில் அலங்கரித்தனர். ஏனைய அதிதிகளுக்காக ஒதுக்கப்பட்ட இரண்டு வரிசை இருக்கைகள் வெறிச்சோடிக் கிடந்தன. விழா முடியும்வரை அவை அந்த மனிதர்களுக்காகக் காலியாகவே காத்திருந்தன. ஆனந்தரின் கண்கள் ஒரிடத்தில் நிலைக்குத்திச் சுழன்று நின்றன. அங்கே ஒதுக்குப்புறமாக சிவா புன்னகையோடு இருப்பதைக் கண்டார். ஆனந்தரின் பிடரியில் யாரோ சம்மட்டியால் ஓங்கி அடித்ததுபோல் இருந்தது. தான் சிவாவுக்கு அழைப்பிதழ் கொடுக்கமறந்ததை இப்போதுதான் உணர்ந்தார். "நீ எனக்கு அழைப்பிதழ் தராவிட்டாலும் நான் வருவன்" சிவா அன்று சொன்னது நினைவில் வந்தது. சிவா விஸ்வரூபமாகத் தெரிந்தான். அவரது கண்களில் நீர் கட்டியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுமைக்கும் ஓர் எல்லை

செக்கர் வானம் மேற்கில் வண்ணம் தீட்டி விளையாடிக் கொண்டிருந்தது. அந்தப் பெரிய புளிய மரத்தடியில் சிறுசுகளின் களியாட்டம்.. அவர்களுக்கு இந்த உலகத்தைப் பற்றிய கவலையோ அல்லது நாளைய வாழ்க்கையைப் பற்றிய நினைப்போ அறவே கிடையாது. ஓடியாடி ஒழிந்து "கீரடிமாரடி" என்று சொல்வார்களே அதேபோல் விளையாடிக் கொண்டிருந்தனர். அங்குமிங்குமாக சின்னச் சின்னக் குழுக்களாகப் பெரிசுகள். ஆண்கள் ஒருபுறமும் பெண்கள் இன்னொரு புறமுமாகக் கூடியிருந்தனர். சில குழுக்களில் ஆணும் பெண்ணுமாகக் கலந்திருந்தனர். எல்லோர் முகங்களிலும் துன்பத்தின் தாக்கம் துல்லியமாகத் தெரிந்தது. கவலை அவர்களது உடம்பை இளைக்க வைத்து நரையும் திரையுமாக கிழப் பருவத்துக்கு முத்திரை குத்திக் கொண்டிருந்தது. சுமார் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு மேலாக பலாலியை அண்டிய பிரதேசங்களின் மக்கள் சொந்த இடங்களில் இருந்தும் விலகியிருக்க வேண்டிய நிர்ப்பந்தம். வீடு வாசல்களையும் சொத்துப் பத்துக்களையும் விட்டு விட்டு உயிரைக் கையில் பிடித்தவாறு ஓடியவர்கள்தான். மல்லாகத்தில் அந்த அகதிமுகாமில் தஞ்சமாகி இன்றும் அகதி வாழ்க்கை தொடர்கதையாக மாறிவிட்டது.

பலாலியை அண்டிய பிரதேசங்கள் எல்லாம் இன்று அதி உயர்பாதுகாப்பு வலயங்கள் எனப் பேரினவாத அரசு பிரகடனம் செய்திருக்கிறது. சுமார் பன்னிரெண்டாயிரம் குடும்பங்கள் தங்கள் இல்லிடங்களை இழந்து அகதிகளாக வெளியேற்றப்பட்டனர். இந்த அரசு ஜனநாயக முறையைப் பின்பற்றுகிறது என்று சொன்னாலும் நடப்பது என்னவோ வேறொன்றுதான். ஜனநாயகம் என்பது மக்களால் மக்களுக்காக மக்களே ஆளும் ஆட்சிமுறை என்பார்கள். ஆனால் இலங்கையில் இனரீதியான அடக்குமுறையைக் கட்டவிழ்த்து சிறுபான்மை மக்களைக் கொடுமைப் படுத்துகிறது. தமிழ்பேசும் மக்கள் இன்று அகதிகளாக ஆக்கப் பட்டுவிட்டனர். பலமொழி பேசும் மக்கள் வாழும் இந்நாட்டில் பெரும்பான்மை மக்களின் பலம் ஓங்கி விட்டது. அதனால் சிறுபான்மை மக்கள் கொடுமையின் பிடியில் சிக்கி அனுபவித்த துயர் கணக்கில்லை. தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதன் விளைவாக இந்த நாட்டின் பல ஊர்மனைகள் எரியூட்டப்பட்டன. அழித்தொழிக்கப் பட்டன. இன்று அகதி முகாங்கள் அதிகரித்துள்ளன.

மழைபெய்து விட்டிருந்ததற்கான ஆதாரமாக பள்ளங்களில் மழைநீர் தேங்கியிருந்தது. மழைநீரில் அங்குள்ள சிறுசுகள் கடதாசிக் கப்பல்களைச் செய்து ஓடம் விட்டனர். கால்களால் சேற்று நீரை வீசி அடித்தனர். பெரிசுகளிடம் ஏச்சு வாங்கிக் கட்டியும் கொண்டனர். அந்த இடத்தில் பல தற்காலிகக் கொட்டில்கள். மழைகாலங்களில் அந்தக் கொட்டில்களுக்கும் குடைபிடித்தால்தான் தாக்குப் பிடிக்கும். புளியமரத்தடியை ஒட்டினாற்போல் பழயகாலத்துப் பெரிய கட்டிடம்.
அந்தக் கட்டிடத்தைக் கட்டிய புண்ணியவான் வெளிநாட்டில் இருப்பதாகக் கேள்வி. இந்த நாட்டின் பிரச்சனையினால் தமிழ் மக்கள் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துவிட்டனர். அந்த ஈழத் தமிழ் மக்கள்தான் இன்று பாரதியின் "தேமரத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்ற கனவை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றனர்.

அந்தப் பாழடைந்த கட்டிடத்தின் சுவரையொட்டிய தூணில் சாய்ந்து கொண்டு நாகம்மா வானத்தை அளந்து கொண்டிருந்தாள். அவள் பக்கத்தில் செல் விழுந்து வெடித்தாலும் காதில் வாங்காத யோசனையில் ஆழ்ந்திருந்தாள். சிறுவர்கள் அவளைக் கடந்து ஓடி இடறி விழுந்து எழுந்து சென்றனர். அவள் இந்த உலகத்தில் இல்லை. கடைவாயில் பாதி எரிந்தும் எரியாத புகையிலைச் சுருட்டு. எந்தத் தீய பழக்கமும் இல்லாத நாகம்மாவை அவல வாழ்க்கை இந்தச் சுருட்டுப் புகைக்கும் பழக்கத்தைக் கொடுத்து விட்டது. இடைக்கிடை உள்ளிழுத்து வெளிவிடும் புகைக்காக உதடுகள் கடைவாய்ப் பக்கம் திறந்து மூடிக்கொள்ளும்.. அப்பொழுது "பக்..புக்" என்ற ஒலி மட்டும் எழும்.. அவளுக்கு வயது நாப்பது இருக்கும். ஆனால் அறுபதைத் தாண்டிய தோற்றம்..

ஒரு காலை வாசலுக்குக் குறுக்காக நீட்டியிருந்தாள். மறுகாலை மடித்து இரு கைகளாலும் பற்றிப் பிடித்திருந்தாள். நீட்டிய காலை நீட்டியே வைத்திருப்பாள். வீட்டுக்குள் செல்பவர்கள் அவளது காலைக் கடந்துதான் செல்வார்கள். அவள் இந்த உலகத்தில் இல்லை. அவளது கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து வடிந்து கொண்டிருந்தது. மயிலிட்டி அவளது சொந்த ஊர். அந்த ஊரை ஊதி விளையாடும் உப்புக் காற்றும், காற்றில் சரசரக்கும் பனையோலைகளின் கிசுகிசுச் சத்தமும் நாகம்மாவுக்குப் பிடித்தவை. கடற்கரையில் ஈரமணலில் கால்களைப் புதைத்தும் மணலை உருண்டைகளாக்கி கடலுள் வீசியும், தோழிகளோடு விளையாடிய நாட்கள் பாழாய்ப் பழங்கதையாய்ப் போயின. கடலன்னையின் கருணையில் அந்தக் கிராமம் வாழ்ந்து கொண்டிருந்தது. சில நாட்கள் பெரும் பணக்காரர்கள் போல் இருப்பார்கள். அப்படியானால் கடலன்னையின் கடைக்கண் பார்வை கிட்டியதாக மகிழ்வார்கள். பல நாட்கள் அந்தப் பார்வை அவர்களுக்குக் கிடைப்ப தில்லை. என்றாலும் அந்த நிம்மதி அவர்களது சொந்தமாகியிருந்தது. நாகம்மா கடந்தகால வாழ்நாட்களில் தனது நினைவலைகளை வீசிக் கொண்டிருந்தாள்.

சுழன்றடிக்கும் அலைச் சுருளில் புகுந்து தோணியைக் கடலில் செலுத்தி வலையெறிந்து மீன்களைக் கரையில் சேர்க்கும் ஆறுமுகம் நாகம்மாவின் மனதைக் குழப்பி விட்டிருந்தான். அவனது முறுக்கேறிய வாலிபம் நாகம்மாவின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டது. நாகம்மா சற்றுக் கறுப்புத்தான். ஆனால் அவளது கரிய விழிகளும் கனிவான கிள்ளை மொழியும் கண்டாரைக் கிறங்கச் செய்யும். ஆறுமுகத்தானுக்கும் நாகம்மாவில் ஒரு கண்தான். தோழிகளோடு கருவாட்டுக் காவலில் இருக்கும் போதுதான் சாடைமாடையாய் உள்ளங்களின் இரகசியங்கள் வெளியாகும்..

"என்ன! நாகம்மா ஆறுமுகம் நல்ல அழகன்தானே? உனக்குப் பொருத்தம்தான்"

தோழி அன்னம் சொன்னதும் நாகம்மா கிறங்கிப் போனாள். அந்த வெளிப்பாடு அவரவர் வீடுகளுக்கும் எட்டிவிட்டது.. ஊரார் வாய்க்கு இடங்கொடாது, இரண்டு குடும்பங்களும் இருவருக்கும் முடிச்சுப் போட்டுவிட்டன. அந்த இன்பமான வாழ்க்கையில் இந்தத் துயர் குறுக்கிடும் என்று அவள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்திருக்க முடியாது. ஆறுமுகத்தோடு வாழ்ந்த இன்ப வாழ்க்கையின் சின்னமாக மூன்று பெண் குழந்தைகள் அவளைச் சூழ்ந்துள்ளன. அவர்களைக் காக்க வேண்டியது அவளது தலையில் வந்து விழும் என்று அவள் எதிர்பார்க்க வில்லை. அந்த நிகழ்வு எதிர்பாராமலேயே வந்துவிட்டது.

கடலில் இருந்து பீரங்கிப் படகுகள் வேட்டுகளைத் தீர்த்துக் கொண்டிருந்தன. உயரப் பறந்த புக்காராக்களும் ஹெலிகளும் குண்டுமாரி பொழிந்து கொண்டிருந்தன. சனங்கள் சிதறுண்டு ஓடத் தொடங்கினர். ஆறுமுகம் பிள்ளைகளையும் இழுத்துக் கொண்டு பனங் கூடலுக்கூடாக ஓடினான். பின்னால் நாகம்மா சில பொருட்களையும் கொண்டு ஓடினாள். ஆறுமுகம். வடலிகளுக்குள் புகுந்து ஓடும் போது ஒரு காலில் முள் குத்திய உணர்வை உணர்ந்தான்.

"நாகம்மா புறங்காலில ஏதோ குத்திப் போட்டுது."
பாம்பு ஓடியதை நாகம்மா கண்டு விட்டாள். அவள் இதயம் துடித்துக் கனத்தது.

"ஐயோ.. நில்லுங்க பார்ப்பம்"

"பாக்கிறத்துக்கு நேரம் இல்ல. செல் விழுந்து செத்துப் போடுவம். வா கெதியா". சொல்லிக் கொண்டு ஓடினான். அவனுக்குக் கால் கடுமையாக வலித்தது. அவனால் முன்னேற முடியவில்லை. மயங்கிக் கீழே சாய்ந்தான். அந்த விரியனின் விசம் வேலைசெய்யத் தொடங்கி விட்டது. வாயிலிருந்து நுரை கக்கியது. உடல் நீலம் பாரிக்கத் தொடங்கியது. அவனிடமிருந்து பதிலே வரவில்லை. ஆறுமுகம் பிரியாவிடை பெற்றுவிட்டான். பிள்ளைகளோடு இந்த அகதி முகாம் அவளையும் ஏற்றுக் கொண்டுவிட்டது. நாகம்மாவின் நினைவலைகள் பார்வதியின் குறுக்கீட்டினால் திடீரெனக் கலைந்தன.

"எணேய் காலை இப்படியே நீ நீட்டியிருந்தால் உதுகள் விழுந்து உடைஞ்சு போங்கள். அங்கால ஒருக்கால் அரக்கி இருவணணை"
பார்த்துக் கொண்டிருந்த பார்வதி நச்சரித்தாள். பதிலுக்கு ஒரு பார்வை மட்டுமே நாகம்மாவிடம் இருந்து வந்தது. கைகளை ஊன்றி நீட்டிய காலை அப்படியே இழுத்த படியே வசதியாக முதுகைச் சுவரோடு சாய்த்துக் கொண்டாள். சிறுசுகள் குறுக்கும் மறுக்கும் பாய்ந்து துரத்திப் பிடித்துத் திரிந்தனர்.

தூரத்தே யாரோ வருவது தெரிந்தது. இரண்டு வெளிநாட்டு வெள்ளைக்காரரோடு நமது நாட்டவர்கள் சிலரும் வந்து கொண்டிருந்தனர். அவர்களை இடைமறித்துச் சிலர் ஏதோ வாதாடிக் கொண்டிருந்தனர். அவர்களைச் சூழ்ந்து சிறுசிகள். ஒரு திருவிழாவை நடத்திக் கொண்டிருந்தனர். பார்த்துக் கொண்டிருந்த சின்னத்துரைக்குக் கோபம் வந்திருக்க வேண்டும். அவர் குந்தியிருந்த புளிய மரத்தின் வேரைவிட்டு எழுந்தார். அந்தப் புளிய மரத்தின் வேர்கள் நிலத்துக்கு மேல் இரண்டடி உயரத்துக்குப் புடைத்திருந்தன. அந்த வேர்கள்தான் அவர்களுக்கு கதிரையாகவும் கட்டிலாகவும் பயன்படுகின்றன. பாழாய்ப் போன போரினால் சின்னத்துரையரைப் போல் பலர் தங்கள் கால்களை இழந்திருக்கிறார்கள். தான் கழட்டி வைத்த செயற்கைக் காலைப் பொருத்திக் கொண்டு வந்தார்.

சனங்கள் கையில் கிடைத்த பழைய உரப்பைகளை எடுத்துக் கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நீ முந்தி நான் முந்தி' என முண்டியடித்த வண்ணம் புடைசூழ்ந்து கொண்டனர். யாராவது அகதிமுகாமுக்கு வருகிறவர்கள் ஏதேனும் தருவார்கள் என்ற நப்பாசையை வளர்த்துக் கொண்டு விட்டார்கள். வாகனங்கள் முகாமுக்குள் நுழைந்தால் போதும் சனங்களைக் கட்டுப் படுத்துவது பெரும் சிரமமாக இருக்கும்.. பல வயிறுகளுக்குச் சோறிட்டவர்கள் தங்கள் வயிற்றுக்குப் போராட வேண்டிய கொடுமை. கொடுத்துச் சிவந்த கைகள் இரந்து கிடக்கின்றன. உழைத்து வாழ்ந்த சனங்களை அகதி வாழ்க்கை உழைக்கவிடாது சோம்பேறிகளாக்கி விட்டது. சொந்த நாட்டிலேயே சொந்த மண்ணில் அகதியாகி கையேந்தி வாழவேண்டிய விதி இந்த மக்களுக்கு ஏற்பட்டதேன்?.இப்படியே இவர்களை விட்டால் அடிமைகளாகிக் கையேந்தும் நிலையை உருவாக்கி விடலாம் என்ற திட்டமும் இருக்கலாம்.. "விதியே!விதியே என்செய்ய நினைத்தாய் தமிழச் சாதியை". .பாரதியின் கவிதையடிகள் அமரத்துவமானவை. இங்கே ஈழத்தமிழ்மக்களுக்கு நடக்கும் கொடுமைகளை அன்றே தீர்க்கதரிசனத்தில் கண்டிருப்பானோ?

"சின்னத்துரை! இத்தனை ஆயிரம் சனத்துக்கும் இருக்கிற கக்கூசையும் கிணத்தையும் ஒருக்கா அவையளுக்குக் காட்டு. பார்க்கட்டுமேன்." கந்தையர் ஒருபக்கத்தில் இருந்து சத்தம் போட்டார். இப்போது சின்னத்துரையருக்கு உசார் வந்துவிட்டது. கூட்டத்தை விலக்கியபடி முன்னேறினார்.

"இஞ்சால கொஞ்சம் வழி விடுங்கோ"

சனங்கள் விலகி வழி விட்டனர். சிலர் குறுக்கே நின்றனர். அவர்களது கையில் வெறுமனாய்க் கிடக்கும் உரப்பை. அவர்களுக்கு ஒன்றும் கிடையாதது பெரும் ஏமாற்றமாக இருந்தது. சின்னத்துரையர் சனங்களை விலக்கிக் கொண்டு முன்னேறிக் கொண்டார். நாகம்மாவுக்கு இது புதிய அனுபவமல்ல. இப்படி இந்தப் பன்னிரெண்டு வருசங்களாக எத்தனைபேர் வந்திருக்கிறார்கள். அவள் கண்டிருப்பாள். அவள் அப்படியேதான் இருந்தாள். எந்த மாற்றமும் அவளிடம் இல்லை. வாழ்ந்தாக வேண்டும் என்பதற்காக வாழ்கிறாள். இங்கு நடப்பதெல்லாம் அவளுக்கு வேடிக்கையும் இல்லை. விளையாட்டும் இல்லை. சின்னத்துரை வந்ததும் வராததுமாகக் கேட்டார்.

"ஐயாமார்களே! உங்களுக்குக் கோடி புண்ணியம். எங்களை ஒருக்கா எங்கட சொந்த இடத்தில இருக்க ஏற்பாடு செய்யுங்கோ அதுபோதும் எங்களுக்கு" கோரிக்கை விடுத்தார்.

"எங்கள எப்ப எங்கட சொந்த இடத்தில இருக்க விடுவினம்.? எங்கட இடத்தில ஆமிக்காரங்கள் இருக்கலாம் என்றால் ஏன் நாங்க இருக்கேலாது? எங்கள இங்க அடைச்சி வைச்சிருக்கினம். என்ன அனியாயம்.? அகதிமுகாம் என்ற பேரில திறந்த சிறைச்சாலையில கிடக்கிறம்."? கந்தையர் அவர்களைப் பார்த்தபடி கேட்டார். .அங்கே பதில் சொல்லத் திராணி அற்றவர்களே நின்றிருந்தனர். நாகம்மா சற்றுத் திரும்பி இருந்தாள்.

"கந்தையாண்ணே! என்ன இவங்களிட்ட கதைக்கிறியள். இவங்களால முடியுமே? பாவம். அவங்களும் எங்களக் காட்டிப் பிச்சை எடுத்து வாழுகினம். நாங்க அகதியாக்கப் பட்டதாலதான் அவங்களுக்கு இப்படி சொகுசு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைச்சிருக்கு. எங்கள இப்படி இருக்கச் செய்தால்தானே இவங்களும் வாழலாம்."
நாகம்மா நறுக்கெண்டு சொல்லிப் போட்டு மறுபக்கம் திரும்பிக் கொண்டாள்.

"பொல்லாத வாயாடி மனிசி..என்ன?"
வந்தவரில் ஒருவர் கூறியதை நாகம்மாவின் காது கேட்டுவிட்டது. அவர்களுக்கு அவளைப் பற்றி என்ன தெரியும்? நாகம்மா பேசவில்லை. உண்மையைக் கூறினால் உறைக்கும் என்று அவளுக்குத் தெரியும். அவள் கடந்த கால வாழ்க்கையில் மூழ்கிவிட்டாள். அந்தப் பயங்கர நிகழ்வு அவளை உலுக்கியது.

"நாகம்மா! அடுப்பு பத்தவைக்க ஒன்டுமில்லை. போய் கொஞ்சம் விறகு பொறுக்கி வருவமே"?
இராசம்மா தலையில் ஒரு சீலைத்துண்டைப் போட்டபடி கேட்டாள்.

"ஓம் ராசம். நானும் கேக்கத்தான் இருந்தனான். நீ முந்திற்றாய். போவமே."

கயிற்றுத் துண்டுகளோடு சென்றனர். பக்கத்துக் கிராமம் பாழடைந்து போய்க் கிடந்தது. முதலில் இராணுவமுகாம் அந்தக் கிராமத்தில் இருந்தது. அங்கிருந்து வேறு இடத்துக்கு இராணுவம் இடம் மாறியது. அந்தக் கிராமம் காடாய் மாறிக் கிடந்தது. அங்குதான் இவ்வளவு நாளும் விறகெடுத்தவர்கள். பூவரசு மரத்தின் கிளைகள் காய்ந்திருந்தன. கிளைகளை வெட்டிக் கட்டினர். ஆளுக்காள் உதவித் தலையில் தூக்கி வைத்து நடந்தனர். "பட்பட்" என்று பெரும் சத்தத்தோடு முழங்கியது மட்டும்தான் அவர்களுக்குத் தெரியும். யாழ் மருத்துவமனையில் நினைவு திரும்பிய பின்னர்தான் முழங்காலுக்குக் கீழ் ஒருகால் இல்லை என்பது புரிந்தது. கவலை சூழ்ந்த முகத்தோடு தான் பொருத்திய பொய்க் காலைப் பார்த்தாள். இங்கு எத்தனை பெண்களுக்குக் கால்கள் இல்லை. அவர்களை நினைத்துக் கொண்டாள். அவள் கண்களில் இருந்து கண்ணீர்த் தாரைகள் ஊற்றெடுத்துப் பாய்ந்தன. "இந்தக் கொடூரங்களால்தானே நான் வாயாடியானேன்". தனக்குள்ளேயே புலம்பினாள்.

சின்னத்துரை வந்தவர்களை முகாமின் பகுதிகளுக்குக் கூட்டிச் சென்றார். ஒவ்வொரு பகுதியாகக் காட்டிச் சென்றார். இடையிடையே விளக்கம் கொடுக்கத் தொடங்கினார். "ஐயா! இஞ்ச மூன்று கிணறுதான் இருக்குது. ஒரு கிணற்றின் சொந்தக்காரர் வந்திட்டார். அங்க தண்ணி எடுக்கேலாது.
"ஏன் அந்தக் கிணற்றில தண்ணி எடுக்கேலாது"? சொந்தக்காரர் விடமாட்டார் என்பதை இவர்களுக்கு எப்படிச் சொல்வது? அவர் சொல்லத் தயங்கினார்.சொல்லவில்லை. கதையை மாற்றினார்.

"அதோ இருக்கு. அந்தக் கிணறு பாவிக்கேலாது. அது உவர்த்தண்ணீர். மற்றக் கிணற்றிலதான் இந்தச் சனங்களெல்லாம் தண்ணி எடுக்குதுகள். குடிதண்ணி குறஞ்சி கொண்டு போகுது. குடிதண்ணீருக்குத்தான் பெரும் தட்டுப்பாடு." 'அப்படியா'? அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். பன்னிரெண்டாயிரம் குடும்பங்களும் பாவிக்கும் ஒன்பது மலசல கூடங்கங்களையும் காட்டினார். அனுதாபமாகப் பார்த்தவர்கள் வந்த வழியே போய்விட்டார்கள். சின்னத்துரையரின் கோரிக்கைக்கு அவர்களால் பதிலளிக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியவில்லை. அவருக்குக் கிடைத்த பதில் "இதெல்லாம் அரசியல் விவகாரம்" என்பதே.

அந்தப் புளியமரத்தின் கீழ் கூட்டம் நடைபெற்றது. கந்தையர் தண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு காணமுயன்றார். சின்னத்துரையர் தலைமையில் கணபதியாரைச் சந்தித்துச் சமாதானமான முறையில் தண்ணீரைப் பெற முடிவெடுத்தனர். அகதிமுகாம் உருவானபோது மூன்று கிணறுகளையும் துப்பரவு செய்து பாவித்தனர். கணபதியார் ஊர் திரும்பியதும் பிரச்சினை உருவாகிவிட்டது. "இன்னும் எத்தனை நாட்களுக்கு இந்தச் சிறையில் கிடப்பது? ஏலாது. பொறுக்கமுடியாது. எங்கட சொந்த ஊர்களுக்குப் போயாகவேணும். ஏதாவது செய்ய வேணும். அதைச்செய்யுங்கோ"? செயற்கைக் காலை நீட்டிக் குனிந்து எழுந்தவாறே நாகம்மா கூறினாள். "முதலில் இந்தக் குடிதண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு வேணும்.. அதை இப்ப செய்வம்.. கணபதியாரோட கதைப்பம். முதலில் பேச்சு வார்த்தை. மிஞ்சினால் பார்ப்பம்." கந்தையர் எடுத்த முடிவு சரியாகப் பட்டது.

சின்னத்துரையர் தலைமையில் அகதிகள் அனைவரும் குடங்களோடு நடந்தனர். கணபதியாரின் வீட்டுப் படலையில் நின்றனர்.

'ஐயா!' கணபதியரைக் கூப்பிட்டனர்.

'யாரது' கேட்டுக் கொண்டு கணபதியார் வெளியில் வந்தார். "நாங்கதான்.. எங்களுக்குத் தண்ணி வேண்டும். தண்ணி எடுக்கப் போறம். அதுதான்..வந்தநாங்கள்." சொல்லிக் கொண்டு நின்ற சின்னத்துரையரை எரித்து விடுவதுபோல் கணபதியார் பார்த்தார். அது அவரையும் கூடவந்தவர்களையும் எரிப்பதுபோல் இருந்தது. கூனிக் குறுகி நிலத்தைப் பார்த்தார்கள். அவர்கள் அடக்கி ஒடுக்கப்பட்டவர்கள். எழுந்து நிமிர்ந்து நிற்கத் திராணியற்றவர்கள். பழக்க தோசம் அதனால் பயந்து விட்டனர்.

"ஏனடா.. உங்களுக்குத் திமிரோ? இவ்வளவு காலமும் இல்லாத திமிர் இப்ப வந்திற்று என்ன? என்னட்ட வந்து.. என்ர கிணத்தில தண்ணி கேட்கிறியள்.. என்ன தைரியம் உங்களுக்கு".

கணபதியார் ஆணவத்தோடு பேசினார். சின்னத்துரையருக்குப் பக்கத்தில் நின்ற இளையவனுக்குக் குறுகுறுத்தது. அவன் இளைஞன். பயமறியாத பருவம்.. பக்குவமாகப் பேசினான்.

"ஐயா கோவிக்கக் கூடாது. குடாநாட்டில குழப்பம் என்டதும் ஊரைவிட்டு ஓடினியள். எங்களால ஓடமுடியல்ல. எங்களுக்குப் போறதுக்கு இடமும் இல்ல. எங்க போறதெண்டும் தெரியாது. சமாதானம் என்டதும் வந்திட்டியள். ஆமிக்காரனிட்ட அடியுதை வாங்கி நாங்க இஞ்சதான் செத்துக் கொண்டிருக்கிறம். இந்தக் கிணத்துத் தண்ணிய எடுக்க உரிமை இல்லயெண்டு சொல்ல நீங்க யார்"? அவன் ஆவேசத்தோடு சொற்களைக் கொட்டிப்போட்டான்.

"இஞ்சபாருங்க தம்பியவள்.. தேவையில்லாத கதையெல்லாம் என்னட்டக் கதைக்க வேண்டாம். எழிய சாதியெல்லாம் இஞ்ச தண்ணி எடுக்கேலாது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியுமோ?. வந்த வழியப் பார்த்திட்டுப் போங்கோ இல்லாட்டி நடக்கிறதே வேற". அவரது பேச்சு அவர்களுக்கு ஆத்திரத்தை ஊட்டவில்லை. பதிலாக அனுதாபத்தை ஏற்படுத்தியது. அவரது திமிர் இங்குமட்டுந்தான் என்பது அவர்களுக்குத் தெரியும்.

"எழியசாதி என்று பார்த்ததாலதான் இப்படித் தமிழன் சிதறுண்டு போய்க்கிடக்கிறான். உங்களப்போல ஆக்கள் இருக்கும் வரை தமிழன் தலைநிமிராது.. ஐயா எங்கட தமிழீழத்தில உங்கட கனவு பலிக்காது." முகுந்தன் அவரைப் பார்த்துக் கூறினான். கணபதியார் எதற்கும் காத்திராது படலையை இழுத்து மூடிவிட்டுக் போய்விட்டார். அவரின் அந்தச் செயல் ஆத்திரத்தை ஊட்டியது.

"அண்ணே என்ன பாத்திற்று நிக்கிறியள். ஆமிக்காரனும் அடிக்கிறான். நம்மடவனும் அடிக்கிறான். இன்னும் பொறுத்தமென்டால் நமக்கு விடுதலையே இல்லை." ஆனந்தன் ஆவேசத்தோடு கூறினான். "நாங்க இப்படிக் கிடப்பதால்தான் எல்லாரும் ஏறி மிதிக்கிறாங்க. எங்கட உரிமையை அடைய ஒற்றுமை வேணும்.. எங்கடவனே எங்கள மதிக்கிறானில்ல. மிதிக்கிறான். பிறகு அயலவன் எப்படி மதிப்பான்.? அவனும் மிதிப்பான். டேய்! ஏன்னடா பாக்கிறியள். படலையை உடைங்கடா" சொல்லிக் கொண்டு கந்தன் படலைக்கு ஒரு உதை விட்டான். படலை தெறித்துத் தூரத்தே விழுந்தது. சனங்கள் ஆரவாரித்தனர். "இனிமேலும் அடிமைகளாய் இருப்பதை விட செத்துப் போவோம்.. எங்கட விடுதலைக்காய் இனியொரு விதி செய்வோம்.. எங்கட மண்ணில இருந்து அந்நியனை விரட்டுவோம். எல்லாரும் வாங்கோ" ஆனந்தன் உரத்த குரலில் கூவினான்.

கந்தையர் துள்ளி வந்தார். அவரது உடலில் ஒரு சன்னதம் தெரிந்தது. என்றுமில்லாதவாறு இறுமாந்திருந்தார்.
"இன்னும் என்ன பாத்திட்டு நிக்கிறியள்.. எல்லாரும் போய்த் தண்ணி அள்ளுங்கோ."

கட்டளை இட்டுவிட்டு நிமிர்ந்து நின்றார். நடப்பது கனவா அல்லது நினைவா? கண்மூடித் திறப்பதற்குள் எல்லாம் நடந்து விட்டது. கணபதியார் செய்வதறியாது சிலையாகி நின்றார். கணபதியாருக்குப் பின்னணி பாடியவர்கள் மெல்ல நழுவினர். அவர் அவர்களைத் தடுக்க முயற்சிக்க வில்லை. தண்ணீர் அள்ளுபவர்களையும் தடுக்கவில்லை. சனங்கள் தண்ணீரை அள்ளிக் கொண்டு சென்றனர். அவர்கள் முகத்தில் சந்தோசம் குந்தியிருந்தது. அவர்கள் இப்போது தங்கள் உரிமையை உணர்ந்து கொண்டார்கள். பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு. தங்கள் சொந்த நிலங்களை விடுவிக்கத் துணிந்து விட்டார்கள். அதி உயர்பாதுகாப்பு வலயம் அவர்களுக்கு ஒரு தடையாகத் தெரியவில்லை. அந்தப் பாதுகாப்பு வலயங்களைத் தகர்த்தெறியப் புறப்பட்டு விட்டார்கள்..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரோலின்

மேற்கு வானத்தில் வண்ண விளையாட்டு. சூரியனின் ஒளிக்கற்றை மேகத்தினிடை புகுந்து விளையாடி, வண்ணம் பூசுகிறது. செவ்வந்திமலர்க் கூட்டம் சோடித்து வண்ணம் வண்ணமாய் கோலம் போடுதல்போல் மேகக் கூட்டங்கள் வானில் மிதந்து வேடிக்கை காட்டிக் கொண்டு இருந்தன. தீவுகளாய், விலங்குகளாய். வண்ணக்கடல்களாய், மலைகளாய், கற்பனைக்கெட்டாத அற்புதக் காட்சிகள் விரிந்து கிடக்கின்றன. கண்ணிமைக்குமுன் காட்சிகளை மாற்றி மாற்றிப் புதுப்புதுக் காட்சிகளைப் படரவிட்ட வண்ணம் அவை நெளிந்து அசைந்து கொண்டிருந்தன. வானத்தில்தான் எத்தனை புதுமைகள்.? இயற்கை இத்தனை அழகை எங்கிருந்து பெற்றது? எத்தனை விதமான மாயாஜாலங்களைக் காட்டி மனித மனங்களை ஈர்த்தெடுத்து விளையாட்டுக்களைக் காட்டுகிறது. வாழ்க்கை பொய்கலந்த உண்மை போலவும், உண்மைகலந்த பொய்போலவும், சித்துவிளையாட்டினைக் காட்டுகிறது. இளம் உள்ளங்களில் மலர்ச்சியின் உன்னதத்தையும், கிழம்தட்டிய வயதானவர்களது உள்ளங்களில் வாழ்க்கையின் நிலையாமையையும் காட்டி நிற்கிறது. நாளாந்தம் இந்தப்புதுமைகள் சொல்லி வைத்ததுபோல் நிகழ்ந்தாலும், இதனை எத்தனை மனிதர்கள் உணர்வு பூர்வமாக உணர்ந்து ரசிக்கிறார்கள். புரிந்து அனுபவிக்கிறார்கள். பலருக்கு இந்த உலகம் ஒரு போராட்டக்களமாக மாறிவிடுகிறது. இயற்கையை ரசிப்பதற்கு அவர்களுக்கு அவகாசம் கிடையாது.

இமயத்தில் ஊற்றெடுத்து நிலமடந்தையை முகர்ந்து கிளுகிளுப்பேற்றி, சிலிர்க்கவைத்து, வளைந்து நெளிந்து இனம், மதம், சாதிபேதங்களைக் கடந்து அனைத்து உயிர்களுக்கும் தாகம் தீர்க்கும் கங்கைநதி பலகிளைகளோடு பாய்கிறது. அதில் ஒருகிளையாக கூக்கிளி கொல்கொத்தா நகரை அணைத்துச் செல்கிறது. கொல்கத்தா இன்னும் சுறுசுறுப்பாகவே இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த நகரினை வளப்படுத்தி, வண்ணம் சேர்த்து கூக்கிலி நதி வங்காள விரிகுடாவில் சங்கமிக்கிறது. கடலும், நதியும் சங்கமிக்கும் காட்சி அற்புதமானதொரு சிலிர்ப்பை ஊட்டுகிறது. அனலாகக் காற்று வீசுகிறது.

நதியின் நீராவி புகைமண்டலமாகக் கூத்துக்காட்டுகிறது. கொல்கொத்தா நகர் புகைமண்டலத்தினுள் புகுந்துள்ளது போல் தெரிகிறது. கூக்கிலி நீரில் காற்றுப் புகுந்து குளிரினை அள்ளியெடுத்து அனல்காற்றின் வெப்பத்தைத் தணிக்க முயல்கிறது. நதிப்படுக்கை வண்டற்படைகளினால் வளமுற்றுக்கிடக்கிறது. கரைகளில் தாவரப்போர்வை விரிந்து கிடக்கிறது. பசுமை விரிந்து குதுகலிக்கிறது. அடர்ந்து உயர்ந்த மரங்களை வளைத்துப் பற்றிப் படர்ந்து ஏறுகொடிகள் வானை எட்டிப்பார்க்கின்றன. வாழ்க்கை என்பது மனிதருக்கு மட்டுந்தான் போராட்டமாக இருப்பதில்லை. ஒவ்வொரு உயிரினங்களும் வாழ்வதற்காகப் போராடுகின்றன. "தக்கன பிழைக்கும்" என்று எவ்வளவு அற்புதமாக நமது முன்னோர்கள் கூறிவைத்தனர்.

ஆவியாக்கத்தினால் வெயிலின் கொடுமை புரியவில்லை. மப்பும் மந்தாரமாகவும் இருந்தாலும் அனல்காற்று வறுத்தெடுக்கிறது. மரங்கள் காற்றிலாடிச் சிலிர்த்து நிற்கின்றன. காட்டுப்பூக்கள் விரிந்து அற்புதங்களை உலகினுக்குச் சமர்ப்பிக்கின்றன. பறவைகள் பாடிப்பறந்து தமது நடிபங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவு செய்கின்றன. மெல்லிய இளந்தென்றல் அசைந்து கொண்டிருக்கிறது. மனிதர்கள் வருவார்கள். தமது நடிபங்கை நிறைவு செய்வார்கள். போவார்கள். உலகம் சுழலும். மாற்றங்கள் நிகழும். வையக வாழ்வு அற்புதமானது. இந்த உடலில் உயிர் உள்ளபோதுதான் அதன் மகத்துவத்தை உணரமுடியும்.

எனது கண்களும், மனமும் வானைத் தொட்டு நிற்கும் அற்புதமாக வடிவமைக்கப் பெற்ற ஹோட்டலை வியப்புடன் அளைகிறது. எவ்வளவு அற்புதமாக வடிவமைத்துள்ளார்கள். ஒல்லாந்தரால் கட்டப்பட்ட கோட்டை. பிரித்தானியர் கைப்பற்றியதும் புதுப்பிக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போரின்போது யப்பனியரின் குண்டு வீச்சால் சிதைந்து போனது. இந்தியா சுதந்திரம் பெற்றபின் கோட்டை செப்பனிடப்பட்டது. அதன் வரலாற்றுச் சின்னங்களையும் சிறப்புக்களையும் ஒன்று சேர்த்து பழைய அமைப்பைக் கலையாது அதே கலைவண்ணத்தோடு புதுக்கட்டிடங்களும் கட்டப்பட்டு எடுப்பாக "ஹொட்டல் றடிசன்" என்ற பெயரோடு நிலைத்திருக்கிறது. கூக்கிளியோரமாக ஒருபுறத்தில் கொல்கொத்தா நகர் பரந்து கிடக்கிறது. நகரின் எதிர்புறமாக கூக்கிளியின் மறுபுறம் ஹோட்டல் றடிசன் நிமிர்ந்துள்ளது.

இந்தியா ஐரோப்பியரின் பிடியில் சிக்கிவிட்டிருந்தது. மன்னராட்சி மக்கள் மனங்களில் நிறைவு தந்திருந்தது. மன்னர்களைத் தங்களது ரட்சகர்கள் என்று மக்கள் இறுமாந்திருந்தனர். மன்னர்களின் குடும்ப ஆட்சி கொடிகட்டிப் பறந்தது. மன்னர்கள் பரம்பரை செல்வச் செழிப்போடு வாழ்ந்தது. மன்னர்களுக்கு இனமத மொழி வேற்றுமையில்லை. மன்னர்கள் மன்னர் பரம்பரையிலேயே திருமணம் செய்து கொள்ளும். ஆனால் குடிமக்கள் அவ்வாறு செய்யமுடியாது. அவர்களுக்கு மட்டும் சாதி, இனமத , மொழி வேறுபாடிருந்தது. மன்னர்களுக்குள் போட்டி, பொறாமை, பதவிமோகம், நிறைந்திருந்தது. அரசர்களின் நன்மைக்காகவும், பதவிக்காகவும் மக்கள் பயன்படுத்தப் பட்டார்கள். பதவியாசைகளால் ஆளையாள் காட்டிக் கொடுத்து அழிந்தார்கள். மக்கள் அந்நியர் வசம் சிக்கி அடிமைகளானார்கள். வணிகநோக்கில் வந்த ஐரோப்பிய கம்பனிகள் ஆட்சியைக்கைப்பற்றினார்கள். இந்தியாவும் அவர்களின் பிடியில்சிக்கி அவர்களது ஆளுகைக்குள் வந்துவிட்டது.

இந்தியாவை ஒல்லாந்தர் கைப்பற்றியதும் கூக்கிளி நதிக்கழி முகத்தில் பிரமாண்டமான கோட்டை அமைக்கப் பெற்றது. பிரித்தானிய கிழக்கிந்திய கொம்பனி ஒல்லாந்தரை விரட்டியடித்து கைப்பற்றியதும் அந்தக் கோட்டை பிரித்தானியர் வசமானது. படையணிகள் குவிக்கப் பெற்றுப் பாதுகாப்புப் பலப்படுத்தப் பட்டது. இந்தியாவின் செல்வமனைத்தும் சுரண்டப்பட்டது. கூக்கிளி நதியின் துறைமுகம் பிரபலமடைந்தது. துறைமுகத்தில் பல்வேறுநாட்டுக் கப்பல்கள் வந்து போயின. எனினும் போத்துக்கீசக் கடற்கொள்ளையர்களின் அச்சுறுத்தல் சவாலாக இருந்தது. அதனால் பிரித்தானியப் போர்வீரர்களது தேவை அதிகமாயிருந்தது. சாதாரண போர்வீரர்களையும், கூலிப்படைகளையும் தெற்காசிய நாடுகளில் இருந்து பெற்றுக் கொண்டனர். கொல்கத்தாவுக்கு ஜெனரல் றெஜினோல்ட் வாற்சன் அனுப்பப்பட்டார். அவரது படையணியின் சாதாரண போர்வீரனாக ஹென்றிலி கடமையாற்றினான். ஹென்றிலி கட்டழகன் மட்டுமின்றி கடமையிலும் கண்ணானவன். கூக்கிலிக் கரையோரப் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தான். நாட்டுக்கு மட்டுமல்ல, நாட்டையாளும் அதிகாரிகள், அவர்கள்தம் குடும்பத்தவர்களது பாதுகாப்புக்கும் பொறுப்பாக இருக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்கத்தாவைத் தாலாட்டித் தட்டிக் கொடுத்துச் செழிப்பாக்கி கூக்கிளி நதி வங்காள விரிகுடாவில் சங்கமிக்கிறது. நதியைப் போல் மனிதர்கள் இருந்திருக்கலாம். நதி அழுக்கை அகற்றி, அடியில் படியவைத்து ஒழுக்காறாக ஓடுகிறதல்லவா? வேறுபாடில்லாமல் நீரை எல்லோருக்கும் வழங்குகிறது. மனிதன் மட்டும் தன்னலத்தில் மூழ்கிவிட்டான்.

ஹோட்டல் றடிசனில் நான் தங்கியிருக்கிறேன். எனது அறையிலிருந்து வெளியில் வருகிறேன். அறையினைப் பூட்டிவிட்டுத் திரும்புகிறேன். எதிரே அழகான ஒரு கட்டிளம் கன்னியின் படம். வசீகரமான கண்கள். வடித்தெடுத்த அமைப்போடு கூடிய உருவம். தெய்வச்சிலையாகத் தெரிந்தாள். தொடர்ந்து பல படங்கள். தனித்தனியாகவும், குடும்பமாகவும் காட்சியளித்தன. இவை பெரிய வரலாற்றைத் தாங்கியுள்ளதை அங்கு வேலை செய்யும் சிப்பந்திகள் மூலம் தெரிந்து கொண்டேன். உணவகம் கூக்கிளியின் கரையோரமாக இருந்தது. செவ்வந்தி மாலைப்பொழுதில் கூக்கிளி குதூகலிக்கும். படகுகள் அசைந்து திரியும். அக்கரையில் கொல்கொத்தா நகரம் மங்கலாகத் தெரிகிறது.

தேநீரை வரவழைத்து இருக்கையில் அமர்ந்தேன். ஹோட்டல் உதவி மனேஜர் உலாவந்தார். அவரிடம் ஹோட்டலின் வரலாறு பற்றிக் கேட்டேன். அவர் கூறியதும் உசாரானேன். வரவேற்பறைப் பக்கம் விரைந்தேன். சில தகவல்கள் கிடைத்தன. தகவல்களை மனக்கொம்பியூட்டர் பதிந்து கொண்டது. கண்கள் படங்களில் நிலைகுத்தி மேய்ந்தன. கதாநாயகனின் படம்மட்டும் அங்கிருக்கவில்லை. கட்டழகுக் கன்னி கரோலின், அவளது தாயார் மேரி, தந்தை ஜெனரல் வாற்சன் ஆகியோரின் படங்களும் என்னைக் கற்பனையில் மிதக்கவிட்டன. எனது மனக்குதிரை கட்டுப்பாட்டுடன் விரைந்து செயற்படுகிறது.

வழமைபோல் அந்த வெண்குதிரை தனது பயணத்தில் ஈடுபட்டிருந்தது. "மங்கியதோர் நிலவினிலே கனவிலிது கண்டேன்." பாரதியின் கவிதைவரிகளாக, பதினாறு வயதுக் கட்டழகி. குதிரையின்மேல் அழகெல்லாம் ஒன்றிணைந்து உருவாகின சாயலில் கரோலின் பவனி. அவள் உள்ளம் கற்பனையிலும், ஓப்பனையிலும் மிதந்து கொண்டிருந்தது. கூக்கிலியில் இருந்து புறப்பட்ட சிற்றலைகள் ஒன்றன்பின் ஒன்றாக அவளது அழகை ரசித்துச் சிரித்து ஒலியெழுப்பி எட்டிப்பார்த்துப் பின்வாங்குகின்றன. பார்த்து ரசித்த பறவையினங்கள் மெய்மறந்து பாடிக்களித்த வண்ணம் இருந்தன. குளிர் தென்றல் கட்டியணைத்துச் சுகம் சொன்னது. அவள் அமர்ந்திருந்த குதிரை அவளது மெல்லுடலைச் சுமந்து கொண்டு உடலுக்கு நோகாதவாறு ஒரு அற்புதக் குலுக்களுடன் போய்க்கொண்டிருந்தது. அவளைச் சுமப்பது அதற்கு ஒரு இன்பம்போலிருந்தது. அவளது குறிப்பறிந்து செயற்பட்டது. குதிரை சற்று வேகமாக விரையும். பின் தொங்கோட்டத்தில் ஓடும். ஓட்டத்திற்கு ஏற்றவாறு அவளது மேனியெங்கும் தொடரலைபோல் பரவும். மெல்லக் குலுங்கி அசையும். சிலவேளைகளில் தனியாகவும், சிலவேளைகளில் தனது அன்னையுடனும் செவ்வந்தி மாலைப்பொழுதில் பயணப் பொழுதுபோக்கு நிகழும்.

அவளது அன்னை மேரி வெகு தூரத்தில் குதிரையில் வந்து கொண்டிருந்தாள். கரோலினின் குதிரை சற்று வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. மேரியின் குதிரை மெல்ல மெல்ல ஆற்றோரத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகில் மயங்கிச் சென்றுக்கொண்டிருந்தது. மேரி இயற்கையழகை நேசிப்பவள். பசுமை விரிந்த மரஞ்செடிகளையும், பூக்களையும், பறவைகளின் குரல்களிலும் தன்னை மறப்பவள். குதிரையில் அமர்ந்தவாறும், இறங்கி மலர்களைத் தொட்டளைந்தும் ரசிப்பவள். குறிப்பிட்ட தூரம்வரை இருவரும் சென்று ஓய்வெடுத்துத் திரும்புவார்கள்.

"அம்மா இந்த நதி எவ்வளவு உயிரினங்களை மகிழ்விக்கிறது. உயிரூட்டுகிறது. அற்புதமாக இல்லை"? வினாவாக மலர்ந்தாள். "அதனால்தான் கீழைத்தேச மக்கள் நதியினைத் தாயாக, சக்தியாக மதிக்கிறார்கள். நதிகளை இந்து சமயம் சக்தியாகப் போற்றுகிறது". மேரி நதியின்மேலுள்ள பற்றினை வெளிப்படுத்தினாள். இரக்க சுபாவமுள்ள மேரி தனது மகள்மேல் பாசத்தைக் கொட்டி வளர்த்து வந்தாள். கரோலினது கண்களில் கண்ணீரைக் கண்டால் அவளது நெஞ்சில் உதிரம் கொட்டும். மகளின் துடுக்கும், நகைச்சுவைப் பேச்சும், இயற்கையினை ரசிக்கும் பாங்கும் மேரிக்கு மகிழ்ச்சியினை ஊட்டியது. கரோலின் நதியைப் பார்த்தாள். தனது தாயைப் பார்த்தாள்.

"அம்மா இந்த நதிநீரில் நான் சங்கமித்தால், உயிரினங்களுக்கு உரமாவேனல்லவா? நானும் அந்தச் சக்தியோடு சேரமுடியுந்தானே"?
மேரி அதிர்ந்து விட்டாள். கண்கள் பனித்தன. "என்ன வந்தது உனக்கு? அப்படியெல்லாம் பேசக்கூடாது. நாம் மனிதர்கள். நதியினைத் திசைதிருப்பி அனைத்து உயிரினங்களுக்கும் உதவமுடியும். அதனைச் செய்யலாம் அல்லவா"? இருவரும் உரையாடி உலாப் போனார்கள்.

ஜெனரல் வாற்சன் கடமை தவறாதவர். கட்டுப்பாடானவர். அவருடன் மனைவி மேரியும், மகள் கரோலினும் வந்திருந்தனர். பெரும் படையணிக்கும், பிரித்தானிய கிழக்கிந்திய கொம்பனிக்கும் பொறுப்பு வாய்ந்த அதிகாரியாக ஜெனரல் விளங்கினார். செவ்வந்தி மாலைப்பொழுதில் மேரியும், கரோலினும் உலாப் போவதை ஹெனற்லி பார்த்திருக்கிறான். அவர்களது ரசனையை மெய்மறந்து ரசித்திருக்கிறான். அவன் கடமையாற்றும் காவல்நிலையைத் தாண்டி குதிரைகள் விரைந்து செல்லும். அவர்கள் போவதை அவதானித்தவாறு இருப்பான்.

அன்று அதிசயமாக அது நடந்தது. கரோலினது குதிரை சற்று வேகமாக முன்னால் விரைகிறது. தூரத்தே மேரியின் குதிரை வந்து கொண்டிருந்தது. காற்றும் பலத்து வீசிக்கொண்டிருந்தது. காற்றுக்கு எதிர்த்திசையில் குதிரை வந்து கொண்டிருந்தது. காவல்நிலையைத் தாண்டும்போது கரோலினின் அழகான தொப்பி காற்றோடு விளையாடியது. அதனைக் காற்று மெல்லெனப் பறக்கவிட்டு வேடிக்கை பார்த்தது. இன்னும் தாமதித்திருந்தால் தொப்பி கூக்கிளியோடு சங்கமித்து நீந்திவிளையாடும். தொப்பி தலையிலிருந்து நழுவியதை கரோலின் உணர்ந்து கொண்டு குதிரையைத் திருப்பினாள். காவல்நிலையத்தில் ஹென்றிலி கடமையிலிருந்தான். ஹென்றிலி கட்டழகன். படையணியில் இருக்கும் இளைஞர்களைக் கன்னியர் ஏறெடுத்துப் பார்ப்பது அரிது. தனது எஜமானின் மகள் அவள். அவளது பாதுகாப்பு அவனது கடமையானது. தொப்பி தண்ணீரில் விழுந்தால் என்ன கதி? "பார்த்துக் கொண்டிருந்தாயா"? தனக்கு ஏதும் நடக்கலாம். நினைத்துப் பார்க்குமுன் ஹென்றிலி உசாராகிவிட்டான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே பாய்ச்சல். தொப்பியைத் தண்ணீரில் விழவிடாது பிடித்துக் கொண்டான். கெரோலினின் குதிரை திரும்பியது. அவன் பாய்ந்து பிடிக்கும் லாவண்யத்தை கரோலின் ரசித்தாள். குதிரை தன்னை நோக்கி வருவதைக் கண்டான். தான் தண்ணீரில் நனைந்துள்ளதை பொருட்படுத்தவில்லை. குதிரையை நோக்கி நடந்தான். கரோலினுக்கு மரியாதை செலுத்திவிட்டு தொப்பியை நீட்டினான். அவள் குதிரையை விட்டுக்கீழே இறங்கினாள். தொப்பியைப் பெறுவதற்காகப் பார்த்தாள். அவளது இதயத்தில் ஒரு மின்வெட்டின் பாய்ச்சல். பார்வை ஹென்றலியைத் தாக்கியது. அவனும் அதிர்ச்சிக்குள்ளானான். ஒரு புன்னகையை எறிந்து நன்றி சொன்னாள். தொப்பியைப் பெற்றுக் கொண்டாள். நான்கு கண்களும் சந்தித்துக் கொண்டன. மனங்கள் கலந்தன. இனந்தெரியாத இன்ப அதிர்ச்சி. "என்ன வந்ததெனக்கு?. அவனிடம் காந்தம் இருக்கிறதா? என்னை இழுத்தெடுக்க". அதிசயித்து நின்றாள்.

அற்புதமான உணர்வு உள்ளங்களில் படிந்து கிளர்ந்து வேர்விடத் தொடங்கியது. அவர்கள் உள்ளங்களில் அது துளிர்விடத் தொடங்கியது. அவர்களது உள்ளங்களைப் புரிந்த உணர்வில் கூக்கிளி சிற்றலைகளைக் கரையில் வீசி எறிந்து சிரித்துக் கொண்டிருந்தது. அலைகள் கரையில் மோதிக் கலகலத்தன. கூக்கிளி செம்புலப் பெயல்நீரைச் சுமந்து சலனமற்று ஓடிக்கொண்டிருந்தது. அந்த இளம் உள்ளங்களில் ஒரு மலர்வு. உதடுகளில் அன்புப் பரிமாற்றம் துளிர்விடத் தொடங்கியது. மேரி நடந்ததைக் கவனித்தாள். மேரி அதனைப் பெரிதாக பொருட்படுத்தவில்லை. ஹென்றலி சாதாரண படைவீரன். தனது மகள் ஜெனரலின் மகள். ஒரு எஜமானிக்குச் செய்யும் கடமையாகவே மேரி நினைத்துக் கொண்டாள். அவளும் ஹென்றலிக்கு நன்றி சொன்னாள். அவனுக்குப் பெரும்பேறாக இருந்தது.

கண்கள் மட்டும் உருவங்களைச் சிறைப்பிடித்துக் கொண்டன. கரோலின் உள்ளத்தில் ஹென்றலி சிறைப்பட்டான். ஹென்றலியின் உள்ளத்தில் கரோலின் குந்திக் கொண்டாள். இயற்கை எவ்வளவு அற்புதமானது. இளமையைக் கொடுத்து அளப்பரிய கற்பனைகளைக் காண்பித்து, துணிச்சலையும், சுயமாக முடிவெடுக்கும் ஆற்றலையும் கொடுத்திருக்கிறது. அதேவேளை தடைகளையும் போட்டு அவற்றை உடைத்தெறியும் வல்லமையையும் கொடுத்துள்ளது. தக்கன பிழைக்க வழியும் செய்துள்ளது. இப்போது கரோலின் தனிமையில் செல்லவில்லை. உள்ளத்தின் உள்ளே ஹென்றலியைச் சுமந்து கொண்டு சென்றாள்..

கரோலினின் வாழ்க்கையில் அந்நிகழ்வு ஒரு அற்புதத்தை ஏற்படுத்திவிட்டது. கண்ணை மூடிப்பார்த்தாள். ஹென்றலி முன்னின்றான். அவளுக்கு உறக்கம் வரமறுத்தது. அடிக்கடி அந்நிகழ்வு மனத்திரையில் விழுந்து பூச்சாண்டி காட்டியது. அவள் நிலைதடுமாறித்தான் போனாள். ஹென்றலியின் முகமும், அவனது செயலும் அவளை வசீகரித்து விட்டது. அவனைத் தொடர்ந்து பார்க்கவேண்டும், பேசவேண்டும் போல் தோன்றும். கனவுலகில் வலம் வந்தாள். மாலையில் மட்டும் குதிரைச் சவாரி செய்த கரோலின் காலையிலும், நினைத்த நேரங்களிலும் கூக்கிளி நதிக்கரையோரம் உலாவரத் தொடங்கினாள். பறவைகளின் இசைக்கோலம் அவளுக்கு இனித்தது. மலர்களின் வண்ணங்களும், அவற்றின் நறுமணமும் ,அவளை ஈர்த்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளந்தென்றல் சுவாசப்பையை நிறைத்துப் புதுமைகளைப் புகுத்தியது. சூழல் சுகத்தைப் பரப்பி உற்சாகத்தைக் கொடுத்தது.

ஹென்றிலியின் உள்ளத்தில் கரோலின் இருந்தாலும் கரோலினின் தந்தையை நினைக்கவே அவனுக்குப் பயமாக இருந்தது. உலகம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. அது சூழன்று கொண்டேதான் இருக்கும். பருவகாலங்கள் வரத்தான் செய்யும். நாட்கள் நகர்ந்தன. தென்றல் வீசும். புயலடிக்கும். சூறாவளி பேரலைகளைத் தள்ளும். கடல் கொந்தளிக்கும். இவை இயற்கையின் நியதி. மனித வாழ்க்கையிலும் இவை வித்தியாசமான முறையில் நிகழும். கரோலின்-ஹென்றிலியின் வாழ்க்கையின் முதல் அத்தியாயம் காற்றில் கலந்து மனிதவாய்களில் நுழைந்து வானலையில் கலந்து ஜெனரல் வாற்சன் செவிகளில் முழக்கமிட்டது. இடிமின்னல். புயல் குடும்பத்தில் தாக்கிச் சஞ்சலத்தை ஏற்படுத்தியது. அழுத்தம் இறுக்கமாகும்போது அதற்கு வலிமை அதிகரிக்கும். கரோலின் ஹென்றிலி சந்திப்புக்கள் தொடர்ந்தன. கடிதங்கள் பரிமாறப்பட்டன. இதயங்கள் கலந்தன. இனியென்ன? இருவரும் பிரிவதில்லை என்ற வைராக்கியம் தனது கட்டினை வலிமையாக்கியது.

மேரி தனது கணவனுடன் கலந்துரையாடினாள். வாற்சன் எரிமலையானார். " மேரி, சொல்வதைக் கொஞ்சம் கேள். நான் ஒரு ஜெனரல். இந்த சாம்ராச்சியத்தின் ஏகபோகத்தளபதி. பலருக்குப் பதில் சொல்லவேண்டியவன். நமது கௌரவம் என்னவாவது? ஒரு ஜெனரலின் மகள் சாதாரண படைவீரனைக் கைப்பிடிக்க அனுமதிக்க முடியாது. இந்த ஜெனரல் வாட்சன் ஒரு இரும்பு மனிதன். அதனால்தான் என்னை இங்கு அனுப்பியிருக்கிறார்கள்." வாட்சன் இறுகிக் கொண்டு போனான். "நான் சொல்வதைக் கேளுங்கள். தளபதி என்பது நீங்கள் பார்க்கும் உத்தியோகம். கரோலின் நமது மகள். அவளது வாழ்க்கை நல்லபடியாக அமையவேண்டும்." "அதைத்தான் நானும் சொல்லுகிறேன். உனக்கு விளங்காது. கரோலின் ஹென்றிலியைப் பார்க்க அனுமதிக்க வேண்டாம். இனி இதைப்பற்றிக் கதைக்க வேண்டாம்." வாட்சன் விலகிச் சென்றுவிட்டான். மறைந்திருந்து கரோலின் கேட்டிருந்தாள். "அம்மா இனி எதுவந்தாலும் ஹென்றிலிதான் எனது கணவன். இது உறுதி" கரோலின் அறையினுள் நுழைந்தாள். மேரி துடிதுடித்துப் போனாள். யாருக்காக அழுவது?

கரோலின் -ஹென்றிலி சந்திப்புக்கள் இறுக்கமாகின. அந்த இறுக்கம் வேகத்தைக் கூட்டி விட்டது. அந்தி மயங்கும் மாலைப் பொழுது கூக்கிளியை குதூகலிக்க வைத்தது. அலைகளை எறிந்து விளையாட்டுக் காட்டியது. கரோலின் ஹென்றிலியின் அணைப்பில் இருந்தாள். "ஹென்றிலி என்னால் பொறுக்கமுடியாது. நமது நட்புக்கு அப்பா எதிர்ப்புக் காட்டுறார். நாம் இங்கிருந்து போய்விடலாம்" அவன் மௌனமானான்.. "என்ன மௌனம்?" "ஒன்றுமில்லை. எப்படிப் போவது என்றுதான் யோசிக்கிறேன்". "அடுத்த வாரம் கப்பல் வருகிறது. அதில் போய்விடலாம்." கரோலின் பதிலளித்தாள். "எப்படித் தெரியும்.? ஹென்றிலி வினவினான். "நான் யார்? ஜெனரல் வாட்சனின் மகள். அப்பாவுக்குள்ள ஆற்றல் எனக்கும் இருக்காதா?"

ஹென்றிலிக்குச் "சரேல்" என்றிருந்தது. "இவள் தான் சாதாரண படைவீரன் என்பதைக் குத்திக் காட்டுகிறாளா"?. அவன் கதையை மாற்றினான். "நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்விட்டது. ஜெனரலின் ஆட்கள் வரும் நேரம்." அவன் விலகிப் போகத்தயாரானான். "நான் சொன்னதென்னவாகிறது"? கரோலின் கோபத்தோடு சொன்னாள். "சரி பார்ப்போம். நீ போ. நேரமாகிறது." தூரத்தில் குதிரைகள் வருவது தெரிந்தது. "ஹென்றிலி ஆயத்தமாகு. கப்பலில் போகிறோம். சரியா"?. கூறிக்கொண்டே கரோலின் புதரூடாக மறைந்தாள்.

கப்பல் ஒன்று கரைதட்டிநின்றது. கப்பலில் பொருட்களை ஏற்றுவதும், இறக்குவதுமாகப் பலர் தொழிற்பட்டனர். ஜூலை பதினைந்தில் கப்பல் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தது. கப்பலின் கப்ரன் தோமஸ் இரக்கமுள்ளவன். அவனைக் கரோலின் சந்தித்தாள். தனது நிலைப்பாட்டைக் கூறிக்கப்பலில் புகலிடம் கோரினாள். கரோலினுக்காகப் பலர் பரிந்துரை செய்தார்கள். கப்ரன் இணக்கத்துக்கு வந்துவிட்டான். . கரோலின் உனக்கு ஏற்றவள். அவளைக் கைவிட்டு விடாதே." நண்பர்கள் அறிவுறுத்தினார்கள். "ஹென்றலி! நீ கரோலினைக் காதலிக்கிறாயா"? ஜேம்ஸ் கேட்டான். 'ஆமாம்.' இவன் பதிலளித்தான். "சரி அவளோடு கப்பலேறு. நாங்கள் உதவுவோம். யோசிக்காதே", ஜேம்ஸ் உறுதியாக நின்றான்.

இருள் மெல்லப் பரந்து மூடிக்கொண்டிருந்தது. கப்பல் புறப்படத் தயாரானது. இருளில் இரண்டு உருவங்கள் சனங்களோடு சனங்களாக கப்பலில் ஏறிக் கொண்டன. கூக்கிளி நதியில் கப்பல் அசைந்தாடிக் கொண்டிருந்தது. காற்று மெல்ல மெல்ல ஊதத்தொடங்கியது. அலைகளை அள்ளி வீசத் தொடங்கியது. திடீரெனப் போர்த்துக்கேய கடற்கொள்ளையர்களின் கப்பல் புகுந்து கொண்டது. காற்றின் வேகம் அதிகரித்தது. காற்றோடு கடும் மழையும் சுழன்றடித்தது. கடற் கொள்ளையரும் ஒரே நேரத்தில் கப்பலைத் தாக்கினர். கப்பல் பேயாட்டம் ஆடியது. எங்கும் கூக்குரல். வெடிச்சத்தங்கள். கரையிலிருந்து பீரங்கிகள் முழங்கின. இருளில் தீப்பிளம்புகளைக் கக்கியவண்ணம் பீரங்கிக் குண்டுகள் பாய்ந்தன. இருபுறமும் இருந்து பீரங்கிகள் முழங்கின. சூறாவளி சுழன்றடித்தது. மேரி கவலையில் தவித்தாள்.

ஜெனரலுக்குச் செய்தியனுப்பினாள். கொள்ளையரும், சூறாவளியும் ஒரே நேரத்தில் தாக்கியதால் ஜெனரல் ஆடிப்போய் விட்டான். செய்வதறியாது திகைத்தான். வெகுநேரத்தின் பின் சூறாவளி ஓய்ந்தது. கப்பல்களைக் காணவில்லை. கொள்ளையர்கள் தப்பிவிட்டார்களா? கப்பலில் ஏறிய மக்களும் கரோலினும் ஹென்லியும் எங்கே? தெரியவில்லை. சிலர் உயிர்தப்பினார்கள். அவர்கள் நீந்தி கொல்கத்தாக் கரையை அடைந்தார்கள். அவர்களின் கூற்றுப்படி கரோலின் கப்லினுள் இருந்தாள். கூடவே ஹென்றலியும் இருந்தான். அவர்களைக் கண்டதாகக் கூறினார்கள். கப்பல் கூக்கிளி ஆற்றினுள் அமிழ்ந்து கடலுக்குள் அடித்துச் செல்லப்பட்டுவிட்டது. கப்பலினுள் கரோலினைப் பார்த்துள்ளார்கள். அவளும் ஹென்றலியும் கப்பலோடு கூக்கிளி நீரில் சங்கமித்து விட்டார்கள். "கரோலின்" எனது வாய் முணுமுணுத்தது. எனது கண்கள் பனித்தன. வெப்பக் காற்றோடு எனது வெப்பமான பெருமூச்சும் கலந்து கொண்டது. கூக்கிளி அமைதியாக ஓடிக்கொண்டிருந்தது. ஹொட்டல் றடிசன் சோகமாக நிமிர்ந்து நிற்பது போல் தெரிந்தது. எங்கிருந்தோ இரு குயில்கள் எதிரும் புதிருமாகக் கூவின. அந்தக் குயில்களின் சோகக்கூவுகை என்னை ஆட்கொண்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சலனமற்ற வாழ்க்கை

"அந்தச் சந்தியால திருப்பு. வலப்பக்கமாக மூன்றாவது வீடு. அதில நிற்பாட்டு". கவலை தோய்ந்த முகத்துடன் நந்தன் கூறினான். அவனது மனம் அடித்துக் கொண்டது. புழுதியைக் கிளப்பியவாறு அந்த வாகனம் விரைந்து வந்து நிற்கிறது. அதிலிருந்து பலர் இறங்குகிறார்கள். வாகனத்தில் இருந்து இறங்கியதும் இளையமகன் நந்தன் படுக்கையில் கிடக்கும் கந்தவனத்தாரின் பக்கம் விரைகிறான். அவனது மனைவியும் பிள்ளைகளும் தொடர்ந்து செல்கிறார்கள். சனம் புதினம் பார்க்க வெளிக்கிட்டு வந்தாச்சு. விடுப்புக்களும் விதண்டாவாதங்களும் தூள் பறக்கிறது. சிலர் உண்மையான அனுதாபத்துடன் பார்க்கிறார்கள். சிலர் நமட்டுச் சிரிப்போடு நிற்கிறார்கள். மூத்த மகனும் மருமகளும் சற்றுமுன்தான் வந்தார்கள். இப்போது இளைய மகனும் மருமகளும் பிள்ளைகள் சகிதம் வந்து விட்டார்கள். அபிராமிக்குச் சற்று நிம்மதி. மருமகள்மார் பக்கத்தில் வந்தார்கள். "மாமா, எப்படி இருக்கு மாமா"? விசாரிக்கிறார்கள்.

அவரையே பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள். அவரது கண்கள் மெல்லத் திறந்து மூடுகின்றன. கண்ணீர் வழிகிறது. ஊரவர்களில் சிலர் இவர்களின் நலனில் அக்கறை உள்ளவர்கள் போல் சுகம் விசாரிக்கிறார்கள். நந்தன் அப்பாவை உற்றுப் பார்க்கிறான். "நாங்க இஞ்ச இருக்கிறதால அவருக்கு உதவிதான். காலமையும் வந்து பார்த்து விட்டுத்தான் போனனான்". பக்கத்து வீட்டுப் பொன்னி முகத்தைச் சுளித்தவாறு கூறிக் கொண்டிருக்கிறாள். உண்மையில் அவள் எட்டிப் பார்ப்பதே இல்லை. விண்ணாணம் பார்ப்பதில் கெட்டிக்காரி. அவளது குத்தலும் பார்வையும் அபிராமியை ஊடுருவுகிறது. உன்னை என்ன செய்கிறேன் பார். என்பதுபோல் பொன்னியின்பார்வை தெரிந்தது.

கந்தவனத்தார் படுக்கையில் இளைத்துக் கிடந்தார். உள்ளத்தில் பட்ட அந்த அடி வேதனையாகி அவரை வீழ்த்தி விட்டது. அது ஆறாதது. காலம்தான் அதனை ஆற்றக்கூடியது. இதயப்பை சிறுகச் சிறுகத் தன் சக்தியை இழந்து கொண்டு வருவதுபோலத் தெரிந்தது. அவரால் பேசமுடியவில்லை. துக்கம் தொண்டையை அடைக்கிறது. விரல்களைக் காட்டிச் சைகை செய்கிறார். அதன் பொருள் விளங்காது ஆளுக்காள் தமது கருத்துக்களைக் கந்தப் புராணத்துப் பாடல்களுக்குப் பொருள் கூறுவதுபோல் கூறிக்கொண்டிருக்கின்றனர். கந்தவனத்தார் மீண்டும் தலையை அசைத்துக் கைகளை உயர்த்தி ஏதோ சொல்ல முயற்சிக்கிறார். சொற்கள் வெளியேவர மறுக்கின்றன. "மனுசன் ஏதோ சொல்லுது. என்னண்டு கேளுங்க." பொன்னிதான் கூறிக்கொண்டிருந்தாள். இளைய மகன் நந்தனுக்குக் கோபம் வந்திருக்க வேணும். முகத்தை வேறுபக்கம் திருப்பினான். அங்கு அபிராமி அழுதவண்ணம் வேலைகளில் மூழ்கியிருந்தாள். அவளிடம் கேட்கிறான். "அப்பாவுக்கு என்ன நடந்தது"?

"அவர் நல்லாத்தான் இருந்தார். போனகிழமை திடீரென்று காய்சல்போல வருது" என்றார். "படுத்தவர்தான். எழும்பல்ல. பிள்ளயள ஒருக்கா பார்க்க வேணும்போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடக்கு என்றும் சொன்னார். அதுதான் வியளம் அனுப்பினன்." அபிராமி சொல்லிக்கொண்டே வந்தாள். அவள் அனுப்பிய செய்தியை நந்தன் அசைபோட்டுப் பார்த்தான். "உங்களுக்காகத்தான் காத்துக் கிடக்குப் போல. வந்து ஒருக்காப் பாருங்க. இண்டக்கி அல்லாட்டி நாளைக்கு போய் விடும்போலவும் கிடக்கு. நீங்க வந்தாத் தென்பாக இருக்கும். ஒருக்கா வந்திட்டுப் போனால் நல்லது." அபிராமி இப்படிச் செய்தி இதற்குமுதல் அனுப்பியதில்லை. இந்தச் செய்தி நந்தனின் உள்ளத்தில் சிறிது தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது. அதனால்தான் அத்தனை வேலைகளையும் உதறிவிட்டு ஓடோடி வந்துள்ளான்.

தனது அப்பாவை எண்ணிப் பார்த்தான். அவர் செய்த தியாகங்கள் அவன் கண்முன்னே வந்து பூச்சாண்டி காட்டின. பிள்ளைகளுக்காகக் கந்தவனத்தார் பட்டபாடு கொஞ்சநஞ்சம் இல்லை. பிள்ளைகள் உத்தியோகம் பார்ப்பதால் வெளியூர்களில் இருக்கிறார்கள். அபிராமிதான் கந்தவனத்தாரின் நலனில் அக்கரையுள்ளவள் என்பதை நன்றாக அறிந்திருந்தான். அப்பாவை அவள் கவனித்துக் கொள்ளுவாள் என்ற நம்பிக்கை இருந்தது. ஏதோ பழக்கதோசம் போலிருக்க வேண்டும். அல்லது முற்பிறவியில் விட்டகுறை தொட்டகுறை என்பார்களே அதுவாகவும் இருக்கலாம். வந்தவர்களுக்கு வேண்டியவற்றைச் செய்துகொடுத்து உபசரிப்பவளும் இந்த அபிராமிதான். இந்த அபிராமிக்குக் கூறிக்கொள்ள சொந்தபந்தம் என்று ஒன்றும் கிடையாது. இதுவரை அபிராமியின் சொந்த ஊரை கந்தவனத்தார் விசாரித்து அறியவும் இல்லை. அபிராமி சொல்லவும் இல்லை. இந்த யுத்தபூமியில எல்லாரும் அகதிகள்தான் என்ற நினைப்பில் இருந்துவிட்டார்.

கந்தவனத்தார் கைகளை மேலே உயர்த்தி விரல்களை அசைக்கிறார். "மனிசன் ஆரையோ தேடுது. என்னண்டு கேளுங்கவன். பார்த்துக் கொண்டு இருக்கிறியள்." பொன்னியின் சத்தம் நந்தனின் காதுகளைத் துளைக்கிறது. அபிராமியை மாட்டிவிட்டு வேடிக்கை பார்ப்பதில் பொன்னிக்குப் பரமதிருப்தி. அபிராமியை இங்கிருந்து அனுப்பினால் போதும் என்று நினைப்பவள். பொன்னியின் அவசரம் அவனுக்கு ஆத்திரத்தை மூட்டியது. "ஆச்சி, கொஞ்சம் பேசம இருங்க. அவருக்கு ஒன்றுமில்லை. ஆறுதலாகக் கேட்கலாம். இப்ப டாக்டரைக் கூட்டிவந்து காட்டிப் பார்ப்போம்." நந்தன் கூறிக் கொண்டு எழுகிறான். "தம்பி எதுக்கு டாக்குத்தர். இண்டைக்கோ, நாளைக்கோ போற மனுசனுக்கு இதல்லாம் தேவையா? கேக்கிறதக் கேளுங்கவன்." பொன்னியின் இந்தச் நச்சரிப்பு நந்தனுக்கு நாராசம் பாய்ச்சுகிறது. அவளை முறைத்துப் பார்க்கிறான். கந்தவனத்தாரின் பார்வையும் பொன்னியின் பக்கம் சாய்கிறது. அவள் முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொள்கிறாள். அவருக்கு பொன்னியின்மேல் எந்தவிதக் கோபமும் இல்லை. பொன்னியின் முகம் அமவாசையைக் காட்டுகிறது. இவளுக்கு ஏனிவ்வளவு கோபம்?. அபிராமிக்கு வேதனை அதிகரிக்கிறது. "இப்படியும் மனிதர்களா? ஒருவருடைய சாவில் எவ்வளவு சந்தோசம் இவங்களுக்கு. சாகாவரம் பெற்ற மனிசர்களா நீங்க.? மனதினுள் பேசிக் கொள்கிறாள். நந்தன் பேசாமல் எழுந்து போய் டாக்டரை அழைத்து வந்தான்.

டாக்டர் கந்தவனத்தாரின் கையைப் பிடித்து நாடி பார்க்கிறார். பார்த்து விட்டுக் கொடுப்புக்குள் சிரிக்கிறார். "என்ன டாக்டர் அப்பாவுக்கு எப்படி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்குது.?" பதறியடித்துக் கொண்டு மூத்தமகன் மூர்த்தி கேட்கிறான்."இஞ்ச பாருங்க மூர்த்தி. உங்க அப்பாவின் உடல் சக்தி வாய்ந்தது. உழைப்பால் வலுவடைந்தது. பெரியவரின் இதயத்துடிப்பு உறுதியாக இருக்கிறது. ஆனால் பலவீனமாய் இருக்கிறார். நல்ல சத்துள்ள உணவும் ஓய்வும் கொடுத்தால் எழும்பி பழயபடி நடமாடவும் கூடும். அவருக்கு ஏதோ கவலை இருக்கிறது. மனஅமைதி தேவை". டாக்டரின் இந்தப் பதில் இதயத்துள் பாலை வார்க்கிறது. "இண்டைக்கு அல்லது நாளைக்கு ஆள் குளோஸ்" என்று நம்பியவர்களுக்கு "டிமிக்கி" கொடுத்துக் கொண்டு கந்தவனத்தார் கிடக்கிறார். பிள்ளைகளைக் கண்டதும் அவருக்குத் தென்பு பிறந்துவிட்டதுபோலும். புதினம் பார்க்க வந்தவர்களது உதடுகள் பிதுங்குகின்றன.

கந்தவனத்தாரின் மனைவி மறைந்து ஆறுவருடங்கள் உருண்டுவிட்டன. எத்தனை நாளைக்குப் பிள்ளைகள் பார்ப்பார்கள்.? அவர்களும் மனிதர்கள்தானே? கஷ்டநஷ்டம் அவர்களுக்கும் இருக்கும்தானே? பொறுமையைக் கட்டிக்கொண்டு எவ்வளவு காலம் ஜீரணிப்பார்கள். அவர்களுக்கு வீண்சிரமத்தைக் கொடுப்பானேன்? மற்றவர்களுக்குப் பாரமாக இருப்பது பாவம் அல்லவா? "படுத்த படுக்கையில் கிடவாமல் போய்ச்சேரவேணும்". இதைத்தான் தினமும் இறைவனிடம் ஒப்புவிப்பார். பிறந்து வளர்ந்த ஊரில் போய் இறுதிநாட்களைத் தனியாகக் கழிக்கத் தீர்மானித்து விட்டார். சகோதரி வீட்டில் கொஞ்சக் காலத்தைக் கழித்தார். ஆனால் அதில் அவருக்கு திருப்தியில்லை. தாயின் பரம்பரைக் காணியில் கொட்டிலை அமைத்துக் கொண்டு அங்கு தஞ்சமானார். அங்குதான் பிரச்சினையே தொடங்கியது.

அந்தக் காணிக்குள் கந்தவனத்தார் வந்ததைப் பலரும் விரும்பவில்லை. பக்கத்து வீட்டுப் பொன்னிக்கு விருப்பமில்லை. பொன்னியின் மகன் கந்தவனத்தாரின் காணியின் பொது எல்லைக்கல்லை அசைத்துத் தனது காணியுடன் ஒரு பாகத்தரையைச் சேர்த்துக் கட்டுகிறான். "தம்பி குணம் ஏனிந்த வேலை. வேலியைப் பொதுவாகப் போட்டால் நல்லதுதானே. பிரச்சினை இல்லையே." கந்தவனத்தாரின் இந்தக்குறுக்கீடு குணசேகரனுக்குப் பிடிக்கவில்லை. "உங்களுக்கு வேற காணி இருக்கு. ஏன் இந்தக் காணியில வந்து வீடு கட்டவேணும்." இந்தக் கேள்வியினால் கந்தவனத்தார் ஆடித்தான் போனார். அவருக்குச் சிரிப்பு ஒருபுறம். மறுபுறம் வேதனை. அவரது வருகையை பலர் விரும்பவில்லை என்பதை அறிந்து கொண்டார்.

அபிராமியும் வந்து சேர்ந்து கொண்டாள். பிரச்சினைகள் தன்னை நோக்கி நகர்வதை பெரிதாக அவர் பொருட்படுத்த வில்லை. அடிக்கடி இந்தப் பிரச்சனை தலைதூக்கும். அப்படியிருந்தும் கந்தவனத்தார் பொறுமையைக் கடைப்பிடித்தார். ஆனாலும் பொன்னியின் கோபத்துக்கு ஆளாகி விட்டார். "இவன் தொலைவான் இன்னும் போகாமல் கிடக்கிறானே. இவளொருத்தி புதுசாக வந்து சேர்ந்திட்டாள். கோள்மூட்டி அபிராமியத் தொலைக்க வேணும். இவள்தான் காட்டிக்குடுக்கிறவள்." என்று மனதுக்குள் கறுவிக்கொள்வாள். அபிராமியை அவதூறாகப் பேசுவதில் அவளுக்கு நிகர் அவளேதான். எல்லாவற்றையும் மனதினுள் போட்டு அடைந்து கொண்டு பொறுமை காப்பதில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிராமி கெட்டிக்காரி. அபிராமி கந்தவனத்தாருடன் வந்து சேர்ந்தது ஒரு விபத்துத்தான். சுறுசுறுப்பாக இயங்குவாள். தேவையானபோது மட்டும் வாய் திறப்பாள். பொறுமையாக வேலைகளைச் செய்வாள். அவளது பொறுமையைக் கந்தவனத்தார் மெச்சியும் இருக்கிறார்.

கந்தவனத்தாருக்குத் தன்கிராமத்தில் மதிப்பும் மரியாதையும் இருந்தது உண்மைதான். அந்தக் கிராமத்தின் வளர்ச்சியில் முதுகெலும்பாக உழைத்தவர். பாடசாலை செல்லாத பிள்ளைகளை வீடு வீடாகச் சென்று பாடசாலைக்கு அனுப்பியவர். தனது ஊரிலிருந்து பிள்ளைகள் பல்கலைக் கழகம் செல்லவேண்டும் என்பதற்காகப் பாடுபட்டவர். அந்தச் சாதனையையும் நிறைவேற்றியவர். முதல்முறையாகத் தனது கிராமப் பாடசாலையிலிருந்து பல்கலைக் கழகம் சென்ற மாணவர்களைப் பாராட்டிப் பரிசும் கொடுத்தவர். அவர்களை எண்ணி வியந்து ஆனந்தக் கண்ணீர் வடித்தவர். அதனால் ஊர்மக்களின் மனதில் பெருமதிப்பைப் பெற்றவர். அரச உத்தியோகம் இடமாற்றத்துக்கு உரியதென்பதால் பல காலம் வெளிமாவட்டங்களில் இருந்தவர். இளைய தலை முறையினரின் நடத்தை மாற்றங்கள் அவருக்கு எரிச்சலைக் கொடுத்தது. பலவிடயங்களில் தலையிட்டுப் புத்திமதி கூறினார். அவருக்குக் கிடைத்தது பிரச்சினையும் அவமரியாதையும்தான். அதற்காக அவர் ஒதுங்கவும் இல்லை. அந்த பவளவிழா வயதிலும் ஒரு துடிப்புள்ள இளைஞனைப் போல சுழன்று வருவார். அதிகாலையில் ஊரைச் சுற்றி வலம் வருவார். அன்றும் அப்படித்தான் மணல் பரந்த தெருவில் நடந்து வந்தார். ஊர்த்தெரு வேலிகளில் வேம்புகளும் பனை மரங்களும் விசாலித்திருந்தன. வெயிலை வடித்து குளிர்தடவி நிழலைக் கொடுத்துக் கொண்டிருந்தன. ஒரு வளைவில் சாய்ந்த மரத்தில கட்டிய விளம்பரம் தெரிந்தது.

கிராமங்களில் இவைதான் வியம்பரப் பலகைகள். "என்னைப் பார். என்னைப் பார்". என்று காற்றில் ஆடியது. அதனை உற்றுப் பார்த்தார். அவரின் தலை சுற்றியது. தன்னைச் சதாகரித்துக் கொண்டார். அந்த வசனங்களை வாய் முணுமுணுத்தது. நடந்தார். "இந்தக் கிழடுக்கு இந்த வயதிலயும் ஒரு பொண் வேணும். ஊரை விட்டு ஓட்டங்காட்ட வேணும்". அவரைக் கண்டுதான் சொன்னார்களோ தெரியாது. அந்தச் சொற்கள் அவரது காதுகளில் பாய்ந்து உள்ளத்தை ஊடுருவித் தாக்கியது. இராமனின் அம்பு பட்ட இராவணனது நிலையாய் மாறினார். சொல்லம்புகள் மனதில் தைத்து வேதனையைப் பரப்பியது. தலைசுற்றியது போன்ற உணர்வு. இதயத்தைச் சுட்டெரித்தது. மெல்லிய வலியேற்பட்டது. அப்படியே தெருவோரத்தில் குந்திவிட்டார். உடலெங்கும் வெயர்த்தது. அவருக்குத் தெரியும். தன்னோடு சேர்த்து அபிராமியைத்தான் குத்திக் காட்டுகிறார்கள் என்று. அந்திம காலத்தில் உதவிக்காக ஒரு பெண் உடனிருப்பது தவறா?

இவர்கள் சொல்வதுபோல் எந்தப் பிசகும் இல்லையே. யாரும் இல்லாத அனாதைப் பெண்ணுக்கு ஆதரவளிப்பது தவறா? அவரது உள்ளத்தில் பெரும் போராட்டம் தொடங்கி விட்டது. அபிராமியைப் பற்றி நினைத்துப் பார்த்தார். காலை தொடக்கம் மாலைவரை எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுச் செய்வாள். உள்ள பயிர்களுக்கெல்லாம் தண்ணீர் இறைப்பாள். அவளைக் கண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிர்கள் பச்சைப் பசேலலெனச் சிரிக்கும். தலையெடுத்தாடும். அவற்றுக்குள்ள நன்றி மனிதர்களிடம் இல்லையா? உடுதுணிகளைக் கழுவி வைப்பாள். பொருட்களைப் பாதுகாத்து வைப்பாள். தனக்கென்று ஒன்றையும் சேர்த்து வைக்காத அற்புதப் பிறவியவள். நேரத்துக்குச் சமைத்துத் தருவாள். தானும் கொஞ்சம் சாப்பிடுவாள். வேலைகளை முடித்ததும் ஒருமூலையில் சுருண்டு படுத்து விடுவாள். அவள் பாயில் படுத்ததை கந்தவனத்தார் கண்டதில்லை. விரதம் காப்பவர்போல் நிலத்தை ஒரு துணியால் தட்டிவிட்டு தலைக்குத் தலையணையாகக் கைகளை மடித்துக் கொண்டு உறங்கி விடுவாள். அதிகாலை ஐந்து மணிக்கெல்லாம் "ஐயா தேத்தண்ணி குடியுங்க" என்று கோப்பையோடு நிற்பாள். அவளுக்கென்று உறவுகள் இல்லை. எதனையும் எதிர்பார்ப்பதும் இல்லை.

கந்தவனத்தாரின் உள்ளமெல்லாம் அபிராமி ஆக்கிரமித்திருந்தாள். இதுவரை அபிராமியைப் பற்றிச் சிந்தித்ததே இல்லை. தனது குடும்பத்தில் ஒருத்தியாகத்தான் நினைத்திருந்தார். மனைவி ஸத்தானத்தில் வைத்துப் பார்த்ததே இல்லை. இப்போது அவளைப் பற்றிய சிந்தனைகள் வந்து குவிந்த வண்ணம் இருந்தன. ஏன் இந்தச் சமூகம் இப்படி? இளம் வயதினர் ஒன்றாக இருந்தால் சிக்கல்தான். ஆனால் உடல்வளம் குன்றி உள்ளத்து உணர்ச்சிகள் வற்றிய அந்திம காலத்தில் விபரீத எண்ணங்கள் தோன்றுமா? தோன்றினாலும் உடல் ஒத்துழைக்குமா? கடவுளுக்குச் செய்யும் தொண்டாக ஒரு பெண் ஒரு ஆணுக்குச் செய்வது எந்தவகையில் பொருத்தமற்றது. மனைவியை இழந்த வயதுபோன ஆணும், கணவனை இழந்த இளம் பெண்ணும் சேர்ந்து ஆளுக்காள் துணையாக இருப்பது தவறாகுமா? அவர்கள் சேர்ந்து வாழ நினைப்பது வெறும் பாலியல் சந்தோசத்துக்கு மட்டுந்தானா? பாலியல்தான் வாழ்வாகுமா? அதற்கு வயதும் உடலும் ஒத்துப் போகுமா? இந்தச் சமூக அமைப்பில் யோசிக்கத் தெரிந்த மனிதரே கிடையாதா? உணவகத்தில் வேலைசெய்யும் ஒரு பெண் உணவைப் பரிமாறுவது போல்தானே இதுவும். அது தவறில்லை என்றால் இது எப்படித் தவறாகும்?. இந்த அப்பாவி எனது நிழலில் இருப்பதை ஏன் இந்தச் சனங்கள் வித்தியாசமாகப் பார்க்கிறார்கள்.? கந்தவனத்தாரின் உள்ளம் கேள்விக் களமானது.

மெதுவாக நடந்து வீட்டுப் படலையை அடைந்தார். பொன்னி அபிராமியோடு சச்சரவில் ஈடுபட்டிருந்தாள். அவரைக் கண்டதும் பொன்னி பெட்டிப்பாம்பாக அடங்கிச் சென்றுவிட்டாள். அபிராமி வீட்டு வேலைகளில் ஈடுபட்டிருந்தாள். அவளை இன்றுவரை உற்றும் பார்க்கவில்லை. தற்செயலாகப் பார்த்தார். அவள் கண்களைச் சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்டதை அவதானித்து விட்டார்.

"அபிராமி இங்கவா. என்ன நடந்தது"? கேட்டார். அவள் அப்படியே நின்றாள். சந்தோசம் என்பதை அவள் கண்டதில்லை. தன்னை அலங்கரிப்பதும் இல்லை. அவள் முகம் வாடிக்கிடந்தது. "ஏதும் பிரச்சினையா?" அவர் தொடர்ந்தார். அவள் மௌனம் காத்தாள். அவருக்குக் கோபமே வருவதில்லை. அவளின் மௌனம் அதனை வரவழைத்தது. "சொல்லித் தொலை" கடுகடுத்தார். நிலத்தைப் பார்த்தவாறே "ஒன்டுமில்ல" கூறினாள். "ஒன்றுமில்லாட்டி ஏன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்கலங்கியிருக்கு"? அவளுக்கு ஆச்சரியம். தன்னை அவர் ஏறெடுத்துப் பார்த்ததைக் கண்டதில்லை. அவர் தன்னைப் பார்த்துள்ளார் என்பதை அறிந்து விட்டாள்.

மனதினுள் கொஞ்சம் ஈரம் கசிந்தது. அவரின்மேல் அளப்பரிய மரியாதை துளிர்த்தது. அதனை அவள் வெளிக்காட்டவில்லை. மனதினுள் போட்டு மூடிவிட்டாள். அவள் பேசாது தனது வேலைகளில் ஈடுபட்டாள். "அபிராமி இஞ்ச பார். எனக்கு எல்லாம் தெரியும். ஊரார் கண்டபடி பேசத்தான் செய்வார்கள். இதுக்கெல்லாம் போய் கலங்கி விடக்கூடாது. இங்க இருக்க விருப்பமில்லாட்டி எங்காவது போகலாம். சரியா"? கூறிக் கொண்டு போய்விட்டார். ஆனாலும் அவரது மனதினிலே அமைதியில்லை. தன்னாலேயே சகிக்கமுடியாத போது இவளால் எப்படிச் சகிக்கமுடியும். தாங்கிக் கொள்ளமுடியும். மீண்டும் மனம் குருசேத்திரம் ஆனது. அன்று மாலை முழுவதும் யோசித்த வண்ணமே இருந்தார்.

பெண்மை அடிமைப்பட்டுக் கிடக்கிறது. அதனை எதிர்த்து அடிமை விலங்கை ஒடிப்போம். ஆணாதிக்கத்தை ஒழிப்போம் என்று வீராப்புப் பேசி போர்க்கொடி மட்டும் தூக்கும் மனிதர்களை எண்ணிச் சிரித்தார். யாருக்கு யார் அடிமை.? இன்று பெண்களுக்குப் பெண்கள்தானே எதிரியாகிறார்கள். கணவனை இழந்த பெண்ணைக் கொடுமைப்படுத்துவது ஆண்களா? வீதியில் செல்லும் அந்தப் பெணின் உள்ளத்தைச் சிதைப்பது யார்? வார்த்தைகளால் கொல்லுவது யார்.? மனித உரிமை என்பது இதுதானா? கணவனை இழந்த பெண் நல்ல உடையணியவும் உரிமையில்லையா? அவளுக்கென்று ஆசைகள் இருக்காதா? சாகும் வரையும் இந்தக் கோலம்தானா? இந்த யுத்தபூமியில எத்தனை விதவைகள். இவர்களுக்கு மறுவாழ்வு என்பதே இல்லையா? வாழ முனைந்தாலும் சமூகம் விடுமா? சமூகம் என்பது திறந்த சிறைச்சாலை. சித்திரவதை செய்யும் பலிபீடம். ஆண்கள் வேண்டுமானால் எதனையும் செய்யலாம். ஆனால் பாவம். இந்தப் பெண்கள்..? யுத்தம் ஓயலாம். சமாதானம் வரலாம். ஆனால் விதவைகளாக்கப் பட்ட பெண்களது மனதில், வாழ்வில் சமாதானதின் நிழலாவது படுமா? எதிரி விளைத்த கொடுமையைவிட எங்கள் சனங்கள் செய்யும் சித்திரவதையை நிறுத்தமுடியாதா? . வினாக்கள் வந்து விரிந்தன.

சாதகமான பதில் யாருமே கூறமாட்டார்கள். ஒவ்வொருவரும் தமக்கென ஒரு வலையை மாட்டிக் கொண்டு திரிகிறார்கள். பாரதியைப் போல் பலயுகக் கவிஞர்கள் வந்தாலும் இந்தச் சமூகக் கட்டுமானங்கள் உடைபடப் போவதில்லை. அவரால் தொடர்ந்து அமைதியாக இருக்க முடியவில்லை. அபிராமியைச் சுற்றியே மனம் அலைபாய்ந்தது. ஒரு ஆறுதலுக்காக வெளியே புறப்பட ஆயத்தமானார். "அபிராமி எனக்கு மனம் சரியில்லை. காய்ச்சல் குணமாயிருக்கு. ஒருக்காப் பிள்ளையளைப் பார்க்கவும் வேணும்போல கிடக்கு. வியளம் சொல்லி அனுப்பவேணும். இப்ப கோயிற் பக்கம் போய்வாறன். எங்கையும் போகாத..என்ன?" புறப்பட்டு விட்டார்.

அவர் போவதையே உற்றுப் பார்த்தாள். அவரது நடையில் உற்சாகம் இல்லை. அவரது கம்பீர நடையில் ஒரு தள்ளாட்டத்தை அவதானித்தாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிராமிக்கு மனதினிலே பெரிய போராட்டம். "என்னால்தானே ஐயாவுக்கு அவப்பேர். இங்கிருக்க மனமில்லாட்டி எங்காவது போகச் சொன்னாரே. எங்காவது தொலைந்து போய்விட்டால்? என்போன்ற அபலைகள் நிம்மதியாக வாழமுடியாது. "என்ரவர் போனதோட நானும் போயிருக்க வேணும். நாசமாய்ப் போன யுத்தம் என்னை விதவையாக்கியது. இந்தச் சமூகம் நித்தமும் கொல்லுகிறது." மனம் அலுத்துக் கொண்டது. "நான் என்ன தவறு செய்துபோட்டன். அவருக்குரிய வேலைகளைச் செய்து போட்டு ஒரு பாதுகாப்புக்காக இந்த வீட்டில் ஒட்டிக் கொண்டு கிடப்பது தவறா? எங்காவது போ என்றாரே. நான் எங்க போவன்?" அவளால் இருப்புக் கொள்ள முடியவில்லை. கண்ணீர் தாரைதாரையாகப் பீறிட்டுப் பாய்ந்தது. வேலைகளை இயந்திரமயத்தில் செய்து முடித்தாள். சில நாட்களில் நேரம் பறந்து போகும். இன்றுமட்டும் நாள் நகர மறுக்கிறது. தன்னை நொந்து கொண்டாள். "எங்காவது ஆத்தில கடலில விழுந்து சாவமா? சீச்சீ.. பிறகு ஊர்வாயை மூடேலாது. ஐயாவுக்குக் கெட்ட பேர் வந்திரும்." மனது பேசிக் கொண்டே இருந்தது. நேரம் போய்க் கொண்டிருந்தது. கந்தவனத்தார் இன்னும்வரவில்லை. விளக்கை ஏற்றி வைத்து விட்டுப் புறப்பட்டு விட்டாள். கால்கள் களைத்து நிற்கும்வரை நடந்தாள்.

செவ்வானம் மறைந்து இருள் படியத் தொடங்கியது. நீலவானத்தில் வெள்ளிப் பூக்கள் சிரித்தன. வழமைபோல் கோயிலில் தியானத்தில் இருந்தார். மனம் அமைதியாக இருந்தது. அதிக நேரம் இருந்து விட்டதை உணர்ந்தார். எழுந்து ஒட்டியிருந்த மணலைத் தட்டிவிட்டார். வீட்டை நோக்கி நடந்தார். வீடு திறந்தபடி கிடந்தது. ஆளரவமற்ற சூழலைப் புரிந்து கொண்டார். அபிராமி சில சமயங்களில் வீட்டின் பின்புறமாக ஏதேனும் வேலையில் ஈடுபட்டிருப்பாள். அதனால் அவர் அவளைபபற்றி அலுத்துக் கொள்ளவில்லை. நேரம் போய்க் கொண்டிருந்தது. அபிராமியைக் காணவில்லை. எழுந்து அடுக்களைப் பக்கம் நோட்டம் விட்டார். இரண்டு மூன்று முறை அழைத்துப் பார்த்தார். அவரது மனம் குழம்பி விட்டது. இந்தச் சனங்களில் வக்கரிப்பை எத்தனை நாளைக்குத்தான் ஜீரணிப்பாள். எங்க போனாளோ? என்ன ஆனாளோ? எங்கு தேடுவது. கவலையோடு கட்டிலில் படுத்தவர்தான். எழும்பவில்லை.

அபிராமி வெகுநேரம் கழித்துத்தான் வந்தாள். அவளுக்குத் துயரம் ஏற்படும்போதெல்லாம் அம்மன் கோயிலுக்குப் போய் அழுது தீர்த்துவிட்டு வருவாள். அன்றும் அப்படித்தான் செய்தாள். வந்து எழுப்பியும் அவர் எழும்பவில்லை. கண்களிலிருந்து கண்ணீர் மட்டும் வழிந்தது. அவருக்காக அவள் வேதனைப் பட்டாள். அவரைத் தூக்கி விட்டால் என்ன? அது முடியாத காரியம். அதனை அவர் ஒப்புக் கொள்ள மாட்டார். சாப்பிடவும் இல்லை. தன்னை நொந்து கொண்டாள். அப்படியே சுருண்டு கிடந்தாள். கவலையும் களைப்பும் அவளை ஆட்கொண்டிருக்க வேண்டும். உறங்கி விட்டாள். விடிந்துவிட்டிருந்தது. எழுந்து தேநீர் தயாரித்தாள். கந்தவனத்தாரால் எழும்ப முடியவில்லை. ஆபத்துக்குப் பாவமில்லை. கைகொடுத்து எழுப்ப முனைந்தாள். அதனைத் தடுத்து விட்டார். அவராகவே மெதுவாக எழுந்தார். உடல் அனலாய்க் காய்ந்தது. காய்ச்சல் அடித்தது. அவர் பேசவில்லை. வெளியில் போய் வந்தார். வாயலம்பி தேநீரைக் குடித்தார். மீண்டும் சாய்ந்து படுத்துக் கொண்டார்.

அபிராமி அவ்வரையே பார்த்தாள். அவர் பேசாது ஒருக்களித்துப் படுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார். அவளால் தாங்கமுடியவில்லை. அவரது கால்களைப் பிடித்தபடி அப்படியே இருந்து விட்டாள். "ஐயா என்னை மன்னிச்சிருங்க. நீங்க பேசாதிருந்தால் நான் செத்துப் போயிருவன். எனக்கென்று யாரிருக்கார். நான் எங்க போவன்." கேவிக்கேவி அழுதாள். கந்தவனத்தாரின் உள்ளம் நடுங்கியது. மெதுவாக அவளது தலையை வருடி விட்டார். "நீ என்ன செய்வாய். இது ஒருவித தவவாழ்க்கை. இந்தச் சமூகம் பொல்லாதது. நல்லதை உணராதது. நீ எங்கயும் போய்விடாதே. நான் கிடக்குமட்டும் என்னோடு கிட. நான் இல்லாத காலத்திலயும் இந்த இடத்தில கிட. நான் பிள்ளயளுக்குச் சொல்லுறன். அவங்கள வரச் சொல்ல வேணும். இப்ப வேணாம். சுகமாகட்டும்." ஒரு வாஞ்சையுடன் கூறினார்.

ஒரு கிழமையாகியும் அவரது உடல் தேறவில்லை. அபிராமிக்குப் பொறுக்கவில்லை. பிள்ளைகளுக்கு அறிவித்து விட்டாள். இப்போது அவர்கள் வந்து விட்டார்கள். பேரப்பிள்ளைகளின் குதூகலம் அவரை ஆட்கொண்டது. கண்கள் திறந்து சுழன்றன. பேரப் பிள்ளைகள் வந்ததும் வராததுமாக சுற்றி நின்று 'தாத்தா' சத்தமிட்டார்கள். கந்தவனத்தாரின் செவிகளில் தேன் பாய்ந்த உணர்வு. விழிகள் திறந்து சுழன்றன. கிட்டவந்து தொட்டுப் பார்த்தார்கள். அவரது உடலில் ஸ்பரிசம் பாய்ந்தது. சிலிர்த்துக் கொண்டார். அவர்களை ஒருமுறை நோட்டம் விட்டார். அவரது முகத்தில் மலர்ச்சி வந்து சில கோடுகளை வரைந்தது. விழிகள் அகன்று மலர்ந்தன. பேரப்பிள்ளைகள் ஓடியொளிந்து விளையாடினார்கள். ஓடிவந்து கந்தவனத்தாரைத் தொட்டார்கள்.

அவ்வளவுதான் எட்டி ஓடிவிட்டார்கள். சின்னஞ்சிறிசுகள். அவர்களுக்கு விளையாட வாய்ப்புக் கிடைத்துவிட்டது. குதூகலத்தில் துள்ளிக் குதித்துச் சத்தமிட்டார்கள். மீண்டும் தொட்டு ஓடினார்கள். அந்தத் தொடுகை கந்தவனத்தாரின் நாடிநரம்புகளில் பாய்ந்து உயிரூட்டியது. முறுவல் உதடுகளில் நடந்தது. நந்தனின் முகத்தில் மலர்ச்சி. "அப்பா எப்படி இருக்கு.?" கேட்டான். புன்னகைக்க முயன்றார். அவரது கைகளை வாஞ்சையோடு பற்றினான். "அப்பா எங்களுக்கு எல்லாம் தெரியும். அபிராமி உங்களோடு இருப்பா. உங்களுக்குத் துணையாக இருப்பா. ஒன்றுக்கும் கவலைப் படாதீங்க. நாங்க இருக்கிறம். உங்கட சந்தோசம்தான் எங்கட சந்தோசம்." நா தளுதளுக்கக் கூறினான். பிள்ளைகள் கூறியதைக் கேட்டுத் தன்னை மறந்தார்.

தான் எதனைக் கேட்கவேண்டும் என்று காத்திருந்தாரோ அதனைப் பிள்ளைகள் கூறிவிட்டார்கள். அவரது முகத்தில் சந்தோசம் வந்து குந்தியது. அவரது கண்களிலிருந்து கண்ணீர் மடைபுரண்டது. அவருக்குப் பெருமையாக இருந்தது. "எனது பிள்ளைகள் முற்போக்கானவர்கள்". மனதில் பெருமை கொண்டார். அவரது உடல் உறுதி பெற்ற உணர்வினைப் பெற்றுவிட்டார். அபிராமியை திரும்பிப் பார்த்தார். அவளது முகத்தில் எந்தவித சலனமும் இல்லை. அவள் வாழ்வது ஒருவித தவவாழ்க்கைதான். அவள் சலனமற்ற வாழ்க்கையில் அனுபவம் பெற்றுவிட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவம் கலைகிறது

வானத்தில் அலங்கோலமாக மேகக்கூட்டத்தின் விசிறல். அமைதியைத் தொலைத்து விட்டுத் தேடும் குழந்தையாகச் சூழலின் தவிப்பு. மரங்களில் எதற்காகவோ தவமிருந்து கூவும் குயில்களின் இன்னிசையிலும் துன்பியலின் கோடுகள் நெளிகின்றன. சூறாவளியின் பின் நிலவும் பயங்கர அமைதியின் மயானத்தன்மை. இனிதாக வீசும் இளங்காற்றுக்கூட உடலையும் உள்ளத்தையும் வெதுப்பியது. உள்ளத்தின் கொந்தளிப்பால் ஏற்பட்ட கொதிப்பு. அனல் மூட்டிவிட்ட வெப்பத்தால் உள்ளத்துள் வெயர்த்து எரிமலையாகி விசுறுகிறது. அது உடலெங்கும் பரவி கொதியாய்க் கொதிக்கிறது. பாதிவிழி திறந்த நிலையில் அமர்ந்திருக்கிறார் கௌதம புத்தர். ஆழ்ந்த தியானம் கலைந்து கொண்டே இருக்கிறது. எப்படி அமைதிப்படுத்தினாலும் மனம் அமைதியடைவாதாக இல்லை. மனம் பொல்லாதது. மனதைப்போல் நண்பனும் இல்லை. எதிரியும் இல்லை. அமைதி கலைந்து கொண்டே இருக்கிறது. மனக்கடலில் சூறாவளியாய் மாயையின் சித்து விளையாட்டு. பல ஆண்டுகளாகத் தன்னை வருத்தித் தவமிருந்து மானிடம் வாழ வழிகண்ட கௌதமன் மட்டும் விதிவிலக்கா என்ன? அவனது மனதிலும் சுழன்றடிக்கும் சூறாவளிச் சஞ்சலம். சுனாமியின் தீண்டல்.

பாரதம் ஞானிகளையும் புனிதர்களையும் தன்மேனியில் தவழவிட்டு மகிழ்ந்திருந்தது. அதனால்தான் தனக்கென ஒரு பெருமையைத் தேடிக்கொண்டது. பாரதத்தில்தான் துச்சோதனனும் வாழ்ந்தான். கபிலவஸ்து அவனது நாடு. அவன் போற்றுதற்குரிய பேரரசனாக ஆட்சிசெய்தான். அவனது ஒரே தவப்புதல்வன்தான் சித்தார்த்தன். தனது மகன் இந்த உலகத்தின் துயரங்களைக் கண்டுகொள்ளக்கூடாது. அவனது மனதில் துன்பமே குடிகொள்ளக் கூடாது என்ற பிடிவாதத்தில் இருந்தான். இந்த உலகத்தின் மாமன்னனாகத் திகழவேண்டும் என்று திட்டமிட்டு வளர்த்தான். இளமையிலேயே யசோதையைத் திருமணம் செய்து வைத்தான். வாலிபம் இனிமையானது. உடற் சுகத்தைத் துய்த்து மகிழும் பருவம். அன்புக்கினியாளின் அரவணைப்பில் அகிலத்தை மறந்து மயங்கிக் கிடக்கும் அற்புத வாய்ப்பு. அனுபவித்தான். சகலதையும் உற்றுணர்ந்தான். அற்ப சுகம் நிரந்தரமானதல்ல. நிரந்தரமானதென்ன? அது எங்கே உள்ளது. எங்கே கிடைக்கும்.? அவனது மனம் தேடலில் தேர்ச்சியை நாடிச் சென்றது. வாரிசு வந்து பிறந்தது. துன்பத்தின் நிழலையே பார்த்திராதவன் வாழ்க்கையில் இன்பத்தைக் காணமுடியவில்லை.

எவற்றை அவன் பார்க்கக் கூடாது என மறைக்கப்பட்டனவோ அவற்றை அவன் நேரில் கண்டு கொண்டான். உலகத்தில் நிலவும் துயரங்களையும் துக்கங்களையும் கண்டான். அவனது மனதில் வெறுமை குடிகொண்டது. மனைவியைப் பார்த்தான். அவளது களங்கமில்லாத முகம் யொலித்தது. எனினும் அந்த முகம் அவனை வசீகரிக்கவில்லை. மாறாக விட்டு விடுதலையாகும் வைராக்கியத்தைப் பெருகச் செய்தது. அருந்தவப் புதல்வனையும் நோக்கினான். எல்லாம் மாயையாக அர்த்தமற்றனவாகத் தெரிந்தன. மனதில் சஞ்சலம் குடிகொண்டது. மன்னன் மகன் மக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயர்துடைக்க வேண்டும். ஆனால் சித்தார்த்தன் மனிதத்துயர் துடைக்க அரசையே தூக்கி எறிந்து விட்டான். தன்னையே அர்ப்பணிக்கத் துணிந்துவிட்டான். காட்டை அடைந்து கடுந்தவம் இயற்றப் புறப்பட்டு விட்டான்.

நாட்டைத்துறந்து கடுந்தவம் இருந்து பிறவிப் பெருங்கடல் நீந்தும் வழியைத் தேடினான். தியானம் அவனுக்கு ஆறுதல் அளித்தது. தியானம் யோகநிலைக்கு இட்டுச் செல்வது. நல்ல சிந்தனைகள் ஊடாக நற்பேறைக் காண்பது. தியானத்துக்கு மனப்பக்குவம் தேவை. வைராக்கியம் தேவை. சிந்தனையைக் குழப்பும் எண்ண அலைகள் மோதும். அவற்றை வெல்லக்கூடிய மன உறுதி தேவை. அலைபாயும் மனதைக் கடிவாளமிட்டுக் கட்டுப் படுத்தும் கலையைக் கற்றுக் கொண்டான். அவனது பார்வை ஆழமானதாக இருந்தது. அது ஒருவகை யோகம். நல்ல எண்ணங்களை ஒருங்கிணைத்தலை யோகம் என்பார்கள். மனத்தைக் கட்டுப்படுத்தல் முக்கியமானது. நல்ல எண்ணங்களை சிந்தித்துத் திட்டமிட்டுதல் இன்னுமொரு வகையானது. அதற்கான செயல்வடிவங்களை உருவாக்கல். அவற்றைச் செயற்படுத்தும் முறை அனைத்தும் யோகம்தான். அதனை அவன் அனுபவம் செய்தான். நல்ல எண்ணங்களை அனுபவம் செய்தல் கஸ்டமானது. அதனை நினைவில் இருத்தல் என்பார்கள்.

யோகிகள் நினைவில் இருப்பார்கள். அதனைத் தவமென்போம். சித்தார்த்தன் பல ஆண்டுகள் தியானித்தான். தவமிருந்தான். தியானத்தின் வழியே ஞானத்தைக் கண்டான். சித்தார்த்தன் கௌதமபுத்தர் ஆனான். "பிறப்பு என்று ஒன்று இருந்தால் இறப்பும் நிட்சயம் உண்டு." துன்பத்தின் ஊற்றை அவதானித்தான். இன்பத்தின் வழியே துன்பம் தொடர்கிறது. "பிறவாமை வேண்டும்" என்றான். துறவறத்தை வற்புறுத்தினான். பஞ்சசீலக் கொள்கையை அறிமுகம் செய்தான். கொலை, களவு, காமம், பொய், மது ஆகியவை மனதை லௌகீகத்தில் ஆழ்த்துவன. அவற்றைத்துறந்தால் வாழ்வில் பேரின்பத்தை அடையலாம் எனக் கண்டான். பௌத்த தர்மம் உருவாகியது.

பாரதத்தில் கௌதமபுத்தர் பௌத்த தர்மத்தைத் தந்தார். அவர் பிறந்த நாடு அவரது போதனைகளை ஏற்கவில்லை. வேற்று நாட்டு மக்கள் அதனை அரவணைத்தனர். அந்த தர்மத்தை ஏற்றுப் போற்றிப் பின்பற்றினர். ஆனால் அதனைப் பின்பற்றும் மக்கள் அந்தத் தர்மத்தை மறந்து விட்டனர். உடல் அழியும்தன்மையது. அது நிலையானதல்ல. இந்த உடல் உயிருக்கு அவசியமானது. உடலும் உயிரும் சேரும்போதுதான் அது வாழ்வாகிறது. பலர் ஆத்மா அழியாதது என்பார்கள். "ஆத்மா அழியும் தன்மையது" என்றார் புத்தர். பௌத்தம் மறுபிறவி பற்றிப் பேசுகிறது. இதற்கிடையில் வாதிப் பிரதிவாதத் தர்க்கம். வாழும்போது நன்மைகள் செய்து வாழ்ந்தால் சுவர்க்கம் அல்லது பரிநிர்வாணம் கிட்டும் என்பது பௌத்தத்தின் முடிபு. புத்தகாயாவில் தோன்றிய பௌத்தம் புத்தரது காலத்திலேயே தளர்ந்து விட்டது. அதன் ஒருசிறு வேர் மட்டும் பாரதபூமியில் வெளியில் தெரிகிறது. அதன் கிளைகள் பாரதத்துக்கு வெளியே தழைத்து பெருவிருச்சமாக நிற்கிறது. பௌத்த தர்மத்தைத் தந்த கௌதமர் வந்த கடமையை நிறைவேற்றி விட்டு மறைந்து விட்டார். ஆனால் அந்தத் தர்மத்தைப் பின் பற்றும் மக்கள் கௌதமரின் உடலெச்சங்களை வைத்துக் கோயில் கட்டி அடிதடியில் இறங்கி ஆரவாரிக்கின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌதமபுத்தரின் கொள்கைகள் பரவிக் கொண்டிருக்கின்றன. அந்திம காலத்தின் விளிம்பில் புத்தர் இருந்தார். அவரது கொள்கைகளைப் பின்பற்றுபவர்கள் எப்படி இருப்பார்கள் என்பதையிட்டுச் சிந்தித்தார். பௌத்தத்தின் எதிர்காலம் எப்படியிருக்கும் என ஆழ்ந்தறியும் முயற்சியில் இறங்கினார். அவருக்கு வேதனையைத் தரும் செயல்கள் எதிர்காலத்தில் நடைபெறவிருப்பதைக் கண்டார். அதனை முற்று முழுதாகப் பார்க்கும் முனைப்பில் ஈடுபட்டார்.

கௌதமர் தியானத்தில் இருக்கிறார். கௌதமிரின் தியானம் நிலைத்து நில்லாமல் அடிக்கடி கலைகிறது. அவரது மனதில் சலனம் குடிகொள்கிறது. கௌதமரின் பிரதான சீடரான ஆனந்தரின் கவனத்தை அது ஈர்க்கிறது. அவர் மெதுவாகக் கௌதமரின் பக்கம் செல்கிறார். "குருநாதா, நானும் தங்களைக் கவனிக்கின்றேன். தாங்கள் நிம்மதியற்றுத் தவிப்பதைக் காணுகிறேன். அதன் காரணத்தை அறியலாமா?" ஆனந்தர் மெதுவாகத்தான் தொடங்கினார். கௌதமனின் முகத்தில் சஞ்சலத்தின் அறிகுறிகள். நெற்றியில் கோடுகளாக நெளிகின்றன. "ஆனந்தரே சஞ்சலம் தவத்தைக் குழப்புகிறது. எனது தவமும் அதனால் ஏற்பட்ட தர்மமும் முழுப்பயனையும் விளைவிக்குமா என்ற சந்தேகம் அடிக்கடி எழுகிறது. ஒரே குழப்பமாக இருக்கிறது. கூரிய வாளை வல்லவனிடம் கொடுத்தால் அவன் மக்களுக்குக் காவலைக் கொடுப்பான். ஆனால் அதே வாள் கொலைஞனிடம் கிடைத்தால்? நினைக்க உடல் நடுங்குகிறது. ஆயிரம் வருடங்களின்பின் புத்த தர்மத்தின் பெயரால் எத்தனை அட்டூழியங்கள் நடைபெறும் என்பதனை நானறிவேன். இதற்காகவா இவ்வளவு காலமும் தவமிருந்தேன்?" கௌதமரின் கண்கள் கலங்கியிருக்க வேண்டும். "குருதேவா, இப்போது என்ன நடந்துவிட்டது. நீங்கள் இப்படிக் கலங்கலாமா"? ஆனந்தர் கௌதமரைத் தேற்ற முற்பட்டார்.

"ஆனந்தரே ஒன்றும் நடைபெறவில்லை. ஆனால் புத்ததர்மம் மதம் பிடித்தவர்களது சொத்தாகிவிடும். பல பிரிவுகளாகிப் போய்விடும். சமயவாதங்கள் நடைபெறும். ஆளையாள் அழித்துக் கொள்ளும் மனிதர்கள் புத்ததர்மத்தைத் தம் கைகளில் எடுத்துக் கொள்வார்கள். இந்தக் கௌதம புத்தரைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொண்டு பாதகச் செயல்களில் ஈடுபடுவார்கள். பஞ்சசீலக் கொள்கைகள் ஏட்டில் உறங்கும்". மனவேதனையோடு கௌதமர் கூறினார். ஆனந்தர் பிரமித்துப் போனார். அதனைப் போதிமாதவன் அறிந்து கொண்டான். "ஆனந்தரே இப்படி வந்து அமருங்கள்." கௌதமர் அன்புக் கட்டளை இட்டார்.

கௌதமர் கல்லிருக்கையில் அமர்ந்திருந்தார். ஆனந்தரும் கௌதமர் கூறியவாறே அவர் முன்னே இருந்த கல்லிருக்கையில் அமர்ந்து கொண்டார். அரைவிழி மூடியவாறு ஆனந்தரின் நெற்றிப் பொட்டில் தன் பார்வையைச் செலுத்தினார். ஆனந்தரின் நெற்றிப் பொட்டுத் திரையாக விரிந்தது. ஆனந்தர் உடல் நடுங்கியது. அவர் உணரத் தொடங்கினார். தமக்கேற்றவாறு புத்ததர்மம் மாற்றப் படுவதைக் கண்டார். தேரர்களிடையே கருத்து முரண்பாடுகள் தோன்றி பிளவு படுவதைக் கண்டார். அரசர்களைத் தம்வயப்படுத்தி ஆட்சியில் பங்கு கொள்வதைக் கண்டார். பிறசமயங்களைப் புறந்தள்ளிவைப்பதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானித்தார். 'குருதேவா..' ஆனந்தரின் வாயிலிருந்து சொற்கள் பறந்தன. "பதறாதீர்கள். பொறுத்திருந்து பாருங்கள்." கௌதமரின் ஆணை அவரைக் கட்டுப்படுத்தியது. ஆனந்தர் அமைதியானார். ஆனால் அவரது சிந்தனையில் அது தெளிவாகத் தெரிந்தது.

இரவு நேரமது. வானம் நட்சத்திரங்களால் தன்னை அலங்கரித்துப் பார்க்கிறது. கல்லும், சிமெந்தும் மணலும், சிறு இரும்புக் கம்பிகளும், வண்ணங்களும் குவிந்து கிடக்கின்றன. பலமனிதர்கள் கூட்டமாகச் சேர்ந்து வேலை செய்கிறார்கள். இடையிடையே சில தலைவர்கள் கார்களில் வந்து போகிறார்கள். அழகான பல சிலைகள் உருவாகின்றன. அவ்வளவும் கௌதமரின் உருவங்கள். இவ்வளவு சிலைகளும் எதற்காக? என்ன செய்யப் போகிறார்கள்? ஆனந்தரின் மனதினிலே ஆச்சரியக் கேள்விக் குறிகள். இரவிரவாக சிலைகளை வாகனங்களில் ஏற்றிப் பல இடங்களில் இறக்கி அங்கு நிலைநிறுத்துகிறார்கள்.

சூரியக் கதிர்கள் மேகங்களைத் தூசிதட்டிச் சோடிக்கின்றன. இரவுமுழுவதும் ஒளியூட்டிக் களைத்த நட்சத்திரக் கூட்டம் ஓய்வெடுக்கச் சென்றுவிட்டன. காலையாகிறது மக்கள் கூட்டம் நிறைகிறது. புத்தம் புதிய புத்தரின் சிலைகள் அமைதியைக் கலைக்கின்றன. ஆரவாரம் தொடங்குகிறது. எப்படி இந்த இடத்தில் புத்தரது சிலை வரலாம்.? "அழுக்கும் துர்நாற்றமும் வீசும் இடத்தில் புத்தபகவானின் சிலை இருப்பதா"? மக்களில் சிலர் கேள்விகளைக் கேட்கிறார்கள். "நாங்கள் பெரும்பான்மையினர். இது பௌத்த நாடு. நாங்கள் புத்தரின் சிலைகளை எங்கும் வைப்போம்". பதில்கள் ஓங்கி ஒலிக்கின்றன. பிரச்சினை தீப்பற்றிக் கொண்டு தொடர்கிறது. அந்தப் பிரச்சினை மத்தியிலும் இளம்வட்டங்கள் உலா வருகின்றார்கள். அவர்களது உலகம் தனிஉலகம். அற்புதமான கனவுகளைக் காணும் பருவம்.

பகல்கனவில் மூழ்கி எதிர்காலத்திற்கான அத்திவாரங்களை நிறுவித் திரியும் வாலிபப் பருவம். பல்கலைக்கழகத்தின் பட்டாம்பூச்சிகள். மாலையில் கூட்டமாய் இயற்கையை ரசித்து இளமைத்துடிப்புக்களை அள்ளி வீசியபடி சைக்கிள்களில் ஒரு கூட்டம் வருகிறது. கடற்கரையில் கூடி கதையளந்து மகிழ்வது அவர்களது பொழுதுபோக்கு. அவர்களை அந்நாட்டுக் காவல்படையினர் சுற்றி வளைக்கிறனர். அந்த இளம்வட்டங்களின்மேல் பொறாமையா? இனக்குரோதமா? அடித்து வதைத்துப் பந்தாடுகிறனர். படையினருக்கு மதுவின் மயக்கம். சித்த சுவாதினமற்றவர்களாகப் பயங்கரமாகச் செயற்படுகின்றார்கள். அவர்களின் கைகளில் துப்பாக்கிகள். துப்பாக்கிகள் தீப்பிளம்போடு சீறுகின்றன.

அந்த இளசுகளின் கனவுகள் காற்றில் பறக்கின்றன. இளசுகளின் உடல்களில் இருந்து இரத்தம் நிலத்தில் பரவுகிறது. உடல் சின்னாபின்னமாகிச் சிதறிக்கிடக்கின்றன. "பயங்கரவாதிகள் வெடிகுண்டுகளை வீசும்போது படையினர் திருப்பித் தாக்கியதில் ஐந்து பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்." அரச வானொலி செய்தி ஒலிபரப்புகிறது. மக்கள் கூட்டம் கண்ணீர் வடித்துக் கதறுகின்றனர். ஆனந்தரின் உடலில் அசைவு தெரிகிறது. அவரின் நெற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருங்கி விரிகிறது. கௌதமரின் கட்டளையை அவரால் மீறமுடியவில்லை. மீண்டும் அப்படியே இருக்கிறார். காட்சி தொடர்கிறது.

சித்திரைப் புத்தாண்டு இனங்களை இணைக்கும் நன்நாள். சித்திரைப்புத்தாண்டைக் கொண்டாடும் ஆர்வம் மக்களுக்கு. தேவயான பொருட்களோடு புத்தாடைகளை வாங்கவும் கடைத்தெருக்களில் நுழைகிறார்கள். குண்டு வெடிப்புக்கள் அமைதியைக் குலைக்கிறது. எங்கும் புகைமண்டலம். இதற்காகவே காத்திருந்தவர்களைப் போல் காடையர் கும்பல் திபுதிபு என்று புறப்படுகிறது. வாள்வெட்டுக்கள் விழுகின்றன. அவல ஒலி ஆக்கிரமிக்கிறது. கற்பழிப்புக்கள், ஒரு இனத்தின் அழிவில் இன்னுமோர் இனம் சந்தோசிக்கிறது. மிலேச்சத்தனங்கள் தாண்டவமாடுகின்றன. அடிதடியில் தொடங்கி துப்பாக்கிக் குண்டுகள் மனித இரத்தத்தை ருசிக்கின்றன. உயிர்கள் பறிபோகின்றன. உடலங்கள் உருளுகின்றன. ஊரடங்குச் சட்டம் அமுலாகிறது. தளர்கிறது. இக்காட்சிளை அவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. ஆனந்தரினால் பொறுக்க முடியவில்லை. "குருதேவா போதும். என்னால் தாங்க இயலாது." அவர் தளர்ந்து நடுங்கினார். கௌதமரின் விழிகள் அப்படியே இருந்தன. கவலைகளைப் போக்கி அமைதியைச் சாதித்த போதிமாதவனின் விழிகளிலும் கண்ணீர்த் திவலைகள் எட்டிப் பார்த்தன.

"ஆனந்தரே, சங்கம யுகத்தில் இவையெல்லாம் நடக்கத்தான் செய்யும். யுகம் அழியும். மாற்றம் வரும். மாற்றம் தவிர்க்க முடியாததொன்று. புதுயுகம் பிறக்கும். மாற்றத்தை யாரும் தடுக்க முடியாது. தவிர்க்கவும் முடியாது. புதியது வரும். பழையதாகப் போகும். மீண்டும் புதியது வரும். ஒன்றன்பின் ஒன்றாக யாவும் நிகழும். இங்கு எது சரி? எது தவறு என்று தீர்மானிக்க முடியாது. எது நடக்கவேண்டும் என்று நியதி இருக்கின்றதோ அது நடந்தே தீரும். இது தவிர்க்க முடியாத நியதி. சற்று அமைதியாக இருந்து பாருங்கள். இன்னும் அதிசயத்தைக் காண்பீர்கள்". ஆனந்தரினால் போதிமாதவனின் அன்புக்கட்டளையை மீறமுடியவில்லை. அப்படியே அமைதியானார். அவரது நெற்றிப் பொட்டில் புத்தரின் அரைவிழிப் பார்வை தொடுகிறது. பார்வை பட்டதும் காட்சி விரிகிறது. கற்பனையா இது? ஆனந்தர் அதிசயித்துப் பிரமிக்கிறார். யாவும் தத்ரூபமாகத் தெரிகிறது.

பாராளுமன்றத் தேர்தல் திருவிழாக்கள் நடக்கின்றன. பல தேர்தல் மேடைகளில் அரசியல் பிரச்சாரங்கள் நடக்கின்றன. கனவுகாண்பது போல் காட்சிகள் மாறிமாறித் தோன்றுகின்றன. மேடைகளில் அரசியல்வாதிகளும்,தேரர்களும் பிரச்சாரம் செய்கிறார்கள். தங்களது நிலையை மறந்து, துறவறத்தை மறந்து ஏதேதோ பேசுகிறார்கள். ஆனந்தரின் கைகள் அவரை அறியாமலேயே காதுகளை இறுக்கி பொத்துகின்றன. அவர்களது ஆவேசமான பேச்சுக்கள் அசிங்கமானவை. இங்கே செவிப்பொறிக்கு வேலையில்லை. செவிப்புலனுக்கே வேலை. புலனூடாகத் தேரர்களது வாதப்பிரதிவாதங்கள் புகுந்து ஆனந்தரை ஆட்டிப்படைக்கின்றன. மன்னர் ஆட்சி ஏகபோகமானது. தனியொருவரது விருப்பு வெறுப்பு நிறைவேற்றப் படுகிறது. அது ஒரு வகையில் நன்மை தரக்கூடியது. அது வேண்டாம். மக்கள் ஆட்சிவேண்டும். மக்களுக்காக, மக்களே மக்களால் ஆளுகின்ற முறைதான் மக்களாட்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவகையில் மக்களாட்சி முறையும் மறைமுகமான மன்னர் ஆட்சிமுறைதான். வெற்றி பெற்றதும் அவர் ஒருதொகுதியின் வெற்றி பெற்ற மன்னர்தானே. அவரது ஆட்சி நடக்கும். ஏகபோகமானதாக இருக்கும். அதனால் கட்சிகளை அமைத்து வேட்பாளர்களாக பௌத்த துறவிகள் நிற்கிறார்கள். பிரசாரத்தில் இறங்குகிறார்கள். வெற்றியும் பெற்றுவிடுகிறார்கள். நாடாள்வதற்காகப் புறப்பட்டிருந்தார்கள். வத்திக்கான் தேர்தல் முறையும் புலனாகிறது. உலகப் பற்றைத் துறந்து திருவோடு ஏந்தி இரந்துண்டு பிறவிப் பெருங்கடலை நீக்க அறிவுரைகூறப் புறப்பட்ட துறவிகள் மஞ்சள் காவியுடையில் பாராளுமன்றத்தில் இருக்கிறார்கள்.

பாராளுமன்ற விதிகளின்படி சபாநாயகர் சபையினுள் வருகிறார். பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுந்து மரியாதை செலுத்த வேண்டும். இது வழமை. துறவிகள் எல்லாம் துறந்தவர்கள். மரியாதையையும், சம்பிரதாயங்களையும் துறந்தவர்கள். இருக்கையில் அப்படியே இருக்கிறார்கள். வாக்கு வாதங்கள். தொடர்கின்றன. மசோதாக்கள் வாசிக்கப் படுகின்றன. செங்கோலை அகற்றச் சிலர் முனைகிறார்கள். சிலர் அதனைத் தடுக்கிறார்கள். தேரர்களின் காவியுடை இழுபடுகிறது. இழுபறியில் ஆளையாள் தள்ளி விழுத்துகின்றனர். அடியுதை பரிமாறப் படுகின்றன. பாராளுமன்றம் மக்களின் ஆள்பதியுரிமையைக் காக்கும் புனிதமான இடம். அங்கு அடாவடித்தனம் தாண்டவமாடுகிறது. ஆனந்தரின் மனம் இறுக்கமடைகிறது. அவரால் தொடர்ந்து அமைதிகாக்க முடியவில்லை. கண்களை மெதுவாகத் திறக்கிறார்.

என்ன அதிசயம். அங்கே புத்தபகவானைக் காணவில்லை. அவரது திருவுடலைக் காணவில்லை. ஆனந்தரின் செவிகளில் கணீரென ஒலி பாய்கிறது. "இன்னுமொருமுறை மனிதப் பிறவி வேண்டாம். மனிதர்களைத் திருத்தவே முடியாது." ஆனந்தரது உடல் சிலையாக மாறுகிறது. அவரது சிலைதான் காட்சியாகிறது. சிலையின் கண்களில் இருந்து கண்ணீர் பெருக்கெடுத்துப் பாய்கிறது. அந்தச் சிலை தாறுமாறாக வெடித்து விரிவடைகிறது. வெடிப்புக்கள் ஊடாக இரத்தவெள்ளம் வடிகிறது. கல்லும், மணலும், சிமெந்தும் கரைந்து இரும்புக்கம்பிகள் தலைகாட்டுகின்றன. ஆனந்தரின் சிலை வெடித்துச் சிதறித் துகளாகிப் போகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சௌந்தரம்மா

அந்தப் பத்திரிகையினைக் கையில் எடுத்துக் கொண்டு மூக்குக் கண்ணாடிக் கூட்டைத் தேடினேன். வயது போனால் நினைவுகளும் மறந்து போகுது. வைத்த இடம் நினைவில் இல்லை. "சுலக்சி" பேரக்குழந்தைக்குக் குரல் கொடுத்தேன். முதுமை பொல்லாத கொடுமையை அனுபவிக்கச் செய்கிறது. மிகவும் அவதானமாகச் செயற்பட்டால் தப்பித்துக் கொள்ளலாம். அல்லது சங்கடத்தில் சிக்கிக் கட்டிலில் சாய்த்து விடும். எப்படித்தான் உடல் முதுமையடைந்தாலும் இந்த உள்ளம் மட்டும் என்றும் இளமையாகவே இருக்கிறது. இருந்து துள்ளுகிறது. அதன் வேகத்துக்கு உடலால் ஈடுகொடுக்க முடியவில்லை. என்றும் பசுமையையே விரும்புகிறது. எனது பேரக்குழந்தை சிரிப்போடு கண்ணாடியைத் தந்தாள்.

கண்ணாடியை முகத்தில் பொருத்திக் கொண்டு பத்திரிகையை விரித்துப் படிக்கிறேன். பக்கங்கள் புரண்டன. ஒரு இடத்தில் என் கண்கள் நிலைக்குத்தி நின்றன. நன்றாக விழிகளைத் திறந்து கண்ணாடியை மேலும் கீழும் அசைத்துப் பார்க்கிறேன். அந்தப் படம் என்னை ஆட்டியசைத்து விட்டது. அது சௌந்தரம்மாவின் படம். படத்தின் கீழ் "அம்மம்மா உங்கள் நினைவு எங்கள் மனதில் நிறைந்திருக்கும்." பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் நினைவுகூர்ந்திருந்தார்கள். உள்ளம் உளைந்து பழைய நினவுகளில் மூழ்கி மூச்சிரைத்து நிமிர்கிறது. சுமார் அறுபத்தைந்து வருடங்களுக்கு முன் நிகழ்ந்த நினைவுகள் ஒளிந்து ஓடிப்பிடித்து எட்டிப்பாரத்து அலைமோத வைக்கிறது. அந்த நினைவுகளின் ஆதர்ஷண சக்தியால் உந்தப் பட்டு நாடி நரம்புகள் விறுவிறுத்து பெருமூச்சாகி நெஞ்சாங்கூட்டை அமுக்கி உயர்த்தி எம்பிப் பறந்தது.

ஒரு பொருள் நமது பக்கத்தில் இருக்குமட்டும் அதன் அருமை பெருமைகளைப் பற்றிச் சிந்தித்துப் பார்ப்பதில்லை. இல்லாதபோது அதன் அருமை புரிகிறது. நிலையில்லாத மனிதவாழ்வில் எத்தனை தளம்பல்கள். கடலில் காற்று வீசி அலைகளை எழுப்பி கரையை உடைப்பது போல் வாழ்கையிலும் துன்பங்களும். துயரங்களும். இழப்புக்களும் வீசி சந்தித்துக் காலத்தோடு கரைந்து போகின்றன. பலரோடு சேர்ந்திருந்து பழகி பிரிந்தபின்தான் அவர்களது அருமை பெருமைகள் மனதில் குந்தியிருந்து விளையாட்டுகளைக் காட்டும். அவர்களோடு கழித்த நாட்கள் நினைவுச் சுழியில் சிக்கிச் சுழலும்.

சௌந்தரம்மாவின் நினைவலைகள் மனக்கடலை துளாவி எண்ணக்குமிழிகளை ஊதி எனக்குப் பூச்சாண்டி காட்டியது. சௌந்தரம்மாவின் படத்தைச் சற்றுநேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவவின் இளமைக்கால உருவம் உருண்டு திரண்டு மனக் கண்முன் நின்றது. எத்தனை அழகு. சின்னவயதிலேயே"அம்மம்மா நீங்க நல்ல வடிவு. சௌந்தரம் என்றால் அழகு என்று வகுப்பில சொல்லித்தந்தவங்க" என்று சொன்னேன். அவவின் அந்தச்சிரிப்பு அற்புதமானது. இரு கன்னங்களிலும் குழிகள் விழ ஒரு புன்னகை எறிந்த காட்சி இன்னும் நினைவில் இருக்கிறது. அந்த உருவத்தையும் பத்திரிகையில் உள்ள படத்தையும் உற்று நோக்கினேன். அன்றைய அழகிய உருவம் படத்தில் இல்லை. மாற்றம் என்பது இதுதானா? கட்டுடல் தளர்ந்து தோல்சுருங்கி கண்கள் குழிவிழுந்து புலனைந்தும் பொறிகலங்கி, நிலைதடுமாறி 'சே' என்ன பிறவியிது? இன்றிருக்கும் உடல் நாளைக்கு மாறியிருக்கும். அதுதானே நம்மவர்கள் உருமாறிக்கொண்டு செல்லும் உடலுக்கு மெய்யென்று சொன்னார்கள். எனது கண்களில் கண்ணீர் குளங்கட்டி உடைந்து நெஞ்சுச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டையை ஈரமாக்கியது.

எனக்குப் பசுமையான நினைவாக அது பதிந்து விட்டிருந்தது. அப்போது எனக்கு ஏழு அல்லது எட்டு வயதிருக்கும். ஒருநாள் எங்கள் வீடு அதிர்ந்து கொண்டிருந்தது. "எனக்கு மரியாதை இல்லாத இடத்தில் ஒரு நிமிசம் இருக்கக்கூடாது. வெளிக்கிடுங்க" அப்பாவின் குரல் ஆவேசமாகப் பறந்தது. வீட்டில் இருந்த சாமான்கள் வெளியில் வீசப்படுவதை அவதானித்தேன். இவர்களுக்கு என்ன நடந்து விட்டது? நானும் தம்பியும் சுண்டெலிகளாக நடுங்கிக் கொண்டிருந்தோம். அப்பா திடீரென வெளியில் போனார். போனது போல் வீச்சாக வந்தார். மூட்டை முடிச்சுக்கள் தயாராகின. இரண்டு மூன்று சாக்குகள் நிரம்பின. எங்கள் உடமைகள் அதனுள் தஞ்சமாகின. அவற்றை அப்பாவின் தலை சுமந்தன. இரண்டு மூன்று முறை அப்பாவின் தலையில் அவை ஏறின. வெளியில் போய்வந்தார். "சரி வாங்க" என்றார். புறப்பட்டோம். இப்போது அப்பா முன்னே விறுவிறு என்று நடந்தார். அம்மா அழுது கொண்டு பின் தொடர்ந்தார். சின்னஞ்சிறிசுகள் நாங்கள். சின்னச் சின்னச் சாமான்களைக் கைகளில் எடுத்து அவர்களின் பின் நடந்தோம். எங்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை. என்ன நடந்தது? ஏன் போகிறோம்.? ஒன்றும் புரியவில்லை. "அவர்ர அட்டகாசம் அவருக்குத்தான் பெரிசு. என்னட்டையும் காட்ட வந்திட்டார். நான் பொறுக்க மாட்டன்" அப்பா கோபாவேசமாக இருப்பது புரிந்தது. "அவன் தெரிஞ்சா செய்தவன். இதற்கெல்லாம் போய்" அம்மா முடிக்கல்ல. "வாயப் பொத்திற்று வா" அப்பா கொதித்தார். அம்மா ஒன்றும் பேசவில்லை. மாமாவைத்தான் குறிப்பிடுகிறார் என்பது மட்டும் புரிந்தது.

எங்கள் மாமா மயில்வாகனம். மிகவும் பொறுமைசாலி. எங்கள் மேல் அளவு கடந்த பாசம் கொண்டவர். ஆனால் அநீதியென்றால் இராமனின் கோதண்டமாக மாறிவிடுவார். அனியாயத்தைத் தட்டிக் கேட்டாராம். அதனை அப்பா "உனக்கேன் இந்த வீண்வம்பு" என்று கேட்கப் போய் வில்லங்கமாகி இந்த நிலை வந்ததாக உணர்ந்து கொண்டோம்.. "என்னண்டாலும் நீங்க பொறுமையாக இருந்திருக்கலாம்." அம்மாவின் குரல் தளதளத்தது. "நீ வாயை மூடிக்கொண்டு வா. எனக்கு மானம்தான் முக்கியம்." அப்பா கடுகடுத்தது நினைவிருக்கிறது. "அப்பா நாங்க எங்க போறம்." தம்பி இடையில் குறுக்கிட்டான். "டேய்.. சின்னவன் நம்மட சௌந்தரம்மா வீட்டுக்குப் போறம்.". அப்பாவின் குரல் அந்தக் கும்மிருட்டில் ஒலித்தது. "டேய் அண்ணா நம்மட சௌந்தரம்மா வீட்டுக்குத்தான் போறம்.. எனக்குச் சந்தோசமாக இருக்குது." தம்பி குதுகலத்துடன் கூறினான். என் ஆச்சி, அப்புவை விட்டுவர எனக்கு மனமில்லை. மனம் இடம் கொடுக்கவில்லை. எனக்கு அழுகை வந்தது. அவர்கள் பின்னால் நடந்தேன். அன்று பகல் தொடக்கம் சாப்பாடு ஒன்றுமில்லை. அதோ குப்பி விளக்கொளி தெரிகிறது. சௌந்தரம்மா வாசலில் குப்பி விளக்கோடு காத்திருந்தார். பக்கத்தில் முத்துக்குமார் ஐயா நின்றிருந்தார். எங்களைக் கண்டதும் "போய் கைகால் கழுவி வாங்க சாப்பிடுவம்." அன்பும் ஆதரவும் கலந்து கட்டளையிட்டார்கள். சௌந்தரம்மாவின் பார்வை என்னை வசீகரித்து விட்டது. நெத்தலி மீன் தீயலுடன் அவர் தந்த சாப்பாடு இன்னும் ருசிக்கிறது.

எங்கள் குடும்பம் சௌந்தரம்மா வீட்டில் குடிவந்து பல நாட்களாகி விட்டன. மிகவும் அந்நியோன்யமாகி விட்டோம். அந்த வீடு ஆலங்கேணியில் விநாயகர் ஆலயத்துக்கு முன்வாசல் பக்கமாக மேற்குத் திசையில் செல்லும் தெருவில் இருந்தது. தெரு உப்புநீர் சிற்றாறு ஊர்ந்து வரும் பக்கமாக ஓடி ஒட்டி உறவாடும். உப்புநீர் பரவி சிற்றாற்றில் ஓடும். சின்னச்சின்ன மீன்களும் சேர்ந்து ஓடும். அந்த ஓட்டத்தில் மெல்லிய நுரை தோன்றி கரையில் உடையும். கண்ணா மரங்களில் பறவைகளும், சிள்வண்டும் இசையெழுப்பிப் பாடும். கரையை ஒட்டினாற்போல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னைகள் தலையவிழ்ந்து ஆடும். கூடவே பனைகள் ஒலியெழுப்பிக் கலகலக்கும். அவற்றின் ஊடாகப் பார்த்தால் சமாவைத்ததீவு தெரியும். அப்பால் வைரமுத்தப்பாவின் சல்லிக்களப்புத் தோட்டம் தெரியும். பூவரசந்தீவில் நல்லையரின் தோட்டம், அப்பால் வண்ணான்வயல் விரிந்து கிடக்கும். அங்கு செல்லனின் துணிகாயவைக்கும் கொடிகள் அசையும். ஒரு அற்புதமான காட்சி பரந்து இருந்தது.

சௌந்தரம்மாவின் வீடு ஒரு பழங்காலத்து பெரிய வீடு. வீட்டை ஒட்டினாற்போல் முன்புறமாக ஒரு பெரிய மண்டபம். அந்த மண்டபம் இரண்டாகப் பிரிக்கப் பட்டிருந்தது. முன் அறை யார் வந்தாலும் அமர்ந்திருந்து பேசுவதற்காகப் பயன் படுத்தப்பட்டது. அதுதான் கூத்துப் பழகும் களரியாக விளங்கியது. அங்கு ஒரு சாய்மனைக் கதிரை, ஒரு பலகை பரப்பிய கட்டில், இரண்டு நீண்ட வாங்குகள், சில பாய்கள் இருந்தன. மாலையானதும் அந்த மண்டபம் களை கட்டும். சமாவைத்ததீவில் இருந்து வடிவேலர், பொன்னையர், குமாரசாமி என்று ஒரு பட்டாளமே வரும். நடுச்சாமம் வரை ஆட்டம் பாட்டம் நடக்கும். அண்ணாவி தாமோதரத்தாரும், பத்தினியரும் சேர்ந்து கூத்துப் பழக்குவார்கள். ஊரிளைஞர்கள் கூடியிருந்து கூத்தாடுவார்கள். சார்மனைக் கதிரையில் முத்துக்குமார் கால்மேல் கால்போட்டிருந்து ரசிப்பார். சௌந்தரம்மா பக்கத்தில் இருந்து மெய்மறந்து ரசிப்பார். நாங்கள் தூங்கி விழுந்து ரசிப்போம். சிலவேளை அழுதுமிருக்கிறோம்.

இரண்டாவது அறை களஞ்சிய அறையாகப் பயன்படுத்தப்பட்டது. அந்த இரண்டாம் அறை அற்புதமானது. அறையினுள் நெற்பட்டறை இருக்கும். நெல்லைப் பதப்படுத்திப் பாதுகாக்கும் முறை அது. வைக்கோலை இதமாக வைத்து, வைக்கோல் புரியை வளையமாகச் சுற்றி அதனுள் நெல்லினைச் சொரிந்து பட்டறை காட்சிதரும். பட்டறை அந்த அறையின் மூலைகளை மட்டும் விட்டு வைத்திருக்கும். அவ்வளவு அகலமானது. பட்டறையின் உயரம் அந்த அறையின் முகட்டைத் தொட்டு நிற்கும். பட்டறை நிறைந்து நெல் குவிந்திருக்கும். பட்டறைமேல் ஏறிப்பார்க்க ஆசைதான். சௌந்தரம்மா ஏசுவார் என்ற பயம் இருந்தது. "ஒருநாளைக்கு ஏறிப்பார்க்க வேணும்". மனதில் அந்த எண்ணம் குடிகொண்டு விட்டது. மண்டபத்தை ஒட்டினாற்போல் அடுக்களை இருந்தது. அடுக்களை எப்பொழுதும் தூய்மையாக இருக்கும். சாணமும், களிமண்ணும் சேர்ந்த கலவையால் மெழுகிச் சில்லுக்காயினால் அழுத்தித் தேய்த்துப் பளபளவென்று இருக்கும். வைத்த பொருள் வைத்த இடத்தில் இருக்கும். பானை சட்டி சரிந்து விழாதிருக்க களிமண்ணினாலான மேடையில் திருகணிகள் செய்யப்பட்டிருக்கும்.

அத்திருகணிகளில் சமையற்பாத்திரங்கள் அழகாக அடுக்கி இருக்கும். சமையல் முடிந்ததும் வரிசையில் வைக்கப்படும். சோறு சமைத்து முடிந்ததும் சோற்றுப்பானையை இறக்கி பானையின் வெளிப்புறத்தைக் கழுவி தனது மூன்று விரல்களால் திருநீற்றை அள்ளி பானையின் மூன்று பக்கம் சாத்துவார். "அம்மம்மா சோற்றுப் பானையைக் கழுவி ஏன் திருநீறு போட்டனீங்கள்." கேட்டுவிட்டுப் பதிலுக்காகக் காத்திருந்தேன். "ஓ..அதுவா"? "அது சோற்றுப் பானைக்குக் கொடுக்கும் மரியாதை. அருவமும் உருவமும் இல்லாத சிவனின் திருவுருவமாகக் காட்சி தருவது சோற்றுப்பானை. இறைவன் நமக்குப் படி அளக்கிறான். அவன் அளந்து தந்த அமுதம் பானையில் இருக்கு. அதற்கு மரியாதை செய்யவேணும். அதனால் அவனை நினைவில் கொள்ளவேண்டும். அதற்காகத்தான் இதெல்லாம்" என்பார். அப்போதெல்லாம் எனக்கு அதன் பொருள் தெரியாது. பெரியவனாக முதிர்ச்சியடைந்த பின்னர்தான் அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளும் நமது பண்பாடும் புரிந்தது.

அந்தப் பண்பாடும் வழக்கமும். இன்று நமது பெண்களிடம் இல்லாது போய்விட்டது. அதனையிட்டு எண்ணும்போது கவலைதான். உணவு உண்டபின் அனைத்தையும் கழுவி சுத்தம் செய்து அடுக்கி வைத்துவிட்டு உணவு உண்ட இடத்தினைப் பெருக்கி அடுக்களையினை மூடியபின்தான் செளந்தரம்மா ஓய்வாக இருப்பார். மூன்று வேளையும் இப்படியேதான் செய்வார். "உண்டபின் சுத்தம் செய்யாது விட்டால், திண்ட இடம் நம்மைத் திட்டும்" என்பார். இரவில் இரண்டு பேர் உண்ணக்கூடிய உணவு பானையில் இருக்கும். யாராவது வீட்டுக்கு வந்து விட்டால் "பசி தீர்க்க" உணவளிக்கும் இல்லத்தரசி அவர். தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் யாராவது வீடு தேடி வருபவர்களைச் சாப்பிடுங்கள் என்று கொடுத்து மகிழும் பண்பை அவர் கொண்டிருந்தார்.

ஒருநாள் பள்ளிவிட்டு வருகிறேன். கோழி கொக்கொக் எனக் கொக்கரித்துக் கொண்டிருந்தது. செளந்தரம்மா எனக்காகக் காத்திருந்ததை உணர்ந்தேன். "டேய் அருள் நம்மட கோழி பட்டறையில் முட்டை விட்டிருக்கு. முதலில் சாப்பிடு. பிறகு பட்டறையில் ஏறி முட்டையை எடுத்துவா." செளந்தரம்மா கட்டளையிட்டார். பட்டறையில் ஏறக் காத்திருந்த எனக்குச் சந்தோசம் வீட்டின் முகட்டில் குடிகொண்டு இருந்தது. விண்வெளியில் விண்கலத்தில் தாவி ஏறுவது போன்ற பிரமை. புத்தகங்கள் எங்கு வீசப்பட்டதென்று தெரியாது. பட்டறைப் புரிகளில் காலை வைத்துப் பற்றிப்பிடித்துத் தாவியேறிவிட்டேன். "டேய் கவனம்.. சாப்பிட்டுவிட்டு ஏறிப்பார் என்றுதானே சொன்னனான். அதற்குள் ஏன் ஏறினநீ.? விழுந்திருவாய். கவனம்." சத்தமிட்டவாறு நான் ஏறுவதை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார். நான் பட்டறையில் உலாவந்தேன். எனக்குச் சந்திரனில் நடக்கிற அனுபவம் தட்டியது. வீட்டின் முகட்டில் பட்டறை முட்டியிருந்தது. பட்டறை நிறைந்து நெல் சிரித்தது. என்னைக் கண்டதும் சேவலொன்று அங்கிருந்து சத்தமிட்டுப் பறந்தோடியது.

"அம்மம்மா இங்கயிருந்து சாவல்தான் பறந்தோடுது. முட்டையக் காணல்ல" "நல்லாப் பார்" அவவிடமிருந்து சத்தம் வந்தது. வைக்கோலை நீவிப் பார்க்கிறேன். முட்டைகள் என்னை முழுசிப் பார்த்தன. தங்கச் சுரங்கத்தில் வெண்கற்களாக முட்டைகள். ஒன்று இரண்டு "எத்தனை.. ஒரு பத்து இருக்குமா?" சந்தோசத்தால் "அம்மம்மா ஒரு பெட்டி தாங்க" முட்டை கனக்கக் கிடக்கு." சத்தமிட்டேன். "இந்தக் கோழிக்கு இடமில்லையென்டா அங்க போய் முட்டை விடுது."? கோழிக்கு ஒருபாட்டம் ஏச்சு விழுந்தது. செளந்தரம்மாவுக்குக் கோபம் வருவதில்லை. வந்தால் ஒரே புறுபுறுப்புத்தான். முட்டைகளைப் பத்திரமாக் கொடுத்தேன். எனது தலையைத் தொட்டுத் தடவி "கெட்டிக்காரன்" என்றார். என் உச்சி குளிர்ந்தது.

வளவின் மூலையில் பெரியதொரு புளியமரம். அந்த மரம் நிறைந்து பறவைகள் கூச்சலிடும். என் கையில் சுண்டுவில் இருக்கும். சட்டைப்பை நிறைய களிமண்ணைக் குழைத்து உருண்டையாகச் செய்து வெயிலில் காயவைத்த உருண்டைக் களிக்கற்கள் இருக்கும். நானும் ஒருகுருவியையாவது அடிக்கலாம் என்று முயன்றுதான் பார்த்தேன். அது முடியாது போயிற்று. "டேய் பாவம்டா குருவி நமக்கு என்ன தீங்கு செய்யுது.? அதுகளுக்கு அடிக்காத" அடிக்கடி புத்திமதி செளந்தரம்மா சொல்லுவா. புளியங்கிளையில் தாவியேறித் தொங்குவது சுகமாயிருக்கும். கிளை முறியாது வளைந்து கொடுக்கும். "மரத்தில ஏறி விழுந்து கையக்கால முறிச்சுப் போடாத" புறுபுறுப்புத் தொடங்கும். காலையில் புளியம்பூ முற்றமெல்லாம் சொரிந்து கிடக்கும். இலையும், பூவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிஞ்சும் மண்ணோடு சேர்ந்து அழகூட்டும். அவற்றைக் கொஞ்சநேரம் பார்த்து ரசிப்பார். பிறகு அவற்றைக் கூட்டிப் பெருக்கி அள்ளிக் குழியில் போடுவார்.

"என்ன அழகான பூக்கள். கொத்துக் கொத்தாய். அங்க பார். பிஞ்சு தொங்குது." அவவுக்கு எல்லாவற்றிலும் ஒரு ரசனை இருந்தது. சௌந்தரம்மா பெயருக்கேற்றவாறு தங்கத்தின் நிறத்தில் யொலிப்பார். எந்த நேரமும் ஒரு புன்னகை அவரது இதழ்களில் நெளிந்து கொண்டே இருக்கும். அதிகாலை தலைக்கோழி கூவுமுன்னே எழுந்து குளித்து வேலைகளை முடித்து, சோற்று முடிச்சையும் கட்டி வைத்திருப்பார். முத்துக்குமார் ஐயா கண்டற்காடு வயல்நோக்கிப் புறப்பட்டு விடுவார். அவர் போவதையே பார்த்திருப்பார். அவரோடு அயல்கிராமத்து வயற்காரர்களும் சேர்ந்து கதையளந்து செல்வார்கள். நடையில் செல்வார்கள். அல்லது மாட்டு வண்டியில் செல்வார்கள்.

கண்டற்காட்டின் நிலப்பரப்பு, பெட்டைக்குளம், வைராவெளி, ஊர்க்குளம் என விரிந்து கிடக்கும். கணவர் வரும்வரை பம்பரமாய்ச் சுழன்று வீட்டு வேலைகளைக் கவனிப்பார். முத்துக்குமாரின் அண்ணன் செல்லையா நல்லாச் சாத்திரம் சொல்வார். "பிள்ள சௌந்தரம்.. நீ இருந்து பார். இவன் அருளன் நல்ல ராச உத்தியோகத்தில இருப்பான்."

"அவன் படிக்கிற படிப்புக்கு எங்கட மாட்டத்தான் மேய்ப்பான்" எனது அம்மா சொல்லுவா. "அதையிப்பவும் செய்யிறான்தானே. நீங்க பாருங்க. இந்தச் செல்லையாச் சாத்திரி சொன்னால் சொன்னபடி நடக்கும்." செல்லையர் சொல்லிப்போட்டு நடையைக் கட்டினார். அவர் பெரிய புள்ளகுட்டிக்காரர். அவரது மனைவி இறந்ததும் தனிக்கட்டையாகி பிள்ளைகளைக் கவனிப்பதில் கரிசனம் காட்டினார். ஆனால் பிள்ளைகள் "குஞ்சியாத்தை" என்று சௌந்தரம்மாவையே சுற்றி வந்தனர். உணவும் உறைவிடமும் கொடுத்து அவர்களை ஆதரித்தார். பற்றாக்குறைக்கு அவரது ஒன்றுவிட்ட தங்கையின் பிள்ளைகளும் வீட்டை நிரப்பியிருந்தனர். அவர்களையெல்லாம் குறைவில்லாது பார்த்துக் கொண்டார்.

சௌந்தரம்மா தனது பிள்ளைகளாகவே எல்லோரையும் நினைத்தார். பகல் உணவு பெரிய அண்டாவில் வேகும். சமையல் முடிந்ததும் தட்டுகளில் பரிமாறுவார். "என்ன வேணும்? இன்னும் கொஞ்சம் போடட்டா? போதுமா?" என்று அன்பாக உணவை கொடுப்பார். பிள்ளைகள் உண்பதைப் பார்த்து சந்தோசிக்க, ரசிக்க சௌந்தரம்மாவுக்கு நிகர் சௌந்தரம்மாதான். ஒருநாள் பாடசாலை விட்டு ஓடி வருகிறேன். அம்மாவின் சமையல் முடியவில்லை. சோற்றைத் தட்டில் போட்டேன். சௌந்தரம்மா செல்லன் கட்டாடியிடம் உடுப்புக்களைக் கணக்கிட்டு அடுக்கிக் கொண்டிருந்தார். "செல்லன், இந்தா.. சாப்பிட்டுப் போ." தட்டை நீட்டினார். செல்லன் பணிவோடு வாங்கிச் சாப்பிடத் தொடங்கினான்."உன்ர மகன் சித்திரன் பள்ளிக்கு ஒழுங்காப் போறானா?. அவன் கெட்டிக்காரன். உன்ர தொழிலச் செய்யவிடாத. நல்லாப் படிப்பி. அவன் படித்தால் சட்டம்பியாய் வரலாம்."

"இந்தச் சாதி சக்கட்டுக்கள் நம்மட தலைமுறையோடு அழியவேணும். தமிழருக்குள்ள ஒற்றுமையிருக்கா?. நாங்க ஒற்றுமையாக இருந்தால்தானே உரிமையோடு வாழலாம்"? அவ அப்போது கதைச்சது எனக்கு விளங்கல்ல. சௌந்தரம்மா எல்லாப் பிள்ளைகளிலும் ஏன் கரிசனை காட்டுறார். சித்திரன் என்ற சித்திரவேல் என்னோடுதான் படிக்கிறான். நாங்க ஒரே வாங்கில பக்கத்தில இருந்துதான் படித்தோம். சொந்தரம்மா சொன்னதுபோல் சித்திரவேல் இப்ப நல்லதொரு ஆசிரியராக இருக்கிறான். அவன் வண்ணார்வயலில் இருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக்கு நடந்து வருவான். நல்ல நடைகாரன். பூவரசன்தீவக்குப் பக்கவாட்டில் வண்ணார்வயல் இருந்தது. அது குளக்கோட்டு மன்னனால் அவர்களுக்கு நிவந்தமாக வழங்கப் பட்டிருந்தது. நான் முட்டைவிடச் சுற்றும் கோழியாக நிற்கிறேன். பசி யாரைத்தான் விட்டது. "டேய் அருள்! இங்கே வா." குரல் கேட்டுத் திரும்பினேன். சௌந்தரம்மா கறியோடு நின்றார். எனது தட்டைப் பறித்து கறியைப் போட்டு தனது கையால் பிசைந்து சாப்பிடு என்று தந்ததை இன்னும் நான் மறக்கவில்லை. "இண்டைக்கு வெள்ளச் சட்டம்பியார் என்ன சொல்லித் தந்தவர்? சொல்லு பார்ப்பம்"சாப்பிடும் போது கேட்டார்.

"பக்கத்து வீட்டுச் சேவல் உங்கட வீட்டில் முட்டையிட்டால் முட்டை ஆருக்குச் சொந்தம்." என்றார். "அதற்கு நீ என்ன பதில் சொன்னாய்?" சௌந்தரம்மா கேட்டார். "அது எங்கட சௌந்தரம்மவுக்குச் சொந்தம்" என்று சாப்பிட்டவாறே பதில் சொன்னேன். அவர் விழுந்து விழுந்து சிரித்தார். செல்லனும் சிரித்தான். அந்தச் சிரிப்பு என்னையும் சிரிக்க வைத்தது. எனக்கு விளங்கவில்லை. "ஏன் சிரிக்கிறீங்க". கேட்டேன். "டேய் .. கிறுக்குப்பயலே .. சேவல் முட்டை விடுமா"? என்றார். எனக்குப் புரியவில்லை. "பட்டறையில் சேவல்தானே இருந்தோடியது. அதுதான் சொன்னேன்." என்றேன்.

சௌந்தரம்மாவின் ஆணம் தனிச்சுவையானது. பாலமீன் ஆணத்தில் தேசிக்காய்ப் புளி விட்டுச் சமைப்பார். அந்த மணமும், ருசியும் இன்றும் சுவைக்கிறது. அவரது நிறத்தைப் போலவே ஆணமும் மஞ்சள் நிறத்தில் ஜொலிக்கும். இப்போது சொதி என்று சொல்கிறோம் அல்லவா? அதனை ஆணம். என்றுதான் சொல்வோம். அந்தச் சொல்லை இப்பொழுது முஸ்லீம் மக்கள்தான் பயன் படுத்துகிறார்கள். திருமணம் செய்து பலவருடங்களின்பின்தான் கணேசன் பிறந்தான். பின் புஸ்பம் பிறந்தார். "சின்ன அம்மம்மா" என்று கூறித்துள்ளினேன். புஸ்பம் பிறந்தபின்னர் சௌந்தரம்மாவின் வாழ்க்கையில் சீரும் சிறப்பும் புகுந்து கொண்டது. வயல் நல்ல விளைச்சலைக் கொடுத்தது.

வீடு புதுப் பொலிவு பெற்றது. முத்துக்குமார் கிண்ணியா கிராமசபைத் தேர்தலில் வென்றதும் "இதெல்லாம் நமக்குத் தேவைதானா?. நமக்கு அரசியல் எதற்கு"? என்றார். ஆனாலும் கணவனின் வெற்றியில் சந்தோசித்தவர் அவர்தான். முத்துக்குமார் நல்ல உயரமுடையவர். நீண்ட தலைமுடியை வாரி வளைத்துக் கொண்டை கட்டுவார். எங்கள் தமிழ் கிராமங்களில் ஆண்கள் தலைமுடி வளர்த்துக் கொண்டைகட்டுவது பெருவழக்காக இருந்தது. முத்துக்குமார் தேர்தலில் வென்றபின் தனது கொண்டையை வெட்டிவிட்டார். பழங்காலத்து ராஜாக்கள்போல் தியாகராஜபாகவதரின் சாயலில் காட்சி தந்தார். அழகாகத்தான் இருந்தார். அன்று சௌந்தரம்மா விழுந்து விழுந்து சிரித்தார். அவர் தனது கணவரில் ஒரு தனி ஆளுமையை கண்டுகொண்டார்போலும். அவருக்கு ஆலங்கேணி பிள்ளையாரிடம் பக்தி அதிகம். நாள்தவறாமல் கோயில் வலம் வருவார். வெள்ளிதோறும் பத்தினிஅம்மன் கோயிலை வலம் வருவார். நேர்த்திக்கடன் செலுத்துவார். அந்தப்பத்தினி அம்மன் கோயில் மிகப்பழமை வாய்ந்தது. அதன் பெருமைகளை சௌந்தரம்மா அற்புதமாகச் சொல்வார். போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட வரலாற்றையும் சொல்வார். அதன் இடிபாடுகள் இன்றும் மணல்மூடிக் கிடக்கிறது.

சௌந்தரம்மாவின் குடும்பம் எங்கள் கிராமத்தில் வசதியான குடும்பந்தான். அப்போதெல்லாம் வாகனவசதி என்றால் இரட்டைமாட்டு வண்டிதான். அந்த வண்டியில்தான் கொட்டியாபுரம், தம்பலகாமம், தீனேரி, சுங்கான்குழி, மாகாமம், கற்சுனை வயல்வெளி என்று செல்வார்கள். தூரத்துப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணங்கள் கூடார வண்டிகளில்தான் தொடரும். தம்பலகாமம் ஆதிகோணநாயகர் திருவிழா தொடங்கினால்தான் மாட்டு வண்டிப் பயணத்தின் மகிமை தெரியும். வண்டிற் சவாரி தூள்பறக்கும். ஆலங்கேணிக்கும் தம்பலகாமத்துக்கும் இடையில் சூரன்கல் என்ற இடம் உள்ளது. சூரன்கல் பிரதேசத்தில் பெரிய வெளியிருந்தது. அது சுமார் மூன்று நான்கு கிலோமீற்றர் தூரத்தைக் கொண்டது. அந்த இடத்தை நெடுங்கரைச்சை என்றழைப்பார்கள்.

அந்த இடத்தில்தான் வண்டிற்சவாரி தொடங்கும். இளைஞர்களது வீரவிளையாட்டுக்கள் களைகட்டும். சுமார் நான்கு அல்லது ஐந்து மணிக்கு வண்டில்கள் ஆலங்கேணி, ஈச்சந்தீவு, உப்பாறு கிராமங்களில் இருந்து புறப்படும். வெயில் குறைந்து களைப்பு நீங்கும் நேரமாக இருக்கும். வண்டில்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடரும். நெடுங்கரைச்சை வந்ததும் தொடர்ந்து வந்த வண்டில்கள் பக்கவாட்டில் பிரியும். ஒன்றன் பக்கத்தில் மற்றது போய்கொண்டிருக்கும். வண்டி சவாரி தொடங்கும். துள்ளிப்பாய்ந்து காளைகள் பறக்கும். பேரொலியாக இருக்கும். பார்ப்பதற்கு சந்தோசமாக இருக்கும். விபத்துக்களும் இடம்பெறுவதுண்டு.

மாட்டு வண்டிகள் செய்வதில் பெரியதம்பி, வேலுப்பிள்ளை, கதிரவேலர் சிறந்த ஓடாவிமார்கள். நல்ல உறுதியாகச் செய்வார்கள். திருவிழா வந்து விட்டால் வண்டில்கள் வண்ணம் பெறும். சில கூடார வண்டிகளாக மாறும். கூடாரவண்டிகள் சவாரியில் ஈடுபடுவதில்லை. எங்களது ஊரில் "சாட்டையன் பிணையல்" என்ற காளைகள் சவாரிக்குப் புகழ்பெற்றது. அதனை வாடகைக்கு அமர்த்துவார்கள். ஒருமுறை "சாட்டையன் பிணையல்" வண்டியில் தம்பலகாமம் திருவிழாவுக்கு சென்றோம். வண்டி ஓட்டியவரைச் சரியாக நினைவில் இல்லை. சௌந்தரம்மா, பக்கத்து வீட்டுப் பெண்கள் பிள்ளைகள் எனப் பலர் பிரயாணம் செய்தோம். "நமக்குச் சவாரி வேணாம். நாம் கோணேசரிடம் போறம். பயபக்தியாய்ப் போய்வரணும் விளங்குதா"? வண்டியில் ஏறும்போதே சௌந்தரம்மா கட்டளையிட்டு விட்டார்.

வண்டில்கள் போய்க்கொண்டிருந்தன. பலவண்டிகள் எங்களது வண்டியைத் தாண்டிப் பறந்தன. "சாட்டையன் பிணையல்" சவாரி செய்து பழக்கப் பட்டவை. பாய்ந்து சென்றன. சௌந்தரம்மா துணிச்சல் மிக்கவர். "கவனமாகப் பிடியுங்க. பிடியை விடக்கூடாது. வண்டில் சரிந்தால் தூரத்தில பாயவேணும்.. விளங்குதா?" கட்டளை கொடுத்திருந்தார். வண்டிகள் மோதுண்டு தடம்புரண்டு சிதறுண்டன. எங்கள் வண்டியும் புரண்டு பக்கவாட்டில் கிடந்தது. அதிசயம். யாருக்கும் காயங்கள் இல்லை. அவவுக்கு எங்கிருந்து அந்தத் துணிச்சல் வந்ததோ தெரியவில்லை. பாய்ந்து சென்று விழுந்து கிடந்த அனைவருக்கும் உதவி செய்தார். வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தவர்களை கூப்பிட்டார் சரிந்த வண்டில்களை நிமிர்த்தி உதவும்படி வற்புறுத்தினார். அவரது துணிச்சல் அபரிகரமானது.

"சாகிறதெண்டாலும் நாம பிறந்த இடத்திலதான் சாகவேணும். மணல்தெருவில் காலாற நடந்து கோயிலுக்குப் போய் அம்மனையும். பிள்ளையாரையும் கும்பிட வேணும். ஊரெல்லாம் கூடி சந்தோசமாக வாழவேணும். அதுதான் வாழ்க்கை". தத்துவம் பேசும் சௌந்தரம்மாவின் வாழ்வைச் சோகம் சொந்தமாக்கிக் கொண்டது. இனப்பிரச்சினை ஊரைக்காவு கொண்டபோது ஊரோடுதான் தனது ஊரைவிட்டுச் சென்றார். இரவும் வரும். பகலும் வரும். காலம் யாருக்காகவும் காத்து நிற்பதில்லை. வாழ்க்கை வட்டம் சுழன்று கொண்டுதான் இருக்கும். காலத்தின் வழிமுறைகளையும், வரைவிலக்கணங்களையும் மனிதனால் தடுத்து நிறுத்திவிடமுடியாது. எந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் பிறந்தாலும் அந்த உயிர் இறக்கத்தான் வேண்டும். இது இயற்கையின் நியதி. மனித வாழ்வில் இழப்புக்கள் பலவிதமகத் தாக்குகின்றன. சில இயற்கையால் வருவன. சில மனிதனால் வரவைக்கப் படுகின்றன. இனப்பிரச்சினை என்று அழிப்புக்கள் தொடங்கின.

ஊரைவிட்டு கிண்ணியாத் துறையைப் பாதையில் கடக்கும்போது ஊர்பக்கம் பார்த்து மக்களோடு அவவிட்ட பெருமூச்சு அனலாய்ப் பறந்தது. சௌந்தரம்மாவின் வீடு வளவு, சுற்றம் பொருள் பண்டம் அனைத்தும் இழந்து அகதியாகத் தவித்தபோது அவர் விட்ட கண்ணீர் கொட்டியாரக் குடாக்கடலோடு கலந்ததைக் கண்டேன். "ஒருநாளைக்கு இந்தக்கடல் பொங்கியெழும்." எதை மனதில் வைத்துச் சொன்னாவோ தெரியாது. ஊர்ச்சனங்கள் அனைவரும் கண்ணீரும் கம்பலையுமாய் அகதிகளாக ஊரைவிட்டு "கிளப்பன்பேர்க்" முகாமில் தஞ்சமானார்கள். ராணிபோல் வாழ்ந்த சௌந்தரம்மா பிள்ளைகளுக்காக அவர்களோடு காலத்தைக் கழித்தார். ஒரு மனிதன் பிறந்தான். இறந்தான் என்று சொல்வதிலும் பார்க்க, அவன் உயிர் வாழ்ந்த காலத்தில் என்ன சாதித்தான் என்பதில்தான் முக்கியம் உண்டு. ஒருவன் எவ்வகையிலேனும் பிறருக்கு உதவியிருந்தால், அவன் ஒரு சிலரது உள்ளங்களிலாவது நினைவு கூரப்படுவான். சௌந்தரம்மாவை இன்றுள்ள ஆலங்கேணி மக்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை. அம்மக்களும் வன்செயல்களுக்கு ஆளாகி இடம்பெயர்ந்து அல்லல் பட்டு மீளவும் குடியேறியுள்ளனர். மூலவேர்களைக் காணவில்லை. சல்லி வேர்கள்தான் காலூன்றி நிலைத்துள்ளன. சௌந்தரம்மா வாழ்ந்த காலத்தில் இருந்தவர்கள் இன்று இல்லை.

காலந்தான் கவலைகளை மாற்றவல்லது. என்று இனப்படுகொலைகள் தொடங்கப்பட்டதோ அன்றிலிருந்து எம்மைத் துயர் துரத்தத் தொடங்கியது. ஆளுக்கொரு பக்கமாக ஓடினோம். பின்னர் ஆளையாள் சந்திக்கும் வாய்ப்பை இழந்து விட்டோம். ஆனாலும் எனது உள்ளத்தில் நீக்கமற நிறைந்து சௌந்தரம்மா இருக்கின்றார். அவர் வாழ்ந்த காலம் பொன்னானது. சௌந்தரம்மா போன்றவர்கள் ஆலங்கேணியில் வாழ்ந்து பண்பாட்டைப் போற்றியவர்கள். ஆலங்கேணியில் வாழ்ந்து அந்த மண்ணிலேயே சங்கமமாகும் அவரது எண்ணம் நிறைவேறாது விட்டது. மண்ணுலக வாழ்வு நிட்சயமற்றது

நினைத்துப்பார்க்கும் போது எல்லாம் பாழாய், பழங்கதையாய்த் தெரிகிறது. தமிழ் மக்கள் வாழ்ந்த இடமெல்லாம் இன்று இல்லை. அவை புதியவர்களுக்குப் போய்க்கொண்டிருக்கிறது. தமிழர்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்களையும், ஊர்ப்பெயர்களையும் அழித்தொழித்துப் புதுப்பெயர்களும் வரலாறுகளும் முளைத்துவிட்டன. என்பாதங்களைப் பதித்து நண்பர்களோடு நடந்த இடமெல்லாம் கற்பனையில்தான் காணமுடியும். நானும்தான் சொந்த ஊரைத் துறந்துவிட்டுத் தூரத்தேதானே கிடக்கிறேன். முகம்பார்க்கும் கண்ணாடியில் எனது முகத்தைப் பார்த்தேன். முகம் நன்றாய்த் தெரியவில்லை. கண்களைத் துடைத்து விட்டு எனது உருவத்தையும் பார்த்தேன். இளமையில் நானும் மனைவியும் சேர்ந்தெடுத்த படத்தையும் பார்த்தேன். எவ்வளவு மாற்றம். "மாற்றமாம் வையகம்" கண்கள் குளமாகி வழிகிறது "தாத்தா ஏன் அழுறீங்க" சுலக்சியின் குரல் கேட்டு நிமிர்கிறேன். அவள் எனது கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்தாள். அவளது கண்களிலும் கண்ணீர். "ஏனம்மா அழுறாய்.."? "நீங்க ஏன் அழுதீங்க".? அவளது கேள்விக்குப் பதில் என்னால் கூறமுடியவில்லை. எதைக்கூறுவது?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணல்திட்டு

அலை வீசி ஆர்ப்பரித்தது. கும்மிருட்டில் அலையின் இரைச்சல் படுபயங்கரமாக இருந்தது. கடற்கரையில் சிலதோணிகள் தரித்து நின்றன. மக்கள் மனங்களில் பயங்கரம் குடிகொண்டு விட்டது. உயிர் தப்பி இந்தியாவுக்கு ஓடுவதுதான் திட்டம். தோணிகளில் மக்கள் ஏறிக்கொண்டிருந்தார்கள். பலதோணிகள் மக்களை ஏற்றிக் கொண்டு ஏற்கனவே சென்றுவிட்டன. தூரத்தில் வெடிச்சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன. செல்வந்து விழுந்து வெடித்துச் சிதறி நிலமதிருவதை உணர்ந்தார்கள். கடலிலும் செல்கள் விழுந்து வெடித்தன. பல தோணிகள் சென்றுவிட்டன. அத்தோணிகளுக்கு என்ன நடந்தது? ஒன்றும் தெரியாத நிலை. தோணியில் ஏறியவர்கள் சகுனம் சரியில்லை என்று இறங்கி விட்டார்கள். அழகன் கடற்கரைப் பக்கமாக ஓடிவந்தான். "இண்டைக்கு நிலமை சரியில்லை. பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகமாயிருக்கும் போலத்தெரியுது. கெதியா வீட்டுக்குப் போய்ச் சேருங்க." சொல்லிவிட்டு வந்த வழியே ஓடினான். சனங்கள் செய்வதறியாது தவித்தார்கள்.

சற்று நேரத்துக் கெல்லாம் அழகன் போனதுபோல் ஓடிவந்தான். "இனிச் சுணங்க வேண்டாம். நாளைக்கு இந்த ஊரைச் சுற்றி வளைக்கத்திட்டம் போட்டிருக்கிறார்கள். இவங்கட கையில பட்டால் மகசீன் சிறைக்கைதிகளுக்கு நேர்ந்த கதிதான் கிடைக்கும்." அழகன் வற்புறுத்திக் கொண்டிருந்தான். சிதறுண்டு அங்குமிங்குமாக ஓடிய மக்கள் ஒன்று கூடினார்கள். தரித்து நின்ற தோணிகளில் ஏறிக்கொண்டார்கள். "கடல்தாயே எங்களைக் காப்பாற்று." தோணியில் ஏறியவர்கள் ஒரே குரலில் வேண்டுதல் செய்தார்கள். தோணிகள் அலையைக் கிழித்துக் கொண்டு பறந்தன. கடற்கரையோரம் வெறிச்சோடிக் கிடந்தது.

அந்த ஊர் வெறிச்சோடிக்கிடந்தது. கிழக்கு வானம் இருட்டியிருந்தது. இன்னும் வெளிக்கவில்லை. வெடிச்சத்தங்கள் ஓய்ந்திருந்தன. ஆளுக்காள் தெரிந்தும் தெரியாமலும் பலர் புறப்பட்டு விட்டார்கள். பலர் தூரத்தே உள்ள உறவினர்களின் வீடுகளுக்கு இரவோடு இரவாகப் போய்விட்டார்கள். அழகன் ஏற்பாடுகளைச் செய்திருந்தான். அவன்தான் அவர்களது நெருக்கடி நேர எச்சரிக்கைக் குழுவின்தலைவன். அவன் எச்சரிக்கை செய்யும் தனிமனிதனாகச் செயற்பட்டான். கிராமங்கள் அமைதியாய்க் கிடந்தன. நாய்கள் மட்டும் ஊளையிட்டுக் கொண்டிருந்தன.

கும்மிருட்டில் படகுகள் பறந்தன. அலைகளைக் கிழித்து முன்னேறின. மக்கள் உயிரைக் கைகளில் பிடித்தபடி நடுங்கினார்கள். கடலலைகளும், படகுகளின் இயந்திரங்களும் சேர்ந்திரைந்தன. இரைச்சல் காதுகளில் அறைந்து செவிடாக்கின. அடிக்கடி கடல் படகினுள் அலைகளை வீசி அச்சுறுத்தியது. கண்களை மூடிப் பயணித்தார்கள். ஒரு முடிவில்லாமல் படகுகள் சென்றுகொண்டிருந்தன.
படகுகள் மணற்திடலில் தரித்தன. "கரை வந்தாச்சு இறங்குங்க. அப்படியே நடந்து போனால் ஊருக்குள் போய்விடலாம். கெதிப்படுத்தி இறங்குங்க" படகோட்டிகள் வற்புறுத்தினார்கள். அந்த மணற்திடல் கரையில் இறக்கி விட்டுச் சென்றுவிட்டன. அந்த இருளில் ஒன்றுந்தெரியவில்லை. சுற்றிவரக் கடல்தான் தெரிந்தது. உண்மையாக அவை கரையல்ல. மணற்திட்டுகள். கடலுள் வற்றுப் பெருக்கினால் ஏற்படுபவை. வற்று நேரத்தில் மணல்திட்டுக்களாகப் பரந்து தெரியும். பெருக்கு நேரத்தில் கடலலையால் சிலநேரம் மூடப்பட்டுவிடும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருபகுதிமட்டும் சிறு தீவாகத் தெரியும். இறக்கியதும் படகுகள் மாயமாக மறைந்து விட்டன. ஒரு அரைக்கிலோ மீற்றர் சுற்றளவுள்ள தீவில் அவர்கள் விடப்பட்டார்கள்.

படகுக்காரர்கள் அதிக பணத்துக்காக ஆசைப்பட்டு அதிகமான சனங்களை ஏற்றுவதால் விபத்துக்கள் ஏற்படுவதும் உண்டு. படகுகள் கவிழ்ந்து உயிரிழப்புக்களும் ஏற்படும். எல்லாம் அவரவர் விதிப்படி நடக்கும். என்று விதியை நோவதும் உண்டு. இலங்கை சுதந்திரம் பெற்றதும் இனஅடிப்படையிலான முரண்பாடுகள் முளைத்து வேர்விடத்தொடங்கின. இனரீதியாக அரசியல் கட்சிகள் செயற்பட்டன. மொழிச்சட்டம் முளைவிட்டது. மோட்டார் பதிவிலக்கம் சிங்கள "சிறி"யில் தொடங்கப்பட்டது. தமிழர்கள் எதிர்த்தார்கள். இனக்கலவரம் ஆரம்பமாகியது. சிங்களப் பகுதிகளில் வாழ்ந்த தமிழர்களது சொத்துக்கள் காடையர்களால் சூறையாடப்பட்டன. அது புரையோடி 1983ல் இனக்கலவரமாக மாறி அகோரத்தாண்டவம் ஆடியது. தமிழர்களது சொத்துக்களோடு அவர்களது உடல்கள் வெட்டியும், சுட்டும், எரியூட்டப்பட்டும் உயிர்களும் அழிக்கப்பட்டன. கன்னியர்கள் கற்பழிக்கப்பட்டு எரியூட்டிப் புதைக்கப் பட்டார்கள். தமிழ்ச் சிறைக் கைதிகள் அடித்துக் கொல்லப்பட்டனர். எதிர்கட்சித் தலைவராக இருந்த தமிழரது அலுவலகம், வீடு அத்தனையும் எரியூட்டப்பட்டன. தமிழர்கள் உயிரைக்கையில் பிடித்தபடி தோணிகளிலும், விமானம் மூலமும் புலம்பெயரத் தொடங்கினர். இந்தியா அவர்களுக்கு ஆதரவளித்து அரவணைத்தது.

சற்றுநேரத்துக்கெல்லாம் இராணுவ வாகனங்கள் அந்த ஊர்மனைகளைச் சுற்றி வளைத்தன. ஆங்காங்கே குழுமிக் கூட்டங்கூடட்டமாக இராணுவத்தினர் பதுங்கிக் காத்திருந்தார்கள். இப்போது இருள்விலகி கிழக்கில் விடிவெள்ளி முளைக்கத் தொடங்கியது. வானைநோக்கிச் சில வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. அது இராணுவத்தினருக்கு வழங்கும் கட்டளை வெடி. இராணுவத்தினர் உசாரானார்கள். அரச உயரதிகாரிகளைப் பொறுத்தவரை தமிழர்கள் பயங்கரவாதிகள்தான். ஆனால் சாதாரண சிப்பாய்களுக்கு களநிலவரம் புரியும். பதுங்கிப் பதுங்கி, ஊர்ந்தும். தவழ்ந்தும் பெரிய எடுப்பில் கிராமத்தினுள் நுழைந்தனர். சந்திகளில் காவல் இருந்தனர். யாரும் தப்பிவிடக் கூடாது என்பது அவர்களது எதிர்பார்ப்பும் இடப்பட்ட கட்டளையுமாகும். ஆளரவங்களைக் காணவில்லை. ஒரு மனிதப்பிறவியும் கண்ணில் படவில்லை. வீடு வீடாக ஏறி இறங்கினார்கள். "எல்லாரும் தப்பிவிட்டார்கள். நாங்க ஏமாந்து விட்டோம்." ஆளையாள் ஏமாற்றத்தோடு பார்த்தார்கள். கப்ரன் சாந்தவுக்கு நிம்மதிப் பெருமூச்சு.

காலை பத்து மணியிருக்கும். அந்தப்பிரதேசக் கட்டளைத் தளபதி வந்திறங்கினார். அவர் அந்தப் பிரதேசத்துக்குப் புதிதாக அனுப்பப்பட்டவர். இரண்டு கிழமைகளுக்கு முன்னர்தான் வந்தவர். அவரது கண்கள் துளாவின. இராணுவத்தினரைத் தவிர வேறு யாரும் இல்லை "எங்கே பயங்கரவாதிகள். கூட்டி வாங்க. அவர்களைப் பந்தாட வேண்டும்". அவரது கண்கள் அனல்கக்கின. பற்களைக் கடித்தபடி சத்தமிட்டார். "தமிழர்கள் அனைவரும் பயங்கரவாதிகள். அவர்கள் சிங்கள இனத்தை அழிக்கப் புறப்பட்டவர்கள். அவர்களுக்கு எதிராகப் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை." இந்தக் கருத்தே அவனுக்கு ஊட்டப்பட்டது. அதிலே ஊறியவர்தான் இந்தக் கட்டளைத்தளபதியும். அவர் அதனை உறுதிப்படுத்துமாப் போல் நின்றார்.

"சேர்! கிராமம் எங்கும் வலைபோட்டுத் தேடினோம். ஒரு மனிசரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. போட்ட பொருட்கள் போட்டபடியே கிடக்குது. ஊரைவிட்டே போய்விட்டார்கள். எப்போது எப்படி, எங்கே போனார்கள் என்று யாருக்கும் தெரியாது. எங்களுக்கு இரவில் ரோந்து போகக்கூடாது என்ற கட்டளை உண்டு." சார்ஜன் விமல் சிங்களத்தில் கூறினான். "இந்தக்கிராமத்தில் பயங்கரவாதிகள் முகாமிட்டிருப்பதை உளவுப்பிரிவு அறிவித்தது. அது தெரிந்துதானே சுற்றி வளைப்புச் செய்யக் கட்டளை வந்தது.? அப்படி இருந்தும் கோட்டை விட்டு விட்டீர்களே. சே... அவமானம்." பாய்ந்து சத்தமிட்டார். இராணுவத்தினர் ஆளையாள் பார்த்துக் கொண்டனர். இது எல்லைக் கிராமம். சில சுயநலவாதிகளின் அநாமதேய செய்திகளை உளவு அறிக்கையாக ஏற்றுக் கொண்டு செயற்படும் அரசியல்வாதிகளையும், அதற்கு உடந்தையாக இருக்கும் அதிகாரிகளையும் கண்டு கீழ்மட்டத்தில் உள்ளவர்கள் வேதனையடைவதைத் தவிர வேறுவழியில்லை.

இந்தக் கிராமத்தில் அப்பாவிகளைத் தவிர வேறுயாரும் இல்லை என்பது கீழ்மட்ட இராணுவத்தினர் சிலருக்குத் தெரிந்த விடயம். ஆனாலும் கட்டளைக்கு அடிபணிந்தார்கள். சுற்றி வளைப்பு நடந்தது. கப்ரன் சாந்த பக்கத்தில் நின்றிருந்தான். அவனுக்கு ஏதோ சொல்லவேணும் போலிருந்தது. அவன் வித்தியாசமானவன். அவன் துணிந்துவிட்டான். "சேர் இந்தச் சனங்கள் அப்பாவிகள். அன்றாடம் காய்ச்சிகள். இவங்களும் நம்ம நாட்டு மக்கள்தானே? பாவம். ஏன் சேர் கொடுமைப்படுத்தவேணும்.? அவர்கள் என்ன செய்தார்கள்? அரசியல்வாதிகளின் சூழ்ச்சிக்கு இராணுவம் அடிபணிவதா"? விறுவிறு என்று கொட்டிவிட்டான். கட்டளைத் தளபதியின் உடல் கொதித்தது. கைகள் விறுவிறுத்தன.

விறுவிறுத்த கைகள் கப்ரன் சாந்தவின் சட்டையை இறுக்கிப்பற்றின. மறுகணம் கன்னங்களில் விளையாடின. அவன் நிலைகுலைந்து போனான். "டேய் .. துரோகி... அரசாங்கச் சம்பளத்தை வாங்கிக் கொண்டு வக்காளத்து வாங்கிறாயா? இரண்டு பயங்கரவாதிகளைப் பிடித்துக் கொடுத்தால் எனக்கு இரண்டு பட்டியேறும். அதைக்கெடுத்து விட்டுக் கதையளக்கிறாயா? நீதான் பயங்கரவாதி." கட்டளைத் தளபதி அதிர்ந்தான்.

பக்கத்தில் நின்ற இராணுவ சார்ஜனை அழைத்தான். " சார்ஜன், இவனுக்கு சஸ்பென்ஸ் ஓடர் கொடு. ஒரு கிழமைக்கு "டிற்ரென்சன்." கூட்டுக்குள்ள போடு" கட்டளை பறந்தது. அங்கிருந்த இராணுவத்தினர் செய்வதறியாது திண்டாடினர். அவர்கள் பலமுறை இந்தக் கிராமத்துக்குச் சென்றிருக்கின்றார்கள். மக்களோடு பழகியும் உள்ளார்கள். மக்களது ஏழ்மை வாழ்க்கையை எண்ணி வருந்தியும் உள்ளார்கள். காக்கிச் சட்டை போட்ட உடம்புக்குள்ளும் நல்ல இதயம் இருக்கின்றது. கப்ரன் சாந்த அந்த வகையைச் சார்ந்தவன். அவன் புத்தரின் போதனைகளில் மூழ்கியவன். கௌதம புத்தரின் போதனைகளையும், கீதையின் உபதேசங்களையும் வாழ்வியலில் கடைப்பிடிப்பவன். கர்ம வினை பற்றி நன்கு கற்றறிந்தவன். நாம் செய்யும் கர்மத்திற்கேற்ற பிரதிபலன் கிடைக்கும். அவனது தாய் தந்தை புத்த தர்மத்தைப் பின்பற்றுபவர்கள். கப்ரன் சாந்த பட்டப்படிப்பை முடித்ததும் இராணுவத்தில் சேர்ந்தான். அவன் படித்த படிப்புக்கேற்ற வேலை கிடைக்கவில்லை. சமூகவியலை ஒரு பாடமாகக் கற்றவன்.

இலங்கையின் வரலாற்றை நன்கு படித்தவன். இலங்கையின் ஆதிக்குடிகள் இயக்கரும், நாகரும்தான். விஜயன் இந்தியாவில் இருந்து வந்தவன். அவன்தான் சிங்களவர்களது மூதாதையர் என்பதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கமறுப்பவன். இயக்க இளவரசி குவேனியை விஜயன் ஏமாற்றி அவளது இராச்சியத்தைக் கைப்பற்றியவன். அவர்களைக் காட்டுக்குத் துரத்தியவன். நாகர் இலங்கையின் வடக்கை ஆண்டவர்கள். அவர்களது பிணக்கைத் தீர்த்து வைக்கப் புத்தபெருமான் இலங்கைக்கு வந்ததாக வரலாறு கூறுகிறது. அந்த நாகர் என்ன ஆனார்கள். அவர்களது வரலாறு எங்கே? விஜயன் பாண்டியனின் மகளைத் திருமணம் செய்தான். அவனது தோழரும் தமிழ்ப் பெண்களைத் திருமணம் செய்தார்கள். அவர்களது வாரிசுகள் யார்.? விஜயனின் வழித்தோன்றல்கள்தான் சிங்களவரா? அப்படியென்றால் நாங்கள் யார்? தமிழர்கள் சகோதர்கள் அல்லவா?

சாந்தவுக்குள் ஒரு மனிதன் இருந்தான். அவன் ஒரே கேள்விகளைக் கேட்டுக் குழப்பிக் கொண்டிருந்தான். "சாந்த நீ யார்? ஏன் இங்கு வந்தாய்? உனது கடமைகள் என்ன? நிலையில்லா வாழ்வில் எதனை நீ சாதிக்கப் போகிறாய்? மனிதன் எப்போது பிறந்தானோ அப்போதே அவனது இறப்பும் தீர்மானிக்கப் பட்டுவிடும். இடையில் உயிர்களைக் கொல்வதற்கு நீ யார்.? நல்லதை நினை. நல்லதைச் செய். நினைவு நல்லது வேண்டும். அதனைச் செய். பலன் தானே தேடி வரும்." அவனது மனம் அவனோடு போராடிக் கொண்டிருந்தது. அவன் இராணுவத்தில் சேர்ந்து கடமைக்குச் செல்லும் போது அவனது தந்தையும் தாயும் சொன்னவற்றை அடிக்கடி நினைவு கூருவான். அதனை சார்ஜன் விமலோடும் பகிர்து கொள்வான். இப்போது தளபதியின் கட்டளையால் விமலுக்குத் தர்ம சங்கடமாகி விட்டது. நல்லதொரு கடமை வீரனுக்கு இப்படிப்பட்ட தண்டனையா? இதுதானா தார்மீகம்.? அவன் உள்ளம் குமுறியது. கப்ரன் சாந்தவின் முகம் நிலம் நோக்கியிருந்தது. தனது தார்மீகத் தன்மையைச் சுட்டிக்காட்டிய திருப்தி அவனது முகத்தில் தெரிந்தது. கடமையைச் செய் பலனை எதிர்பாராதே. பலன் கன்னங்களில் கிடைத்தது. இது தற்காலிகமானது. மனித மனம் திருந்துவதற்கு ஒரு அக்கினிக் குஞ்சைக் காட்டினேன். பற்றிக் கொள்வதும் பற்றாததும் அவரவர் மனத்தின் அளவைப் பொறுத்தது. அவன் கவலைப் படவில்லை.

கட்டளைத் தளபதி இராணுவத்தை முகாமுக்குத் திரும்புமாறு பணித்தான். பின் "பிக்கப்" வாகனத்தில் ஏறி முகாமுக்குப் போய்விட்டான். இராணுவத்தினர் சாந்தவைச் சூழ்ந்து கொண்டனர். "வீரர்களே! நம்மைப் பெற்றவள் ஒரு தாய். நமக்கு அக்கா, தங்கைமார் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு துன்பம் என்றால் நம்மால் தாங்கிக் கொள்ள முடியுமா? தமிழர்களும் நமது சகோதரர்கள்தான். இதனை நினைவு கொள்ளவேண்டும். அவர்களது துன்பத்தைத் துடைப்பது நமது கடமையாக இருக்க வேண்டும். உங்களுக்கு ஒரு துன்பமும் வராது. புத்ததர்மத்தின் வழி நடப்போம்." அடிக்கடி இதனை தனது வீரர்களுக்குக் கூறுவான். தங்களுக்கு உதவும் கப்ரனாகச் சாந்த திகழ்ந்ததை அவர்கள் மறக்கவில்லை. ஆறுதல் கூறிக்கொண்டனர். முகாமுக்குத் திரும்பினார்கள். முகாமில் வழமையான கடமையில் ஈடுபட்டனர்.

அழகன் மணல்திட்டியில் நின்றவாறு வானைப் பாத்தான். கடலைப்போல் வானமும் நீலம்பூத்திருந்தது. வெயில் தகதகத்துக் கொழுத்தியது. சிறிய வட்டத்துக்குள் சிறைப்பட்ட பாவிகளாக இலங்கையின் ஆதிக்குடி மக்கள் அந்தரித்தார்கள். வாய்க்கு வந்தபடி அரட்டிக் கொண்டிருந்தார்கள். "கவலைப் படாதீங்க. எப்படியும் தமிழ்நாட்டுக்குள் போய்விடலாம். நாம் தொப்புக் கொடியினால் பிணைக்கப்பெற்ற உறவுகள். நமது தமிழ் உறவுகள் காப்பாற்றும்." அழகன் மக்களிடையே புகுந்து ஆறுதல் கூறிக்கொண்டிருந்தான். நமது மக்கள் எல்லோரும் ஒரேமாதிரி இல்லை. செய்வதைச் செய்துவிட்டு பழியை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார்மேலாவது போடுவார்கள். இது வழிவழிவந்த மரபு. "இஞ்சவந்து இந்த வேகாத வெயிலில சாவதைவிட, அங்க சிங்கள ஆமிக்காரனால செத்திருக்கலாம்." சின்னாச்சி முணுமுணுக்கத் தொடங்கினாள். "எங்கட சனங்கள் சரியான சுயநலக்காரர். முதலில தோணியில போனவங்க எங்களையும் கூட்டிக் கொண்டு போயிருக்கலாமெல்லோ."? தோட்டத்து முத்தர் தொணதொணத்தார். "ஐயா பொறுமையாயிருங்க... வாழ்வா ..சாவா என்ற நிலையில் இருக்கிறம். அவசரப்பட்டு வார்த்தைகளைக் கொட்டாதீங்க? இப்ப நமக்குத் தேவை பொறுமை. எல்லாத்தையும் ஆண்டவனிட்ட விடுவம். அவன் பார்த்துக் கொள்வான்." அழகன் மிகப்பணிவாகக் கேட்டுக் கொண்டான். அவனது பார்வை தூரத்துக் கடலில் இருந்தது.

தூரத்தே விசைப்படகுகள் வருவதைக் கண்டு கொண்டான். ரங்கியது. இலங்கை கடற்படை தமிழ்நாட்டு மீனவர்களைக் கொன்று குவிப்பதை அவர்கள் பொருட்படுத்தவில்லை. நல்லன நினைப்பதும், செய்வதும் ஆபத்தில் உதவுவதும் மனிதப் பண்பு. உற்சாகமாகத் தலையை ஆட்டினார்கள். அவர்களது சம்மதம் கிடைத்து விட்டது. அழகன் அனைவரையும் பத்திரமாக ஏற்றிவிட்டான். அவர்களுக்கு நன்றி கூறினான். தானும் தொற்றிக் கொண்டான். படகுகள் தமிழகக் கரையை நோக்கி விரைந்தன. கரை நெருங்கிவிட்டது. கரையும் மக்களும் தங்களை நோக்கி வருவது போல் உணர்ந்தார்கள். மண்டபம் கடற்கரை அல்லோல கல்லோலப் பட்டுக் கொண்டிருந்தது.

அழகன் கரையில் நடப்பதை ஊகித்துக் கொண்டான். தோணிகளில் ஏறும்போதே அளவாக ஏற்றும்படி கேட்டுக் கொண்டான். நான் முந்தி. நீ முந்தி என்று ஏறியவர்களை இறக்கியும் விட்டான். ஆனாலும் அளவுக்கதிகமாக மக்கள் ஏறினார்கள். அப்படி ஏறிய தோணிகள் என்னவாயினவோ? கரையை அடைந்ததும் இறங்கிப் பாய்ந்து ஓடினான். மக்கள் திரண்டு பார்த்துக் கொண்டிருந்தனர். "ஒன்று இரண்டு மூன்று.. இருபத்தொன்பது...". அவன் மயங்கிவிட்டான். ஒன்றாகப் புறப்பட்ட இருபத்தொன்பது உறவுகள் சடலங்களாகக் கிடத்தப் பட்டிருந்தனர். தமிழக அரசின் அலுவலர்களும் பொது அமைப்புக்களும் கரிசனையோடு கவனிப்பதை அழகன் உணர்ந்து கொண்டான். அவர்களுக்கு மனதார நன்றி கூறினான். அவனது மனக்கண்முன் இந்த மக்கள் பட்ட துன்பமனைத்தும் தென்பட்டன.

இலங்கை அரசபடைகளின் அடாவடித்தனங்களில் இருந்து தப்புவதற்காக அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி எண்ணிலடங்காதன. வீட்டில் அவர்கள் நிம்மதியாக உறங்கினது கிடையாது. "ஆமி வருது.. ஆமி வருது" என யாரோ சொல்வார்கள். "எந்தப்பக்கமாம்?" வாய்கேட்டுக் கொண்டிருக்கும். கால்கள் திசைதெரியாது ஓடிக் கொண்டிருக்கும். உணவு சமைத்தமாதிரி அடுப்பில் இருக்கும். ஆனால் பசியோடு பக்கத்து ஊருக்கு அபயந்தேடி உடல்கள் ஓடிக்கொண்டிருக்கும். பிடிபட்ட இளைஞர்கள் திரும்பியதில்லை. அதிர்ஸ்டமுள்ள சிலர் பூசா சிறைச்சாலையில் பூட்டப்படுவார்கள். அவர்கள் செய்த குற்றம் என்ன? தமிழனாகப் பிறந்ததுதான் அவர்கள் செய்த பெரிய குற்றம். அழகனது உள்ளம் கேள்வித் தீயில் வெந்து கொண்டிருந்தது.

செய்தி வானொலியில் ஒலித்துக் கொண்டிருந்தது. காது கொடுத்துக் கேட்டனர். "இலங்கையில் இருந்து இந்தியாவுக்குத் தப்பிச் செல்ல முயன்ற அகதிகள் கடலில் மூழ்கினர். இருத்தொன்பது பேர்பலி. ஏனையோர் இந்திய கடற்படையினராலும், மீனவர்களாலும் காப்பாற்றப்பட்டு மண்டபம் முகாமுக்கு அனுப்பப் பட்டுள்ளனர்". செய்தி கேட்டு சாந்த உள்ளம் பொருமினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இலங்கையில் பிறந்தவர்கள் அனைவரும் இலங்கை அன்னையின் பிள்ளைகள் அல்லவா?. சொந்த நாட்டில் வாழமுடியாமல் அகதியாகி வேற்று நாட்டுக்கு ஓடுவதா? என்ன கொடுமை." வேதனையில் வெந்தான்.

விமல் "சஸ்பென்சனுடன் டிற்ரென்சன்" ஓடரையும் ரைப் செய்து கட்டளைத் தளபதியின் ஒப்பத்தைப் பெற அவரது அறையினுள் சென்றான். வாசலில் நின்று "மே ஐ கம் இன் சேர்" "உள்ளே வரலாமா? " குரல் கொடுத்துக் காத்திருந்தான். கதவு திறந்துதான் இருந்தது. "என்ட, வா" பதில் வந்தது. விமல் உள்ளேசென்று சலூற் அடித்து நின்றான். தளபதி அவனை நிமிர்ந்து பார்த்தார். "சேர், ஓடர். தங்கள் ஒப்பத்துக்காக." நீட்டினான். அதனைப் பெற்று அப்படியே வைத்தான்.
"சார்ஜன்.. ரேடியோ..செய்தி கேட்டாயா?"
"இல்லை சேர்"
"இலங்கையில் இருந்து இந்தியாவுக்குத் தப்பிச் செல்ல முயன்ற அகதிகள் கடலில் மூழ்கினர். இருத்தொன்பது பேர்பலி." கூறிக் கொண்டு இருக்கையை விட்டு எழுந்தான். "அவர்களைப் பிடித்திருந்தால் காப்பாற்றியிருக்கலாம் அல்லவா?" பொறியினுள் சிக்க வைக்கும் கேள்வியல்லவா கேட்கிறான். விமலுக்குச் சந்தேகம் பிறந்தது.

இவன் என்ன சொல்கிறான். "எங்கே பயங்கரவாதிகள். கூட்டி வாங்க. அவர்களைப் பந்தாட வேண்டும். பட்டி கிடைக்கும்" என்றானே? இப்போது இப்படிச் சொல்கிறான். அவன் இந்தத்தர்ம சங்கடத்தில் மாட்டிக் கொள்ளத்தயாரில்லை. தன்னைச் சுதாகரித்துக் கொண்டான். "சேர்! டிற்ரென்சன் ஓடரும் இருக்கு. ஒப்பமிட்டால் மற்றதை நான் கவனிப்பேன் சேர்." மீண்டும் சொன்னான். தளபதி ஓடரைக் கையில் எடுத்து வாசித்தான். அதனை விமலிடமே நீட்டினான். "கிழித்தெறி. பயங்கரவாதிகளுக்கு நாம் தண்டனை கொடுக்காமல் விடலாம். ஆனால் கடல் கொடுத்துவிட்டது. அவர்கள் அகதிகள் இல்லை. பயங்கரவாதிகள்." கூறிவிட்டுப் பயங்கரமாகச் சிரித்தான். "அவர்களை நாம் பிடித்துக் கொடுத்திருந்தால் நம் எல்லோருக்கும் "புறமோசன்" கிடைத்திருக்கும். அவர்கள் நம்மிடம் சிக்காமல் போய்விட்டார்கள். அதுதான் கவலை". சடுதியாக அவனது முகம் மாறியது. "ஓடரைக்கிழித்தெறி. போ". சத்தமிட்டான்.

விமலுக்கு அவனது செயல் அசிங்கமாக இருந்தது. அவனது முகம் அமவாசையாக இருண்டது. அங்கிருந்து நடந்தான். "இவனெல்லாம் இலங்கையன்தானா? இவன்தான் பேரினவாதி. இலங்கை அரசின் அதிகாரிகள் அனைத்து மக்களையும் தன்நாட்டு மக்களாகக் கருதவேண்டும். ஆனால் இனவேறுபாடு காட்டி அப்பாவிகளை வருத்துவது என்ன நியாயம்.? இவனைப் போன்றவர்கள்தான் இளைஞர்களை ஆயுதம் ஏந்தவைக்கிறார்கள். மடியிலே குண்டுகளைக் கட்டிக்கொண்டு தன்னைத்தானே அழித்துக் கொண்டு தற்கொடையாளியாகிறார்கள். அப்பாவிகளைப் பிடித்துப் பயங்கரவாதிகள் என்று ஒப்புக்கொள்ளச் செய்து பதவி உயர்வு பெறும் புல்லுருவிகள். இயற்கையும் அப்பாவிகளைத்தானா தண்டிக்கிறது? இவையெல்லாம் ஏன்?" விமல் நடந்து கொண்டே சிந்தனையில் மூழ்கினான்.

அவன் கொண்டு வரும் கட்டளையை எதிர்பார்த்து நின்றவர்கள் அவனை எதிர்கொண்டு முன்னே வந்தனர். அவர்களைக் கண்டதும் விமல் கட்டளையைக் கிழித்தான். நேரே சாந்தவிடம் சென்றான். தளபதியின் செயலைக் கூறினான். ஒருபக்கம் சந்தோசம். அது தண்டனை இல்லை. மறுபக்கம் வேதனை. சாந்தவிடமும் நண்பர்களிடமும் கூறி வேதனைப் பட்டான். "விமல் கவலைப் படாதே. நாம் கர்ம வீரர்கள். வீரர்கள் அழக்கூடாது. எதுவென்றாலும் நன்மைக்கே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றிருப்போம்" சாந்த அனைவரையும் தேற்றினான்.

"தம்பி உங்கள் பெயரென்ன?" சத்தம் கேட்டுத் தன்னைச் சுதாகரித்துக் கொண்டான். 'அழகன்.' வாய் கூறியது. "சரி எழும்புங்க. வாங்க எங்க பின்னால்" அழைத்தார்கள். அவனால் எழும்பி நடக்க முடியவில்லை. சமாளித்து எழும்பி நடந்தான். பசியும் பட்டினியும் வாட்டியது. அது இலங்கை அகதிகளுக்கான ஒரு முகாம். அந்த முகாமில் அவனது உறவினர்கள் இருந்தார்கள். அவனைக் கண்டதும் ஓவென்று அழுதார்கள். "முதலில் அவருக்கு இதைக் கொடுங்கோ. நல்ல பசியோடு களைத்திருக்கிறார். பிறகு பதியச் சொல்லுங்கோ. பின்னேரம் நாலு மணிக்கு பிரேதங்களை அடக்கம் செய்யவேணும். நாங்க ஆயத்தம் செய்யப் போறம். பிறகு வாறம்". சொல்லி உணவுப் பொட்டலத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றார்கள். அழகனுக்குப் பசி. பசி யாரைத்தான் விட்டு வைத்தது. பசிதானே உயிரினங்களை இயக்குகிறது. கவலை ஒருபுறம். "தம்பி அழகன், சாப்பிடு. நடப்பது நடக்கட்டும். பிறந்திட்டம். என்ன செய்வது. இருக்குமட்டும் வாழத்தானே வேணும்". துரையர் தத்துவம் பேசினார். சாப்பிட்டான். ஊர்மக்கள் பக்கத்தில் இருப்பது ஆறுதலாக இருந்தது. எனினும் ஆழ்மனதில் இருபத்தொன்பது உயிரற்ற உருவங்களும் வந்து நின்றன.

நாலுமணிக்குப் பிரேத அடக்கம். இப்பவே போகவேணும். கிளம்பினான். சனங்கள் மொய்த்திருந்தார்கள். சொந்தங்களை இழந்தவர்களைப் போல் இந்த மக்களும் கண்ணீர் விடுகிறார்களே. அவனது உள்ளம் உருகியது. "நம்ம தமிழ்ச்சனங்களுக்கு இப்படியா ஆகவேணும். இதனை நம்ம நாட்டு அரசு சும்மா விடக்கூடாது. இலங்கை மக்கள் எமது தொப்பிள்கொடித் தொடர்புள்ள உடன்பிறப்புக்கள்." பல கருத்துக்கள் சூழ்ந்து நின்ற மக்களிடம் இருந்து வந்தன. மனதுக்கு ஆதரவாக இருந்தன. உயிரிழந்த மக்களை இனங்காட்டி பெயர், முகவரிகளை கொடுத்திருந்தார்கள். பட்டியலை சில பத்திரிகைகள் படங்களோடு பிரசுரித்திருந்தன. பெயர்ப் பட்டியலையும், படங்களைப் பார்த்ததும் அழகன் "விதியே! விதியே ...என்செயப்போகிறாய் இந்த இலங்கைத் தமிழச் சாதியை?" ஓ வென்று அழுதான். ஒருகிராமத்தின் எல்லையில் பிரேத அடக்கம் நடைபெற்றது. அரச அலுவலர்களும், சமூகநிறுவனங்களும் நல்லடக்கத்தின் போது வேண்டிய உதவிகளைச் செய்தன. எங்கேயோ பிறந்து எங்கேயோ அனாதைகளாக தனது சொந்தங்கள் புதைக்கப்படுவதை அழகனால் பொறுக்கமுடியவில்லை. காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை.

முகாமில் ஆயிரக்கணக்கில் இலங்கை அகதிகள் குவிந்து கொண்டனர். சடுதியாக அரச அலுவலர்கள் வந்தார்கள். சில அகதிகளையும் கூப்பிட்டார்கள். அவர்களது கருத்துக்களையும் கேட்டார்கள். "எங்களது உயிர்களுக்குப் பாது காப்பு இல்லை. எங்களது உயிருக்கும், உடமைகளுக்கும் உத்தரவாதமில்லை. ஊனுறக்கம் இல்லாது பயங்கரப் பயணத்தைச் செய்து வந்திருக்கிறம்." ஓத்த குரலில் கூறினார்கள். "ஐயா இதுதான் இலங்கையின் இன்றைய நிலமை. அதனாலதான் இந்த மக்களை ஒன்றிணைத்து ஒரு கட்டொழுங்குக்குள் கொண்டு வர முனைகிறோம். அவர்களுக்கு ஒரு பாதுகாப்பை வழங்கவேண்டும் அதற்குரிய ஒத்தாசைகளை வினையமாகக் கேட்கிறோம்." நீதிமன்றில் வழக்காடும் துணிவுடன் அகதிகள் சார்பில் நடுத்தர வயதுடையவர் வேண்டுகோள் விடுத்து நின்றார். தமக்காகக் குரல் கொடுக்கவும் இருக்கிறார்கள் என்ற துணிவு அகதிகளிடையே பிறந்தது. அந்தக்குரலை அழகன் கேட்டிருக்கிறான். குரலின் சொந்தக்காரரைக் காண அவன் விழிகள் அலைந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்டை

அது மார்கழி மாதம். வடகீழ்ப் பருவக் காற்று விளையாடிக் கொண்டிருந்தது. மாதங்களில் சிறந்தது மார்கழி என்பார்கள். இயற்கையின் அழகு துள்ளி விளையாடும். மார்கழியில் மயிர் நனையாத் தூறலாமே? மழைத்தூறல்களைக் கையிலேந்திப் பார்க்க ஆசை. பார்த்தால் என்ன? கைகளை நீட்டினான். கைகளில் குளிர்தடவி விட்ட உணர்வு. இரு கைகளையும் சேர்த்துத் தேய்த்துக் கொண்டான். மழையோடு பனி கலந்து இறைக்கும் அற்புதம். குளிர் காற்று வீசி முகத்தில் அறையும் சிலிர்ப்பு.

உடலொட்டிய டெனிம் ஜீன்ஸ்சுக்குப் பொருத்தமான மெல்லிய நீலநிற சேட். அவனது செம்மஞ்சள் மேனிக்குக் கச்சிதமாக இருந்தது. இடுப்புப் பட்டி மின்ன அவன் நடப்பது அழகாக இருந்தது. இடக்கண்ணுக்கு நேரே உச்சியிலிருந்து ஒரு அங்குல இடை வெளியில் எடுத்து விட்ட வகிடு. நெற்றியில் சுருளாக விழுந்து காற்றில் அலையும் சுருள்முடி. அழகிய அரும்பு மீசை. எந்த நேரமும் முறுவல் ஓடும் இதழ்கள். கனிவான பேச்சு. கம்பிரமான ஒலி. நடையில் ஒரு மிடுக்கு. அனைவரையும் மதிக்கும் பண்பு. அன்போடு உறவாடும் தன்மை. இது ஆனந்தனின் இயல்பு. அதனால் அந்தத் திணைக்களத்தில் அவனுக்குப் பெருமதிப்பு ஏற்பட்டதில் வியப்பில்லை. அவன் உயர்பதவி வகித்தாலும் அதிகாரத்தைப் பயன்படுத்துவதும் இல்லை. எல்லாரோடும் சகஜமாகப் பழகுவான்.

வவுனியாக் குளங்கள் மாரியில் நிறைந்து வழிந்து கொண்டிருந்தன. மரங்கள் மதாளித்துச் சிலிர்த்தன. குரங்குகள் கொப்புகளில் குளிர்காய்ந்தன. வீதிகளில் பரவி மழைநீர் சலசலத்தது. வழிந்து சிறுகால்வாய்களுடாக ஓடியது. குடைகள் உலா வந்தன. வாகனங்கள் மழைநீரை வாரியடித்துச் சென்றன. இராணுவ வாகனங்கள் வேகமாக வரும். மக்கள் ஒதுங்கிக் கொள்ள வேண்டும். தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். தற்செயலாக மோதுண்டால் அவ்வளவுதான். இராணுவத்தைத் தாக்க முயன்றதாகக் குற்றம் பதியப்படும். மக்களையும் இராணுவத்தினர் வாட்டி வதைத்தெடுத்தனர். அடாவடித் தனம் அதிகரித்திருந்தது. பாரதி சொல்வானே 'பேயரசாண்டால் பிணந்தின்னும் சாத்திரம்' என்று. அவ்வகை இனவாத ஆட்சி. கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்தது. பரீட்சையை நடத்திமுடிக்கும் இணைப்பாளராக ஆனந்தன் ஈடுபட்டிருந்தான்.

மழை அனைவரையும் ஆட்டிப்படைத்தது. காலையில் வழமைபோல் வினாத்தாள் பொதிகளை எடுத்துக் கொண்டான். எங்கும் மழைநீரின் அட்டகாசம். பெருவெள்ளக் காடாய் காட்சி தந்தது. வாகன வசதி போதுமானதாக இல்லை. ஒரு வாகனத்தில் இரண்டு பகுதிகளுக்குச் செல்லவேண்டும். கடந்த நான்கு நாட்களாக இவ்வாறு சமாளித்தாகி விட்டது. ஆனால் இன்று பெருஞ்சவாலை எதிர்நோக்க வேண்டியிருந்தது. ஓமந்தை அழகானதொரு சிறுநகர். மருதநிலத்தின் அழகு தலைவிரித்தாடும். நிலம் விளைந்து நெற்கதிர்கள் சாய்ந்து படுத்திருக்கும். ஆநிரைகள் கூட்டங்கூட்டமாய்த் திரியும். படித்தவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியால் பெரியதொரு உயர்நிலைப் பள்ளிக்கூடம் நிமிர்ந்து நின்றது. அந்தப் பள்ளிக்கூடம் ஒரு பரீட்சை மத்திய நிலையமாக இயங்கியது. ஓமந்தைப் பரீட்சை நிலையத்துக்குச் செல்வதே பெரும்பாடாய் இருந்தது. நேரம் ஓடிக்கொண்டிருந்தது. காலை எட்டரை மணிக்குப் பரீட்சை தொடங்கும். அதற்குமுன் வினாத்தாள் பொதிகளை ஒப்படைக்க வேண்டும். ஒரு வாகனத்தை வாடகைக்கு அமர்த்தினான்.

உதவிப்பணிப்பாளர் செல்வம் வினாப் பொதிகளுடன் தயாராக நின்றார். அவர் ஒரு மேதை. அதிகாலை மூன்றுமணிக்கு எழுந்து விடுவார். குளித்து தேநீர் தயாரித்துக் குடிப்பார். ஆங்கிலப் புத்தகங்களை வாசித்து ரசிப்பார். இரசித்துச் சுவைத்தவற்றை அழகாக எடுத்து விளக்குவார். சேக்ஸ்பியரின் யூலியஸ்சீசர் நாடகம் அற்புதமானது. அதில் அந்தனியின் பேச்சு மிகவும் சுவாரஸ்யமானது. அந்தப் பேச்சு அவருக்குத் தண்ணிபட்ட பாடம். நடித்தவாறு பேசிக்காட்டுவார். பாராளுமன்றத்தில் அன்றைய உறுப்பினர்களின் வாதப்பிரதிவாதங்களைப் படித்துவிட்டு பேசிக்காட்டுவார். வழக்கறிஞர் அமரர் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களது நீதிமன்ற வாதங்களை அப்படியே பேசுவார். ஆங்கிலம் ஆற்றொழுக்காக ஓடும். செல்வராசா அவரது பெயர். ஆனால் அவர் தனது பெயரின் முதல் எழுத்தை மட்டும் எழுதி தனது அப்பாவின் பெயரான கணபதிப்பிள்ளை என்பதையே எழுதுவார். தனது தந்தையின் பெயரால் அழைக்கப் படுவதையே பெரிதும் விரும்பினார். தந்தையை இளமையிலேயே இழந்துவிட்டார். தனது தாயையும், தம்பிமார்களையும் கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டுவிட்டார். திருமணம் செய்யாத கட்டைப் பிரமச்சாரி. அவரை அந்த வாடகை வாகனத்தில் அனுப்பி வைத்தான். அவர் ஓமந்தைப் பரீட்சை நிலையத்துக்கு உரிய வினாப் பொதிகளோடு சென்று விட்டார். மற்ற வாகனத்தில் பாவற்குளம் பரீட்சை நிலையத்துக்கு விரைந்தான்.

பாவற்குளம் பண்டையப் பெருமைகளுக்கு உதாரணமாய் விளங்கியது. வன்னிவள நாட்டின் பொருளாதாரத் தொட்டில் அது. குளம் தொட்டு வளம் பெருக்கும் பூமி. பயிர் செழித்து விளைச்சலைக் கொடுக்கும் வளமான மண் நிறைந்தது. நாடு சுதந்திரம் பெற்றபின் குடியேற்றத் திட்டங்கள் என்ற பெயரால் பெரும்பான்மை மக்களைத் தமிழ்ப் பிரதேசங்களைக் கைப்பற்றி அவர்களை குடியேற்றும் நோக்குடன் செயற்படுத்திய திட்டங்களில் ஒன்றுதான் பாவற்குளம் குடியேற்றத் திட்டம். தமிழர்கள் பெரும்பான்னையாகக் குடியேற வேண்டிய பகுதிகளில் பெரும்பான்மை இனத்தவர்களைக் குடியேற்றி சகல வசதிகளையும் அரசு செய்து கொடுத்திருந்தது. பாவற்குளம் பாரிய குளமாகும். அது உடைப்பெடுத்து வீதியின் குறுக்காகப் பாய்ந்து கொண்டிருந்தது. அதிலிருந்து அரை கிலோ மீற்றர் தூரத்தில்தான் பரீட்சை நிலையம் இருந்தது. ஆனாலும் எப்படிப் போவது. பேரிரைச்சலோடு வெள்ளம் பாய்ந்து கொண்டிருந்தது. அவனுக்குச் சிந்திக்க அவகாசமேது? அந்தக் குளிரிலும் வெயர்த்துக் கொட்டியது. நேரத்தைப் பார்த்தான். ஒன்பதைத் தாண்டிவிட்டது. சாரதி காசிம் வானத்தைப் பார்த்தான். அது இருண்டு கறுத்து உறுமியது. இடைவிட்ட மின்னல். இடையிடைலே இடியோசை காதைப் பிளந்தது. "காசிம் வாகனத்தைத் திருப்புங்கள். மதவாச்சி வழியாகப் போவோம்." கூறிமுடிக்குமுன் வாகனம் திரும்பியது. காசிம் தனது கடமையில் கண்ணானவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிநெடுகிலும் மழைநீர். நீரைக் கிழித்து வாகனம் விரைந்தது. ஈரற்பெரியகுளத்தைத் தாண்டி மதவாச்சிச் சந்தியில் வலப்பக்கமாகத் திரும்பி மன்னார் வீதியால் வாகனம் சென்றது. சரியாகப் பத்து மணிக்குப் பரீட்சை நிலையம் வந்துவிட்டான். ஆனந்தனைக் கண்ட அதிபர் சீனிவாசகம் முகம்மலர்ந்து வரவேற்றார். சீனிவாசகம் கட்டுமஸ்த்தான உடலுடையவர். மகாபாரதத்தில் வரும் பீமனின் சாயலை அவரில் காணலாம். சிரிக்கும் போது கன்னத்தில் ஒரு குழி விழும். சிறிதாகக் கண்ணிமைகள் மூடியிருக்கும். பாதிவிழிகள் தெரியும். பாடசாலைக்காகவும். மாணவர்களது எதிர்காலத்துக்காகவும் உழைப்பவர். கடமை உணர்ச்சி உள்ளவர். வவுனியா மாவட்டத்தின் கல்வி வளர்ச்சிக்காகப் பாடுபடுபவர். உரிய நேரத்துக்குப் பரீட்சை நடைபெறுவதில் அக்கறை உள்ளவர். வினாப் பொதிகளை பெற்றதும் இயந்திரமயமானார். வினாத்தாட்களை பரீட்சார்த்திகளுக்கு விநியோகித்தார். செல்வராசா அதிபர் அற்புதமான மனிதர். பிறருக்கு உதவுவதில் முன்நிற்பவர். அவர் சீனிவாசகத்தின் உதவிப் பரீட்சகராகச் செயற்பட்டார். இருவரும் சுறுசுறுப்பானார்கள். கடுகதியாக வினாத்தாட்களைப் பரிமாறினார்கள். ஏனைய உதவியாளர்களும் விரைந்து செயற்பட்டார்கள். வினாத்தாட்கள் கொடுபட்டன. வினாத்தாள்கள் கொடுபட்டபின்தான் ஆனந்தனுக்கு நிம்மதிப் பெருமூச்சுப் பறந்தது.

சீனிவாசகம் பரீட்சை நடைபெறுவதற்குரிய ஒழுங்குகளைச் செய்திருந்தார். பதகளிப்பால் சீனிவாசகத்தின் மூக்குக்கண்ணாடி கீழே விழுந்து விட்டது. அதிஷ்டவசமாக ஒரு கண்ணாடி தப்பிப் பிழைத்தது. 'இஸ்ரேல்' நாட்டின் முன்னாள் அமைச்சர் மோசிதயான் போல் ஒற்றைக் கண்ணாடியில் காட்சியாகிக் கொண்டிருந்தார். பிரித்தானியரின் ஆட்சியில் சோல்பரிப்பிரபுதான் ஆளுநராக இருந்தார். அவர் ஒற்றைக்கண்ணில் மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தார். மக்கள் அனைவரும் சமம். அதனால் அவர் ஒற்றைக்கண்ணால் நோக்கினாராம். என்று அப்போது நமது மக்கள் பேசிக்கொண்டார்கள். அதேபோல் சீனிவாசகமும் கல்வி உலகத்தை ஒரு கண்ணாக மதித்தார். சீனிவாசகத்துக்கு ஒரு கண்ணாடி இல்லாதது குறையாகத் தெரியவில்லை. அவருக்குக் கடமைதான் முக்கியம். ஆனந்தனின் மனதில் சீனிவாசகத்தின் உருவம் பதிந்து கொண்டது.

வானத்தில் இருள் சூழ்ந்து மூடிக்கொண்டது. பகற்பொழுது போல் இல்லை. பரீட்சை மண்டபத்துள் போதிய வெளிச்சம் இல்லை. ஊரவர்களின் உதவி சீனிவாசகத்துக்கு நிறையவே இருந்தது. பல 'பெற்றோமக்ஸ்' விளக்குகள் விரைந்து வந்தன. ஒவ்வொரு அறையிலும் பெற்றோமக்ஸ். உரிய இடங்களில் ஒளிபரப்பிக் கொண்டிருந்தன. முதல்நாள் நடைபெற்ற பரீட்சையின் விடைத்தாள் பொதிகளைப் பாதுகாப்பாகச் சீனிவாசகம் வைத்திருந்தார். அவற்றைப் பெற்றுக் கொண்டு திரும்பினான். மழை கொட்டிக் கொண்டிருந்தது. பசி வயிற்றைப் பிசைந்தது. தான் கொண்டு வந்த விடைத்தாள் பொதிகளை இணைப்பு நிலையத்தில் ஒப்படைத்தான். பதிவேட்டுப் பற்றுச் சீட்டுக்களைப் பெற்றான். நிம்மதிப் பெருமூச்சோடு மீண்டும் 'லான்ட். றோவரில்' ஏறிக் கொண்டான். செல்வமும் சேர்ந்து கொண்டார்.

"காசிம் நேரே சுத்ததனந்தா ஹோட்டலுக்கு விடுங்கோ. சாப்பிடுவோம்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தன் முடிக்கவில்லை. ஜீப்வண்டி ஹோட்டல் பக்கம் திரும்பியது. மாற்றமாகிச் செல்லவிருந்த நண்பர் ராஜசுந்தரத்தின் நினைவு வந்தது. அவரும் எதிரே வந்தார். அவரையும் அழைத்துக் கொண்டு பறப்பட்டான். வாகனத்தின் ரயர்கள் மழைநீரைக் கிழித்து இரைந்து சென்று சுத்தானந்தா ஹோட்டலை அடைந்தது. சாப்பிட்டு முடிந்தது. "இன்று யார் முகத்தில் விழித்தோம்?" செல்வம்தான் பேச்சைத் தொடங்கினார். "யார் முகத்தில் விழித்தாலும் கடமையைச் செய்ததில் மனத்திருப்தி ஏற்பட்டது. அல்லவா? அதற்காக நாம் கடவுளுக்குத்தான் நன்றி கூறவேண்டும்." என்றான் ஆனந்தன். வாகனம் கண்டி வீதியால் சென்றது. நேரம் பிற்பகல் மூன்று மணியிருக்கும். விடுதியினுள் சற்றுக் களைப்பாற எண்ணினார்கள். செல்வம் அறையினுள் சென்றார். மேசையில் தினசரிகள் கிடந்தன. ஆனந்தன் அவற்றைப் பார்த்து விட்டு உடைகளை மாற்ற எண்ணினான். கட்டிலில் சாய்ந்தவாறு அன்றயத் தினசரிகளைப் புரட்டினான்.

வாகனங்களின் இரைச்சல் கேட்டது. விடுதியின் முன்னால் இரண்டு வாகனங்கள் வந்து நின்றன. தடதடவென பூட்ஸ் சத்தங்கள். தொடர்ந்து ஸ்ரீலங்கா ராணுவத்தினரின் சுற்றி வளைப்பு. ஆனந்தன் வெளியில் வந்தான். அவனது கண்கள் சுழன்று நடப்பதை நோட்டம் விட்டன. கட்டிடங்களைச் சுற்றி இராணுவத்தினர் நின்றிருந்தனர். அவர்களின் கைகள் துப்பாக்கிகளை ஏந்தியிருந்தன. அசைந்தால் துப்பாக்கிகள் குண்டுகளைக் கக்கும். உயிர் பறிக்கும். ஒன்றும் புரியாது விழித்தான். ஒரு இராணுவக் கப்ரன் வாகனத்தில் இருந்து இறங்கினான். மெதுவாக நடந்து வந்தான். அவனைப் புடைசூழ பல இராணுவ வீரர்கள் பின்தொடர்ந்தார்கள். அவர்களை நோக்கி ஆனந்தன் எதிர்கொண்டான்.

"குட் ஆப்ரநூன். மாலை வணக்கம்" ஒரு முறுவலை வீசிவிட்டுக் கூறினான். "கான் ஐ ஹெல்ப் யூ பிளீஸ். உங்களுக்கு நான் உதவலாமா?" மிகப் பௌவியமாக ஆனந்தன் கேட்டான். சிப்பாய்களைக் கைகளால் விலக்கியவாறு கப்ரன் செனிவரத்ன முன்னே வந்தான்.

"மே..கத்தாவ எப்பா. ஓகொல்லோ கௌத? கதை வேண்டாம். நீங்கள் எல்லோரும் யார்"? கப்ரன் கேட்டான். ஸ்ரீலங்கா அரசு சிங்கள இளைஞர்களையே இராணுவத்தில் சேர்த்துள்ளது. சிறுபான்மையாக சில முஸ்லிம் இயைஞர்களையும் உள்ளீர்த்துள்ளனர். சிங்களம் ஆட்சி மொழி என்பதனை வலியுறுத்தி சிங்களத்திலேயே கடமையாற்ற ஏற்பாடு செய்துள்ளனர். மேலிடம் தொடக்கம் அடித்தளம்வரை உள்ள அனைத்து அலுவலர்களும் சிங்களத்தில் கையெழுத்திடும் மனப்பக்குவத்தை ஏற்படுத்தியிருந்தனர்.

அது இன்றுவரை கடைப்பிடிக்கப் படுகிறது. தமிழும் அரசகரும மொழி என்று கூறினாலும் நடைமுறையில் அது பேணப்படுவதில்லை. இதற்கு விதிவிலக்காக தமிழர்கள் ஆங்கிலத்தில் கையெழுத்திடுவது கௌரவமாகக் கருதப்படுகிறது. ஒரு தமிழன் தனது கையொப்பத்தினை தமிழில் இன்றுவரை இடுவதில்லை. அனைவரும் பாரதி கூறியதுபோல் நடிப்புச் சுதேசிகள்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தன் மண்டபக் கதவுகளை அகலத் திறந்து விட்டான். அவர்களை அழைத்தான். "கம் இன். சிற் டவுண் பிளீஸ்." கதிரைகளைக் காட்டி அவர்களை அமரும்படி கேட்டுக் கொண்டான். "நாங்கள் கல்விப் பணிப்பாளர்கள். பரீட்சை நடத்துகிறோம். விடைத்தாள் பொதிகளை ஒப்படைத்து விட்டு இப்போதுதான் வந்தோம்" ஆங்கிலத்தில் ஆனந்தன் கூறினான்.

கப்ரன் செனிவரத்னவுக்கு ஆங்கிலம் தெரியும். எனினும் அவனும் சிங்களத்தில்தான் கதைத்தான். வேட்டையாட வந்த இடத்தில் மரியாதை. அவர்கள் இதனை எதிர்பார்க்கவில்லை. சிப்பாய்கள் ஆளையாள் பார்த்துக் கொண்டனர். "இராணுவத்தைக் கண்டால் பயங்கரவாதிகள் சுட்டுவிட்டு ஓடுவார்கள். மிகக்கவனமாகப் பதுங்கி, ஆயத்தம் செய்து பிடிக்க வேண்டும். தமிழர்கள் அனைவரும் பயங்கரவாதிகள். அவர்களை நம்பவே கூடாது." பயிற்சியின் போது வழங்கப்பட்ட அறிவுரைகள் அவை. சிப்பாய்களுக்கு ஏமாற்றம். சுற்றி வளைத்து அவதானத்தோடு வந்தால் இப்படியொரு வரவேற்பா? அந்தக் கப்ரனுக்கு அதிர்ச்சி. தன்னைச் சுதாகரித்துக் கொண்டான். "மே.. ஆனந்தன் கௌத? ஆனந்தன் யார்"? கப்ரன் கேட்டான்.

"வெல். யேஸ்.. இற்ஸ் மி. நான்தான் ஆனந்தன். டிப்பியூட்டி டிறெக்டர் ஒப் எடியுகேசன். பிரதிக்கல்விப் பணிப்பாளர்" ஆனந்தன் விடையளித்தான். ஆனந்தனை உற்றுப் பார்த்தான். "ஆனந்தனைப் பிடித்து வா. மிகப்பயங்கரமான பயங்கரவாதி. முரட்டு ஆசாமி. மடக்கிப் பிடிக்க வேண்டும்." இது அவனது மேலதிகாரியின் கட்டளை. கப்ரன் செனிவரத்தின உள்ளத்தில் பெரும் போராட்டம். அவர் கூறிய கில்லாடி எப்படி இருப்பான்.? தனது மேலதிகாரியை நினைத்தான். "சேர் ஆனந்தன் எப்படி இருப்பான்." கப்ரன் செனிவரத்ன கேட்டான். "கறுத்து உயரமாக குறும்தாடியுடன் இருப்பான். துப்பாக்கியை லாவகமாகக் கையாளும் படு கில்லாடி. மிகக் கவனம்." தான் கற்பனை செய்த எதிரியை வர்ணித்தான். உண்மையில் அவன் கண்டதே இல்லை. மேலதிகாரி கூறிய ஆனந்தன் கறுப்பு. உயரமானவன். எண்ணிப் பார்த்தான். தனது உயரதிகாரி கூறியவற்றுக்கு எதிர்மாறாக இருக்கிறதே.

ஆனந்தனை உற்றுப் பார்த்தான். "இவன்தானா அவன். இல்லையே. இவனுக்குச் சிவந்த மேனி. இவன் அவர் கூறியது போல் உயரமில்லையே. முரட்டுத் தன்மையும் இல்லையே. மிகவும் மரியாதையாக நடந்து கொள்கிறான். மிகச் சாதுவாக இருக்கிறான். அவன் தோற்றத்திலேயே பண்பாடு விளங்குகிறது. இவன் உயரதிகாரியாக அரசாங்கத்தில் கடமை செய்கிறான். அதுவும் கல்விச் சேவையில். எதனை நம்புவது.?" அவர்களால் நம்ப முடியவில்லை. அந்த இராணுவக் கப்ரனுக்குச் சந்தேகம். தன்னைச் சுதாகரித்துக் கொண்டான். மீண்டும் அவனே தொடர்ந்தான்.

" மே .. ஆனந்தன் கௌத. மட்டக் கியான்ட. கூ இஸ் ஆனந்தன்.? பிளீஸ் ரெல் மி" கப்ரன் செனிவரத்ன வாயிலிருந்து ஆங்கில வார்த்தைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தன. ஆனந்தன் புன்னகைத்தான். ஆங்கிலத்தில் "நான்தான் ஆனந்தன்." ஆணித்தரமாகக் கூறினான். தனது அடையாள அட்டையைக் காட்டினான். கப்ரன் செனிவரத்னவுக்கு தலை சுற்றியது. வேறு வழியில்லாது வாகனத்தில் ஏறுமாறு உத்தரவிட்டான். செல்வம் கப்ரனிடம் ஓடி வந்தார். அவரது கண்கள் சிவந்திருந்தன. கோபம் ஒருபக்கம். துயரம் ஒரு பக்கம். "ஏன் அவரைக் கூட்டிப் போறியள்." இந்தக் கேள்வி கப்ரனைத் தாக்கியது. பெரும்பான்மை மக்களின் ஆட்சியில் இவர்களது கேள்விக்கு இடமில்லை. சிறுபான்மை மக்கள் வெறும் புழுக்கள். அடிமைகள் என்ற நினைப்பு. அவனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. "மே நாக்கியோ கட்ட வாகென இன்ர. ஏய் கிழவா வாயை மூடிக் கொண்டு கிட". அவன் அதட்டலோடு சத்தமிட்டான். "செல்வம் பேசாதிருங்கள். நான் போய் வாறன்." ஆனந்தன் கைகாட்டினான். செல்வம் செய்வதறியாது தடுமாறினார். அவரது கண்கள் குளமாயின. வாகனம் விரைந்தது.

மழை பொழிந்த வண்ணம் இருந்தது. மக்கள் போவதும் வருவதுமாக இருந்தனர். இராணுவ வாகனத்தைக் கண்டு ஒதுங்கினார்கள். ஆனந்தன் வாகனத்தில் இருந்து இறக்கப் பட்டான். அவனைச் சூழ்ந்து துப்பாக்கிகளுடன் இராணுவச் சிப்பய்கள். பெரிய பயங்கரவாதியைப் பிடித்த சந்தோசம் அவர்களுக்கு. ஆனந்தனைப் பார்ப்பதற்காகப் பல சிப்பாய்கள் எட்டிப் பார்த்தார்கள். சிப்பாய்கள் பேசிக்கொண்டார்கள். "பெரிய புலியைப் பிடித்துவிட்டீர்கள். எப்படி முடிந்தது?" ஆச்சரியத்தோடு கேட்டார்கள். "அதுதான் மச்சான் நம்ம கெட்டித்தனம்." பிரமாதமாகப் புளுகினான் ஒருவன். "மச்சான் இவன் புலியில்ல. எலி. இவனை ஏன்பிடிச்சாங்க. பாவம்டா." அனுதாபத்தோடு இன்னொருவன் கூறினான்.

"ஏய். கோப்ரல்.. பொல்லாத புலி இது. இப்படித்தான் இருக்கும். தெரியுமா"? வேறொரு சிப்பாய் உளறினான். கப்ரன் செனிவரத்ன முன்னால் நடந்தான். சிறிய கட்டிடம் வந்தது. "மே சார்ஜன் ஹேமசிறி ..மெயாவ பாரகண்ட". கப்ரன் செனிவரத்ன ஆனந்தனைப் பொறுப்பெடுக்கும்படி கட்டளையிட்டான். ஹேமசிறி திறப்புகளுடன் வந்தான். கப்ரன் ஆனந்தனைக் கைகாட்டி உள்ளே போகுமாறு கட்டளையிட்டான் அவன் உள்ளே நுழையும்போது பின்னாலிருந்து உதைத்தார்கள். இதனை அவன் எதிர்பார்க்கவில்லை. எதிரேயிருந்த சுவரில் போய் விழுந்தான். உடல் நடுங்கி நொந்தது. அவன் கண்கள் சுவர்களை நோட்டம் விட்டன. எங்கும் ரத்தக்கறை படிந்திருந்தது. பிணவாடை அடித்தது. ஏழடி நீளமும் ஏழடி அகலமும் கொண்ட காவலறை அது. காற்று உட்புக முடியாதபடியான வடிவமைப்பு. இரண்டரையடி அகலத்திலான இரும்புக் கம்பிகள் போட்ட கதவு. அதன் உயரம் ஐந்தடி. தூசிநிறைந்து அசுத்தமாக இருந்தது.

நேரம் நகர்வது கடினமாக இருந்தது. அவனது உள்ளத்தில் நாளை நடைபெறவிருக்கும் பரீட்சையே நிறைந்திருந்தது. காவலுக்கு நின்ற சிப்பாயை அழைத்தான். அவன் பல்லைக் கடித்தவாறே "மொக்கத்த"? "என்ன" என்றான். நாளைய பரீட்சை பற்றித் தெரிவித்தான். அவன் பதில் பேசாதிருந்தான். அறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருளாக இருந்தது. மழை பெய்து கொண்டிருந்தது. நிலம் ஈரமாகக் கசிந்திருந்தது. நுளம்பின் விளையாட்டு. அவை பறந்து காதுகளில் ரீங்காரம் செய்தன.

சரியாக மாலை ஏழரை மணியிருக்கும். சிப்பாய்கள் வந்தனர். ஒருவன் பூட்டைத் திறந்தான். அது கிரீச்சிட்டுத் திறந்து கொண்டது. "மே எலியட்ட என்ர" வெளியில் அழைத்தான். சிப்பாய்கள் புடைசூழ நடந்தான். அவர்களது கைகள் துப்பாக்கிகளை ஏந்தியிருந்தன. நூறு மீற்றர் தொலைவில் பெரிய கட்டிடத் தொகுதி இருந்தது. பெரியதொரு மண்டபம். அதனைத் தொடர்ந்து இரண்டு அறைகள். அந்த மண்டபத்தில் இரண்டு மேசைகள் கிடந்தன. நான்கு கதிரைகளும் தென்பட்டன. மெல்லிய பச்சை வெளிச்சம் மண்டபத்துள் பரவியிருந்தது. மண்டபத்துள் ஆனந்தன் நின்றான். ஆனந்தனைச் சூழ சிப்பாய்கள் நின்றார்கள். அவனை நோக்கி மூன்றுபேர் வந்தார்கள். முன்னால் வந்தவன் மேஜர் தரத்தில் இருந்தான்.

ஆனந்தன் பக்கம் மேஜர் வந்தான். ஆனந்தன் "குட் ஈவினிங்" என்றான் ஒரு முறுவலோடு. பதிலுக்கு அசட்டுச் சிரிப்பு மட்டும் தெரிந்தது. மேசைமேல் ஏறி இருந்தான். ஒரு கதிரையைப் பற்றினான். பக்கத்தில் இழுத்து அதன்மேல் காலொன்றை ஊன்றினான். மேசைமேல் வசதியாக இருந்தான். ஆனந்தனும் ஒரு அரசாங்க உயரதிகாரி. இந்த இராணுவ அதிகாரியும் உயரதிகாரிதான். இருவரும் பல்கலைக்கழக பட்டதாரிகள். ஆனாலும் இராணுவ அதிகாரி காரமாக இருந்தான். பெரும்பான்மை இனத்துவ மேலாதிக்கம் அவனிடம் தெரிந்தது. அவனிடம் மரியாதை என்பதே இல்லை. சிங்களத்தில் மட்டுமே உரையாடினான்.

"நம மொக்கக்த? உன்ர பேரென்ன"? அந்த இராணுவ அதிகாரி கேட்டான்
"ஆனந்தன்" கூறினான்.
"சரி. உன்னை விடுறன். உண்மைய ஒப்புக்கொள்". அந்த இராணுவ அதிகாரி இப்படித்தான் தொடங்கினான். ஆனந்தனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவன் எதனைக் கேட்கிறான். "எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. எதைப்பற்றிக் கேட்கிறீர்கள். சொன்னால் விளக்கமாகக் கூறுவேன்". என்றான். அந்த இராணுவ அதிகாரி அசட்டுச் சிரிப்புச் சிரித்தான். 'தமிங்களத்தில்' சொன்னான். 'தமிங்களம்' என்பது இங்கே தமிழ் கலந்த சிங்களம். "அடோவ் செய்யிறத செய்துபோட்டுக் கதையளக்கிறது.? "மே கப்ரன்! மெயா மொனவத கரே. கியான்ட. இவன் என்ன செய்தவன்? சொல்." கப்ரனைப் பார்த்தான். அதுவரை ஆனந்தனை ஏன் கொண்டு வந்தார்கள் என்பது அவனுக்குத் தெரியாது. கப்ரன் செனிவரத்ன தனது குறிப்புப் புத்தகத்தை விரித்தான். சிங்களத்தில் உளறிவைத்தான். "ஏய் நீ புலிகளுக்குச் சல்லி சேர்த்து கொடுத்தது. மீற்றிங் நடத்தினது. சாப்பாடு கொடுத்தது. கப்ரன் சரியாக சொல்லியிருக்கிறது. புரியுதா? உண்மையை ஒத்துக்கொள்." இராணுவ அதிகாரி அடுக்கிக் கொண்டு போனான். ஆனந்தனுக்குச் சிரிப்பு ஒருபுறம். வேதனை இன்னொரு புறம். கனவிலும் நினைக்காத வற்றைக் கூறுகிறானே? இவனெல்லாம் கற்றவனா? கல்வி என்பது இதுதானா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி என்பது என்ன? சரியானவற்றைத் தேர்ந்தெடுத்து வாழ்க்கையில் கடைப்பிடிப்பதுதானே? நிலையில்லா வாழ்க்கையில் நல்லனவற்றைச் செய்வதுதானே?. ஆனந்தன் கண்கள் சிவந்தன. கண்ணீர் பொங்கியது. ஆத்திரம் உடலை உலுக்கியது."வட் நொன்ஸன்ஸ்.? ஐ ஆம் ஏ டிப்பியூட்டி டிரக்ரர் ஒவ் எடியுகேசன். நான் ஒரு பிரதிக் கல்விப் பணிப்பாளர். உங்களைப்போல் நானும் ஒரு உயர் அதிகாரி. என்னிடம் இப்படிக் கேட்கலாமா"? வேதனையோடு ஆங்கிலத்தில் கூறினான். அந்த அதிகாரி ஆணவத்தோடு எழுந்தான். "அப்ப நீ உண்மை சொல்ல மாட்டா". கதிரையைக் காலால் உதைத்து எழுந்தான். "மே சார்ஜன், மெயாட்ட கொந்த பாடமக் தெமு. டக்கால என்னாம்" கூறி வெளியில் சென்றான். "மே ... மாத்தயோ.. அத்த கியாப்பாங். உண்மையச் சொல்." காவலுக்கு நின்ற சிபாய்கள் வற்புறுத்தினார்கள். அவன் நடந்தவற்றை யோசித்தான்.

மீண்டும் அந்த உயர் அதிகாரி உள்ளே வந்தான். ஆனந்தன் தன்னைச் சுதாகரித்துக் கொண்டான். அவன் இப்போது சீருடையில் இல்லை. அரைக்காற் சட்டையும் ரீ சேட்டும் அணிந்திருந்தான். ஆனந்தனை நோக்கி வந்தான். அதிகாரி கதிரையை இழுத்து ஆனந்தன் முன்னால் இருந்தான். "ஹலோ.. மிஸ்டர்.. உண்மையை ஒத்துக் கொள். இதில கையெழுத்துப் போடு". தாளை எடுத்து நீட்டினான். அந்த அதிகாரியின் கண்கள் சிவப்பேறி இருந்தன. மதுவின் மணம் வீசியது. ஆனந்தன் தாளைப் பார்த்தான். தனிச்சிங்களத்தில் ஏதோ எழுதப்பட்டிருந்தது. ஆனந்தனுக்கு ஆத்திரம் பொங்கியது.

"நான் குற்றம் ஏதும் செய்யவில்லை. ஏன் என்னைத் தொந்தரவு செய்கிறீர்கள்?" ஆனந்தன் கூறிமுடிக்கவில்லை. "மே சார்ஜன் மெயாட்ட தென்ட" மேஜர் முடிக்கவில்லை. ஆனந்தன் எதிர்பார்க்கவுமில்லை. கன்னத்தில் விழுந்த அறையால் தடுமாறிப்போனான். தரையில் விழுந்தான். அவனால் எழுந்திருக்க முடியவில்லை. தலையை நிமிர்த்திப் பார்த்தான். ஒரு கையை ஊன்றி ஏழும்ப முயற்சித்தான். முடியவில்லை. கோபம் பொத்துக் கொண்டு வந்தது. "ஆர் யூ அன் எடியூகேற்றற் ஒவ்பிசர். இஸ் திஸ் த வே யூ ரீற் அன் ஒவ்பிசர்?" ஆனந்தன் வேதனையோடு கூறினான். அது அந்த அதிகாரிக்கு வெறியைக் கூட்டியது. "அடோவ்.. கனக்கக் கதைக்கிறது நீ. பற தெமழ. நீதான் சரியான கொட்டியா. கிழட்டுப் புலி. உன்ன சும்மா விடமாட்டம். மே சார்ஜன்! புட் கிம் டவுண். விமட்ட தாண்ட" கட்டளை பிறந்தது. ஆங்கிலம், சிங்களம், அரைகுறைத்தமிழ் கலந்து மேஜர் பேசினான். அந்த சார்ஜன் ஆனந்தனை அலக்காகத் தூக்கிக் கீழே போட்டான். ஆனந்தனின் முதுகுப்புறம் தரையில் அடிபட்டது. அவன் எதிர்பார்க்காதது நடந்தது.

ஒரு கட்டுமஸ்த்தான சிப்பாய் வந்தான். ஆனந்தனின் நெஞ்சில் ஏறிக்குந்தினான். ஆனந்தனின் கைகளை இழுத்துத் தனது இரண்டு முளங்கால்களுக்குள் மடக்கி இறுக்கினான். மேசையொன்று நகர்த்தப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தம் கேட்டது. ஆனந்தனின் கால்கள் இரண்டும் மேசையின் விளிம்பைத் தொட்டன. குதிநரம்பு விளிம்பில் பதிந்திருந்தது. சிப்பாயின் முதுகுப்புறம் ஆனந்தனுக்குத் தெரிந்தது. அவன் நெஞ்சு வலித்தது. இரண்டு முரட்டுக் கைகளும் ஆனந்தனின் இரு கால்களையும் இறுக்கிக் கெட்டியாகப் பிடித்தன. இரண்டு சிப்பாய்கள் இருபுறமும் நின்றார்கள். அவர்களது கைகளில் மணல் நிறைத்த 'எஸ்லோன் பைப்' இருந்தன. ஆனந்தனின் முகம் மட்டுமே அசைந்தது. கைகள் சிப்பாயின் கால்களுள் சிக்கியிருந்தன. அதிகாரி ஆனந்தனின் முகத்துக்கு அருகே கதிரையில் இருந்தான். "இப்ப சொல். உண்மையை ஒத்துக் கொள்கிறாயா? இல்லையா?" ஆனந்தனுக்கு மூச்சு விடுவதே சிரமமாக இருந்தது. "சேர்! ஐ ஆம் இன்னசன்ற். எனக்கு ஒன்றுமே தெரியாது. நம்புங்கள்." ஆங்கிலத்தில் கூறினான்.

அந்த அதிகாரி அட்டகாசமாகச் சிரித்தான். "காப்பாங்.. அடியுங்கள்." கட்டளையிட்டான். எழுந்து அப்பாற் சென்றான். வேட்டை நாய்களுக்கு விருந்து கிடைத்துவிட்டது. காத்திருந்த சிப்பாய்கள் விளையாடினார்கள். எஸ்லோன் பைப் ஆனந்தனின் பாதங்களை முத்தமிட்டன. அடிமேல் அடி. ஒவ்வொரு அடியும் உச்சந்தலையில் உறைத்தது. காய்ச்சிய இரும்புக் கம்பியால் சுடுவதுபோல் சுட்டது. ஒவ்வொரு அடிக்கும் கைவிரல்கள் இறுக்கி மூடி விரிந்தன. தலை அரை வட்டத்தில் மின்விசிறியாக ஆடியது. கால்கள் மரத்து விட்டன. குதிகால் நரம்புகளை மேசை விளிம்பு வெட்டியது. தோல் கிழிந்து இரத்தம் கசிந்து கீழ் நோக்கி வழிந்தது. கண்களில் இருந்து கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. வாய்தடுமாறி புலம்பியது. உடலெங்கும் வெயர்த்து மூச்சுத்தடுமாறி ...மரண அவஸ்த்தையில்.. திணறி மயக்கம் வந்தது. மயங்கிக் கீழே சரிந்தான். கனவில் மிதந்தான்.

அறியாத உலகத்தில் அந்தரத்தில் பறந்து விழுவதுபோன்ற உணர்வில் வாய் அரற்றியது. உடல் அசைவற்றுக் கிடந்தது. மனிதனாகப் பிறப்பது அரிதாம். அதிலும் அரிது கூன், குருடு நீங்கிப் பிறப்பது அரிதாம். ஆனால் அரிதான மனிதப்பிறவியில் இப்படி ஒரு இக்கட்டான கேவலமான அவல நிலையா? துன்பங்களையும் துயரினையும் நீக்கி மனிதன் உன்னத நிலையை அடையவேண்டும் என்பதற்காகத்தானே புத்தபெருமானும், ஜேசு, நபிகள் போன்றோரும் அவதரித்துப் போதித்தார்கள். புத்தனைப் பின்பற்றும் மனிதர்களா இப்படியான ஈனச்செயல்களில் ஈடுபடுகிறார்கள். அந்த அடிவதை வேதனையின் மத்தியிலும் ஆனந்தனின் மனதில் கேள்விகள் எழுந்தன. விடைகாணமுடியாது அலைகளாக விரிவடைந்து சென்று கொண்டிருந்தன. கனவுலகில் சஞ்சரித்தான். அதிகாரி வந்தான். பார்த்தான். "மே... சுட்டக் வத்துற தாண்ட" தண்ணீரை ஊற்றுமாறு சொன்னான். சிப்பாய்கள் ஆனந்தனின் முகத்தில் தண்ணீரை அடித்தார்கள். தண்ணீரில் அப்படியென்ன சக்தி இருக்கிறது?. தண்ணீர் பட்டதும் ஆனந்தனுக்கு நினைவு துளிர்விட்டது. மெதுவாக விழிகளைத் திறந்து பார்த்தான். அவன் உடல் இரும்புக் கூண்டுக்குள் மரத்திருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா

அம்மாவின் மரணச்செய்தி நான் எதிர்பார்த்ததுதான். ஆனாலும் அந்தச் செய்தி என்னை அசைத்துவிட்டது. ஆடிப்போய்விட்டேன். என்னதான் ஆறுதல் சொன்னாலும் மனம் அழுதுகொண்டிருந்தது. செய்திகேட்டு ஓடிவந்து அவரது கால்களைப் பற்றிக் கொண்டு அழுது புலம்பி, விக்கித்துப் போனேன். மனம் அழுது கொண்டிருந்தது. அம்மாவின் முகத்தைப் பார்த்துப் பார்த்து "எப்படி இருந்த முகம்" இப்படி... ஆனாலும் அந்தப்புன்னகை மட்டும் அப்படியே இருந்தது. இந்த நாட்டில் பெண்களாகச் சிறப்பாகத் தமிழ் பெண்களாகப் பிறந்தவர்கள் அனுபவிக்கும் துயரங்கள் அம்மாவின் நெற்றியில் கோடுகளாக அனுபவமுத்திரை குத்திவிட்டிருந்ததை என்னால் உணரக்கூடியதாக இருந்தது.

"எத்தனை துயரங்கள்.? எவ்வளது இன்னல்கள்.? சமூகத்தில், அரசியல் சூழலில் அம்மா அனுபவித்திருப்பார்.? ஏனிந்த மனிதப்பிறவி கொடுத்தாய் இறைவா"? மனம் பதறி வெந்தது. அம்மாவின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சுற்றம் சூழ்ந்து நிற்கிறது. அம்மாவுக்கு நான் என்ன செய்தேன்? என்னைப் பெற்று வளர்த்து படிக்கவைத்து "விரும்பியவற்றைத் தந்து வளர்த்த அம்மா" இன்று பிணமாகக் கண்மூடிப் படுத்திருக்கிறா. நான் என்ன சொன்னாலும் அவவுக்குக் கேட்கப் போவதில்லை. இனி திரும்பவும் வரப் போவதுமில்லை. எந்தப் பிறவியிலும் சந்திக்கப் போவதுமில்லை. நாம் மீண்டும் பிறக்கப் போவது என்ன நிட்சயம்? உறவுகளை முறித்து "தனது நடிபங்கினை முடித்துப் புறப்பட்டுவிட்டாள்" எங்களை வளர்த்து ஆளாக்க அவள் பட்ட துன்பங்கள் படமாகவிரியுது. "அம்மா" என மனம் கதறுகிறது.

அப்பா எனது தம்பி பிறந்ததும் நோய்வாய்ப் பட்டு இறந்துவிட்டார். அப்பாவை கற்பனை செய்து பார்க்கிறேன். ஒன்றரை அல்லது இரண்டு வயதின் நினைவுகள் கனவுபோல் மங்கலாகத் தெரிகின்றன. சரியாக எனது நினைவுக்குள் அப்பா பிடிபடவில்லை. அப்பாவின் பிரிவால் அழுது புலம்பிய அம்மாவை ஊரவர்கள் தேற்றினார்கள். சொல்லுவது யாருக்கும் இலகுவானதுதான். ஆனால் அதனை அனுபவித்துப் பார்த்தால்தான் தாற்பரியம் புரியும். அந்தக் காட்சிமட்டும் பசுமரத்தாணிபோல் பதிந்து விட்டது.

அம்மாவுக்கு மூத்தவர் எங்கட பெரியம்மா. என்னோடு நல்ல வாரப்பாடு. அவவுக்கு இராசம்மா பெயர். பெயருக்கேற்ற குணமும் அழகும் கொண்டவர். அடுத்து அம்மா. அவருக்குப் பின் மயில்வாகனம் மாமா. அடுத்துத் தங்கராசா மாமா. தங்கராசமாமா எனக்கு ஒரு ஐந்து வயதுக்கு மூத்தவர். ஆனால் நாங்களிருவரும் கூட்டாளிகள். இருவருக்கும் அடிதடி சண்டை வரும். அடுத்த நிமிசம் ஒன்றாகி விடுவோம். இரண்டேக்கர் காணியில் எங்கள் ஓலைவீடு இருந்தது. பின்னால் சிறிய தோட்டமும், துரவும் ஐந்தாறு பசுமாடுகள் எனக்கலகலக்கும். முன்னால் மணல்பரந்த முற்றம். அம்மா வாசலில் குந்தியிருந்து மணலைக் குவிக்கிறதும், பின் அதனைப்பரவுவதாகவும் இருப்பார். மணலைப் பரவிக்கொண்டு நினைந்து நினைந்து அழுவதும், சற்று ஓய்ந்து பின்நினைந்து அழுவதுமாக இருப்பார். அம்மா எங்கட வளவைவிட்டு வெளியில் போனதில்லை.

எனக்கு விபரம் தெரியாது. அம்மா அழும்போது சேர்ந்து அழமட்டும் தெரிந்திருந்தது. காரணகாரியம் தெரியாது. சனங்கள் தொட்டந்தொட்டமாக வருவதும் ஆறதல் கூறுவதும் புரியுது. "செல்லம்மாக்கா". அழுது என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்போறா "நாமளும் அந்த வழியில போகத்தானே போறம். இருக்குமட்டும் இந்தப்பச்சமண்கள பார்த்தெடுத்து படிப்பித்து ஆளாக்கப்பார். .. அதுகள் உன்னக் காப்பாத்துங்கள். பிறந்தநாங்க ஒரு நாளைக்குச் சாகத்தான் போறம். போகமட்டும் .. வாழத்தானே வேண்டும்" இரத்தினக் குஞ்சியாத்தைக்கு சுடலை ஞானம் அதிகம். அம்மாவைத் தேற்றிக் கொண்டிருந்தா. பெண்களெல்லாம் எவ்வளவோ ஆறுதல்களைச் சொன்னார்கள். சொன்ன வழியே சென்றும் விட்டார்கள். மாமாவுக்கு மட்டும் துயரம் போகவில்லை. தாத்தா பெரியதம்பி மகளுக்குப் பக்கத்தில் குந்தியிருந்தார். ஆச்சி மாணிகத்தார் அழுதவண்ணம் மகளின் தலையை வாஞ்சையோடு வருடிவிட்டார். தாத்தாவும் ஆச்சியும் எங்கள்மீது அளவுக்கு அதிகமான பற்றை வைத்திருந்ததை நானறிவேன். எனக்கு நல்ல நினைப்பிருக்கிறது. அம்மாவின் துணிச்சலை மாமா மயில்வாகனம் சொல்லிக் கொண்டிருப்பார். "என்ர அக்கா ஒரு துணிச்சல்காரி. என்ர பிறவிக்கு முதல் நான் போயிடவேணும்" அவர் சொன்னது போல் போய்ச் சேர்ந்து விட்டார். அம்மாதான் கடைசியில் புறப்பட்டார்.

மாமா ஒரு புரட்சிகரவாதி. படிக்காத மேதை. அதேபோல் அவரது தோழன் கணபதிப்பிள்ளையும் புரட்சிகர மனமுடையவர்தான். இருவரும் இணைபிரியாத் தோழர்கள். வயல்வெளிக்குச் சேர்ந்தே போவார்கள். வெளியூர்ப் பயணம் என்றாலும் சேர்ந்துதான் போவார்கள். விடிகாலைப் பொழுதில் தீனேரியில் உள்ள பட்டியில் பாலெடுத்துவரச் செல்வார்கள். பெரிய மாட்டுத்தாவளத்தில் மாடுகளை இனங்கண்டு பால்கறந்து. பாற்குடங்களைக் காத்தடியில் கொழுவித் தோளில் சுமந்து கொண்டு வருவார்கள். குறிப்பிட்ட தூரம் வரை காத்தடி ஒரு தோளில் இருக்கும். அவர்களது நடையில் காத்தடி வளைந்து எவ்வும். தோள்மாறும் போது இரண்டு காத்தடிகளும் ஒரே நேரத்தில் சொல்லி வைத்தாற்போல் மாறும். வீடுவரை கதை தொடரும்.

களைப்பே தெரிவதில்லை. கணபதிப்பிள்ளைக்கு மயில்வாகனத்தில் மதிப்பு இருந்தது. அதேபோல் பிரியமும் இருந்தது. இருவரும் கட்டைப் பிரமச்சாரிகள். மாலையானதும் கிராமம் களைகட்டும். அண்ணாவியார் தாமோதரம் நாடக ஏட்டோடு நிற்பார். பத்தினியர் ஆர்மோனியம் வாசிப்பார். நாடகம் தூள்பறக்கும். சாரங்கதாரா. சத்தியவான் சாவித்திரி வெள்ளோட்டம் நடக்கும். மயில்வாகனம் புள்ளங்குழல் வாசித்து நடிப்பார். கணபதிப்பிள்ளை அண்ணாவியாரின் சொற்படி நடித்துக் காட்டுவார்.
நண்பர்களிடையே நெருக்கமான பிணைப்பு ஏற்பட்டுவிட்டது. ஆளையாள் நன்றாகப் புரிந்து கொண்டிருந்தார்கள். மயில்வாகனத்தின் கவலைகளை எப்படிப் போக்கலாம். அவரது போக்கில் மாற்றத்தைக் கண்டு கணபதிப்பிள்ளை வருந்தியதுண்டு.

எப்படியும் இண்டைக்குச் சொல்ல வேண்டும். மனதில் தைரியத்தை வரவழைத்தார். "மயில்வாகனம்" நீ ஏன் இன்னும் கலியாணம் முடிக்கல்ல.? துணிந்து இப்படித்தான் தொடங்கினார். "அது சரி. நீ இன்னுமேன் கலியாணம் செய்யல்ல? சொல்." மயில்வாகனம் குறுக்காடினார். "நானின்னும் யோசிக்கல்ல. காலம் கிடக்கு. அது கிடக்கட்டும். நான் சொன்னதுக்கு என்ன சொல்கிறாய்." "எனக்கென்ன கலியாணம்? உனக்குத் தெரியும்தானே? என்ர அக்கா..விதவையாக இருக்கக்குள்ள எனக்கென்ன கலியாணம் வேண்டிக்கிடக்கு"? அலுப்போடு மயில்வாகனம் பதிலளித்தார். "இஞ்சார் 'மயிலவாகனம்' இப்படியே தத்துவம் பேசி வாழ்க்கைய வீணாக்கக் கூடாது. மனிதப் பிறவி இனியும் நமக்கு வரப் போறதில்ல. இந்தப் பிறவியிலேயே நமது கடமைகள உணர்ந்து ஏதாவது நல்லது செய்யவேணும்." கணபதிப்பிள்ளை அறிவுரை சொல்லிக் கொண்டே நடந்தார். "நீ சொல்வது நல்லாத்தான் இருக்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் என்ர அக்கா இரண்டு பிள்ளைகளோடு விதவையாக இருக்கக்குள்ள. நான் எப்படி தாம்பத்தியத்தில் இறங்கிறது.? சொல்." மயில்வாகனம் பெருமூச்சோடு பாரத்தை இறக்கி வைத்தார்.

"என்ர அப்பா சின்னத்தம்பி ஒரு லட்சியவாதி. ஒரு புதுமைவிரும்பி. அவர் இப்போது இல்லை. அவரது ஆசைகளை நான் நிறைவேற்றவேணும். அதற்கு உன்ர சம்மதம் தேவை. கிடைத்தால் நான் உன்ர சுமையை இறக்கத் தயார்". கணபதிப்பிள்ளை சொன்னவை மயில்வாகனத்துக்கு விளங்கவில்லை. "என்ன சொல்ல வாறாய் நீ?" "இஞ்ச மயில் நான் சொல்லுறதக் கவனமாகக் கேள். ஆனால் நீ கோவிக்கக் கூடாது. கோவிக்கிறதெண்டால் நான் சொல்ல வரல்ல". "நான் ஏன் கோவிக்கிறன். நீ சொல். கேட்கிறன்." "சரி எனக்குச் சுத்திவளைச்சிச் சொல்லேலா" கணபதிப்பிள்ளை இழுத்து இழுத்துச் சொன்னார். "நானும் உன்னப் போலத்தான் இரண்டாம் வகுப்போட படிப்ப நிற்பாட்டிப் போட்டன். எங்கட அப்பாவைப் போல நானும் நல்ல காரியங்களைச் செய்யவேணும். நான் நேரடியாகச் சொல்றன். உன்ர அக்காவநான் கட்டினால் என்ன"? என்னால உன்ர அக்காவயும் பிள்ளயளையும் காப்பாத்த முடியும். அதுமட்டுமில்ல நான் உன்னோட நல்லாயிருக்கிறத நம்மட ஊர்மக்கள் பிழையாகக் கதைக்கிறதையும் யோசி. அவங்கட வாயமூட எனக்கொரு வாய்ப்பைக் கொடு. நீ என்ன சொல்லுறாய்,"? கணபதிப்பிள்ளைக்கு மயில்வாகனத்தின் முகத்தைப் பார்க்கக் கூச்சமாக இருந்தது. நிலத்தைப் பார்த்தவாறே நடந்தார்.

மயில்வாகனம் தான் மலையிலிருந்து பள்ளத்தில் இடறி வீழுவதாக உணர்ந்தார். "நீயா..? என்ன உளறுறாய்? நீ என்ர கூட்டாளி. சின்ன வயதிருந்தே சேர்ந்து இருக்கிறம். நீ நல்லா யோசித்துப்பார் இது சரிப்பட்டு வராது". மயில்வாகனம் விரைந்து நடந்தார். "ஏன் சரிப்பட்டு வராது. நான் உண்மையாகத்தான் சொல்லுறன். நீ உன்ர அக்காட்ட ஒருக்காக் கேட்டுச் சொல்." கணபதிப்பிள்ளை சொல்லிக் கொண்டு மயில்வாகனத்தை முந்திக் கொண்டு விரைந்தார். மயில்வாகனத்தின் நடையில் ஒரு தளர்வு தெரிந்தது. அப்படியே நின்றுவிட்டார். உள்ளமெல்லாம் சோகம் குடிகொண்டு விட்டது. வழிநெடுகிலும் யோசித்தவண்ணம் மெதுவாக நடந்தார்.

தாத்தா தோட்டத்துக்குள் மண்வெட்டியுடன் வேலையில் ஈடுபட்டிருந்தார். பெரிய மனச்சுமையோடு மாமா அவரிடம் போனார். கதையை மெல்ல அவிழ்த்து விட்டார். ஆச்சியும் தேநீரோடு அங்கு வந்து விட்டார். "மயில்வாகனம் நீ சொல்வதிலும் உண்மையிருக்கு. செல்லம்மாவுக்கு இப்பதான் இருபத்திநாலு வயது. இரண்டு பிள்ளையளுக்குத் தாய். இந்த மூன்று வருசமாய் அவள் படும் கஸ்டம் எங்கட மனசப் போட்டுப்பிழியுது. அவன் பொடியனும் நல்ல குணசாலி. அவனுக்கும் யாரும் இல்லை. தன்னந்தனியாக இருக்கிறான். அத்தோட இந்தச் சனங்கள் சோடிச்சுப் போட்டுதுகள். ஒரு அவப்பேர் வந்து எங்கட காதில விழுந்து கொண்டுதான் இருக்கு. ஒருக்கா நீ உன்ரஅக்காட்டக் கேட்டுப்பார்". மந்திராலோசனையின் பின் 'நல்லமுடிவு' தாத்தா சொன்னார்.

மயில்வாகனமாமா மெதுவாக என்ர அம்மாவிடம் சென்றார். அம்மா சோகமே உருவாகக் கண்ணீர் சிந்தி அழுதவண்ணம் இருந்தார். மயில்வாகனமாமாவால் தாங்கமுடியவில்லை. அவரது கண்கள் சிவந்து பொங்கியது. "அக்கா உனக்கு என்ன நடந்ததென்று எனக்குத் தெரியும். இந்தக் கேடுகெட்ட சமூகம் ஈவிரக்கமில்லாமல் சொல்லால சுடும். நான் பொல்லாதவனாக மாறத்தான் வேணும். இவங்களுக்கெல்லாம் ஒரு பாடம் படிப்பிக்க வேணும்." கோபாவேசத்தோடு வெளியில் புறப்பட ஆயத்தமானார். அம்மாவுக்குத் தெரியும். மாமா ஒரு முன்கோபியென்று. "தம்பி நில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்துக்குப் பயந்து பரதேசம் போவதா? நீ ஏன் கோவிக்கிறாய்? எலும்பில்லாத நாக்கு வழியத்தான் செய்யும். நமது தலையெழுத்து. பேசாமல் கிடப்பம்" அம்மாவின் பதில் மாமாவை உறையவைத்தது.

மயில்வாகனத்தின் சத்தத்தைக் கேட்டவாறே இராமலிங்கர் வந்தார். அவர் அம்மாவின் மாமா. "செல்லம்மா எனக்கு எல்லாம் தெரியும். நீ ஒன்டுக்கும் கவலப்படாத.. நீ நல்லாயிருப்பாய். உன்ர இரண்டு பிள்ளயளும் நல்லாயிருக்கவேணும். நான் சொல்லுறத நல்லாக் கேள். நான் உனக்குத்தாய் மாமன். நல்லதத்தான் சொல்லுவன். கணபதிப்பிள்ளை நல்ல பொடியன். ஒழுக்கமான புள்ள. உன்னால அவனுக்கும் ஒரு அவப்பேர் வந்திற்று. உனக்குந்தான். நீ அவன அலட்சியப்படுத்தாம ஏற்றுக்கொள்." மயில்வாகனத்துக்குத் தூக்கி வாரிப்போட்ட பிரமை. தான் பேசவேண்டியதை மாமா சொல்லிப்போட்டார்.

தோட்டத்துக்குள் இருந்து தாத்தாவும், ஆச்சியும் வந்தார்கள். எல்லாரும் ஒன்றாகப் புத்தி கூறினார்கள்."உனக்காக இல்லாட்டியும் உன்ர பிள்ளையளுக்காக நீ ஏற்றுக் கொள்ளத்தான் வேணும். அதுகளத் "தகப்பனத்தின்னியள்" என்று இந்தச் சனங்கள் சொல்ல இடம் வைக்காத." அம்மாவின் கண்களில் இருந்து கண்ணீர் வெள்ளம் பெருக்கெடுத்தது. அவளது துயரங்களைக் கண்ணீர் ' கரைத்துக் கொண்டிருந்தது. பெண்ணாகப் பிறந்தால் எத்தனை இடையூறுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. கணவனை இழந்தால் விதவை. அவள் சமூகத்துக்கு உதவாதவள். முழிவியளத்துக்குக் கூடாது. பயணம் போகிறவர்களும் ஒதுங்கி வழிமாற்றிச் செல்வதை அம்மா கண்டிருக்கிறாள். விரும்பிய நிறத்தில் சேலைகட்ட முடியாது. பூச்சூடவோ, பொட்டுவைக்கவோ முடியாது. இது எங்கள் சமூக அமைப்பு.

அம்மா இந்த மூன்று வருசத்தில அனுபவித்த துயரங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. நெல்லை அவித்துக் காயவைப்பாள். மத்தியானம் உரலில் போட்டு உலக்கையால் குற்றி அரிசாக்குவாள். அரிசியை மீண்டும் உரலில் போட்டு தீட்டுவாள். பின்னேரம் அரிசி விற்றாகிவிடும். அதிகாலை நான்கு மணிக்கெல்லாம் எழுந்து விடுவாள். அடுப்பு எரிந்து கொண்டிருக்கும். அப்பம் சுட்டுக் கொண்டிருப்பாள். கண்ணீர் வழிந்தோடும். துடைத்துக் கொள்வாள். அப்பத்தை மாமாதான் முதலில் வாங்குவார். பட்டியில் உள்ளவர்களுக்கும் எடுத்துச் செல்வார். அம்மா எங்களை வளர்ப்பதற்காக இளம்வயதில் தன்னைத் தியாகம் செய்ததை நானின்னும் மறக்கவில்லை. கரைப்பவர் கரைத்தால் கல்லும் கரையும். அம்மாவும் கரைந்து போனார். அம்மா மாமாவைப் பார்த்தார். மாமா இராமலிங்கரைப் பார்த்தார். "உன்னாலதான் இவன் கலியாணமும் முடிக்கல்ல. அவள் சௌந்தரம் இவனுக்காகவே காத்துக்கிடக்கிறாள். உன்னால எத்தனைபேருக்குக் கஸ்டம்." இராமலிங்கர் குரலைத் தாழ்த்தி உயர்த்திச் சொன்னார். அம்மாவின் முகம் இறுகிக் கொண்டு வருவது தெரிந்தது. என்னையும் தம்பியையும் பார்த்தாள்.

"வாறது வரட்டும். இதற்கு நானேன் தடையாகவேணும்? உங்கட விருப்பம் எதுவோ அதுக்கு நான் தடயில்ல." அம்மாவின் சம்மதம் பெற்றாகிவிட்டது. அது நடந்தேறிவிட்டது. "இவள் பொல்லாத பொம்புள. அவன மயக்கிப் போட்டாள்". தொடக்கத்தில் கொஞ்சம் ஊருக்குள் நச்செடுப்புத்தான். நாளாக எல்லாம் சரியாகிப் போய்விட்டது. . நான் பருவமறிந்த நாட்தொடக்கம் எனக்கு அப்பா கணபதிப்பிள்ளைதான். ஒரு இளம்விதவைக்கு வாழ்வளித்து அவளது பிள்ளைகளைத் தனது பிள்ளைகளாய் போற்றிய பெருமையை அப்பா பெற்றுவிட்டார். பெற்றால்தான் பிள்ளையா? பாசத்தோடு வளர்த்தெடுத்து ஆளாக்கி விடுவதென்பது எத்தனை பெரிய சாதனை. இது மகத்தான தியாகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லவா? இன்றைய இந்தப் போராட்ட காலத்தில் எத்தனை தாய், தந்தையில்லாப் பிள்ளைகள் தவிக்கிறார்கள். அப்பாவின் தியாகத்தை எண்ணி வியக்கிறேன். நான் உண்மையில் புண்ணியஞ்செய்திருக்க வேண்டும். அதனால்தான் இப்படியான வாழ்க்கையை இறைவன் தந்துள்ளான்.

நான்தான் அவரின் மூத்தமகன். தம்பி அவரின் செல்லப்பிள்ளை. அவரது வாரிசுகளாக எனக்கு இரண்டு தம்பிமாரும் ஒரு தங்கச்சியும் வந்து விட்டார்கள் எங்கள் குடும்பம் பெரிதாகிவிட்டது. என்னைப் படிப்பிக்கத் தன்னை உருக்கி அல்லும் பகலும் பாடுபட்டார். நான் அரசாங்க உத்தியோகத்தில் சேர்ந்து முதல்சம்பளத்தை அவர் கைகளில் திணித்து அவரது கால்களில் விழுந்து வணங்கியபோது அவரென்னை வாரியெடுத்து அணைத்த அந்த வாஞ்சையும், அவர் அடைந்த சந்தோசமும் அப்படியே மனதில் பதிந்துவிட்டது. அம்மா பூரித்துப் போனார். அப்பாவைப் பற்றி அம்மா பெருமையாகச் சொல்வார்.
அந்த வாழ்க்கையும் அம்மாவுக்கு நீடிக்கவில்லை. எங்களுக்கு அப்பா அந்தஸ்த்தைத் தந்தவரும் அம்மாவைத் தவிக்கவிட்டு தனது நடிபங்கை முடித்துப் போய்விட்டார். அம்மாவுக்கு இப்படியொரு இடியா? அம்மாவின் வாழ்க்கை இப்படியாகுமென்று கனவிலும் எண்ணவில்லை. "என்ர பிள்ள இருக்கிறான். அவன் எல்லாத்தையும் பார்த்துக் கொள்வான்". இதுதான் அம்மாவுக்கு அப்பா சொன்ன ஆறுதல் வார்த்தையும் இறுதி வார்த்தையும். அம்மா அனுபவித்த துன்பங்கள் கண்முன்னே வந்து நிற்கின்றன. இனவன்செயலின் போது சிங்கள இராணுவத்தால் கைது செய்யப்பட்ட தம்பி இதுவரை திரும்பவில்லை. அம்மா தனது இதயத்தை அழுத்தியவாறு குந்தியிருந்து அழுது வடித்த கண்ணீரும் புலம்பலும் உயிர் போகும்வரை தொடர்ந்தது. எனக்கு நெஞ்சு வெடிக்குமாப்போல் இருக்கிறது.

குவிந்து நின்ற சனங்கள் ஒப்பாரி வைக்குதுகள். ஒவ்வொருவரும் தங்களுக்கு அம்மா செய்த உதவிகளை ஒப்பாரியாக ஒப்புவித்துக் கொண்டிருந்தார்கள். அம்மாவின் உடலைக் குளிப்பாட்டி காலில் "அரப்பு" வைத்துவிட்டு விம்முகிறேன். சடங்குகள் நிறைவேறுகின்றன. அம்மாவின் உடல் சவப்பெட்டிக்குள் வைத்தாகிவிட்டது. அம்மாவின் முகத்தில் புன்னகை எட்டிப்பார்ப்பது போன்ற பிரமை எனக்கு. கண்மூடி நிற்கிறேன். விழிகள் உடைப்பெடுக்கின்றன. "இந்த மனிதப்பிறவியின் பிடியிலிருந்து விட்டுபட்டு "விட்டுவிடுதலையாகிச்" செல்ல விடைகிடைத்து விட்டது. இனி எந்தச் சமூகமும் என்னை ஒன்றும் செய்யப்போவதில்லை. உயிருடன் இருக்கும்வரை நான் பட்ட துன்பங்கள், துயரங்கள் இனி என்னை ஒன்றுஞ்செய்யப் போவதில்லை." அம்மா எனது செவிப்பறையில் சொல்வது போலிருந்தது. சித்தப்பா அம்பலவாணரின் குரல் அனைவரையும் அமைதிப் படுத்துகிறது.

"எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்,
எம்மாடு சும்மாடு ஏவனல்லாள்
செத்தால் வந்துதவுவார் யாருமில்லை
சிறுவிறகால் தீ மூட்டிச் செல்லா நிற்பார்..."

நினைவுக்குத் திரும்புகிறேன். கூப்பிய கைகளோடு.. விழித்திரையை உடைத்துக் கொண்டு கண்ணீர் வெள்ளம் பாய்கிறது. கணீரென்ற அவரது குரலில் நான் மெய்மறந்து மனிதப் பிறவியின் அல்லலை யாசிக்கின்றேன். அம்மா தனது பயணத்தைத் தொடங்கிவிட்டாள். சீதையை நிலமடந்தை நிலம்பிளந்து ஏற்றுக் கொண்டது போல் அம்மாவின் உடலையும் நிலமடந்தை தன்னுள் சங்கமமாக்கிக் கொண்டாள். இனி எப்போது அம்மாவைக் காண்பேன். "அம்மா...அம்மா... எங்களை வளர்ப்பதற்காய்...நீ பட்ட துயரங்கள் எத்தனை"?.. வாய் புலம்புகிறது. என்னுள் நான் அழுது கொண்டிருக்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் நூல்கள்

1. இன்பக் கனிகள் - சிறுவர் பாடல்கள்
2. பாட்டுப் பாடுவோம் - சிறுவர் பாடல்கள்
3. காகமும் தம்பியும் - சிறுவர் பாடல்கள்
4. பாடி ஆடுவோம் - சிறுவர் பாடல்கள்
5. கடலும் காவேரியும் - சிறுவர் பாடல்கள்
6. சின்னச் சின்னப் பாட்டு - சிறுவர் பாடல்கள்
7. மனதுக்கினிய பாட்டு - சிறுவர் பாடல்கள்
8. ஆனந்தமான பாட்டு - சிறுவர் பாடல்கள்
9. சகோதரராய் வாழ்வோம் - சிறுவர் பாடல்கள்
10. ஆடி மகிழ்வோம் - சிறுவர் செயல் விளையாட்டு
11. பூஞ்சிட்டுக்கள் - சிறுவர் கதைகள்
12. சின்னத்தேவதைகள் -சிறுவர் கதைகள்
13. கண்ணனும் இராமனும். சிறுவர் கதைகள்.
14. தங்க மாம்பழம் - சிறுவர் கதைகள்
15. பளிங்குத் தீவு சிறுவர் நாவல்
16. பயங்கொள்ளலாகாது பாப்பா சிறுவர் நாவல்.
17. காட்டில் கலவரம்.- சிறுவர் நாவல்
18. உல்லாசப் பயணம் - சிறுவர் நாவல்
19. மனதில் உறுதி வேண்டும் - சிறுவர் நாவல்
20. வாக்கினிலே இனிமை வேண்டும் -இளைஞர் நாவல்
21. கேணிப்பித்தன் கவிதைகள் - கவிதைத் தொகுதி.
22. அந்த ஆவணி ஆறு சிறுகதைகள்
23. வம்மிப் பூ - சிறுகதைகள்
24. கேணிப்பித்தன் கதைகள்
25. அற்புதமான வானம் - சிறுவர் கதைகள்
26. சிறகு வைத்த கதைகள் - சிறுவர் கதைகள்.
27. துணிச்சல் மிக்க சுந்தரி சிறுவர் நாவல்
28. சுனாமி தந்த உறவு. சிறுவர் நாவல்.
29. ஏன் வந்தாய் - சிறுகதைகள்
30. அனர்த்த முகாமைத்துவம் ஒரு அனுபவ அணுகுமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலாசிரியர்.........



அன்பு வாசக நெஞ்சங்களே!

இச்சிறுகதைத் தொகுப்பின் ஆசிரியர் கேணிப்பித்தன் ச.அருளானந்தம் அவர்கள் தனது படைப்புக்களால் தமிழ் இலக்கியத்திற்கு அணிசேர்ப்பவர். பல்கலைக்கழகப் பட்டதாரியான இவர் உயர் அதிகாரியாக இருந்து கல்விச்சேவையில் இணைந்து பணியாற்றியவர். அதே சமயம் அநாசயமாக இருபத்தியெட்டு நூல்களை இலக்கிய உலகில் தவழவிட்டவர். சிறுவர் இலக்கியத்துக்கு அதி உயர் பங்களிப்பினை வழங்கியவர். தனது அழகிய எளிய தமிழால் சிறுவர்தம் மனதைக் கொள்ளை கொண்டவர். அதனால் பல சாஹித்திய மண்டலப் பரிசுகளைத் தட்டிக்கொண்டவர். மரபுக்கவிதைகளை இன்றும் யாக்கக்கூடிய விரல்விட்டு எண்ணமுடிந்த மிகச்சிலரில் இவர் மிகவல்லவர்.

தன்னைச் சூழ நடக்கும் சம்பவங்களைக் கூர்ந்து அவதானிப்பதிலும், அவற்றைக் கலையம்சத்துடன் சிறுகதைகளாக மெருகூட்டுவதிலும், மக்கள் விரோதச் சக்திகளுக்கு சாட்டையடி கொடுப்பதிலும் இவர் பெரும் கில்லாடி. இவர் கலாபூஷணம் விருதினைப் பெற்றிருந்தும்கூட, தனது பெயரின் முன்பாக தான்பிறந்த ஆலங்கேணிக் கிராமத்தினை மறவாதிருக்கக் 'கேணிப்பித்தன்' என்ற புனைபெயரையே விரும்பிப் பயன்படுத்தி வருகிறார். இவரது சிறுகதைகள் பத்திரிகைகளில் பிரசுரமாகும் போது இலக்கிய ஆர்வலர்களால் தேடி வாசிக்கப்படுவதே இவரது பெருமையைப் பறைசாற்றும். இவரது சிறுகதைத் தொகுப்புக்கள் பலவும் ஈழத்து இலக்கியத்துக்கு அணிசேர்ப்பன.

பன்னிரு சிறுகதைகளைக் கொண்ட இத்தொகுப்பு இவரது நான்காவது தொகுப்பாகும். இத்தொகுப்பு இலக்கிய உலகில் சிறந்ததொரு இடத்தைப் பிடிக்கும் என்பது உறுதி. எரியும் பிரச்சினைகளை அச்சமின்றி எழுதுவதால் அவரது எழுத்துக்கள் வாசகர் மனங்களில் இலகுவில் பதிந்து விடுகின்றன. அந்த வகையில் 'பொறுமைக்கும் ஒரு எல்லை', 'தவம்கலைகிறது', 'மணல்திட்டு', 'வேட்டை' ஆகிய சிறுகதைகள் இத்தொகுப்புக்கு மகுடம் சூட்டுகின்றன. தமிழ்கூறும் நல்லுலகம் இவ்வகையான இலக்கியகர்த்தாக்களது ஆக்கங்களுக்கு உதவுகரம் நீட்டி உந்து சக்தியாக விளங்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்

572/A, ஏகாம்பரம் வீதி
திருக்கோணமலை

வி.என். சந்திரகாந்தி

ISBN : 978-955-51451-4-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NISAAN PRINTERS (PVT) LTD. TEL : 2439401, 4997221